# DJH3B - HISTORIOGRAPHY

Unit - I

Meaning and Nature of History – Definition of History - Scope and purpose – Art or Science- Uses and abusesof History- Lessons of History.

Unit - II

Survey of sources – Primary Sources – Secondary Sources – various types of sources- History and Related studies – Political history – Social history – Economic history – Religious history – Intellectual History.

Unit - III

Causation and change – Role of ideas – Role of Individual – Concept of Progress- Theory of Repetition.

Unit - IV

Philosophy of History- Theological Interpretation – Secular Interpretation, Stages, Agents and laws, criticism- Dialectical materialism- Marxand Engels.

Unit - V

Selection of Topic for Research- Collection of Data – Heuristics – Requisites for Investigation -Analysis of Data – Internal Criticism – External Criticism - Organisation of Research work – Synthesis, Exposition and Foot Note, Bibliography.

**Reference Books:**

Berdyaev N. -The Meaning of History
Burry J.B. -The Idea of Progress
Carr. E.H. - What is History
Rajayyan K.,- History Theory and Method
Shaik Ali,- Historiography
Subramaniam N,- Historiography
Will Durant, - The Lessons of History

## வரலாற்று வரைவியல்

## அலகு - I

### வரலாற்றின் பொருள் விளக்கம்

வரறாற்று வரைவியல் என்ற பாடமானது பண்டைக் காலத்திலிருந்து வரலாறு எவ்வாறு எழுதப்பட்டு வந்துள்ளது என்பைதைப் பற்றிப் படிப்பதாகும். அதவாது வரலாற்றை வரைதல் பற்றிய இயல் என்று கூறலாம். இதில் வரலாற்றுத் தத்துவங்கள், வரலாற்றாசிரியா்களின் வாழ்க்கைக் குறிப்புகள், அவா்கள் இயற்றிய சிறந்த நுல்கள், அந்த நூல்களைப் பற்றிய ஆய்வு, ஒரு வரலாற்று ஆராய்ச்சி செய்யப்படும் போது பின்பற்ற வேண்டிய முறைகள் போன்ற விபரங்கள் அடங்கும். தற்போது வரலாற்று வரைவியல் துறையானது தனித்தன்மையுடன் சுயேட்சையான அறிவுத்துறையாக வளா்ந்து விட்டது. எனவே வரலாற்றைப் படிக்கும் ஆா்வமுடைய ஒவ்வொருவரும் வரலாற்று வரைவியலையும் தெரிந்து கொள்வது இன்றியமையாதது ஆகும்.

### வரலாறு என்ற வாா்த்தையின் பொருள்

இந்த உலகத்தில் எந்த ஒரு உயிரினத்திற்கும் பொருளுக்கும் நடைபெறும் சம்பவங்களுக்கும் ஒரு வரலாறு உண்டு. வரலாறு இல்லாமல் எதுவும் இல்லை. ஆனால் இந்த வரலாறு திடீரென்று தோன்றிவிடவில்லை. நடைபெற்ற நிபழ்ச்சிகளைத் தொகுத்து அதற்கு விளக்கம் கூறி தொகுத்து எழுதி வைக்கப்படும் இலக்கியமே வரலாறு ஆகும். ஆனால் மனிதன் வரலாறு எழுதுவதற்கு எத்தனையோ ஆண்டு காலமானது.

பண்டைகால மனிதா்கள் நாடோடிகளாகவே அலைந்து திரிந்தனா். உணவை சமைத்து உண்ணுவதற்குக்கூட தெரியாது. அவனுக்கு சிந்திப்பதற்கும், திறனாய்வு செய்வதற்கும் உரிய அறிவு வளரவில்லை. இயற்கை சீற்றங்களை எதிா்த்துப் போராடியே தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருந்தான். ஆனால் இந்த மனிதா்கள் தங்களது அனுபவங்களைத் தங்களை சுற்றியிருந்தவா்களிடம் விவரிக்க முற்பட்ட போது தான் வரலாறு ஆரம்பானது. ஆனால் நிரந்தரமாக குறித்து வைக்கும் எண்ணம் தோன்றவில்லை. ஆனால் மனதில் நின்ற நிகழ்ச்சிகள் அடுத்த சந்ததியாரிடம் சொல்லப்பட்டன. எழுத்துமுறை தோன்றிய போது இந்த நிகழ்ச்சிகள் எழுதி வைக்கப்படலாயின.

சிறிது சிறிதாக மனிதன் தன்னைப் பற்றியும், தனது கடந்த காலத்தைப் பற்றியும் அறியும் ஆா்வம் கொண்டான். கடந்த காலத்தை வழிகாட்டியாகக் கொண்டுநிகழ்காலத்தை புரிந்து கொண்டு எதிா்காலத்தைக் கணிக்கும் ஆற்றல் டிபற்றான். இதுவே வரலாறு வளா்ச்சியடைய முக்கிய காரணம். வுரலாற்று நோக்கும் உணா்வும் முதன்முதலாக கிரேக்கா்களிடமே தோன்றியது. கி.மு.ஆறாம் நூற்றாண்டில் ‘வரலாறு எவ்வாறு எழுதப்பட வேண்டும்’ என்பதற்கு ஒரு அடித்தளம் அமைத்துக் கொடுத்தாா் கிரேக்கா்கள். ஆம், வரலாற்று வரைவியலைப் படைத்தனா். வரலாற்றை அறிவுபூா்வமாக அணுகினாா்.

"History" என்ற ஆங்கில வார்த்ததையின் மொழி பெயர்ப்பே வரலாறு என்பதாகும். இந்த History என்ற வார்த்தை இஸ்டோரியா என்ற கிரேக்க வார்த்ரைதயிலிருந்தே பெறப்பட்டது ஆகும். இந்த கிரேக்க வார்த்தைக்கு 'Collection of information obtained as a result of enquiry' என்ற பொருளாகும். அதாவது 'ஆராய்ச்சியின் விளைவாக பெற்ற செய்தித் தொகுப்பு' என்று பொருள்படும். எனவே வரலாறு என்பதற்கு 'கடந்த காலத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து பொருள் விளக்கம் கொடுத்து எழுதரி வைக்கப்படும் நிகழ்ச்சித் தொகுப்பு' என்று பொருள்படும்.

**வரலாற்றின் பொருள் வரையறை : Definitions**

வுரலாற்றாசிரியர்களும் மற்றும் பல அறிஞர்களும் வரலாற்றுக்கு பல்வேறு விளக்கங்கள் கொடுத்துள்ளனர். இந்த விளக்கங்கள் அனைத்தும் வரலாற்றின் தன்மையையும் அதன் எல்லையையும் நமக்கு படம் பிடித்துக் காட்டுகின்றன. இனி வரலாற்றுக்கு கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு விளக்கங்களைக் காணலாம்.

**என்றும் மாறுபடாத கடந்தகால நிகழ்ச்சிகளைப் பற்றி விளக்குவதே வரலாறு**

வரலாறு பற்றிய இந்த பொருள்ட விளக்கத்தைக் கூறியவர் அரசியல் மேதை அரிஸ்டாட்டில் ஆவார். கடந்த கால நிகழ்ச்சிகள் எப்போதும் மாறாததன்மை கொண்டவை. நிகழ்ந்தவை நிகழ்ந்தவையே இவருடைய கருத்துப்டி நடந்துமுடிந்த நிகழ்ச்சிகளை இறைவனால் கூட மாற்ற முடியாது. அப்படிப்பட்ட பழைமையை விளக்குவததான் வரலாறு என்று கூறிகிறார். இதன் மூலம் வரலாறு என்பது ஒரு விளக்கம் என்றும், அது மாறுபடாத பழைமை என்றும் தெரிந்து கொள்ளலாம்.

**2)"எடுத்துக்காட்டுகள் மூலம் பெறப்படும் தத்துவமே வரலாறு"**

கிரேக்க நாட்டில் உள்ள ஹெலிகார்னாஸ் நகரத்தை சேர்ந்த டயனிசியஸ் என்பவர் கூறிய பொருள் விளக்கமே இது. இவர் வரலாற்றை ஒரு தத்துவம் என்று வர்ணிக்கிறார். மேலும் எடுத்துக்காட்டுகளுக்குக்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளார். இங்கே எடுத்துக்காட்டு என்பது கற்பனை கதையோ புராணக் கதையோ அல்ல. உண்மையான வாழ்க்கயிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டு நிகழ்ச்சிகளும், நிறுவனங்களும் அல்லது மனிதர்களுமே ஆகும். இப்படிப்'பட்ட எடுத்துக்காட்டுகளை முறைப்படி தொகுத்து விளக்கினாலே போதும். அதுவே வரலாறு ஆகும். இப்படிப்பட்ட வரலாற்றைப் படிக்கும் போது பயன்கள் அதிகமாகக் கிடைக்கிறது.

**3)வரலாறு என்பது மக்களை அறிஞர்களுக்கும் ஒரு அறிவுத் துறையாகும்"**

இந்த விளக்கத்தைக் சூறியவர் பிரான்சிஸ் பேக்கன் என்ற ஆங்கிலேய அறிஞர் ஆவார். இவரது கூற்றுப்படி வரலாறு என்பது ஒரு அறிவுத்துறையாகும். அறிவு என்பது புத்திக் கூர்மையும் பலதரப்பட்ட விபரங்களை சேர்த்து வைத்துக் கொள்ளதலுமாகும். வரலாறு மனிதர்களை அறிஞர்களாக்குகிறது. அறிஞர்களே விவேகமுடையவர்களாகவும் நன்மை தீமைகளை சீர்தூக்கி பார்க்கும் திறன் கொண்டவர்களாகவும் இருக்க முடியும் என்கிறார்.

**4)"வரலாறு என்பது கடந்த கால அரசியல் ஆகும்: அரசியல்என்பது இன்றைய வரலாறு ஆகும் "**

மிகப் புகழ் பெற்ற இந்த விளக்கத்தை ஜான்சிலி என்ற ஆங்கில வரலாற்றாசிரியர் ஆவார். இதன்படி வரலாறு என்பதே அரசியல் தான் என்று அரசியலுக்கு அதிக முக்கியத்துவம் கொடு:த்துள்ளார். நடைபெறும் நிகழ்ச்சிகள் எல்லாம் அரசியல் நடவடிக்கைகளின் விளைவே ஆகும். எனவே வரலாற்றுக்கு மூலப்பொருள் அரசியலே ஆகும். ஆனால் நாம் கடந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் கூர்மையாகப் பிரித்துப் பார்க்க முடியாது. வரலாறும், அரசியலும் ஒரு நிகழ்ச்சி தொகுதியின் இரண்டு அம்சங்களாகவே நாம் கருத முடியும்.

**5)"வரலாறு என்பது மாமனிதர்களின் வாழ்க்கைச் சரித்திரமே ஆகும்"**

ஆங்கில வரலாற்றாளர் தாமஸ்கார்லைஸ் என்பவரின் இந்தக் கோட்பாடு ஒரு குறிபிட்ட கண்ணோட்டத்துடன் ஆகும். இந்த உலகத்தில் தோன்றிய பல மாமனிதர்களின் எண்ணங்களும் நடவடிக்கைகளுமே வரலாற்று நிகழ்ச்சிகளாக உருப்பெற்றுள்ளன என்று கூறுகிறார். உதாரணமாக 1793 முதல் 1815ம் வருடம் வரையுள்ள பிரான்ஸ் நாட்டின் வரலாறு நெப்போலியனின் வரலாறே ஆகும். அவரது சாதனைகளும் அவரது வீழ்ச்சியுமே பிரான்ஸ் நாட்டின் வரலாறு ஆனது. எனவே வரலாறு என்பது மாமனிதர்களின் வாழ்க்கைச் சரித்திரம் ஆகும் என்று கார்லைஸ் கூறுகிறார். கார்லைஸின் கோட்பாடுகளில் அதிக அளவு ஈடுபாடு கொண்ட எமர்சன் என்பவரும் 'வரலாறு என்பது சான்றோர்களின் வாழ்க்கைத் தொகுப்பு' டின்பது கூறினார்.

ஆனால் கார்வைஸின் இந்த 'மாமனிதக் கோட்பாடு' பலரால் மறுக்கப்பட்டுள்ளது. இவரது விளக்கம் பலஅ ம்சங்களை புறக்கணிப்பதாகக் குறை கூறப்படுகிறது. முதலாவது, பிற மனிதர்களின் சாதனைகளை இது புறக்கணிக்கிறது. இரண்டாவது, மனிதன் சிஜல ஊழ்வினைகளுக்கு உட்பட்டும், அதனால் உந்தப்பட்டுமே செயலாற்றுகிறான். மூன்றாவது தனிமனிதன் ஒரு சமுதாயத்தையோ நாட்டையோ உருவாக்கிவிட முடியாது. பிறர் துணையுடனே அவன் செயல்பட முடியும். நான்காவது மாமனிதர்கள் எல்லாக் காலத்திலும் தோன்றுவது இல்லை. எப்போதாவது தான் தோனட்றுவர். இப்படி மறுத்துக் கூறப்பட்டாலும் கார்லைஸின் பொருள் விளக்கத்தில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் வரலாறு என்பது மனிதர்களின் சாதனைகள் சம்பந்தப்பட்டது என்பதே ஆகும்.

**6)"வரலாறு என்பது கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் இடையே நடைபெறும் முடிவற்ற பேச்சுவார்த்தை "ஆகும்.**

இந்த விளக்கத்தை வழங்கியவர் புகழ்பெற்ற ஆங்கில அறிஞர் ஈ.ஹைச்.கார்(E.H.Carr) என்பவராவார்இவர் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் இணைககிறார். குாரணம் கடந்த காலத்தைப் பற்றி நாம் முழுமையாக அறிந்து கொண்டால்தான் நிகழ்காலத்தைப் புரிந்து கொள்ள முடியும் இதற்காக வரலாற்று மூலங்களை ஆராய்ந்து விளக்க வேண்டியுள்ளது. அந்த வரலாற்று நிகழ்ச்சிகளின் காரணகாரிய தொடர்புகளை விளக்கி அதன் மூலம் வரும்

பொருளை எடுத்துக் கூறுவதே வரலாறு ஆகும். எனவே தான் வரலாறு என்பது ஒருவகைப் பொருள் விளக்கம் என்றும் கூறுகிறார். இப்படி வரலாற்று மூலங்களை ஆராய்வதால் தமான் ஒரே நிகழ்ச்சியைப் பற்றிப் பல வரலாறு எழுத முடிகிறது.

**7)''வரலாறு என்பது அறிவியல் ஆகும். மிகுதியும் அல்ல, குறைவும் அல்ல''.**

இது ஜே.பி.பியூரி(J.B.Bury) என்ற ஆங்கில வரலாற்றாளர் வரலாற்றுக்கு கொடுத்த பொருள் விளக்கமாகும். இவர் வரலாறு என்பது ஒரு அறிவியலே என்று உறுதிப்படக் கூறினார். வரலாறு என்பது ஒரு கலைப்படாடம் அல்ல. வெறும் நிகழ்ச்சிகளை விவரிக்கும் விபரப் பெட்டகமும் அல்ல. பல அறிவியல் கூறுகளைக் கொண்ட அறிவுத் துறையே என்றார். இவ்வாறு வரலாற்றை ஒரு அறிவியல் பாடம் என்று கூறி அதன் அந்தஸ்தையே உயர்த்தினார். ஆனால் இவரது கூற்று ஒரு பெரிய விவாதத்தையே கிளப்பிவிட்டது. அது இன்றுவரை தொடர்ந்து நடந்து வருகிறது.

**8):''வரலாறு என்பது மறுர்ந்து விரிந்துவரும் மனித சுதந்திரத்தின் கதை''ஆகும்.**

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் நவீனகால வரலாற்றுப் பேராசிரியராகத்அதிகழ்ந்த ஆக்டன் பிரபு என்பவர் கூறிய கருத்ததாகும் இது. 'கருத்து சுதந்திர வரலாறு' என்ற தனது சிறிய நூலஜல் இந்தக் கருத்தைக் நுறியுள்ளார். மனிதன் தனது அடிப்படை உரிமைகளுக்காகவும், சுதந்திரத்திஜற்காகவும் போராடி வரும் கதைதான் வரலாறு என்பது இவரது வாதம். விடுதலை உணர்வுதான் வசரலாற்றின் மையக் கருத்தாகும். கருத்துச் சுதந்திரத்திற்காக வரலாற்றில் எத்தனையோ பேர் போராடியுள்ளனர் என்று கூறுகிறார். ஏனெனில் மனிதன் சுதந்திரமான சூழ்நிலையில்தான் தனது ஆற்றல்களை வெளிப்படுத்துகிறான். எனவே மனித விடுதலையைப் பற்றி விவரிப்பதே வரலாறு என்று கூறுகிறார்.

**9)''எல்லா வரலாறும்சமகால வரலாறே'' ஆகும்**

பெனிட்டோ குரோசா என்ற இத்தாலிய வரலாற்றாசிரியர் சற்று கடினமான பொருள் விளக்கம் ஒன்றை கூறியுள்ளார். இவரது கூற்றுப்படி எல்லா வரலாறும் சமகால வரலாறே ஆகும். அதாவது கடந்த கால பழைமையான நிகழ்ச்சிகளை நாம் உணரும் வகையில் நிகழ்கால நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுபவைகளாக உள்ளன. எனவே நாம் அறியும் வரலாறு வரலாற்றாளரது சமகால நிகழ்ச்சியே ஆகும். இதையே 'ஒக் ஷாட்' என்ற அறிஞர் 'வரலாறு என்பது வரலாற்றாளனின் அனுபவம்' என்று கூறினார்

**10) ''வரலாறு என்பது எண்ணங்களின் வரலாறு'' ஆகும்**

. இங்கிலாந்தின் வரலாற்றுத் தத்துவர் ஆர்.ஜி.காலிங்வுட்(R.C. Colling Wood) என்பவர் கூறிய சிந்திக்க வைக்கும் பொருள் விளக்கமாகும் இது. 'வரலாறு என்பது பழைமையான நிகழ்ச்சிகளை மட்டும் பற்றியது அல்ல. இவ்விரண்டின் தொடர்பால் ஏற்படுவதே வரலாறு என்கிறார். கடந்தக்கால நிகழ்ச்சிகள் அனைத்துமே அதனை எழுதும் வரலாற்றிளாளரின் எண்ணங்களின் வழியாகவே வெளிப்படுகின்றன. பழைய நிகழ்ச்சிகளுக்குப்

பொருள் கூறும் போது தான் அது வரலாறானக உருமாற்றம் அடைகிறது. புழைமைக்கு பொருள் கூறாத வரலாறு வெற்றுச் செய்திப் பட்டியலாகவே முடியும்.

**11)"மனித சமுதாய வாழ்க்கையின் பதிவுக் குறிப்புகளே வரலாறு" ஆகும்**

சா்.சாா்லஸ் பிா்த் என்ற அறிஞா் கூறும் பொருள் விளக்கம் வரலாற்றிற்கு புதிய பரிணாமத்தை அளிக்கிறது. "மனிதன் சமுதாயத்தின் ஒரு உறுப்பாக இருந்து ஆற்றும் செயல்கள் அந்த சமுதாயத்தில் அவ்வப்போது நிகழும் மாறுதல்கள் அந்த மாறுதல்களின் தன்மை, அந்த சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும் அல்லது ஊறு விளைவிப்பதற்கும் காரணமாக இருந்த சூழ்நிலைகள் ஆகியவற்றை யெல்லாம் எடுத்துக் கூறுவதே வரலாறு' என்று கூறுகிறாா்.

**12)யாா்க் பௌவல் (York Powell) என்பவா் கூறுவதாவது:**

'சமுதாயத்தில் வாழும் மனிதனின் தன்மை அதை முறைப்படுத்தி மாறுதல்களை ஏற்படுத்தும் சட்டங்கள் ஆகியவற்றை வரலாறு' என்று கூறுகிறாா். மேலும் அவா் கூறுவதாவது: வரலாற்றை எழுதும் போது அதன் உண்மையும் பொருளும் விவாதப் பொருத்தமுமே முக்கியமானது. ஆதன் நடை அல்ல. உண்மையைத் தெரிந்து கொள்வதற்கே வரலாறு நடைவாயிலாக இலக்கிய இன்பம் பெறுவதற்கு அல்ல என்று கூறுகிறாா்.ஆனால் வரலாற்றை எழுதும் போது இலக்கிய நடைக்கும் ஓரிடம் உண்டு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

**13)ஏ.எல்.ரவுஸ் (A.L. Rowse) என்ற வரலாற்றாளா் கூறுவதாவது :**

"வரலாறு என்பது மக்கள் புவியில் சூழ்நிலையில் வாழ்க்கையின் தன்மையை எடுத்துக் கூறுவது ஆகும்" சமுதாயமும் புவியியல் சூழ்றிலையும் ஒன்றையொன்று பாதித்ததலால் எழும் இயக்கங்களே வரலாற்றின் உயிா்நாடி என்றாா். ரவுஸ். வுரலாற்றிற்கும் புவியியலுக்கும் உள்ள தொடா்பை குறிப்பிடுகிறாா். புவியியல் அமைப்பு ஒரு நாட்டின் வரலாற்றைப் பாதிக்கும்' என்ற கருத்தை தெரிவிக்கிறாா் ரவுஸ்.

**14)வரலாற்றைப் பற்றிய பிற பொருள்ட விளக்கங்கள் :**

சில அறிஞா்கள் வரலாற்றை சமயத்துடன் தொடா்படுத்திக் கூறியுள்ளனா். லெக்கி என்ற ஆங்கில ஆசிரியா் வரலாறு என்பது அறநெறியில் தோன்றும் மாறுதல்களை விளக்கி எழுதி வைக்கும் குறிப்பே ஆகும். என்று கூறியுள்ளாா். இஆத கருத்தை லீப்னிஸ் என்ற அறிஞா் கூறும் போது 'வரலாறு சமயத்தை உள்ளவாறு தோற்றுவிக்கும் சாதனமாகும்' என்றாா். பாசே என்ற பிரெஞ்சுக்காரா் கிறிஸ்து தரிசனத்திற்கு இட்டுச் செல்வதே பிரெஞ்சு வரலாறு' என்றாா்.

**15)வரலாற்றை பற்றிய எதிா்மறை பொருள் விளக்கங்கள்**

வரலாற்றைப் பற்றி குறை கூறியும், இகழ்ந்தும் பல அறிஞா்கள் கூறியவற்றைக் காணலாம்.

1.பிரெஞ்சுத் தத்துவஞானி வால்டா் கூறுவதாவது: வரலாறு என்பது மனிதன் இழைக்கும் குற்றங்கள், அவன் அனுபவிக்கும் துள்பங்கள் ஆகியவை பற்றிய விபரமே ஆகும்" மேலும் அவா் கூறுவதாவது 'வரலாறு என்பது யாவரும் ஏற்றுக்கொண்ட பொய்க் கதையாகும்'

2.வால்டரின் சீடரான கிப்பன் என்பவர் கூறுவதாவது: “வரலாறானது மனித இனத்தின் குற்றங்கள் தவறுகள், துயரங்கள் ஆகியவற்றின் பட்டியலேயல்லாமல் வேடிறதுவும் இல்லை’ என்கிறார். மனித வரலாற்றில் தவறுகளும், துயரங்களும் இருக்கலாம். ஆனால் அவை மட்டும் வரலாறு என்று கூறுவது ஏற்புடையது அல்ல.

ராபர்ட் வால்போல், நெப்போலியன், ஜேம்ஸ், ஜாய்ஸ் போன்றவர்கள் வரலாற்றைப் பொய் என்றும் அது ஒரு கெட்ட கனவு என்றும் வர்ணத்தனர் அகஸ்டின் பிர்ரல் என்பவர்’ வரலாறு என்பது ஒரு பெரிய குப்பைக் குவியல் என்றார் ஹென்றி போர்ட் என்பவர் வரலாறு என்பது ஒரு பெரும் மோசடி என்று கருதினார்.

இவ்வாறு வரலாற்றைப் பற்றிக் கூறப்படும் எதிர்மறைப் பொருள் விளக்கங்கள் எல்லாம் ஒருதலைப்’பட்சமானவை. வெறுப்புடன் கூறப்பட்டவை. மேலும் அறியாமையால் கூறப்பட்டவை ஆகும்.

**மதிப்பீடு**

**இவ்வாறு** வரலாற்றிற்கு பல்வேறு அறிஞர்கள் பல்வேறு கால கட்டங்களில் வெவ்வேறு விதமான விளக்கங்களைக் கொடுத்துள்ளார். இந்த விளக்கங்கள் எல்லாமே அந்த அறிஞர்களின் மனப்பான்மையை பிரதிபலிப்பவையாகவே கருதலாம். ஏந்த ஒரு பொருள் விளக்கமும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஏனெனில் வரலாறு வாழும் உயிருள்ள ஒரு இயலாக விளங்குகிறது. பிறரை வாழத் தூண்டுகிறது. வாழ வைக்கிறது. தடுமாறியவர்களை நேர்வழிப் படுத்துகிறது. அனைவருக்கும் தேவைப்படும் ஆழமான அம்சங்களை வழங்குவது வரலாறு. வரலாறு என்பது ஒரு காலப் பெட்டகமாகும். எனவே இதனை ஒரு வரையறைக்குள் வைப்பது இயலாத காரியமாகும்.

## வரலாற்றின் தன்மை

எந்த ஒரு அறிவுத்துறையைப் பற்றி ஆராய முற்படும் முன்பு அதன் தன்மையைப் பற்றி புரிந்து கொள்ளுதல் நல்லது ஆகும். பொதுவாக வரலாறு என்பது ஒரு புரியாத புதிராகவே உள்ளது. வரலாறு என்றால் என்ன? அது எதனைப் பற்றியது? வரலாறு எவ்வாறுநிகழ்கிறது? எப்படி வளர்ந்து வருகிறது? ஆகியவற்றிற்கான விடைகளைத் தெரிந்து கொள்ளவேண்டும். வரலாற்று அறிஞர்கள் வரலாற்றிற்குக் கொடுத்துள்ள பல்வேறு விளக்கங்களின் உட்கருத்துக்களை ஆராயும் போது அவை வரலாற்றின் தன்மைகளை வெளிப்படுத்துவதைக் காணலாம்.

**1)வரலாறு மாறாத மற்றும் அவ்வப்போது மாறும் தன்மை கொண்டது :**

வுரலாற்றில் மாறுபடாத நிலையான தன்மையும், மாறும் தன்மையும் உள்ளதைக் காணலாம். மாறுபடாத பழங்காலத்தைப் பற்றிக் கூறுவதே வரலாறு என்கிறார் அரிஸ்டாட்டில். புண்டைக்கால நிகழ்ச்சி ஒன்றை வரலாற்றாளர் எழுதும் போது அதற்கான மூலங்கள், ஆதாரங்கள், சான்றுகள் ஆகியவற்றை ஆராய வேண்டும். அவர் எழுதும் நிகழ்ச்சிகள்

உலகியலின் தன்மையைக் கூறவேண்டும். அவற்றை சோதித்துப் பார்க்க முடியவேண்டும். அப்படி சோதனைக்குட் படுபவையே வரலாற்றுக்குரியன ஆகும். இவை நிலைத்த தன்மையைகட் கொண்டுள்ளன.

வரலாறு மாறக்கூடிய தன்மையைக் கொண்டும் எள்ளது. காலத்திற்கு காலம்ட ஒரு நாட்டின் வரலாற்றைப் பற்றி புதிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுவதால் வரலாறு மாறும் தன்மையைப் பெறுகிறது. மேலும் ஒவ்வொரு வரலாற்றாளரும் தனது தத்துவம், தனது நோக்கம், அரசியல் நிரிப்பந்தம் ஆகியவற்றின் அடிப்படையில் வரலாற்றை எழுத முற்படுவதால் அதன் தன்மை மாறுபடுகிறது. இவ்வாறு வெவ்வேறு கோணங்களில் வரலாறு எழுதப்படுவதால் வரலாற்றைப் பற்றிய பொது நோக்கங்களும் மாறுபடுகின்றன.

வரலாற்றுச் செய்திகள் அதகரிப்பதாலும், பழைய நிகழ்ச்சிகளை அணுகுவதாலும் முதலில் கிடைக்காத பல புதிய சான்றுகள் கிடைப்பதாலும் வரலாறு மாற்றி எழுதப்படுகிறது. எனவே வரலாற்றின் தன்மையும் மாறுபடுகி-றது.

**2)வரலாறு காலம், இடம் ஆகிய இரண்டால் நிர்ணயிக்கப்டுகிறது**

வுரலாற்று நிகழ்ச்சிகள் எல்லாமே காலம், இடம் ஆகியவவற்றின் அடிப்படையிலேயே விவரிக்கப்படுகின்றன. காலமும், இடமுமே மனிதனின் நடவடிக்கைகளை நிர்ணயம் செய்கின்றன. இதில் காலம் என்பது ஆண்டு, மாதம், நாள் என்ற முறையில் கணக்கிடப்படுவது ஆகும். இடம் என்பது இந்த பூமியில் உள்ள இடம் ஆகும். காலமும் இடமும் வரலாற்றுக்குப் பொருந்துவனவாகவும் அவையில்லாமல் வரலாறு இயங்காது என்றும் கூறப்படுகிறது. இவ்வாறு வரலாறு காலம், இடம், ஆகிய இரண்டுக்கும் உட்பட்ட நிகழ்ச்சிகளையே ஆராயும் தன்மை கொண்டுள்ளது.

**3)வரலாறு என்பது கடந்தகால நிகழ்ச்சிகளைப் பற்றியது ஆகும்.**

வரலாறு என்பது கடந்த கால நிகழ்ச்சிகளின் கோர்வையே ஆகும். வரலாற்றாளர்கன் கடந்தகால நிகழ்ச்சிகளையே ஆய்வு செய்கின்றனர். அந்த நிகழ்ச்சிகள் எல்லாமே அவரது பார்வையில் நடைபெற்றவை அல்ல. ஆகவேதானட் கல்வெட்டுகள், செப்பேடுகள், நூல்கள், கடிதங்கள், றாணயங்கள் போன்ற சான்றுகளின் துணைக் கொண்டு நிகழ்ச்சிகளுக்கு உருவமும் அமைப்பும் கொடுக்கிறார்கள். இவ்வாறு வரலாறு நடந்து முடிந்த கடந்தகால நிகழ்ச்சிகளைப் பற்றியது ஆகும்.

**4)வரலாறு என்பது மனித நடவடிக்கைகள் பற்றியது ஆகும்**

வரலாறு மனிதர்கள் தொடர்புடைய நடவடிக்கைகளைப் பற்றியது ஆகும். மனிதர்களின் எண்ணங்கள், தீர்மானங்கள் ஆகியவற்றின் விளைவாகவே நிகழ்ச்சிகள் தோன்றுகின்றன. ஆனால் எல்லா மனிதர்களின் நடவடிக்கைளும் தேவையான விபரங்களாக கருதப்படுவதில்லை. முக்கியமான மனிதர்களின் முக்கியமான செயல் பாடுகளே வரலாற்று விபரங்களாகக் கருதப்படுகிறது.

**5) வரலாறு ஆதாரங்களின் அடிப்படையிலேயே எழுதப்படுகிறது**

முற்காலத்தவர் எழுதி வைத்துச் சென்றுள்ள ஆவணங்களில் அடிப்படியிலேயே நிகழ்ச்சிகளின் பரிமாணமும், காலவரையறையும் கணிக்கப் படுகிறது. இப்படிப்பட்ட

ஆவணங்கள் நம்பகத்தன்மை கொண்டவையானால் எழுதப்படும் வரலாற்று நம்பிக்கைத்தன்மை உடையனவாக இருக்கும். எனவே ஆவனங்கள்தான் வரலாற்றுக்குப் பதிவேடு போன்றவை இந்தச் சான்றுகளின் அடிப்படையில் எழுதப்படும் வரலாற்றில் தான் நம்பகத்தன்மை காணப்படுகிறது

**6)வரலாறு என்பது ஒரு கதை போன்றது**

வரலாறு என்பது கதையுடன் தொடர்புடைது. ஒரு கதை எப்படி இலக்கிய நயத்துடன் படிப்போர் பரவசமடையும் வண்ணம் எழுதப்படுகிறதோ அப்படி வரலாறு எழுதப்படவேண்டும். திரட்டப்பட்ட வரலாற்றுச் சான்றுகளைக் கோர்வையாகச் சேர்த்து கதை போன்று சுவைப்பட எழுதப்படுவது வரலாறு ஆகும். இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களில் வரலாறும் கதையும் பின்னிப் பிணைந்துள்ளன. ஹெட்டோட்மடஸ், டைட்டஸ், வால்ட்டர், கிப்பன் போன்றவர்கள் வரலாற்றைக் கதைப்போல் வொல்லுவதில் வல்லவர்கள் ஆவர். எனவேதான் வரலாறு ஒரு கதை என்று சொல்லப்படுகிறது.

**7)வரலாறு என்பது கட்டுக்கதைகள் இல்லாதது :**

வுரலாற்றில் கட்டுக்கதைகள் நீக்கப்பட்டுள்ளது. பண்டைக்கால நிகழ்ச்சிகளில் கட்டுக்கதைகளும் கலந்திருக்கும். வரலாற்றாளர் அவைகளை இனம் கண்டு நீக்கிவிடல் வேண்டும். இப்படிப்பட்ட கட்டுக் கதைகள் பழங்காலத்தில் மட்டுமல்லாது எக்காலத்திலும் வீரவரலாற்றில் புகுத்துவிடும் அவசியம். இப்படிக் கட்டுக்கதைகளை நீக்கினால் மட்டும் போதாது வரலாற்றை கட்டுக்கதை மரபில் எழுதவும் கூடாது.

**8)வரலாறு ஒரு தொடர்கதை ஆகும்:**

வரலாறு கடந்த காலத்தில்6 ஆரம்பித்து நிகழ்காலம் வழியாக எதிர்காலத்தில் புகுந்து வழிகளில் செல்லும் தன்மையுடையது. எனவே வரலாறு ஒரு தொடர்ச்சியாக தன்மையைப் பெற்றுள்ளது. இப்படிப்பட்ட வரலாறானது மனித வாழ்க்கைக்குப் பல வழிகளில் பயன்படுகிறது. நிகழ்காலத்தில் இருக்கும் மனிதன் தனக்கு முன்பும், பின்பும் வரலாறு எல்லையின்றி செல்வதை அறிந்து கொண்டு தான் அதில் ஒரு சிறு பகுதியே என்று புரிந்து கொள்கிறார்.

**9)வரலாறு இலக்கியத்தின் ஒரு கிளையாகும்:**

சீலி என்ற ஈங்கில வரலாற்றாளர் வரலாறு இலக்கியத்துட்ன் நெருங்கிய தொடர்புடையது. இத்தொடர்பினை போற்ற வேண்டும் என்று கூறுகிறார். ஒரு நல்ல இலக்கியம் எழுதப்படுவதற்கும் பொருந்துகிறது. வரலாறு இலக்கிய பாணியில் எழுதப்படும்போது அது படிப்பதற்குச் சுவைப்பட உள்ளது. இலக்கிய நடையானது வரலாற்றிற்கு ஒரு பெரிய பாதுகாப்புப் பொருளாகவே உள்ளது. ஆனால் வரலாற்றினை வெறும் இலக்கியமாகக் கருதிவிடக் கூடாது.

**10)வரலாறு மனித வாழ்க்கையுடன் இணைபபிரியாதது:**

பொதுவாக வரலாற்று நிகழ்ச்சிகள் மக்களின் வாழ்க்கையை பாதிப்பனவாக உள்ளன. பண்டைக் காலத்தில் தோன்றிய முக்கியமான நிகழ்ச்சிகள், மாறுதல்கள், கண்'டுபிடிப்புகள ஆகியவை மனித வாழ்க்கையின் தன்மையை எந்தக் காலத்திலும்

பாதிப்பனவாக உள்ளன. எனவே வரலாறு மனித வாழ்க்கையுடன் ஒன்றிவிடும் தன்மையை நாம் புறக்கணித்துவிட் முடியாது.

**11)வரலாறு ஒரு கலை வடிவமாகும்:**

வரலாறு என்பது ஒரு கலை வடிவமாகும். வுரலாற்றாளா் ஒரு கலைஞா் போன்றே செயல்படுகிறாா். திறமையுடன் வரலாற்றுச் சான்றுகளைச் சேகரித்துத் தனது கற்பனைத்திறன் கலை உணா்வு, தொலைநோக்கு ஆகியவற்றின் உதவியுடன் வரலாறை வரைகிறாா். எனவே ஒரு கலை வடிவமாகும்.

**12) வரலாறு அறிவியல் சாா்ந்தது ஆகும்:**

வரலாறு கிடைக்கின்ற ஆதாரங்களை ஆராயச்சி செய்து அதன் அடிப்படையில் எழுதப்படும் ஒரு கலைப்பாடம்மட்டும் அல்ல. அது அறிவியல் சாா்புடையதும் கூட வரலாற்று அதாரங்கள் வரலாற்றாளா்களின் பகுத்தறிவின் மூலம் பகுப்பாய்வு செய்யப்படுகிறது. பகுத்தறிவு அறிவியல் தொடா்புடையது ஆகும். ஒரு அறிவியல் வரலாற்றாளா் சான்றுகளுக்கு புதிய பொருள் விளக்கம் கொடுத்து வரலாற்றின் செயல்பாடுகளை உளிபெறச் செய்கிறாா். அதன் எல்லைகளை விரிவடையச் செய்கிறாா். எனவே வரலாறு அறிவியல் சாா்புடையதாக உள்ளது.

இவ்வாறு வரலாறு என்பது பல்வேறுபட்ட தன்மைகளைக் கொண்டுள்ளது. ஆனால் வரலாற்றின் தன்மைகள் தொடா்ந்து ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. அறிவுத் துறையின் தனியொரு பிரிவாக உள்ள வரலாறு தனித்தியங்கும் தன்மை கொண்டள்ளது. இறந்த காலம், நிகழ்காலம், எதிா்காலம் ஆகிய முக்காலத்து நிகழ்ச்சிகளையும் ஒரேமாதிரியாக வரலாறு கருதவேண்டும். வரலாற்றாளா்கள் வரலாற்றை தங்கள் எண்ணங்கள், கோட்பாடுகளின் அடிப்படையில் உற்று நோக்குவதால் அதன் சிறப்புத் தன்மைகள் வெளிப்படுகின்றன. முடிவாக வரலாறு எப்போதும் நிலைப்பட்டு நிற்காமல் மாறுபட்டுக் கொண்டும், காலத்தில் நகா்ந்து கொண்டும் இருக்கிறது. இவ்வாறு வரலாறு மாறமாற வளர வளர அதன் தன்மையும் மாறிவருகிறது. .

.

## வரலாற்றின் எல்லை வரையறையும், நோக்கமும்

பிற துறைகளைப் போலவே வரலாறு என்ற அறிவுத் துறைக்கும் எல்லை வரையரை உண்டு. ஆனால் அந்த வரையறை மிக நெருடியது ஆகும். வரலாறு உயிரோட்டம் கொண்டதாகையாலும் தொடா்ச்சி யானது என்பதாலும் அதன் எல்லையும் நோக்கமும் விரிவடைந்து கொண்டே வருகிறது. பல வரலாற்றாளா்களா்கள் வரலாற்றின் எல்லை வரையறையையும், நோக்கத்தையும் தங்கள் கண்ணோட்டங்களில் பாா்த்து விளக்கியுள்ளாா்கள்.

**1) வரலாறு என்பது மனிதனின் வரலாற்றையேக் குறிக்கம் :**

இது வரலாற்றின் முதலாவதும் முக்கியமானதுமான வரையறையாகும் விலங்கு, பறவைகள், தாவரங்கள் போன்றவற்றை யெல்லாம் ஆய்வதற்குத் தனித்தனி துறைகள்

உள்ளன. ஆனால் வரலாறு மனிதனின் செயல்பாடுகளையும் அவனது சாதனைகள் மற்றும் முன்னேற்றத்தை மட்டுமே ஆய்கிறது.

**2)வரலாற்று முக்கியத்தவம் பெற்றவர்களே முக்கியத்துவம் பெறுகின்றனர் :**

வரலாறு மனிதனைப் பற்றி அக்கறை கொண்டாலும் எல்லா மனிதர்களைப் பற்றியும் அக்கறை கொள்ளவில்லை. வரலாற்று முக்கியத்துவம் பெற்றவர்கள், அவர்கள் நிறுவிய நிறுவனங்கள், அவர்களது கருத்தக்கள் மற்றும் இலக்கியங்கள் ஆகியவற்றைத்தான் வரலாறு தனது அறிவுத்துறை பொருளாக எடுத்துக் கொள்கிறது.

**3)வரலாறு கடந்தக்கால நிகழ்ச்சிகளையே ஆராய்கிறது :**

வுலராற்றாளர்கள் கடந்த காலத்தில் நடைடிபற்ற நிகழ்ச்சிகளின் உறவுகள், செல்வாக்குகள், காரணசாரியத் தொடர்புகள் ஆகியவற்றையே ஆராய்கின்றனர். ஒருசில நிகழ்கால நிகழ்ச்சிகள் ஆய்வு செய்யப்பட்டாலும் பெரும்பாலும் கடந்தக்கால நிகழ்ச்சிகளே ஆராயப்படகின்றன. எனவே வரலாறு கடந்தகால நிகழ்ச்சிகள் என்ற வரையறைக்குள்ளேயே உள்ளது.

**4)வரலாற்றின் ஆரம்கால எல்லை வரையறை:**

ஆரம்ப காலத்தில் வரலாற்றின் வரையறை மிகவும் குறுகியதாக இருந்தது. மரபுவழிக் கதைகளும், நாட்டுப்புறப் பாடல்களும், வீர சாகசச் செயல்களுமே வரலாறு என்று கருதப்பட்டது. மேலும் வாய்மொழிச் செய்திகளும் வரலாறாகக் கருதப்பட்டது. இந்த வரலாறுகள் மனிதர்களின் சாதனைகளை மிகைப்படத்திக் கூறின. கற்பனை அதிகமாகக் கலந்திருந்தது. எனவே இவை உண்மையான வரலாறாகக் கருதப்பட முடியாது.

**5)கிரேக்கர்கள் காலத்தில் வரலாற்றின் எல்லை வரையறை :**

வரலாற்றியலை படைத்த கிரேக்கர்கள்தான் முதன்முதலாக வரலாற்றுக்கு எல்லை வகுத்தனர். அதாவது வரலாறு என்பது போர்களை பற்றியதே என்ற எல்லை வகுத்தனர். ஹொரடோட்டல் பாரசீகப் போரை மையமாக வைத்து வரலாற்றை எழுதினார். தூசிடைடிஸ் பெலப்பொனிசியப் போரை மையமாக வைத்து எழுதினார். இதில் இந்த வரலாற்றிசிரியர்கள் சமகால நிகழ்ச்சிகளைப் பற்றி விவரித்துள்ளனர். ஆமலும் வரலாற்றில் அறிவியல் கண்ணோட்டமும் சான்றுகளை பகுத்தாராய்நது விசாரணை செய்த பின்பே ஏற்றுக் கொள்வதும் பின்பற்றப்பட்டது

**6)ரோமானியர்களின் வரலாற்று எல்லை வரையறை :**

ரோமானியர்களின் காலத்தில் வரலாற்றின் எல்லை வரையறை சற்று விரிவடைந்தது. அவர்கள் பேரரசைப் பற்றியும் உலக நாடுகளைப் பற்றியும் வரலாறு எழுதினார்கள். டைட்டஸ்லிவி என்பவர் ரோமின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் பற்றி எழுதினார் மேலும் பல நாடுகளைப் பற்றிய வரலாறு எழுதப்பட்டது.

**7)இடைக்காலத்தில் வரலாற்றின் எல்லை வரையறை :**

இடைக்காலத்தில் வரலாற்றின் மீது திருச்சபை ஆதிக்கம் செலுத்தி வந்தது. எனவே வரலாற்றுக்கு கடவுட் கொள்கை விளக்கம் அளிக்கப்பட்டது. மனிதனின் எல்லா நடவடிக்கைகளிலும் ஆதிக்கம் செலுத்துவது கடவுளின் விருப்பமே என்று கருதப்பட்டது.

எனவே மனிதனை மையமாக வைத்தே வரலாறு எழுதப்பட்டது. கடவுள் உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானதால் அதன் அடிப்படையிலேயே பிரபஞ்ச வரலாறு எழுதப்பட்டது. இடைக்காலத்தில் இவ்வாறு மையமாகக் கொண்டு வரலாறு வரையறை செய்யப்பட்டது.

**8)மறுமலர்ச்சிக் காலத்தில் வரலாற்றின் எல்லை வரையறை :**

மறுமலர்ச்சி காலத்தில் வரலாற்றைப் பற்றிய செயல் நோக்கம் மீண்டும் மாறுபட்டது. கடவுட்கொள்கை கைவிட்ப்பட்டு மனித நடவடிக்கைகளை வைத்தே மீண்டும் வரலாறு எழுதப்பட்டது. இவ்வாறு சமய சார்பற்ற வரலாறு வரையப்பட்டது. மாக்கியவல்லி என்ற அறிஞர் ‘இளவரசன்’ என்ற அரசியல் சம்பந்தப்பட்ட நூலை எழுதினார். இவ்வாறு மறுமலர்ச்சி காலத்தில் வரலாறு சமய சார்பற்றும், பகுத்தறிவுக் கண்ணோத்துடனும், பொதப்படை யாகவும் எழுதப்பட்டது.

**9)வரலாற்றில் தனிப்பட்ட கருத்துக்கு முக்கியத்துவம் தரப்படல் :**

வரலாறு தனிப்பட்ட அம்சங்களுக்கு முக்கியத்துவசம் கொடுத்து எழுதப்பட்டது. இதுவும் ஒரு வரையறையே ஆகும். ஆனால் இது வரலாற்றின் எல்லையை விரிவடையச் செய்தது தவறு என்று கூறலாம். கிரேக்கர்கள் காரணகாரியத் தொடர்புகளுக்கு முக்கியத்தவம் கொடுத்தனர். பின்னர் உண்மையான வரலாறு எழுதப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. சிலர் வரலாற்றின் ஒரு அம்சமான அரசியல் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். கார்ல்மார்க்ஸ் பொருளாதார அம்சத்திற்கும், கார்லைல் மாமனிதர்களின் வாழ்க்கைச் சரித்திற்கும் முக்கியத்தவம் கொடுத்தனர். இவ்விதக் கோட்பாடுகள் வரலாற்றின் வரையறை விரிவுபடுத்தி அதற்குப் புதிய பொருள் விளக்கமும் கொடுத்தன.

**10)வரலாற்று வட்டச் சுற்று கோட்பாடு :**

இதுவும் வரலாற்றுக்கு ஒரு எல்லை வரையறையை அளித்த கோட்பாடு ஆகும். இந்தக் கொட்பாட்டை முதன்முதலாக விளக்கியவர் ஹெரடோட்டஸ் என்பவர் ஆவார். அவரது கூற்றுப்படி ‘வரலாறு வட்டமாகச் சுற்றி இயங்குகிறது’ என்பதாகும். இதன்பொருள் என்னவென்றால் வரலாற்று நிகழ்ச்சிகள் அதே விளைவுகளுடன் மீண்டும் மீண்டும் நிகழ்கின்றன என்பதேயாகும். இந்த வட்டச் சுற்றுக் கோட்பாட்டை பேரரசுகளின் எழுச்சியிலும் வீழ்ச்சியிலும், நாகரிகங்களின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் நாம் காணலாம். ஆனால் வரலாறு பொதுவாக முன்னோக்கியே செல்கிறது.

**11)அறிவியல் அணுகுமுறை**

நவீன காலத்தில் அறிவியல் முறையிலான அணுகுமுறை பின்பற்றப்பட்டது. வரலாற்று சான்றுகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. வரலாற்றுக்கு அறிவியல் முறையில் விளக்கம் அளிக்கப்பட்டது. இவ்வாறு வரலாற்றின் அறிவியல் முறையிலான எல்லை விரிவடைந்தது.

இவ்வாறு வரலாற்றபைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள் அதன் எல்லை, வலையறையை விரிவடையச் செய்துள்ளன. இவைகளில்கடவுள் சார்புக் கோட்பாடும், வரலாற்றுத் தலைவர்கள் கோட்பாடும் வரலாற்றின் எல்லையை மிகவும் விரிவடையச் செய்தவை ஆகும். வரலாற்றிற்கு ஒரு தெளிவான வரையறையும் நோக்கமும் இல்லாத போது இப்படி பல கருத்துக்களும்,

கோட்பாடுகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. அறிவொளிக் காலத்தில் அறிவுக்கும் கற்பனைக் காவியக் காலத்தில் மனித உணர்வுகளுக்கும் வரலாற்றில் முக்கியத்தவம் அளிக்கப்பட்டது. இவ்வாறு காலத்தின் தன்மை, சிந்தனை, செயல்பாடு, அறிவு, நம்பிக்கை, உணர்ச்சி ஆகியவற்றிற்கேற்ப வரலாற்றின் எல்லை விரிந்தும் சுருங்கியும் வந்துள்ளது.

**வரலாற்றின் நோக்கம்**

வரலாற்றின் எல்லை வரையறை எவ்வாறு காலத்திற்கு காலம் மாறுபடுகிறதோ அதேபோலத்தான் வரலாற்றின் நோக்கமும் மாறுபடுகின்றன. வரலாற்றுக்கென்று ஒரு பொது நோக்கம் உண்டு அதாவது நம் முன்னோர்கள் வாழந்த வாழத் தவறிய வரலாற்றினைச் சித்தரிப்பது ஆகும். வரலாற்றின் முக்கியமான நோக்கம் பழங்காலத்தை துருவி ஆராய்ந்து அக்காலச் சிறப்புக்களை வெளிப்படுத்துவதே ஆகும். அதுவே காலங்காலமாக மனிதனைத் தூண்டி வருகிறது.

பழங்காலங்களில் வரலாறு வெறும் புராணக் கதைகளாகவே சிததரிக்கப்பட்டன. ஆனால் தொடாந்து வந்த காலங்களில் நோக்கங்கள் மாறுப்பட்டன. நோக்க எல்லையும் விரிவடைந்தது. வரலாறு போர்க்களங்களையும் புரட்சித் தந்திரங்களையும் அரசர்கள் மற்றும் அமைச்சர்களின் பட்டியலை மட்டுமே விளக்குவதாகக் கருதப்பட்ட நிலை மாறியது. எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக வரலாறு மாறியது. மனிதவாழ்வு, பொருளாதார மேம்பாடு, தொழிலாளர்களின் நிலை, சமுதாய அமைப்பு, சமய சிநதனை என்று பல நோக்கங்கள் வரலாறுடன் இணைக்கப்பட்டு ஆராயப்பட்டு வருகிறது.

பொதுவாக வரலாற்று நிகழ்ச்சிகள் இருவகையாகப் பிரிக்கப்படுகிறது. அவை, திட்டமிட்டு நடைபெறும் நிகழ்ச்சிகள் திட்டமிடப் படாமல் நடைபெறும் நிகழ்ச்சிகள் ஆகியவையாகும். இதில் திட்டமிட்டு நடைபெறும் நிகழ்ச்சிகளிலிருந்து அவைகளின் நோக்கங்களை எளிதில் தெரிந்து கொள்ளலாம். உதாரணம் அரசியல் நடவடிக்கைகள், ராணுவ நடவடிக்கைகள், ஆனால் திட்டமிடப்படாத நிகழ்ச்சிகளின் நோக்கங்களை அறிந்து கொள்வது மிகவும் கடினமாகும். எனவே தான் வரலாற்றின் நோக்கம் பற்றி ஒருமித்த கருத்து உருவாகவில்லை. ஆனால் வரலாற்றின் நோக்கம் உண்மையில் என்ன நடந்தது என்று ஆராய்ந்து எழுதவதேயாகும்.

## வரலாறு கலையா, அறிவியலா

வரலாறு பொதுவாக கலை என்றே கருதப்பட்டு வந்துள்ளது. பல அறிஞர்கள் வரலாற்றை கலையுடனே ஒப்பிட்டனர். தொடக்க காலங்களில் அவர்கள் வரலாற்றினை ஒரு அறவியலாகக் கருதவில்லை. வரலாறு கலையா அறிவியலா என்று சிநதிக்கும் அளவுக்கு இவர்களது உள்ளங்கள் நாட்டம் கொள்ளவில்லை. ஆனால் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 1903ம் ஆண்டு கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்தில் பேராசிரியராகப் பணியேற்ற ஜே.பி.பியுரி என்பவர் தனது பதவி ஏற்பு விழாவில் ஆற்றிய உரையில் சில கருத்துக்களை வெளியிட்டார். அதாவது வரலாறு ஒரு அறிவியலே: மிகுதியுமில்லை, குறைவுமில்லை' என்றார். பியுரியின் இந்தக் கருத்து வரலாற்றறிஞர்களிடையே ஒரு விளக்கத்தை ஆரம்பித்து வைத்தது

வரலாறு கலையா, அறிவியலா என்பதே அது ஆகும். அந்த விவாதம் இன்றளவும் நடந்து வருகிறது. வரலாற்றாளர்களின் கருத்தக்கள், கோணங்கள், அணுகு முறைகள் மாறுபடுவதால் இந்த விவாதத்திற்கு முடிவு ஏற்படுவதற்கு சாத்தியக் கூறுகளே இல்லை.

வரலாற்றை நடுநிலையுடன் மதிப்பிட்டால் அது சில தன்மைகளில் அறிவியலாகவும் பலவகைகளில் கலையாகவும் காட்சியளிக்கிறது. வரலாறு கலைப் பண்புகளையும் அறிவியல் பண்புகளையும் ஒருங்கே கொண்டுள்ளது என்று டிரவல்யன் என்ற ஆசிரியர் கூறுகிறார்.

**வரலாறு கலையே ஆகும் - காரணங்கள்**

**1)வரலாறு ஒரு கலையியல் ஆகும் :**

புழங்காலம் முதலே வரலாறு இலக்கியம், இன்னிசை, சித்திரம் போன்றவை கலை இயல்களாகவே கருதப்பட்டு வந்துள்ளன. வரலாற்றை இலக்கியச் சுவையுடனும் படிப்பதற்கு இனிமையாகவும் படம் பிடித்துக் காட்டுவதில் வரலாற்றாசிரியர்கள் வல்லவர்கள். ஹெரடோட்டஸ் தனது நூலில் இலக்கிய நயத்திற்கே முக்கியத்துவம் தந்தார். மேலும் இடையிடையே கதைகளயைும் கட்டுரைகளையும் புகுத்தினார். ஒரு கலையை வடிவமைக்கும் கலைஞனுக்கு தனித் திறமை அவசியம் தேவை வரலாற்றை எழுதும் வரலாற்றாளனும் அக்கலைத் திறமையைப் பெற்றுள்ளான் என்பதை மறுக்க முடியாது.

**2)வரலாறு இலக்கியப் படைப்பாக கருதப்படுகிறது.**

ஹெரட்டோட்டஸ், தூசிடைடிஸ், லிலி, கிப்பன் போன்ற வரலாற்றாளர்கள் எல்லோரும் சிறந்த கலைஞர்கள் ஆவர். ஆவர்கள் அக்கால சிறந்த இலக்கிய எழுத்தாளர்கள் ஆவர். அவர்களது வரலாற்றுப் படைப்புகள் எல்லாமே சிறந்த இலக்கியங்களாகப் போற்றப்படுகின்றன. இப்படி வரலாற்றாளர்கள் எல்லோருமே தனித்திறமை படைத்த கலைஞாகள் ஆவர். அவர்களது படைப்பாகிய வரலாறு ஒரு கலை இயலே ஆகும்.

**3)வரலாறு மனித நடவடிக்கைகளுடன் தொடர்பு உடையது:**

வரலைாறு மனிதர்களின் நடவடிக்கைகளுடன் தொடர்பு கொண்டது ஆகும். மனிதன் விட்டுச் சென்ற சான்றுகளை ஆராய்ந்து அதன் மூலம் மனிதன் செய்தான் என்ற அறிவதே வரலாறாகும். மாறாக உயரற்ற ஜடப்பொருட்கள் பற்றியே அறிவியல் ஆய்வு செய்கிறது.

**4)வரலாற்றாளரின் ஆளுமையின் வெளிப்பாடே வரலாறு ஆகும்:**

வுரலாற்றுச் சான்றுகளை சேகரித்து அதற்கு விளக்கம் கொடுக்கும் போது வரலாற்றாளர் ஒரு களைஞர் ஆகிறார். காரணம் வரலாற்று விவரங்களுக்கு விளக்கம் கொடுப்பதற்கு அறிவாற்றலும், நுண்ணறவம், கலை கலை உணர்வும் தேவை மேலும் முன்னோக்கும், தொலைநோக்கும் தேவை. எனவெ வரலாற்றாளரின் அளுமையின் வெளிப்பாடே வரலாறு ஆகும்.

**5)வரலாறு ஓவியம் தீட்டுவதைப் போனற்து ஆகும்:**

பொதுவாக நடைபெற்று முடிந்த விட்ட வரலாற்று நிகழச்சிகளை அப்படியே படம் பிடித்துக் காட்ட முடியாது. ஆனால் இப்படிதான் நடந்திருக்கக் கூடும் என்ற கற்பணைத் திறனுடன் வடிவமைத்துக் காட்ட முடியும். எனவே வரலாறானது சிறந்த எழுத்தோவியமாகும்.

**6)வரலாறு பிற கலைகளைப் போலவே அறிவுப் பயன்கொண்டது ஆகும்.**

வரலாற்று நிகழ்ச்சிகளிலிருந்து நிர்வாகிகளும் ராஜதந்திரிகளும் பல கருத்துக்களை எடுத்தாள்கின்றனர். பல சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், புதிய விளக்கங்ள் கொடுப்பதற்கும் வரலாறு பல உதாரணங்களைத் தந்து அறிவுப் பயன் அளிக்கிறது.

**7)வரலாறு சோதனைக்குட்படுத்த முடியாதது ஆகும்:**

வரலாறு ஏற்கனவே நடந்த முடிந்து போன நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்டது ஆகும். நடந்து முடிந்து விட்ட வரலாற்று நிகழ்ச்சி மறுபடியும் எப்போதுமே ந்கழாது உதாரணமாக வரலாற்றின் நிகழ்ச்சிகளான பிரெஞ்சுப் புரட்சி உலகப் போர்கள் ஆகியவற்றைத் தரும்ப கொண்டு வந்து சோதித்து பார்க்க முடியாது. எனவே வரலாறு னலை இயல்தான் என்று கூறப்படுகிறது.

இவ்வாறு வரலாறு பல கலைப் பண்புகளைக் கொண்டதாக விளங்குகிறது.

**வரலாறு அறிவியலே ஆகும் - காரணங்கள் :**

**1)வரலாறு அறிவியல் மரபு சார்ந்தது :**

வரலாறு என்பதற்கு சான்றுகளை ஆராய்ந்து சேகரிக்கும் செய்திகள் என்று பொருள்படும். அதாவது வரலாற்றில் அறிவியலைப் போல ஆய்வுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. எனவே தான் சான்றுகளின் ஆய்வுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த கிரேக்க வரலாற்றாசிரியர் தூசிடைடில் அறிவியல் வரலாற்றின் தந்தை என்று அழைக்கப்டுகிறார். குாலப்போக்கில் வரலாற்றாய்வில் அறிவியலின் தாக்கம் அதிகமாகக் காணப்பட்டது. டார்வின் தனது பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டையும், இயற்கை தேர்வுக் கொள்கையையும் அறிவியல் சோதனை முறை பகுத்தாய்வு முறையின் அடிப்படை யிலேயே உருவாக்கினார். அதற்குப் பிறகும் ராங்கே, யதார்க்பவல், சீலி, ப்யூரி போன்றறோர் வரலாறு அறிவியலே என்ற கோட்பாட்டை வலியுறுத்திக் கூறினர். எனவே வரலாறு அறிவியல் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது.

**2)வரலாற்றின் மையப்பொருளான மனிதனும் இயற்கையின் படைப்பே ஆகும் :**

அறிவியலானது இயற்கைப் படைப்புகளை ஆராயும் இயல் ஆகும். வேதியல் இயற்கை படைப்பான தாதுப் பொருட்கள், அமிலங்களை ஆய்கிறது. நிலவியல் கல்லையும் மண்ணையும் ஆய்கிறது. விலங்கியல் மிருங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்கிறது. உயிரியலில் மனிதன் மற்றும் மிருகங்களின் உடலுறுப்புகள் ஆராயப்படுகின்றன. தாவரவியலில் அனைத்து வகையான தாவரங்களும் ஆராயப்படுகின்றன. இவ்வாறு அறிவியல் இயற்கையுடன் தொடர்பு கொண்டுள்ளது. இதைப் போலவே வரலாற்றின் ஆய்வுப் பொருளாக இருப்பது மனிதனே. முற்ற இயற்கைப் பொருட்களைப் போல மனிதனும் இயற்கையின் அற்புத படைப்பாகும். மனிதன் இயற்கை விதிகளுக்குட்பட்டே இயங்குபவனாக இருக்கிறான். எனவே வரலாறும் அறிவியலே ஆகும்.

**3)சான்றுகளைச் சேகரிப்பதில் அறிவியல் தன்மை காணப்படுகிறது :**

வுரலாற்று ஆராய்ச்சியில் சான்றுகள் முக்கிய இடம் வகிக்கிறது. ஒரு வரலாற்று நிகழ்ச்சியை விவரிப்பதற்கு எழுத்துச் சான்றுகள் போதாதபோது புதைப்பொருள் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அகழாய்வில் முற்றிலும் அறிவியல் முறைகளே பின்பற்றபடுகின்றன.

பொருட்களைத் தேடுதல் கண்டுபிடித்தல் வெளிப்படுத்துதல் ஆகியவற்றிற்கு அறிவியல் முறைகளே பின்பற்றப்படுகின்றன. அகழாய்வில் கிடைக்கும் பொருட்களை பரிசோதிப்பதற்கு சோதனைச் சாலை அவசியம். சோதனை செய்வதற்கு அறிவியல் அறிவு அவசியம். பழங்காலப் பொருட்களின் காலங்களைக் கணிப்பதற்கு கரிமம் 14 என்ற அறிவியல் முறை பின்பற்றப்படுகிறது. எனவே வரலாற்றையும் அறிவியல் துறை என்றே கூறலாம்.

**4)வரலாறு உண்மையைக் கண்டறிவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது :**

வரலாறும் அறிவியலைப் போலவே ஒரு பிரச்சனையை ஆய்வதற்கு முதலில் சான்றுகளைச் சேகரிக்கிறது. சேகரித்த சான்றுகளை வரிசைப்படுத்தகிறது. பிறகு சான்றுகளை பகுத்தாய்வு செய்து ஏற்றுக் கொள்ளத்தக்கவைகளை மட்டுமே ஏற்றுக் கொண்டு மற்றதைத் தள்ளிவிடுகிறது. ஆதன்பிறகு அறிவியலை போலவே பொதுக் கருத்தும் காணப்படுகிறது. எனவே வரலாற்றாராய்ச்சியில் மேற்கொள்ளப்படும் முறையில் அறிவியல் முறையைப் போன்றதே யாகும்.

**வரலாற்றுக்கும் அறிவியலுக்கும் உள்ள வேறுபாடுகள்**

ஆனால் பல வரலாற்றறிஞாடகளட அறிவியலோடு ஒப்பிடுதல் தவறு என்று கூறுகின்றனர். அப்படி ஒப்பிட்டாலும் அவை போலியான ஒற்றுமைகளே என்கின்றனர். ஜாப்ரே, பாரக்ஸா, ஏ.எல்.ரவுஸ், ஆர்.ஜி.காலிங்வுட் ஆகியோர் அறிவியல் வேறு வரலாறு வேறு என்று கூறுகின்றனர்.

1)முதலாவதாக அறிவியல் ஆய்வுகளில் ஆராயப்படும் பொருட்களைப் பற்றிய திறனாய்வு நடைபெறுவதில்லை. ஆனால் வரலாற்றில்' ஆராயப்படும் சான்றுகளையும் அதன் மூலம் கிடைக்கும் உண்மைகளையும் பொருட்படுத்தி ஆராயும் வேலையும் உண்டு.

2)அறிவியலானது எந்தக் காலத்திற்கும் பொருந்தக்கூடிய விதிகளைக் கண்டறிகிறது. ஆனால் வரலாறோ பழங்காலத்தில் நடந்தவற்றை அறிவதற்கே முயல்கிறது.

3)அறிவியலானது மக்களுக்குப் பயன்படக்கூடிய வாழ்க்கை வசதியை அதிகரிக்கக்கூடிய செயல்பாடுகளைச் செய்கிறது. நடைமுறையில் மறைந்து கிடக்கும் அதார விதிகளையும் காண்கிறது. ஆனால் வரலாற்றால் இந்த அரண்டு காரியங்களையும் செய்ய முடியாது.

4)அறிவியல் சோதனைக்கு உட்படுத்தக் கூடிய பொருட்களை ஆய்வு செய்கிறது. ஆனால் வரலாறு சோதனைக்கு உட்படுத்த முடியாத கடந்த கால மனிதர்களின் செயல்பாடுகளையும் அவர்களின் சமூக சூழ்நிலைகளையுமே ஆய்வு செய்கிறது.

5)ஒரு அறிவியல் அறிஞர் மிகவும் குறுகிய சூழ்நிலையில் தனது ஆய்வுக் கூடத்தில் வைத்தே தனது ஆய்வுகளை நடத்திவிட முடியும். ஆனால் வரலாற்றாளர் அவ்வாறு செய்ய முடியாது. பொருட்களை வைத்து ஆய்வு நடத்துவதற்கும் மனிதர்களை வைத்து ஆய்வு நடத்துவதற்கும் அதிக வேறுபாடுகள் உள்ளது.

6)அறிவியல் விஞ்ஞானிகள் சோதனை முறையை திரும்ப திரும்ப நடத்த முடியும். ஆனால் வரலாற்றில் ஒருமுறை நிகழ்ந்துவிட்ட நிகழ்ச்சியை மீண்டும் நிகழ வைக்க முடியாது.

7)அறிவியலில் தனித்தனி நிகழ்ச்சிகளை நிகழ வைத்து ஆராய்ந்து அவைகளுக்கு பொது விதி கண்டுபிடிக்க முடியும். ஆனால் வரலாற்றில் அவ்வாறு பொது விதி காண முடியாது.

புரட்சிவிதி, போர் விதி, பன்னாட்டு விதி என்று பொது விதி இல்லை. வரலாற்றில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் தனி-த்தன்மை உடையன ஆகும்.

மேற்கண்ட கருத்துக்களை நாம் ஆராயும் போது வரலாறு முற்றிலும் கலை ஆகாது. அதேபோல் முற்றிலும் அறிவியலும் இல்லை. அறிவியல் பண்புகளும் கலைப் பண்புகளும் கலந்து காணப்படுகிறது. ஆனால் வரலாறு அறிவியல் பண்புகளைவிட கலைப்பண்புகள் அதிகமாகக் கொண்டுள்ளது என்று கூறமுடியும்.

## வரலாற்றின் பயன்களும், கெடுபயன்களும்

**வரலாற்றின் பயன்கள்:**

இன்றைய உலகம் அறிவியல் உலகமாகவும், வாணிக உலகமாகவும் மாறி வருகிறது. எனவே அறிவியல் கலையும், வாணிககக் கலையும் செல்வாக்குப் பெற்றுள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் வரலாறு பயிலுவதால் எவ்விதப் பயனுமில்லை. நமது மாணவர்கள் உட்பட பலர் சலிப்படைகிறார்கள். ஆனால் இது உண்மைக்பு புறம்பானது. வரலாற்றின் முக்கியத்துவத்தை அறியாதவர்கள் கூறுவது ஆகும். வரலாறு படித்த மாணவர்களே அதிகமாக போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுகின்றனர். வெளியுறவுத் துறையிலும் தூதரகங்களிலும்கலைக் கூடங்களிலும் வேலைக்கமர்கின்றனர். ஆனால் வரலாற்றின் பயன் என்பது இதுவல்ல.

வரலாறு கடந்தக்கால மனிதனின் சாதனைகள், தோல்விகள், பெருமைகள், அவனது சிந்தனைகள் ஆகியவற்றை பிரதிபலிக்கிறது. எனவே வரலாறு என்பது சமுதாய நினைவு' ஆகும். எனவே வரலாற்றுணர்ச்சி இல்லாத சமுதாயம் நினைவில்லாத மனிதனைப் போன்ற ஆகும். மேலும் வரலாற்றைப் படிப்பதன் மூலம் புதிய சமுதாயத்தை அமைத்துக் கொள்ள முடிகிறது. இப்படி வரலாறு பல வழிகளில் நிகழ்காலத்தில் பயன்பாடு உள்ளதாக இருக்கிறது.

**வரலாற்றின் பயன்கள்:**

**1)வரலாறு மனித முன்னேற்ற விபரங்களின் பதிவே ஆகும் :**

மனிதன் காட்டுமிராண்டித்தனமான இயல்புகளிலிருந்து எவ்வாறு நாகரிக நிலையை அடைந்தான் என்பதும் அதற்காக அவன் நடத்திய போராட்டங்கள் பெற்ற அனுபவங்கள் போன்ற அனைத்தும் பதிவுசெய்து வைக்கபட்டுள்ள பதிவேடு தான் வரலாறு. டினவே வரலாறு பண்டைக் கால மனிதா்களின் சிநத்னைகளைப் பரதிபலிக்கின்றன. முன்னேற்றப் பாதையை விவரிக்கின்றன. அனுபவங்களைத் தருகின்றன. இவ்வாறு கடந்த கால அனுபவங்களை நமகட்கு நினைவுப்படுத்தும் பதிவேடுகளாக வரலாறு விளங்குகிறது.

2)**வரலாறு மக்களை அறிவுடையவராக்குகிறது:**

வரலாறு மக்களை அறிவுடையவராக்குகிறது. என்று பேக்கன் என்ற அறிஞர் கூறுகிறார். வரலாறு மனிதனின் அறிவுக் கூர்மைக்கும் அறநெறிக்கு வழிவகுக்கும் என்று ஹெரடோட்டஸ் கூறுகிறார். கடந்த கால நிகழ்ச்சிகளை அறிய முடியாதவர்கள் அவற்றை மீண்டும் செய்ய வேண்டியிருக்கும் என்று ஜார்ஜ் சந்தாயனா என்பவர் கூறுகிறார். ஒருவன் தன் வாழ்க்கை

அனுபவத்தின் மூவம் பயன் அடையும் கடந்தக்கால மனிதர்களின் அனுபவங்களை விளக்கும் வரலாற்றை கற்றால் அதிகமான பயன்களைப் பெற முடியும்.

**3)வரலாறு ஒரு சமுதாய நினைவாற்றலாக விளங்குகிறது:**

வரலாறு என்பது ஒரு சமுதாய நினைவு ஆகும். எனவே வரலாறு நினைவாற்றல் மூலம் கடந்த கால அனுபவத்தைத் தெரிந்து கொள்ள முடிகிறது. அதன் மூலம் புதிய தலைமுறைகளை இணைக்க முடிகிறது. வரலாறு என்ற நினைவாற்றல் மூலம் நிகழ்கால சமுதாயம் பல துறைகளில் வளர்ச்சியடைய முடிகிறது. நடந்ததை நினைவுப்படுத்த முடியாத சமுதாயம் நினைவாற்றல் இல்லாத சமுதாயத்திற்கு ஒப்பாகும்.

**4)வாழ்க்கைக்கு வழிகாட்டியாக உள்ளது :**

வரலாறு நிகழ்கால மனிதர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக விளங்குகிறது. அதாவது கடந்தக்கால அனுபவப் பயன்களைப் பகிர்ந்து கொள்கிறது. புதிய அனுபவங்களைக் கொடுக்கிறது. வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களைச் சமாளிக்க வழிகாட்டுகிறது. எதிர்கால வாழ்க்கைக்கும் வழிவகுத்து ஒரு புதிய சமுதாயம் அமையத் துணை செய்கிறது. இவ்வாறு நமது வாழ்க்கைக்கு வரலாறு ஒரு வழிகாட்டியாக உள்ளது.

**5)தவறுகளைத் திருத்திக் கொள்ள உதவுகிறது:**

வரலாறு கடந்தக்கால அனுபவங்களைத் தருகிறது. எனவே கடந்த காலத்தில் தவறுகள் நிகழ்ந்ததற்கான காரணங்களை நாம் அறிய முடிகிறது. எனவே நமது தவறுகளை திருத்திக்கொண்டு முன்னேறிச் செல்ல உதவுகிறது. ஏதிர்காலத்திற்குத் திட்டமிட முடிகிறது. வரலாற்றில் 12 ம் சார்லசும் நெப்போலியன் போனபார்ட்டும் ரஷ்யா மீது படையெடுத்து தோல்வியடைந்தார்கள். இந்தத் தவறை உணர்ந்து திருத்திக் கொள்ளாத ஹிட்லரும் ரஷ்யா மீது போர் தொடுத்து தோல்வியடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

**6)எதிர் காலத்தை புரிந்து கொள்ள உதவியாக உள்ளது:**

வரலாறு பழைமையை தெரியப்படுத்துவதற்கு மட்டுமல்லாமல் எதிர்காலத்தைப் புரிந்து கொள்ளவும் பயன்படும் என்று கூறினார் ஹாரிசன் என்பவர். ‘வரலாற்று நூல்களைப் புரட்டும் போது அதில் கடந்த காலத்தைப் பார்க்கவில்லை. எதிர் காலத்தையே காண்கிறேன் என்று கூறினார் ஜாண்சீலி. குடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள வரலாறு உதவியாக உள்ளது. எதிர்காலத்தில் நாம் வைத்துள்ள நம்பிக்கையானது கடந்த காலத்தை நாம் எவ்வாறு அறிந்து கொண்டிருக்கிறோம் என்பதைப் பொறுத்தது ஆகும்.

**7)வரலாறு திறனாய்வு செய்யும் சக்தியை வளர்க்கிறது :**

கடந்தகால வரலாற்றை ஆய்வு செய்யும் போது அது திறனாய்வு செய்யும் சக்தியை வளர்க்கிறது. பண்டைக்கால இலக்கியங்களையும், வரலாற்றையும் மக்கள் படித்தனாலேயே ஐரோப்பாவில் மறுமலர்ச்சி தோன்றிகிறது. விவிலியம் படிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டதாலேயே மதச் சீர்திருத்தம் தோன்றியது. இவ்வாறு வரலாறு திறனாய்வு செய்யும் தன்மையை வளர்த்து அதன்மூலம் மனித சமுதாயம் முன்னோக்கி நகரப் பயன்படுகிறது.

**8)ஒழுக்க, அறநெறிக் கோட்பாடுகள் வளரப் பயன்படுகிறது :**

ஒரு சமுதாயம் முன்னோக்கிச் செல்ல ஒழுக்கமும், அறநெறிக் கோட்பாடுகளும் அவசியம். இந்தக் கோட்பாடுகளை மனிதர்கள் கடைபிடிப்பதற்குத் தூண்டுகோலாக அமைகிறது. வரலாறு. குாரணம் வரலாற்றின் மூலம் பல மகான்களின் ஒழுக்கநெறி கோட்பாடும், நாம் அறிய முடிகிறது. சாக்ரடீஸ் மூலம் பகுத்தறிவுக் கோட்பாடும் நைட்டிங்கேல் அம்மையார் மூலம் தொண்டு செய்யும் தன்மையும் பிரெஞ்சுப் புரட்சியின் மூலம் சுதந்திரக் கோட்பாடும் காந்திஜியின் மூலம் அகிம்சைக் கோட்பாட்டையும் நாம் அறிய கொள்ள முடிகிறது. இந்த உன்னதமான கோட்பாடகளின் அடிப்படையில் நமது வாழ்க்கையை அமைத்து வெற்றி பெற முடிகிறது.

**9)வரலாறு ஆட்சியாளர்களுக்கு வழிகாட்டுகிறது :**

ஆட்சியாளர்களுக்கு பலவழிகளில் வரலாறு உதவி செய்கிறது. 'ஆட்சிப் பணிகளில் சீராகச் செயலாற்ற சரியான பின்னணியை வரலாறு அமைத்துத் தருகிறது' என்று ஏ.எல்.ரௌஸ் என்பவர் கூறுகிறார். 'வரலாறு அரசியலாளர் களுக்கும், ஆட்சித்துறை யினருக்கும் ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறது' என்று பொலியியஸ் கூறுகிறார். ஆட்சியாளர்களுக்குப் பல வழிகளில் வரலாறு ஒரு எச்சரிக்கையாக இருப்பதால் அவர்களுக்கு வழிகாட்டியாக உள்ளது. கடந்த கால நிர்வாக முறை சீர்திருத்தங்கள், நீதிமுறை ராணுவ யுக்திகள், வெற்றிகள் தோல்விகள் ஆகியவைகள் ஆட்சியாளர்களுக்கு நல்ல வழிகாட்டிகளாக அமைந்துள்ளன.

**10)வரலாறு ஜனநாயக எரிமைகளை எணர வழிகாட்டுகிறது:**

வரலாறு மனித உரிமைகள் எவ்வாறு வளர்ச்சியடைந்து வந்துள்ளது. என்பதைத் சித்தரிக்கிறது. ஆரம்ப காலத்தில் அடிப்படை உரிமைகளை மக்கள் அனுபவித்து வந்தனர். பின்னர் எதேச்சதிகார ஆட்சியாளர்களால் அந்த உரிமைகள் பறித்துக் கொள்ளப்பட்டன. பின்னர் மக்களிடம் விழிப்புணர்ச்சி தோன்றி தங்கள் உரிமைகளைப் பெறுவதற்காக போராடியவற்றையும் சித்தரிக்கிறது வரலாறு. ஜனநாயக உரிமைகளைப் பெறவும் சமத்துவத்தை நிலைநாட்டவுமே பிரெஞ்சுப் புரட்சி தோன்றியது. இந்த உரிமைகளை நிலைநாட்ட எண்ணற்ற மக்கள் உயிர்த்தியாகம் செய்தனர். இப்படி வரலாற்றின் மூலம் நமது உரிமைகளை அறியும் போது அவ்வித உரிமைகளைப் பெறவும் பெற்ற உரிமைகளைப் பேணி பாதுகாக்கவும் வரலாறு வழிகாட்டுகிறது.

இவ்வாறு வரலாற்றை கற்பதன் மூலம் பல வழிகளில் பயன் கிடைக்கிறது. தெரியாதவற்றைத் தெரிந்து கொள்ள முடிகிறது. அறிவை விருத்தி செய்து கொள்ள முடிகிறது. நுண்ணறிவை வளர்த்துக்கொள்ள முடிகிறது. திட்டவட்டமாக முடிவெடுக்கும் தன்மை, திறனாய்வு செய்யும் பண்பு. ஒழுக்கநெறி முறையிலான வாழ்க்கை தவறுகளைத் திருத்திக் கொள்ளுளும் தன்மை ஆகிய மனிதப் பண்புகளை வளர்த்துக் கொள்ள முடியும். மேலும் நமது கடமைகள், பொறுப்புகள், உரிமைகள் ஆகியவற்றை நமக்கு விளக்கிக் கூறுவதால் மனித குல மேம்பாட்டிற்கு மிகவும் துணை செய்கிறது வரலாறு.

**வரலாற்றின் கெடுபயன்கள்**

வுரலாற்றை சரியான வழிகளில் பயன்படுத்தும் போது பயன்கள் ஏற்படுகிறது. தவறான வழிகளில் பயன்படுத்தும் போது கெடுபயன்கள் ஏற்படுகின்றன. வரலாற்றை போதிய சான்றுகள் இல்லாமல் எழுதும் போதும், வரலாற்றாளா் தனது வெறுப்பு, வி-ருப்பு அடிப்படையில் வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு விளக்கம் கூறும் போதும் கெடுபயன்கள் ஏற்படுகின்றன. ஏனெனில் இப்படிப்பட்ட விளக்கங்கள் தவறான முடிவுகள் ஏற்படக் காரணமாகின்றன. கெடுபயன்களை விளைவிக்கிறது.

**1)கற்பனை கலந்த வரலாறு எழுதப்படுகிறது :**

ஒரு வரலாற்றாளா் தான் நேரில் பார்க்காத ஒரு நிகழ்ச்சியைத் தான் ஆய்வு செய்கிறார். பல தகவல்களின் அடிப்படையில் தான் ஆய்வு செய்கிறார். அப்படி ஆய்வு செய்கின்ற போது கற்பனைகளுக்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. பிளேட்டோ எழுதியஅ குடியரசு, புனித அகஸ்டின் எழுதிய கடவுளின் நகரம், ரூசோ எழுதிய சமுதாய ஒப்பந்தம் போன்றவை கற்பனை வரலாறுகள் ஆகும். இவை உண்மையான வரலாற்று நூல்களாக கருத முடியாது.

**2)மூடநம்பிக்கையினால் வரலாறு தவறான வழியில் பயன்படுத்தப்படுகிறது :**

மூட நம்பிக்கை பெரும் கேடு விளைவித்துள்ளது. இது வரலாறு தவறான வழியில் பயன்படுத்தப்படுவதற்கு நல்ல உதாரணமாகும். மனிதனின் ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் கடவுளின் தலையீடு உள்ளது என்றும் இறைவனின் சக்தியால்தான் இந்த உலகமே இயங்குகிறது என்றும் பல வரலாற்றாளர்கள் நம்பிக் கொண்டிருந்தனர். எனவே தான் சமயத்துக்கும் மூட நம்பிக்கைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கும் வகையில் வரலாறுகள் எழுதப்பட்டன. புனித அகஸ்டின் போன்ற எழுத்தாளர்கள் உலகியல் இறைவனின் மிகைப்படுத்தி எழுதினர். இத்தகைய கருத்துக்களினால் தான் வரலாற்றுத் தத்துவமி தோன்றுகிறது.

**3)வாழ்க்கை வரலாறு கெடு பயனுடையது:**

கார்லைல் போன்ற வரலாற்றாளர்கள் ‘மாமனிதர்களின் சுயசரிதமே வாழ்க்கை வரலாறு’ என்று எண்ணி மதிமயங்கினார். மாமனிதர்கள் வாழ்கைத் தொகுப்பே வரலாறு என்பது ஏற்புடையது அல்ல. இவ்வாறு தனிமனிதர்கள் வாழ்க்கை நடவடிக்கைகளை வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு போறுப்பாக்குவது வரலாற்றுக்கு புறம்பானது கெடுபயனுடையது.

**4)சில கோட்பாடுகள் வரலாற்றை தவறாகப் பயன்படுத்தகட் காரணமாயின:**

சிலவகைக் கோட்பாடுகள் வரலாற்று எழுத்தாளர்களின் எண்ணப்போக்கினை மாற்றிவிடுகின்றன. இதன் அடிப்படையில் தோன்றியது தான் இனவரலாறு ஆகும். ஆங்கிலேயர் வெள்ளை இனத்தவரால் தான் உலக நாகரிகம் ஏற்படும் என்று நம்பினார். ஜெர்மானிய இனமே உயர்ந்த இனம், அதுவே ஆளப்பிறந்த இனம் என்றார் ஹிட்லர். ஆரியர்களும், திராவிடர்களும் தங்கள் இனமே உயர்ந்தது என்ற கோட்பாட்டைக் கொண்டிருந்தனர். இதன் அடிப்படையில் எழுதப்படும் வரலாறு கெடுபயன்களையே ஏற்படுத்தும். வரலாறு தவறாகப் பயன்படுத்தப்படுவதால் ஏற்படும் விளைவாகும். முகலாய அரச சபையிலிருந்த அபுல்பாசல்

முகலாய அரசர்கள் செய்தவைகள் அனைத்தும் சிறந்தவை என்று பாராட்டுகிறார். இவை உண்மையான வரலாறு ஆகாது. ஆதை எஜதுபவர்களின் எண்ணங்களின் பிரதிபலிப்பாகவே கருதலாம்.

**5)தேசப்பற்றுடன் எழுதப்படும் வரலாற்றின் கெடுபயன்கள் :**

பலநாடுகளில் அரசியல் சூழ்நிலைகளின் காரணமாக வரலாறு திரித்து எழுதப்பட்டன. இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் ஜெர்மனி, இத்தாலி,இங்கிலாந்து, ஜப்பான் போன்ற நாடுகளின் தேசிய உணர்ச்சியின் தூண்டுதலால் வரலாறுகள் திரித்தும் உண்மைக்கு மாறாகவும் எழுதப்பட்டன. இவ்வித தேசப்பற்று மற்றும் வகுப்புவாதம் ஆகியவை நேர்மைக்கு புறம்பானவை. இதன்விளைவாக நாடுகளிடையே கருத்து வேறுபாடு அதிகரித்தது போர் ஏற்பட்டது.

**6)தனிப்பட்ட நோக்கம் நிறைவேற வரலாறு தவறாக பயன்படுத்தப்படுகிறது :**

தனிப்பட்ட நபர்களின் நோக்கம் நிறைவேறவும் வரலாறு தவறாக பயன்படுத்தப்படுகிறது. ஜெர்மானிய இணைவுக்காக பாடுபட்ட பிஸ்மார்க் பிரான்சுடன் ஒரு போர் புரிவதற்காக காரணம் தேடி அலைந்தார். இறுதியில் பிரான்சுடன் ஒரு போர் தர்க்க நாஸ்திரத்தில் இருக்கிறது என்று செய்தி வெளியிட்டார். அதாவது தன்நோக்கம் நிறைவேற வரலாற்றைத் தவறாக பயன்படுத்தினார். சில வரலாற்று வரைவியலாளர்களும் வரலாற்றை திரித்து எழுதுகின்றனர். அவர்களின் சார்பு நோக்கு, சந்தர்ப்பவாதம், பயம் ஆகியவற்றினாலேயே வரலாற்றை தவறாகப் பயன்படுத்தி சுயநோக்குடன் எமுதிகின்றனர்.

இவ்வாறு வரலாறு பல வழிகளில் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. அதனால் ஏற்படுவது கெடுபயன்களே. வுரலாற்றின் பயன்களும் கெடுபயன்களும் அதைப் பயன்படுத்துவதைப் பொறுத்தே உள்ளது. வரலாற்று எழுத்தாளர்கள் நேர்மையான நோக்குடன் வரலாற்றை எஎது நிகழ்ந்ததோ அதை அப்படியே கருத்து பிறழாது எழுத வேண்டும் வரலாற்றைப் பயன்படுத்தும் போதும், சுயவிருப்பு வெறுப்பு அடிப்படையில் பயன்படுத்தக்கூடாது. சுயநலன்களுக்காகவும் பயன்படுத்துதல் கூடாது.

### வரலாற்றுப் படிப்பினைகள்

வரலாறு என்பது கடந்தகால நிகழ்ச்சிகள் தொகுப்பே ஆகும். அது மனிதனின் அன்றாட வாழ்க்கைக்கு பயன்படும் அறிவுத் தொகுதியாக உள்ளது. ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையும் அனுபவத்தினாலேயே உயர்நிலை அடைகிறது. ஆந்த அனுபவங்களை வரலாற்று நிகழ்ச்சிகளிலிருந்து கற்றுக் கொள்கிறான். குடந்த நல்வாழ்விற்காக எந்தெந்த தவறுகளை நீக்கி நல்வாழ்வு வாழ முற்படுகிறான். அந்த நல்வாழ்விற்காக எந்தெந்த காரியங்களைப் பின்பற்ற வேண்டும். எவைகளைத் தவிர்க்க வேண்டும் என்று வரலாற்றிலிருந்து படிப்பினை பெற்றுக் கொள்கிறான். வுரலாற்றிலிருந்து எண்ணற்ற படிப்பினைகளை நாம் கற்றுக் கொள்ள முடியும்.

**1)இயற்கைக் கட்டுப்படுத்துவதில் மனிதருக்கு வரையறை உண்டு :**

முனிதன் ஆரம்ப காலம் முதலே இயற்கையை எதிர்த்தே வீறுநடை போட்டு வந்துள்ளான். பெரும் காடுகளை அழித்தே குடியிருப்புகளை அமைத்தான். புதிய புதிய கண்டுபிடிப்புகளால் கடலையும், வான எல்லையும் வென்றுள்ளான். பெரிய நகரங்களை உருவாக்கிடமுடியும். பாலைவனத்தைக் கூட பசுமையாக்கிட முடியும். ஆனால் திடீரென்று தோன்றும் கடல் கொந்தளிப்பு மனிதனால் உருவாக்கப்பட்ட அத்தனையையும் விழுங்கி விடுகிறது. புழங்கால நகரங்கள் பாலைவன மணலில் மூழ்கிவிட்டத்தை நாம் அறிவோம். நிலநடுக்கத்தால் மாபெரும் மாளிகைகள்கூட கூழாங்கற்களாகி விடுகின்றன. 2001 ஜனவரியில் நிலநடுக்கத்தால் குஜராத்திலுள்ள பூஜ் நகரமே அழிந்து போனதை நாம் அறிவோம். எனவே மனிதன் இயற்கையை சில வரையறைக்குட்பட்டே கட்டுப்படுத்த முடியும். இதுவே வரலாறு தரும் பாடமாகும்.

**2)பாதகமான சூழ்நிலைகளிலேயே நாகரிகங்கள் தோன்றுகின்றன:**

பண்டைக்கால நாகரிகங்கள் நதிக் கரைகளிலேயே தோன்றின. வெள்ளப் பெருக்கு ஏற்படும் போது நதிகள் போக்கை மாற்றிக் கொண்டான். அப்போது பேரழிவை ஏற்படுத்தின. மேலும் பல பாகமான சூழ்நிலைகளிலேயே தோன்றின. வளர்ந்தன. காரணம் அங்கிருந்த மக்கள் இச்சவால்களை வெற்றிகரமாகச் சமாளிக்க முடிந்ததாலேயே நாகரிக வளர்டச்சி ஏற்பட்டது. இந்த வரலாற்றுப் பாடத்தை நமக்கு வழங்கியவர் அர்னால்ட் டாயின்பி என்ற ஆங்கிலேய வரலாற்றாளர் ஆவார்.

**3)மனித வாழ்க்கை போட்டியின் அடிப்படையில் அமைகிறது :**

மனிதன் வாழ்க்கையில் ஒருவனோடு ஒருவன் போட்டி போட்டே வாழ்ந்து வருகிறான் இந்தப் போட்டியில் அனைலரும் வெற்றியடைய முடியாது. பலர் தோற்கின்றனர். வாழ்க்கைப் போராட்டத்தில் திமையுள்ளவனே நிலைத்து நிற்க முடிகிறது. அமெரிக்காவில் இந்தியப் பழங்குடியினருக்கும், ஐரோப்பிய குடியேற்ற வாதிகளுக்கும் ஏற்பட்ட போட்டியில் இந்தியப் பழங்குடியினர் அழிக்கப்பட்டனர். அவர்களின் நிலங்களைப் பறித்து அதில்தான் தங்கள் அரசுகளை நிறுவினர். எனவே திறமையுள்ளவனே வாழ முடியும் நிலைத்து நிற்க முடியும்.

**4)தீவிர தேசிய உணர்வு அழிவையே ஏற்படுத்தும் :**

பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் பல நாடுகளில் தீவிர தேசியவாதம் தலை தூக்கியது. முக்கியமாக ஐரோப்பிய நாடான ஜெர்மனியிலும், தூரக் கிழக்கு நாடான ஜப்பானிலும் தீவிர தேசியவாதம் தோன்றுகிறது. இத்தாலியிலும் காணப்பட்டது. தங்கள் நாட்டின் மீது கொண்ட பற்றுதல் பிற நாட்டின் மீது வெறுப்பை ஏற்படுத்தியது. இதனால் நாடுகளிடையே போர் ஏற்பட்டு இறுதியில் அழிவே ஏற்பட்டது. எனவே தீவிர தேசியவாதம் அழிவைத் தரும் என்பது வரலாற்றின் படிப்பினையாகும்.

**5)ஏகாதிபத்திய பேரரசுகள் இறுதியில் வீழ்ச்சியடையும்:**

பதினாறாம் பதினேழாம் நூற்றாண்டுகளில் ஸ்பெயின் போர்ச்சுக்கல் ஆகிய நாடுகள் மிகப்பெரிய குடியேற்றப் பேரரசை அமைத்தன. பின்னர் இங்கிலாந்தும், ஜெர்மனியும் அமைத்தன. குடியேற்ற ஏகாதிபத்திய கொள்கையைப் பின்பற்றி தங்கள் கட்டுப்பாட்டில்

உள்ள நாடுகளைப் பொருளாதார ரீதியாகச் சுரண்டின. ஆனால் நடந்தது என்ன? நிரந்தரமாக இந்த நாடுகள் தங்கள் பேரரசுகளை கட்டிக் காக்க முடியவில்லை. விழிப்புணர்வு கொண்ட மக்கள் போராடி சுதந்திரம் டிபற்றனர். பேரரசுகள் வீழ்ச்சியடைந்தன. ஏகாதிபத்தியக் கொள்கையின் அடிப்படையில் பேரரசை அமைக்க முயன்றால் அது அறுதியில் தோல்வியடையும் என்பது வரலாற்றின் மூலம் தெரியவரும் படிப்பினை ஆகும்.

**6)மனித உரிமைகளை நிரந்தரமாக நசுக்கிவிட முடியாது :**

மனிதன் சுயமரியாதையுடன் வாழ்வதற்கு அடிப்படை உரிமைகள் மிகவும் அவசியம். எங்கே, மக்கள் அடிப்படை உரிமைகளை அனுபவிக்கிறர்களோ அங்கு வளமும், வலிமைக்கும் வளத்திற்கும் அந்த நாட்டு மக்கள் அனுபவிக்கும் அடிப்படை உரிமைகளே காரணம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் வரலாற்றில் அடிப்படை மனித உரிமைகளை நசுக்கிய பல ஆட்சியாளர்களைக் காண்பிறோம். ஆனால் அந்த நாடுகளில் குறுகிய காலத்திற்குத்தான் அப்படி நசுக்க முடிந்தது. இறுதியில் மக்கள் முழுமையான உரிமைகளைப் போராடி பெற்றுக் கொண்டன. உரிமைகளை நசுக்க முற்பட்டால் அது புரட்சிக்கு வழிவகுக்கும் என்பது வரலாறு தரும் படிப்பினையாகும்.

**7)அகிம்சை வழியே அறவழியாகும்:**

வரலாற்றை நாம் புரட்டிப் பார்க்கும் போது பண்டைக் காலத்திலிருந்தே மனிதன் வன்முறையில் ஈடுபட்டு வந்துள்ளான். தனது நோக்கங்களை அடைவதற்கு வன்முறையை ஆயுதமாக பயன்படுத்தி வந்துள்ளான். ஆனால் வரலாற்றிலிருந்து நாம் பெறும் பாடம் என்னவென்றால் இந்த வன்முறையின் மூலம் கிடைக்கும் பயன் குறுகிய காலமே நீடிக்கும். அன்பு வழியும், அகிம்சை வழியும் நிலையான பயன்களைத் தருவதாகும். புத்தர், மகாவீரர், ஏசுநாதர், மகாத்மா காந்தி போன்றோர் அன்பு மற்றும் அறவழியைப் போதித்துள்ளார். அதன்வழி வாழ்ந்து காட்டினார். அன்பும் அகிம்சையும் சரியான வழியாகும். ஆறவழி ஆகும். அதன்மூலம் நமது இலக்கை அடையமுடியும் என்பது இந்திய சுதந்திரப் போரில் மகாத்மா காந்திஜி நிரூபித்துக் காட்டியுள்ளார்.

**8)ஒற்றுமையின்மையும் உள்நாட்டுக் குழப்பமும் ஒரு நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும்:**

எந்த ஒரு தனிப்பட்ட இனமோ, சமுதாயமோ, நாடோ ஒற்றுமையில்லாமலும் பிறர் நலத்தில் நாட்டம் இல்லாமலும் இருந்தாலும் இறுதியில் இது அழிவுப் பாதையில் இட்டுச் செல்லும். ஆப்படிப்பட்ட நாடுகள் வலிமையிழந்து அடிமையாகக் கிடந்ததை நாம் வரலாற்றில் காண்கிறோம். 1526ல் பாபர் இந்தியாவின் மீது படையெடுத்த போது வடஇந்தியா நாடுகள் ஒன்றுபட்டு நின்றிருந்தால் இந்திய வரலாறே வேறுவிதமாக எழுதப்பட்டிருக்கும். இந்திய அரசர்களிடையே காணப்பட்ட ஒற்றுமையின்மையையும் குழப்பத்தையும் பயன்படுத்தியே ஆங்கில ஆதிக்கம் இந்தியாவில் வேரூன்றியது. இந்தியா அடிமைப்படுத்தப்பட்டது. இதேபோல வரலாற்றில் பல உதாரணங்களைக் கூறலாம். உள்நாட்டுக் குழப்பத்திலும், அரசியல் நெருக்கடிகளிலும் தத்தளிக்கும் நாடுகளுக்கு இது ஒரு சிறந்த பாடமாகும்.

**9)வெற்றியும் தோல்வியும் நிரந்தரமானது அல்ல:**

வரலாற்றில் மாபெரும் அரசர்களையும் அவர்களது வெற்றிகளையும் தோல்விகளையும் காண முடிகிறது. மாவீரன் அலெக்சாந்தர்,ஜீலியஸ் சீசர், நெப்போலியன் போன்றோர் பெரும் வெற்றி பெற்று பேரரசுகளை அமைத்தனர். ஆனால் அந்த வெற்றிகள் நிலைத்து நிற்க முடியவில்லை. இறுதியில் தோல்வி அடைந்தனர். அவர்கள் அமைத்த பேரரசுகளும் வீழ்ந்தது. ராணுவப் பலத்தின் மூலம் கிடைத்த வெற்றி நிலையானதாக இவ்லை. இதற்கு ஹிட்லரின் வெற்றிகளையும் உதாரணமாகக் குறிப்பிடலாம்.

வெற்றியைப் போலவே தோல்விகளும் நிரந்தரமானது அல்ல. பாலஸ்தீனத்திலிருந்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு யூதர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். ஆனால் 1948ல் மீண்டும் தங்களுக்கென்று தனிநாட்டை அமைத்துக்கொண்டனர். சுமார் ஐநூறு ஆண்டுகளாக அடிமைப்பட்டு கிடந்த இந்தியா 1947ல் சுதந்திரமடைந்தது. இரண்டாம் உலகப் போரில் தோற்றுப்போன ஜெர்மனியும் இத்தாலியும் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ராணுவ ரீதியாகவும் முறியடிக்கப்பட்டது. ஆனால் இன்று இந்த நாடுகள் வீறுக்கொண்டு எழுந்து மீண்டும் முன்னேற்றப் பாதையில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. எனவே வெற்றியும் தோல்வியும் நிரந்தரமல்ல என்று வரலாறு நமக்குப் பாடம் புகட்டுகிறது.

**10)செல்வச் செருக்கு சீரழிவை ஏற்படுத்தும் :**

எங்கு செல்வம் குவிகிறதோ அங்கு மனிதன் அழிகிறான் என்கிறது வரலாறு செல்வத்தின் மீது ஆசைப்படுபவர்களும், செல்வச் செருக்குடன் வாழ்ந்தவர்களும் இறுதியில் வீழ்ச்சியையே சந்தித்துள்ளனர். இதற்கு வரலாற்றில் எத்தனையோ எடுத்துக்காட்டுகள் உள்ளன. நமது அனுபவத்திலும் பார்க்க முடிகிறது. பிரான்ஸ் நாட்டின் லூயி மன்னர்கள் செல்வச் செருக்குடன் வாழ்ந்தனர்.ஊதாரித்தனமாக செலவு செய்தனர். இதனால் நாடு பொருளாதார வலிமை இழந்தது. இது அவர்களது வீழ்ச்சிக்குக் காரணமானது. பிலிப்பைன்ஸ் அதிபர் மார்க்கோஸ், மனைவி இமல்டாவின் செல்வச் செருக்கின் காரணமாகவே நகரங்கள், தலைவர் எத்தனையோ நாம் வரலாற்றில் காணமுடியும்.

**11)சர்வதேச உணர்வே உலகிற்கு பயனளிக்கும்:**

துற்கால உலகத்திற்கு மிகவும் தேவைப்படுவது பன்னாட்டு ஆநாக்கே ஆகும். சுயநலமும் குறுகிய தேசப்'பற்றும் தனித்து வாழ்தலும் எந்த நாட்டிற்கும் எப்போதும் நன்மை பயக்கவில்லை என்று வரலாறு நமக்கு எடுத்துக் காட்டியுள்ளது. நாடுகளிடையே ஏற்பட்ட சச்சரவுகள் சமாதான வழியிலேயே தீர்க்கப்படுவது நன்மையளித்துள்ளது. பரஸ்பர நல்லுஙவுகள் முன்னேற்றமடையக் காரணமாகி உள்ளன. அதேநேரம் உலக சமுதாயத்தில் வளர்ந்துவரும் அறிவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சிகள் நல்வாழ்வுக்கே பயன்படுத்தப்பட வேண்டும். தவறாக பயன்படுத்தினால் ஏற்படும் சீரழிவுகளை ஹிரோஷிமா நாகசாகி நமக்கு உணர்த்துகிறது. எனவே தற்போதைய தேவை உலக அமைதி, உலக ஒத்துணர்வு, பன்னாட்டு நோக்கு ஆகியவையே ஆகும்.

இவ்வாறு வரலாறு நமக்கு எத்தனையோ பாடங்கள் புகட்டுகிறது. ஆனால் மனிதன் வரலாற்றிலிஜருந்து பாடம் கற்றுக் கொள்கிறானா என்பதுதான் சந்தேகமாக உள்ளது

வரலாற்றிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடம் என்னவென்றால் வரலாற்றிலிருந்து மனிதன் எந்தப் பாடமும் கற்றுக் கொள்ளவில்லை என்பது தான் என்ற கூற்று சிநதிப்பதற்கு உரியது ஆகும். வரலாற்றிலிருந்து படிப்பினைகளை கற்றுக் கொண்டு அதன்படி தவறுகளைத் திருத்திக் கொண்டால் மனித சமுதாயம் வேகமான முன்னேற்றம் அடையும் என்பதில் சந்தேகமில்லை.

## அலகு – II

## வரலாற்று ஆதாரங்கள்

நடந்த முடிந்த நிகழ்ச்சிகளின் குறிப்பே வரலாறு எனப்படும். நிகழ்ச்சிகள் நடைபெற்று மறைந்து விடுகின்றன. ஆனால் மணற்பரப்பிஜல் அடிச்சுவடுகள் பதிவது போல் அவை சில தடயங்களையோ நினைவுப் பொருட்களையோ விட்டுச் சென்றுவிடுகின்றன. அப்படி விட்டுச் சென்ற சான்றுகளைத் தேடி எடுப்பதே ஆய்வு நிகழ்த்தும் வரலாற்றாசிரியனின் பணியாகும். ஆவன் அவைகளின் இயல்பு, கிடைத்த இடம் எந்த அளவிற்கு அவை நடைபெற்ற றிகழ்ச்சிகளின் பொருத்தமான சான்றுகளாகத் ததகவல்களைத் தரும் ஆதாரங்களாக அமையும் என்று மதிப்பிடும் முறை என்பவற்றை கண்டுபிடிக்க முயற்சிக்கிறார். இந்த சான்றுகள் கடந்தகால மக்களால் பணிபுரியும் சமயத்தில் தற்செயலாக விடப்பட்டிருக்கலாம். அல்லது தாம் ஆற்றிய பணிகளை வருங்கால மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வேண்டுமென்றே விடப்பட்டிருக்கலாம். தற்செயலாக விடப்பட்டவைகளுக்கு மண்பாண்டத் துண்டுகளும் வேண்டுமென்றே விடப்பட்டவைகளுக்கு எழுத்துச் சுவடிகளும் பொருத்தமான உதாரணங்களாகும்.

வரலாற்று ஆதாரங்கள் இரு பெரும் பிரிவின்பாற்படும் அவை ஆவணங்கள், ஆவணமற்ற பிற சான்றுகள் எனப்படும். ஆவணங்கள் மிக முக்கியமான அதாரங்களாகக் கருதப்படுகின்றன. ஏனென்றால் அவை பதிவு செய்யப்பட்டவை. வாய் மொழித் தகவல்கள், கட்டிடங்கள், கலைப்பொருட்கள் மற்றும் இவை போன்ற மண்ணுயிர் சார்ந்த சான்றுகள் ஆவணமில்லா பிற சான்றுகளாகக் கருதப்படுகின்றன. சான்றுகளினியல்பின்படி அவற்றை பொருள் வடிவில் உள்ளவை கருத்து வடிவில் உள்ளவை, எழுத்து வடிவில் உள்ளவை என்று மூன்று வகைக்கும் பழக்கவழக்கங்கள் பாரம்பரியங்கள் இரண்டாம் வகைக்கும் தினக்குறிப்புகள், பதிவேடுகள், மூன்றாம் வகைக்கும் எடுத்துக்காட்டுகளாக அமையும். கட்டிடங்கள், தட்டுமுட்டு சாமான்கள் மக்களால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருபவை. ஆவற்றை வரலாற்று ஆதாரங்களாக எவ்வாறு பயன்படுத்தலாம் என்ற ஆய்வு நுட்பங்களை அறுத்தவர்களே அவற்றைக் கையாள முடியும். எழுத்து வடிவ சான்றுகள் மொழியின் பயனால் நமக்கு கிடைத்தவை. அவற்றை மீண்டும் எழுத்து வடிவில் பதிப்பித்தோ அச்சிட்டோ பதுப்பிக்க முடியும்.

### மரபுவழிக் கதைகளும் கதைப்பாடல்களும்

பண்டைய ஆதிக்குடிகள், மனிதர், தேவர்கள் சம்பந்தப்பட்ட மிகப் பழங்கால நினைவுகளையும் பாரம்பரியங்களையும் புராணக் கதைகள்ட, மரபுவழிக் கதைகள் கதைப் பாடல்கள் ஆகியவை வழியாக விட்டுக் சென்றுள்ளனர். புராணக்கதை என்பது ஆதிகாலத்து மனிதர் கட்டுக் கதை வழியாக உண்மையான அல்லது கற்பனையான விஷயங்களைக்கூறி அவற்றின் தோற்றங்களை மனித வியலுக்கு அப்பாற்பட்ட பொருள் மீதும் தேவர்கள் ஏற்றிக்கூறுவது ஆகும். அது மனித நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டதல்ல. அக்கதையின் கதாநாயகர்களாக தேவர்கள் வலம் வருவர். ஆதிக்குடிகளின் மனம், உண்மைஎது, நடக்கக்கூடியது எது, நடக்கமுடியாதது எது என்பகைவ்கிடையில் உள்ள வேறுபாடுகளைக்

கண்டறிய முடியாதவொன்று, சமயம் என்ற வட்டதினுள் வரும் சகல விஷயங்களையும், வழிபாடு, மாயதந்திரம், அல்லது புனிதமானது என எண்ணினர். புராணக் கதைகளில் தெய்வீகத் தன்மையையும் மனிதத் தன்மையையும் காண்கிறோம். எனவேதான் அதை அறைகுறை வரலாற்றுச் செய்திகளாகக் கருதுகிறோம். ஹீப்ரு எகிப்திய மறைநூற்களில் அதிக அளவில் புராணக் கதைகள் இருக்கின்றன. தெய்வீகத் தன்மையும், மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட விஷயங்களும் புராணங்களின் இயல்பு என்று கூறப்படுகிறது. எனவே பண்டையக் மக்கள் அவற்றை பாரம்பரியப் பொருளாகப் போற்றிக் காத்து வந்தனர்.

மரபுவழிக் கதைகளில் தெய்வீக அம்சங்கள் மங்கி மனித சம்பந்தப்பட்ட அம்சங்கள் சற்று பிரகாசமாயிருக்கிறது. உண்மையில் அது கட்டுக் கதை வரலாற்றிற்கு அப்பாற்பட்டது. வீர சாகசக் காவியம் இங்கும் தேவர்கள் வருவார்கள். போவார்கள் ஆனால் மனிதர்களே கதாநாயகர்களாக இருப்பர் மனிதக் கருத்துக்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படும். அவை பொருளடக்கத்தில் வரலாற்றையும், பண்பில் கற்பனையும் கொண்ட சதைக் கூற்று ஆகும். எழுதப்படிக்கத் தெரியாத மக்கள் தங்கள் மரபுவழி வரலாறுகளை வாய்மொழி மூலமே நினைவழியாது பாதுகாப்பர். எளிதில் மனதில் வைத்து ஒப்புவித்தலுக்கு வசதியாக அவை செய்யுள் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. உலகியல் வீரர்கள், சமயச் சார்புள்ள புனிதர்கள் மற்றும் திருத்தலங்கள் ஆகியவை பற்றிய மரபு வழிக்கதைகள் புனையப்படுகின்றன. அவை கற்பனைக் கதைகளால் வழிக் கதைகள் புனையப்படுகின்றன. அவை கற்பனைக் கதைகளால் அலங்கரிக்கப்பட்ட போதிலும் வரலாறு சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கூறுகிறது. அது எந்தக் காலத்தை சார்ந்ததாக கருதப்படுகிறதோ அந்தக் காலப் பண்புகளைத் தெரியப்படுத்துகிறது.

சதைப் பாடல்கள் என்பது சிறிய கதை கூற்றும் பாடலாகும், அது பாடுவதற்கு வசதியாக இயற்றப்படுகிறது. அவைகளுள் பல நாட்டு நாடோடிப் பாடல்களும் நாடோடிக் கதைகளும் அடங்கும். தமிழ் நாட்டின் பாஞ்சாலக் குறிச்சியின் வீழ்ச்சி மற்றும் சிவகங்கைச் சரித்திரம் போன்ற நிகழ்ச்சிகளைப் பற்றிய பாடல்களை அதற்கு உதாரணமாகக் கூறலாம். திடீரென்று இயல்பாக இயற்றப்பட்ட இப்பாடல்கள் நூற்றாண்டு காலங்களாக இடையர்களாலும் இன மரபுக் குழுவினராலும் நினைவிற் வைத்து பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. அவை கருத்துக்களையும் எண்ணங்களையும் தெளிவற்ற முறையில் வெளிப்படுத்தினாலும் எந்தக் காலத்தைச் சேர்ந்ததோ அந்த காலத்து மக்களின் நம்பிக்கை பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைப் படம் பிடித்து காட்டுகின்றன. எனவே அவைகளை வரலாற்று தோரங்களாகப் பயன்படுத்தலாம். ஆனால் காலப்போக்கில் றேப்பட்ட சொற்களின் பொருள் மாற்றங்களை கருத்திற்கொண்டு அப்போது வழங்கிய மொழியின் வளர்ச்சிக் கட்டங்களை அடையாளம் கண்டு அவற்றைத்அ திறனாய்வு செய்து அதனால் பெறப்படும் செய்திகளை மட்டுமே எடுத்துக் கொள்ளலாம். உண்மையில் மரபு வழிக் கதைப் பாடல்கள் எப்படியோ தொன்மையான காலத்திலிருந்து இன்றுவரை அழியாது நின்று அக்காலத்தை பிரதிபலிக்கின்றன.

**தொல்பொருள் ஆய்வுச் சான்றுகள்**

வரலாற்று காலத்திற்கு முந்திய மனிதர்கள் விட்டுடுச் சென்றவை, நினைவுச் சின்னங்கள், கலைப்பொருள்கள், நாணயங்கள், கல்வெட்டுக்கள், எழுத்துச் சுவடிகள் ஆகியவை

தொல்பொருள் ஆய்வுச் சான்றுகளாகும். எழுத்துப் படிவங்கள் தோன்றிய காலத்திற்கு முன்பு வாழ்ந்த மனிதர்கள் விட்டுச் சென்றவை என்று கருதப்படுகிறது. இச்சான்றுகளில் குகைகள்ஈ பாறை, உறைவிடம், கற்வருவிகள், கல்லறைகள், ஓவியங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் ஆகியவை பண்டையச் சான்றுகள் கட்டியலில் அடங்கும். பழைய கற்காலத்தில் பயன்படுத்தப்பட்ட கருவிகளும் ஆயுதங்களும் கரடுமுரடாகச் செதுக்கப்பட்டிருந்தன. ஆனால் நாளடைவில் கடின கற்களும் எலும்புகளும் வெட்டுவதற்கு வசதியான கூர்மையான விளிம்புகளுடையவைகளாயின. இத்தகைய கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட வரலாற்று காலத்திற்கு முந்திய இடங்கள் பல பிரான்ஸ் ஜெர்மனி ,சீனா, இந்தியா ஆகிய நாடுகளில் இருக்கின்றன. ஆதால்களைத் தைப்பதற்குப் பயன்படும் தந்தநத்திலான ஊசிகள் பிரான்சிஸ் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. தென்னிந்தியாவில் உள்ள பெல்லாரியில் ஆதிமனிதர்கள் குன்றுகளில் இயற்கையான பாறை உறைவிடங்களில் வாழ்ந்திருக்கின்றனர். வரலாற்றிற்குட்பட்ட காலத்திலும் கூட அத்தகைய வழக்கம் தொடர்ந்திருக்கிறது. சான்றாக மதுரை போன்ற இடங்களுக்'கருகிவ் சமணர்களின் பாறைப் படுக்கைகள் பல காணப்படுகின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் ஆதிச்சநல்லூர் என்ற இடத்தில் இரும்பு உலோகக் காலத்திய இடுகாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள பெரிய தாழிகளில் இறந்தோரின் சடலங்கள் மட்டுமல்ல இரும்பினாலான கருவிகளும் காணப்படுவது குறிப்பிடத்தகுந்தது. இந்தியாவிலும் பிற நாடுகளிலுள்ள தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் பல்வேறு இடங்களில் அகழ்ந்து பார்த்து பழங்கால வரலாற்றுச் சின்னங்களையும், இடங்களையும், கண்டுபிடிக்க முயன்று வருகின்றனர். இவ்வாறு அகழ்வராய்வு மெற்கொண்டதன் பயனாக நைல், சிந்து, யாங்டிலி நதி வெளிகளில் செழித்தோங்கிய பண்டைய நாகரீகங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அங்கே கண்டுபிடிக்கப்பட்டவைகளை கூர்ந்து நோக்கி அணுகி- ஆராய்ந்ததன் விளைவாக பண்டைய நாகரீகங்களின் முழுமையான வரலாறு தெளிவாகாவிட்டாலும், அவைகளைப் பற்றிய போதிய கருத்துக்கள் பெறப்பட்டடிருக்கின்றன. கலைத் திறனையும் நாகரீக நிலையையும் வெளிப்படுத்தும் மக்கள் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றன.

எழுத்துச் சான்றுகள், வரலாற்று ஆதாரங்களில் முக்கியமானதொரு பிரிவு செதுக்கப்பட்ட அல்லது எழுதப்பட்ட எழுத்துச் சுவடிகளை ஆய்வதே கல்வெட்டுக் கலை ஆகும். களி மண்ணில் பொறிக்கப்பட்ட கற்களில் செதுக்கப்பட்ட உலோகபி பட்டயங்களில் தீட்டப்பட்ட இந்த எழுத்துச் சான்றுகள் உலகின் பல்வேறு பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அது தனியார் அல்லது பொது ஆவணமாக இருந்தாலும் ஓரளவுத் தகவல்களைத் தருகின்றன. அவை பல்வேறு வகைப்படும். அவைகளின் சில வெற்றிக் கொண்டாட்டத்தின் வெற்றிச் சின்னங்களாக நிறுவப்ட்டிருக்கலாம். சமுத்திர குப்தருடைய அலகாபாத் தூண் கல்வெட்டுகளையும், பேரரசர் அகஸ்டசினுடைய அங்காராக கல்வெட்டுக்'களையும் இதற்குச் சான்றாக கூறலாம். சமயத்தின் பேரால் அர்ப்பணம் செய்யப்பட்ட நிலந்தக் கல்வெட்டுக்களும் உண்டு. பல புத்த, இந்து சமயக் கல்வெட்டுக்கள் இதன்பாற்'படும். கொடைகளைக் குறித்தக் காட்டும் கல்வெட்டுக்களும் உண்டு. கட்டிங்கள் நிலங்கள் பணம் ஆகியவை

தனிப்பட்டோருக்கோ, ஆலயங்களுக்கோ , அறநிலையங்களுக்கோ தானமாக வழங்கப்படும்போது அது குறித்த விபரங்கள் கல்வெட்டுக்களில் அல்லது பட்டயங்களில் செதுக்கப்படும். இத்தகைய உழுத்துச் சான்றுகள் இந்தியாவில் ஏராளமாகக் கிடைத்துள்ளன. இவை தவிர அரசு ஆணைகளையும் அரசர்களின் கோட்பாடுகளையும் கொண்ட கல்வெட்டுக்களும் உண்டு.

பழங்காலத்திலிருந்தே எழுத்துச் சான்றுகள் வரலாற்று ஆதாரங்களாகப் பயன்பட்டு வந்துள்ள பண்டைய கிரேக்க நகரங்களில் சொல்லாற்றல் மிக்கோர் தங்கள் வாதங்களுக்கு ஆதாரங்களாக அவற்றைச் சுட்டிக்காட்டுவதுண்டு. டெல்லியில் அர்ப்பணம் செய்யப்பட்ட தங்க முக்கூட்டின் அடியில் உள்ள வெண்கலத்தில் காணப்படும் எழுத்துச் சான்று ஒன்றினை ஹெரோடொட்டஸ், பிளாட்டியா என்ற போர் வருணனைக்கு மேற்கோளாகக் காட்டியுள்ளனர். இப்போரில் (கி.மு.479) கிரேக்கர்கள் பாரசீகர்களைத் தோற்கடித்து வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது. டயோனிசியஸ் தமது “ரோமானியத் தொன்மை” என்ற நூலை எழுதுதற்கு ரோமானிய எழுத்துச் சான்றுகள் பலவற்றை பயன்படுத்தியுள்ளார். இந்திய வரலாற்றாசிரியர்கள் மௌரியர், குப்தர், பல்லவர், சோழர் ஆகியோரின் எழுத்துச் சான்றுகளைத் தாராளமாகப் பயன்படுத்தியுள்ளனர் எனினும் அவற்றை ஆதாரமாகக் கொள்ளுவதற்கு முன் அவை புனைந்துரையா, புகழுரையா, உண’மைச் செய்திகளா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். பொதுவில் அவற்றில் கையாளப்பட்டிருக்’கும் மொழி அணிநயங்களோடும், எளிதில் பொருள் விளங்காத தன்மையோடும் இருக்கலாம். எனவே அவற்றின் மூலம் பெறப்படும் கருத்துனக்களை மற்றொரு ஆதாரத்தின் துணை கொண’டு ஒப்பிட்டு உறுதி செய்த பின்னரே ஏற்றுக் கொள்ள முடியும். அவற்றில் தேதிகள் கொடுக்கப்பட்டிருந்தால் அதன் மூலம் அவற்றின் காலங்களை எளிதில் அறிந்து கொள்ளலாம். ஆனால் அக்காலத்தில் பல்வேறு சகாப்தங்கள் வழக்கத்திலிருந்தால் காலங்களை நிர்ணயிப்பதில் சிரமங்கள் ஏற்படலாம்.

நாடெங்கும் தேடி எடுக்கப்பட்ட இந்த எழுத்துச் சான்றுகளை தொகுத்து அட்டவணைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளபட்டுள்ளன. பதினைந்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இத்தாலியரான சிரியாக் என்பார் இத்தாலி. கிரீஸ், எகிப்து, சிரியா ஆகிய நாடுகளில் பயணம் செய்து எழுத்துச் சுவடிகளைச் சேகரித்து ஆய்ந்து அவற்றின் பட்டியல் ஒன்று வெளியிட்டுள்ளார். அவரைப் பின்பற்றி பல வரலாற்றிசிரியர்களும் கல்வெட்டாய்வாளர்களும் கிரேக்க ரோமானிய எழுத்துப் பட்டயங்களை நகலெடுத்து தொகுத்து வெளியிட்டுள்ளனர்.

பெர்லினில் உள்ள ‘ராயல் அகாடமி ஆப் சயின்ஸ்’ என்ற நிறுவனத்தைத் சேர்ந்த போயக் பத்தாயிரம் கிரேக்க எழுத்துச் சுவடிகளை வகைப்படுத்தி விளக்கவுரைகளுடன் நான்கு அதிகாரங்களை கொண்ட நூலாகத் தொகுத்துள்ளார். இந்த நூலும் இது போன்ற பிற நூற்களும் பண்டைய கிரேக்க அரசியல் சமூக வரலாற்றினை தெளிவாகப் படைக்க பெருமளவில் பயன்படுகின்றன. போக்கியா பிராசியோலினி என்பார் ஏராளமான இலத்தீன் மொழி எழுத்துச் சான்றுகளைத் தொகுத்துள்ளார். பெர்லின் அகாடமியைச் சேர்ந்த தியோடர்

மாம்சென் பல இலத்தீன் எழுத்துச் சான்றுகளைத் தொகுத்து பட்டியல் ஒன்று வெளியிட்டுள்ளார். இந்தியாவிலும் பல்வேறு மொழி எழுத்துச் சான்றுகள் பல அறிஞர்களால் பிரதியெடுக்கப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளன. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜே. பர்ஜெஸ் பல தமிழ் சமஸ்கிருத எழுத்துச் சான்றுகளைத் தொகுத்துள்ளார். ஹெச். கிருஷ்ணா சாஸ்திரியாரும் தென்னிந்திய எழுத்துச் சான்றுகளைத் தொகுத்துள்ளார். அத்தகைய அறிஞர்கள் இவ்வரிய முயற்சியில் இறங்காவிட்டால் பல எழுத்துச் சான்றுகள் நம் கண்ணில் படாமலே போயிருக்கும்.

நாணயச் சான்றுகள் என்பது நாணயம் பதக்கம் முதலியவற்றின் மீது செய்யப்படும் நுண்ணியல் ஆய்வு ஆகும். வரலாற்றாசிரியர்களுக்கு நாணயம், முத்திரைகள் பற்றிய ஆரராய்ச்சி பெருமளவில் எறுதுணையாக இருக்கிறதென்றால் அதற்கு காரணம் அவற்றின் மீது பொறிக்கப்பட்டுள்ள தலைப்புப் பட்டயங்கள் உருவப் படங்கள் மட்டுமல்ல. அதில் குறிக்கப்பட்டுள்ள தேதியும் கூடத்தான். சிந்து சமவெளி நாகரிகத்தைச் சார்ந்த முத்திரைகளே கண்டுபிடிக்கப்பட்ட முத்திரைகளில் காலத்தால் முந்தியது. கி.மு.706 ஆம் ஆண்டுவாக்கில் தங்க நாணயங்கள் லிடியா என்ற இடத்திலும் வெள்ளி நாணயங்கள் ஈஜியா என்ற இடத்திலும் அச்சடித்து வெளியிடப்பட்டது. அங்கிருந்த நாணயம் அடிக்கும் முறையும் பயன்படுத்தும் முறையும் மத்தியதரைக் கடல் நாடுகளுக்குப் பரவியது. பண்டைய இந்தியாவிலும் சீனாவிலும் கூட நாணயங்கள் அதிகமான அளவில் புழக்கத்திலிருந்தன. உலகம் நவீன காலத்தை நோக்கி நகரநகர நாணயங்களின் வகையும் எண்ணிக்கையும்அதிகரித்தது. ஆரம்பகாலங்களில் தங்க, வெள்ளி, வெண்கல நாணயங்களே வெளியிட்ப்பட்டன. பண்டையச் சீனாவில் காகித நாணயமும் இந்தியாவில் முகமது பின் துக்ளக் காலத்தில் செம்பு நாணயங்களும் அடையாள நாணயங்களாக வெளியிடப்பட்டுள்ளன. ஆண்ட்ரியா ஃபுட்வியோ என்ற இத்தாலியர் நாணயங்களிலுள்ள உருவப்படங்களின் ஆல்பம் ஒன்றினை வெளியிட்டுள்ளார். இது 1517ம் ஆண்டு வரை புழக்கத்திலிஜருந்தது. ஆன்ட் வெர்ப் நகரின் ஹியூபர்ட் கோல்ட்ஸ் என்பார் வெளியிட்ட நாணயப் பட்டியலில் உண்மையான நாணயங்களோடு பொய்யாவற்றையும் கலந்துவிட்டார். அவர் தமது கற்பனைக்கேற்றவாறு புதிய நாணயங்களை மட்டுமல்லாமல் இல்லாத கான்சல்களையும் பிறவாத தளபதிகளையும் கூட உருவாக்கி விட்டார்.1577இல் அடோல்ஃப் ஓகோ என்பார் ரோமானிய நாணயங்களைப் பற்றி நம்பத்தகுந்த ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று வெளியிட்டுள்ளார். இதற்கிடையில் பல வல்லுநர்கள் நாணயங்களைப் பற்றி அறிவியல் கண்ணோட்டத்தோடு ஆய்வுகள் நிகழ்த்த ஆரம்பித்தனர். வியன்னாவின் பேரரசு திரட்டகத்தின் பொறுப்பாளரான ஜே.ஹெச்.எக்கெல் நாணயங்களைப் பற்றி முறைப்படியான ஆய்வுகள் நடத்தினார். எனவே அவர் நாணய ஆய்வுக் கலையின் தந்தை என அழைக்கப்படுகிறார். ஆவர் காலத்திற்குப்பின் பைசாண்டியன், ரஷியா, சீனா, போப்பின் நாடுகள், இந்தியா ஆகியவற்றின் நாணயங்கள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டன. அதன் பயனாக நாணய ஆய்வுக் கலை ஒரு தனித்துறைப் பாடமாக வளர்ச்சியடைய ஆரம்பித்தது. இந்த நாணயங்கள் வரலாற்றில் இதுவரை இருள் நிலவிய பகுதிஜகளில் ஒளிவீசச் செய்வதுடன் பிற ஆதாரங்களின் மூலம் அறிந்த அசெய்திகளைச்

சரிசெய்து கொள்வதற்கும் அரசியல் எல்லைகளை உறுதி செய்து கொள்வதற்கும், வர்த்தகத் தொடர்பினை தன்மையை தெளிவாக்குதற்கும் பெரிதும் பயன்படுகின்றன. மத்திய ஆசியாவில் உள்ள பாக்டிரியா அரசைப் பற்றிய பெரும்பாலான தகவல்கள் எல்லாம் ஆப்கானிஸ்தானத்திலும் அதையடுத்த பகுதிகளிலும் கண்டு எடுக்கப்பட்ட நாணயங்களின் வாயிலாக கிடைத்தவையாகும். முத்தியதரைக் கடல் நாடுகளில் கிரேக்க நாணயங்களும் இந்தியாவில் ரோமானிய நாணயங்களும் கண்டெடுக்கப்பட்டதன் மூலம் பழங்காலத்தில் வர்த்தகம் எந்த அளவிற்கு விரிவாக நடைபெற்றிருகிறதென்று அறிகிறோம். இந்தியாவில் பௌத்த இந்து சமயக் காலங்களில் ஆட்சி புரிந்து அரசு வம்சங்களின் பலுவழிப் பட்டியல்கள் நாணயங்களில் துணை கொண்டுதான் தயாரிக்கப்படுகிறது. அச்சடிக்கும் முறை கண்டுபிடிக்கப்படும் வரை அரசர்களின் உருவங்களையும் தேவர்களின் தோற்றங்களையும், மிருகங்களின் படங்களையும் நாணயங்களே நமக்கு தெரிவித்தன.

முத்திரைகள், ஓவவியங்கள், சிற்பங்கள், ஆகியவை கூட பழங்கால வரலாற்றுச் சான்'றுகளால் பயன்படுகின்றன. சிந்து சமவெளியிலிருந்து சதுரம், நீண்ட சதுரம், நீள் உருளை போன்ற பல்பேறு வகையான முத்திரைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் மனிதர் அல்லது மிருகங்களின் உருவங்களுடன் சில எழுத்துக்களும் காணப்படுகிறது. அவ்வெழுத்துக்களுக்கு இன்னமும் பொருள் கண்டுபிடிக்கப்படவில்லை அவை மக்களின் சமயம், பழக்க வழக்கங்களைப் பற்றிய கருத்துக்களை அறியப் பயன்படுகின்றன. குகைகளிலும் கோவில்களிலும் தீட்டப்பட்டுள்ள ஓவியங்களும் செதுக்கப்பட்டுள்ள சிற்கங்களும் அக்கால மக்கள் அணிந்திருந்த உடை, அணிகலன்கள் பற்றிய செய்திகளை அறிவிக்கின்றன. கார்னாக் என்ற இடத்தில் உள்ள கோவிலின் ஓவியச் சிற்பங்கள் எகிப்தியர்களின் ஆசிய வெற்றிகளைக் குறித்துக் காட்டுகின்றன. ஆசிரிய சிற்பங்கள் அக்கால அரசர்களின் அருஞ்செயல்களைத் தெளிவாக எடுத்துக் காட்டகிறது. கிரேக்கர்களின் ஒப்பனைக் குவளைகள் அக்கால கிரேக்கர்களின் போர் முறைகளைப் படம் பிடித்துக் காட்டுகிறது. எட்ரஸ்கன் கல்லரைச் சுவர்களின் மக்களின் அன்றாட வாழ்க்கைக் காட்சிகள் வண்ண ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளன. அஜந்தா, எல்ரோ ஓவியங்கள் பண்டைய இந்திய மக்களின் சமயம் பழக்கவழக்கங்கள் வாழ்க்கை முறைகளை விளக்கமாகப் படம் பிடித்து காட்டுகின்றன.

**இலக்கிய சான்றுகள்**

மனிதர்கள் எழுதுவதற்கு தோல், களிமண், மரப்பட்டை, பாப்பிரஸ் என்ற நாணற்புல் தான் காகிதம் ஆகியவற்றை உபயோகப்படுத்தினர். ஒருங்கமைதியற்ற படங்களும் அடையாளக் குறியீகளும் தெளிவற்ற கருத்துக்களையே தெரிவித்தன. ஆனால் நாளடைவில் எழுத்துக்களும் வார்ததைகளும் பயன்படுத்தப்பட்டன. அவை முழு லிபரங்களைத்அ திரளாக அளித்தன. சாதாரண சித்திர எழுத்துக்களும் ஆப்பு வடிவ எழுத்துக்களும் உருவங்கள், குறியீடு முறைகளை அகற்றின. அதன் பின்னரே முறையான எழுத்தக்கள் தோன்றி வளர்ச்சியடைந்தன. கி.மு. பதினாறாம் நூற்றாண்டிலேயே எகிப்தில் எழுத்ததுக்கள் வழக்கத்திற்கு வந்துவிட்டதாக நம்பப்படுகிறது. எழுதும் கலை வளர்ச்சியடைந்ததன் பயனாக

பாப்பிரஸ் செய்வோர் குமாஸ்தாக்கள், எழுத்தார்கள் தோன்றினர். இலக்கிய ஆதாரங்கள் உலகெங்கும் அதிகரித்துவிட்டன.

ஆவணங்களை நெடுங்காலம் பாதுகாக்க பல்வேறு முறைகளை மக்கள் னையாண்டனர். நீண்ட காலத்திற்கு நீடிக்க கூடிய பொருட்களான சுட்ட களிமண், கல், பித்தளை போன்றவற்றையே எழுதும் பலகைகளாகப் பயன்படுத்தினர். அவைகளை ஜாடிகளிலும் உலர்ந்த இடங்களிலும் வைத்துப் பாதுகத்தனர். நூலக அமைப்பு ஏற்பட்ட பின் எழுத்து மூலங்களைப் பாதுகாத்து வைப்பதில் குறிபட்பிடதக்க முன்னேற்றம் ஏற்பட்டது. ஹிட்டைட்டுகள் அதிகாரப்பூர்வமான ஆவணக் காப்பகங்கள் வைத்திருந்தனர். கண்டுபிடிக்கப்பட்ட ஒரு நூலகத்தில் 13,000 களிமண் பலகைகள் பாதுகாப்பட்டிருந்தன. கிரேக்க அரசுகளிலும் ரோமானியப் பேரரசிலும் பல நூலகங்கள் இருந்தன. ஆனால் காட்டுமிராண்டிகள் படையெடுப்பன் போது அவை அனைத்தும் அழிக்கப்பட்டுவிட்டன. பேரரசா் கான்ஸ்டன்டைனும் அவரது வழவந்தோரும் எஞ்சிய பிரதிகளைச் சேகரித்து கான்ஸ்டான்டிநோட்பினில் நூலகம் ஒன்று அமைந்தார். அந்நகர் துருக்கியர் கையில் சிக்குமுன் பல நூற்கள் மேற்கில் ஐரோப்பிய பகுதிகளுக்குளடுத்துச் செல்லப்பட்டனர் பண்டையச் சீனாவிலும் ஏராளமாக நூலகங்கள் இருந்தன. ஆனால் பேரரசா் ஹிஹிவாங்டி பண்டைய இலக்கிய பாரம்பரியங்களை வெறுப்பவர்.எனவே திட்டமிட்டு பண்டைய நூற்களை அழிக்கும் விபரீதப் பணியில் ஈடுபட்டார். அதிஷ்டவசமாகசில நூல்கள் தப்பின. அவர் மறைவிற்குப் பின் மறைவிடங்களிலிருந்து வெளிவந்தன. பாக்தாத்தின் புகழ்பெற்ற மன்னர் ஹாருன் அல் ஷித் மொழி பெயர்ப்பு பணியிலும் இலக்கியச் செல்வங்களை சேகரித்துப் பாதுகாப்பதிலும் அதிக ஆர்வம் காட்டினார். ஸ்பெயினில் அரேபியர் கார்டோவா என்ற நகரை கவின்மிகு கல்வி கேந்திரமாக நிர்மாணித்தனர். கிறிஸ்தவ துறவற அமைப்புகள் குறிப்பாக பெனடிக் சபையினர் ஐரோப்பிவில் பல்வேறு இடங்களில் நூலகங்களையும் கல்வி நிலையங்களையும் நிறுவினர். இத்தகைய நூலகங்களிலிருந்து தான் இடைக்காலத்தினர் வரலாற்று மூலங்களை பெற்றனர். பதினாந்தாம் நூற்றாண்டில் அச்சுகலை பழக்கத்தில் வந்ததும் நூற்களுக்கு விரைவாகவும் எளிதாகவும் பல படிகள் எடுப்பது சாத்தியமாயிற்று. நூலகங்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. அரசுகளும் அவற்றின் வளர்ச்சியில் அக்கரை காட்டினர். நூலகங்களில் மிகப் பெரியவை வத்திக் கான் நூலகம் பாரிஸ் தேசிய நூலகம் இலண்டனில் உள்ள பிரிட்டிஷ் அரும் பொருட்காட்சியகம் லெனின்கிராடில் உள்ள அரசு நூலகம் வாஷிங்டன் டி.சி.யில் உள்ள காங்கிரஸ் நூலகம் கல்கத்தாவில் உள்ள தேசிய நூலகம்.

இலக்கியச் சான்றுகள் பல வகைப்படம். அவைகளுள் முக்கியமானவை பதிவு செய்யப்பட்ட மரபு வழி செய்திககள் நிகழ்ச்சிப் பட்டியல், வாழ்க்கை வரலாறுகள், அயல் நாட்டவரின் குறிப்புகள், சமகாலத்துச் செய்திக் கோவைகள் ஆகியவையாகும். மரபு வழிக் கதைகள் வாய்மொழியாக நெடுங்காலம் வழக்கிலிருந்து நாளடைவில் அவை எழுத்து வடிவம் பெற்றன. இத்தகைய பாரம்பரியங்கள் இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்களிலும் விவலியத்திலும் காணப்படுகின்றன. இந்நூல்களில் ஏராளமான புராதணக் கதைகள் மரபுவழிக் கதைகள் நிறைந்திருந்தாலும் அக்கால மக்களின் அரசியல் சமூக நிலைகளை பிரதிப்பதால்

அவை வரலாற்றுப் பயன் உள்ளதகின்றன. நிகழ்ச்சி நடந்து முடிந்ததும் குறித்து வைத்துக் கொள்ளப்படும் விவரங்கள் ஆகும். நிகழ்ச்சிகளின் காரணங்கள் அதனால் ஏற்படும் விபரங்கள் என்ற முறையில் அல்லது பல்வேறு அடிப்படைக் காரணங்கனால் முக்கிய இயக்கங்கள்எவ்வாறு படிப்படியாக இயங்கி வளர்ச்சியுறுகின்றன. என்ற விளக்கங்களின் அடிப்படையில் காரணகாரிய முறையில் நிகழ்ச்சிப் பட்டியல்களின் செய்திகளைத் தொகுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. தேவையற்ற விபரங்களைக் கொண்டிருக்கிறது. நிகழ்ச்சிகளின் அமைப்புகள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. திட்பநுட்பம் இன்னமும் தேவைப்படுகிறது. என்ற குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. அதன் விளைவாக மூலக் கருத்துக்களை விவரிப்பதிலுத் தேதிகளை நிர்ணயிப்பதிலும் தவறுகள் இழைக்கப்படுகின்றன. வாழ்க்கை வரலாறுகள், சுய சரிதைகள், நாட்குறிப்புகள், முக்கிய இலக்கியச் சான்று பிரிவுகளாகும். ஜாண்சனைப் பற்றிய பாஸ்வெல்லின் நூலும் அக்பரைப் பற்றிய அபுல்பாஸலின் அக்பர் நாமாவும் இப்பிரிவைச் சேர்ந்ததாகும் வாழ்க்கை வரலாறுகளும் நுய சரிதைகளும் சம்பந்தப்பட்ட நபர்களை நடுநாயகமாக வைத்துப் போற்றிய போதிலும் அவர்கள் வாழ்ந்த காலத்தின் மீதும் ஒளிவீசி நிற்கின்றன. பாபர், பிஸ்மார்க் ஆகியோரின் வாழ்க்கை நிகழ்ச்சிக் குறிழப்புகள் காந்தியடிகளிளட் சத்திய சோதனை ஆகியவை சுய சரிதை என்ற நிலையில் அக்கால செய்திகளை அவர்கள் அறிந்த நிலையிலோ விளக்கமளித்த முறையிலோ நமக்கு தருகின்றன. அவை சொந்த கருத்துக்களை வெளிப்படுத்தும் ஆவணங்கள் என்ற முறையில் வரலாற்றுப் பயன் தருகின்றன. நாட்குறிப்புகளும் நினைவுக் குறிப்புகளும் அன்றாட விபரங்களைக் கொண்டவை. ஆனால் அவை குறிபிட்ட நோக்கத்துடன் நிகழ்ச்சிகளின் ஒருங்கிணைந்த அம்சங்களை வெளிப்படுத்தும் வண்ணம் எழுதப்பட்டவையல்ல. அவை தனிப்பட்ட மற்றும் பொது வாழ்வு சம்பந்தப்பட்டவையாயிருந்தாலும் மக்களின் அரசயில் சமூக பொருளாதார நிலைகளை உறுதிப்படுத்திக் கொள்ள உதவுகிறது. ஆவை வாழ்க்கை வரலாறுகள் சுயசரிதைகள் அளவிற்கு ஒரு சார்புக் கருத்துக்கள் கொண்டதல்ல. ஆனந்தரங்கம்பிள்ளை நாட்குறிப்பும், ராயிட் ஜார்ஜின் நிகழ்ச்சி குறிப்புகளும் இப்பிரிவிற்கு தக்கதோர் சான்றுகள்.

மொழிகளைப் பற்றிய ஆய்வு மொழி நூல் ஆகும். இது வரலாற்று ஆய்விற்கு இன்றியமையாதது. ஏனென்றால் மொழியின் சொற்கள் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டது. கடந்தக்காலத் தகவல்களைத் தரவல்லது. முத்திய ஆசியாவிலிருந்து பல்வேறு பகுதிகளுக்கு பிரிந்து சென்ற மக்களினங்களின் நெருங்கிய தொடர்ழைப ஆராய்ந்தறிய மொழிகளின் ஒப்பியல் ஆய்வு உதவுகிறது. இதே போன்ற வகையில் கால்டுவெல் வடமொழி இலக்கணத்தில் திராவிட செல்வாக்கின் தன்மையை எடுத்துக் காட்டுகிறார்.

அயல் நாட்டவர் குறிப்புகள் வரலாற்றாசிரியருக்கு மிகவும் பயன்படத்தக்கது. அவர்கள் நாட்டிற்கு அன்னியர்களாயிருப்பதால் விருப்பு வெறுப்பற்ற நிலையில் நிகழ்ச்சிகளை நோக்க முடிகிறது. எனினும் அவருக்கு அக்கறையுள்ள விஷயங்கள், தாறுமாறான வாந்திகள், உள்நாட்டு மொழி புரியாத தன்மை, மக்களின் எண்ணக்கருத்துக்களை அறிய இயலாத பான்மை ஆகியவற்றின் அடிப்படையிலே அவர்களின் குறிப்புகள் எழுதப்படுவதால் அவை

குறைபாடு உடையதாகவே இருக்கின்றன. மார்கோபோலோ கிழக்கு நாடுகளைப் பற்றிய விபரங்களை தம் பயணக்குறிப்பில் எழுதி அதன் மூலம் கிழக்கு நாட்டு விஷயங்களைப் பற்றி அறியும் ஆர்வத்தை ஐரோப்பியரிடையே ஊட்டினார். பிரான்சின் புரட்சிக் காலத்தைப் பற்றி ஆர்தர் யங் என்பார் பயனுள்ள குறிப்புக்களைத் தந்திருக்கிறார். சீனப் பயணிகளான பாஹியானும் யுவான் சுவாங்கும் இந்தியாவைச் சுற்றிப் பார்த்து விரிவான வருணனைகளை விட்டுச் சென்றுள்ளனர். ஆல்பரூனியும் கிழக்கு மேற்கு நாடுகளினல் பயணம் செய்து தம் பயண விபரங்களை எழுதி வைத்துள்ளார். இந்திய, அமெரிக்க நாடுகளை பற்றி ஐரோப்பியர் தந்த விபரங்கள் அப்பகுதி மக்களின் வரலாற்றில் ஒளியூட்டவல்லதாயிருகின்றன.

அஞ்சல் வழி ஆவணங்கள், செய்தித் தாட்கள், அரசு நடவடிக்கைக் குறிப்பேடுகள் மிக விரிவான அளவில் வரலாற்று ஆய்விற்கு பயன்படுத்தப்படுகின்றன. அஞ்சல்கள், மக்களின் தனிப்பட்ட குணநலன்களை வெளிப்படுத்துவதோடு எழுதியவரின் சிந்தனைகளையும் பிரதிபலிக்கிறது. எகிப்திற்கும் மேற்கு ஆசியஅரசருக்குமிடையே பரிமாறிக் கொள்ளப்பட்ட சுமார் 300 கடிதங்கள் கொண்ட களிமண் பலகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சிசரோவின் கடிதங்கள் ரோம் நகர ஆளும் வர்க்கத்தினரைப் பற்றிய மேலெழுந்தவாரியான தகவல்களைத் தருகின்றன. இங்கிலாந்தில் கிராம்வெல்லின் கடிதங்களும் இந்தியாவில் வெல்லெஸ்லியின் கடிதங்களும் அஞ்சல் வழிச் சான்றுப் பி-ரிவினைச் சார்ந்தவை. தென்னிந்திய கலகத் தலைவர்களிடையே நடைபெற்ற கடிதம் போக்குவரத்துக்களின் துணை கொண்டுதான் 1800 – 1801 இல் நடைபெறட்ற புரட்சியின் வரலாற்றை ஒளியூட்ட முடிந்தது. செய்தித் தாட்களும் பிற வெளியிடுகளும் மிக அதிக அளவில் கிடைக்கின்றன. பத்திரிக்கை ஆசிரியர் குழுவினர் நுறும் பொருள் விளக்கப்படி முக்கியமான நிகழ்ச்சிகளைப் பற்றிய பொது மக்கள் கஜத்துக்களையும் அன்றாடச் செய்திகளையும் அவை தருகின்றன. ஜனநாயக நாடுகளில் பத்திரிக்கைச் சுதந்ததிரத்திற்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் 1975இல் அவசரநிலை பிரகடனப் படுத்தப்பட்டபின் திருமதி. இந்திரா காந்தி அரசு கடுமையான பத்திரிக்கைத் தணிக்கையை அமுல்செய்தது. இதனால் நாட்டின் உண்மை நிலை எதுவென்பதை அறிவணுது கடினமாய் போய்விட்டது. கம்யூனிஸ்ட் நாடுகளில் பத்திரிக்கைகள் அரசு நிர்வாகத்திற்கு புகழ்பாடுகின்றன. பொதுக் கட்டுப்பாடுகளையும் ஒரு சார்புப் போக்கினையும் ஒதுக்கிவிட்டுப் பார்த்தால் செய்தித்தாட்களும் பிற வெளியிடுகளும் வரலாற்று ஆய்விற்கு பயன்படும் பொருளாகிவிடும்.

தற்காலத்தில் ஆவணங்கள் ஆய்வுச் சான்றுகளாகப் பரவராகப் பயன்பட்டு வருகின்றன. அவைகள் அரசு சார்பினதாகவோ அவ்வாறு இல்லாததாகவோ இருக்கலாம். அதன் தோற்றம் பொது நடவடிக்கைகளைச் சார்ந்ததாக இருந்தால் அது அரசு ஆவணமாகும். பிற ஆவணங்கள் சட்ட சம்பந்தமானவைகளாக இருந்தாலும் சரி, தனி நபர் பற்றியதாக இருந்தாலும் சரி அவை தனிப்பட்ட ஆவணங்களாகும். சட்டங்கள், அரசு அஞ்சல் நடவடிக்கைகள் பிற நாட்டுடன் செய்யப்படும் உடன்படிக்கைகள், ஆணைகள் பிரகடனங்கள் ஆகியவை அரசு ஆவணங்களாகும்.

ஆணைகள், கடிதங்கள், அறிவுரை அஞ்சல்கள், வணிகம் சார்ந்த பதிவேடுகள் ஆகியவைகளும் இதிலடங்கும் இவைகள் அவை நடைபெற்ற காலத்தைச் சார்ந்தவைகளாயிருந்தால் சமகாலத்தவையாகி விடுகின்றன. சமகால ஆவணங்கள் போல் அறிக்கைகள் அவ்வளவு நம்பத்தகுந்தவையன்று. ஏனென்றால் அவைகள் நடந்து முடிந்தபின் தயாரிக்கப்படுபவைகளாகும். பொது மக்களுக்கு அறிவிக்க இயலா அந்தரங்க பதிவேடுகளும் உண்டு. செய்தித் தாட்கள், அறிக்கைகள், துண்டு பிரசுரங்கள் ஆகியவைகள் பகிரங்க ஆவணங்களாகும். ஏனென்றால் அவை பொது அறிவிப்பிற்கென்றுதயாரிக்கப்படுபவை. செய்தித் தாட்களும் வெளியீடுகளும் படோடாப பரபரப்பு மிகுந்ததாயிருந்தால் அவை அதிகாரப்பூர்வமற்றவைகளாகும். அத்தகைய வெளியீடுகள் மஞ்சள் பத்திரிக்கைள் எனப்படும் ஒழுங்கு முறைச் சட்டம் மொகலாயப் பேரரசர் ஷா ஆலம் கிழக்கிந்திய கம்பெனிக்கு வழங்கிய திவானி உரிமை 1800-1801இல் தென்னிந்தியப் புரட்சி முடிவுற்ற சமயம் சென்னை ஆளுநர் எட்வர்ட் கிளைவ் விடுத்த பிரகடனம் வெர்சேல்ஸ் உடன்படிக்கை ஆகியவை ரெசு ஆவணப் பிரிவில் அடங்கும். அரசு ஆவணங்கள் உபயோகமாயிருப்பதும் இல்லாதிருப்பதும் அதன் மூலம் நடைபெற்ற காரியங்களின் முக்கியத்துவத்தைப் பொருத்தும் பயன்படுத்தப்பட்ட சான்றுகளின் தன்மையைப் பொருந்தும் அமையும். தனிப்பட்ட ஆவணங்கள் குடும்ப விபரங்களும் ஒப்பந்தப் பத்திரங்களும் மற்றும் அஞ்சல்களும் அடங்கியது. தென்னிந்திய பாளையக்காரர்கள் போன்ற குறுநில ஆட்சியாளர்களும், இடைக்கால ஐரோப்பிய நிலமானியப் பிரபுக்களும் ஆவணங்களைச் சேகரித்து வைத்துள்ளனர். நிலம் சாகுபடி, தொழிலாளர் மற்றும் சமூகம் பிரச்சனைகள் ஆகிய விஷயங்கள் பற்றிய தெளிவான கருத்துக்கள் வரலாற்றாசிரியருக்கு ஓரளவு பயன்படுவதாக அமையலாம். தனிப்பட்டோர் அல்லது பொது இல்லங்களின் சுவர்களில் தீட்டப்பட்ட ஓவியங்கள் மக்களின் உடை, கடவுள் வழி பாடு போன்ற சமூகப் பழக்க வழக்கங்களைப் பற்றிய கருத்துக்களை எடுத்துக்கூறும்.

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை பெரும்பாலான வரலாற்று நூற்கள் பிற நூற்களில் கூறப்பட்ட விஷயங்களின் அடிப்படையிலேயே எழுதப்பட்டன. கல்வெட்டுக்களும் பிற தொல்பொருள் ஆய்வுச் சான்றுகளும் அதிகமாகப் பயன்படுத்தப்படவில்லை. பழங்காலத்திலும் ஏராளமான அரசு ஆவணங்கள் இருக்கத்தான் செய்தன. ஆனால் அவற்றைப் பாதுகாக்கவோ, ஒரு மத்திய ஆவணக் காப்பகத்தில் அனைத்தையும் சேகரிக்கவோ தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. பொதுவாக அவை தனியார் பொறுப்பில் பொதுத்துறை ஊழியர்கள் பாதுகாப்பில் இருந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்த நிலைகள் மாற ஆரம்பித்தன. பல்வேறு நாட்டு நிர்வாகங்களும் அவற்றை சேகரித்துப் பராமரிப்பதில் தங்கள் கவனத்தைத் திரும்ப ஆரம்பித்தன. கிரேட் பிரிட்டன் இம்முயற்சிகளைத் தொடங்கி வைத்து, ஆவணங்களைச் சேகரித்து ஒழுங்குப்படுத்தி அறிஞர்களின் ஆய்வுக்கான வாய்ப்புகளையும் அமைத்துக் கொடுத்தது. 1800இல் ஆவணக் குழு ஒன்றை நியமித்து ஆவணங்களை பரிசீலனை செய்து வகைப்படுத்தி அகரவரிசைத் தொகுப்பு அட்டவணை தயாரித்து பட்டியல்கள் வெளியிட்டு ஆய்வுக்கு ஊக்கமளிக்க ஏற்பாடு செய்தது. 1838இல் பிரிட்டீஸ் அரசு ஆவணக் காப்பத்திற்கு ஓர் மத்திய காட்சியகம் நிறுவி பொது ஆவண

அலுவலகத்தையும் ஏற்படுத்தியது. ஓர் அரசு ஆணை மூலம் தனியார் வசமிருக்கும் வரலாற்றுப் பயனுள்ள எழுத்துப் படிவங்களை எல்லாம் தன் பொறுப்பில் ஏற்றுக்கொண்டது. இந்தியாவிலும் பிரிட்டிஷ் அரசு சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களில் ஆவண அலுவலங்கள் திறந்தது. சுதந்திரத்திற்குப் பின்னர் புத டெல்லியில் தேசிய ஆவணக் காப்பகம் நிறுவப்பட்டது. பின்னர் புது டில்லியில் தேசிய ஆவணக் காப்பகம் நிறுவப்பட்டது. வென்னை ஆவண அலுவலகம் தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பமாக மாறியது. அது விலைமதிப்பற்ற சுவடிகளில் கருவூலமாகக் கருதப்படுகிறது. ஆனால் தி.மு.க. அரசு ஏராளமான சுவடிகளை வேண்டுமென்றே அழித்து வரலாற்று ஆய்விறிகு பேரிழப்பை உண்டு பண்ணியது. பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளில் சுவடிகள் நன்கு வகைப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. ஜெர்மனி மத்திய சுவடிக்கூடம் ஒன்றையும் மற்றும் பல இடங்களில் பிராந்திய ஆவணக் காப்பங்களையும் நிறுவியுள்ளது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தேசிய ஆவணக் கூடமும் மற்றும் ராஜ்யங்களில் ஆவணக் கூடங்களுமிருக்கின்றன. எனினும் இத்தாலியில் பதினேழு பிராந்திய ஆவணக் காப்பகங்கள் பொது சுவடிகளைப் பாதுகாக்க அமைக்கப்பட்டுள்ளன. நூலகங்களும் ஆவணக் காப்பங்களும் வரலாற்று ஆய்வு வளர்ச்சியுற பேருதவி புரிந்துள்ளன.

## இந்திய வரலாற்று ஆதாரங்கள்

பண்டைய இந்தியா பெரும் வரலாற்றறிஞர்களையோ எணுமுத்து வடிவில் வரலாற்றையோ படைக்கவில்லை என்பது பரவலாக ஏறற்றுக் கொள்ளபட்டதென்று. “இந்துக்கள் வரலாற்று முறையிலான விஷயங்களில் அதிக அக்கறை காட்டவில்லை. அவர்களுடைய மன்னர்களின் காலவரன்முறை மரபு வழி பற்றி கவனமின்றி இருந்தனர். தகவல் தெரிவிக்குமாறு வற்புறுத்தப்பட்டால் திகைத்துப் போய்விடுவர்: என்ன சொல்வதென்று தெரியாது தவறாது கட்டுக்கதைசொல்லத் தொடங்குவர்” எனஆல்பரூனி கூறுகின்றார். ஃபீனிட் என்பாரும் கூறுவதாவது,”பண்டைய இந்துக்கள் உண்மையான வரலாற்றை செயல்அ திறன் மிகு வடிவில் பரந்த திறனாய்வு வழிமுறையில் ஒன்று கூட்டும் வரலாற்று உணர்வு உடையவர்களா என்பதே கேள்விக் கிடமாயிருக்கிறது” பண்டைய இந்தியாவின் வரலாற்று அறிவன் இயல்பு பற்றிய அபிப்பிராயங்கள் ஓரளவிற்கு உண்மையாகவே இருந்தபோதிலும், அதன் கடந்த கால வரலாற்றை செம்மைப்படுத்தி எழுத போதுமான சான்றுகளுக்குப் பஞ்சம் என்றுமிருந்ததில்லை. உண்மையில் வரலாற்று ஆதாரங்கள் பலவகைப்பட்டதுமன்றி ஏராளமாயுமிருக்கினறன. ஆவை, தொல்பொருள் ஆய்வுச்சான்றுகள் இலக்கிய சான்றுகள் என்ற இரு பரந்த பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. நினைவுச் சின்னங்கள், கலை எழுத்துச் சான்றுகள், நாணயங்கள் ஆகியவை தொல்பொருட் சான்று பிரிவின்பாற்படும். இலக்கியச் சான்றுகள் பெரும்பாலும் பாரம்பரிய நூற்கள், சம கால நிகழ்ச்சிகள் குறிப்புகள், அயல் நாட்டவர் விவரங்கள் ஆகியவற்றிடலங்கும்.

## பண்டைய இந்திய வரலாற்று ஆதாரங்கள்

பண்டைய இந்திய வரலாற்றிற்கான பழம்பொருள் சான்றுகள் பரவலாக பல இடற்களில் கிடைக்கின்றன. அவை மிகவும் வரலாற்று பயனுடையவையாகும். 1861ல் இந்திய தொல்பொருள் ஆய்வு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. அது வரலாற்றுச் சின்னங்கள் உள்ள இடங்களில் ஆய்வு செய்வதை ஊக்குவித்தது. அறிவாற்றல் மிக்க தொல்பொருள் ஆய்வாளர்களான சர்.ஜான்மார்ஷல், கன்னிங்ஹாம் போன்றோரின் கடின முயற்சி காரணமாக மிக முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றுக் கண்டுபிடிப்புகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. அவைகளுள் மொகஞ்சதாரோ, ஹரப்’பா, நாலந்தா, சாரநாத் சாஞ்சி, தகூஷசீலம், பாடலிபுத்திரம் ஆகியவற்றின் சிதைவுகள் உள்ள .டங்கள் இருக்கின்றன. சிந்துவெளி நாகரிகக் கண்டுபிடிப்பு நாம் அறிந்த இந்திய வரலாற்றை ஆரியர் காலத்திலிருந்து 2000 ஆண்டுகள் பின்னுக்கு கள்ளியிருக்கிறது. பல்வேறுமையங்களில் நடத்தப்ட்ட அகழ்வாராய்வு பல்வகைப்பட்ட தொல்பொருட்களான கட்டிடங்கள், குளங்கள், சாலைகள், சிலைகள் மற்றும் பலதரப்பட்ட பொருட்களை அளித்துள்ளன. இவை அக்காலப் பண்பாட்டு வளர்ச்சி பொருளியல் நிலை, கலை முன்னேற்றம் ஆகியவற்டறை உறுதி செய்துகொள்ள வரலாற்றறிஞர்களுக்குப் பெரிதும் பயன்படுகிறது.

பண்டைய இந்திய வரலாற்றைச் செம்மையாக உழுதுவதற்கு எழுத்துச் சான்றுகள் அளவிட முடியா மதிப்புடையவையாகும்..்.பிளீட்டின் கருத்துப்படி எழுத்துச் சான்றுகளைப் பொறுமையாக ஆய்வு செய்ததன் மூலமாக பண்டைய இந்தியாவின் அரசியல் வரலாற்றை பற்றிய அறிவு பெறப்பட்டிருக்கிறது. அவைகளின்றி நிச்சியமான காலங்களும் அடையாளக் குறிப்புகளும் நிர்ணயம் செய்ய முடியபது. பாரம்பரியம், இலக்கியம், நாணயங்கள், கலை, கட்டிடக் கலை ஆகியவற்றில் மூலம் அறிந்த செய்திகளை ஒழுங்கமைப்பதற்கு அவை பயன்படுகின்றன. எழுதுதற்கு பயன்படுத்தப்படுபவை பாறைகள், களிமண், செம்பு, வெண்கலம், தங்கம், வெள்ளி, பித்தளை, இரும்பு ஆகியவையாகும். அவை பாலி, தமிழ், சமஸ்கிருதம், பிராகிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளிலிருக்கின்றன. பெரும்பாலும் வலமிருந்து இடம் எழுதப்படும் பிராமி மற்றும் காரோஷ்டி எழுத்துக்களே பயன்படுத்தப்பட்டன.பெரும்பான்மையான எழுத்துச் சான்றுகள் நினைவு விழாக் கொண்டாட்டம், அர்ப்பணங்கள், கொடைகள் ஆகியவை சார்ந்ததாகவே இருக்கின்றன. நினைவு விழா மற்றும் அர்ப்பணம் சார்ந்த சான்றுகள், அகைிய செய்யுள் நடையில் இயற்றப்பெற்ற கவிதை மற்றும் பல்வேறு வகைகள் கொண்டது. அவற்றுள் பெரும்பாலானவை கல்லிலேசெதுக்கப்பட்டுள்ளன. நக்கொடை எழுத்துச் சான்றுகள் மானியம் வழங்குவது பற்றியே இருக்கின்றன. அநேகமாக எல்லாமே பட்டயங்களிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளன.

எழுத்துச் சான்றுகள், பண்டைய வரலாற்று அரசியல் சமூகப் பொருளாதார நிலைகள் பற்றிய சுவையான செய்திகளைத் தருகின்றன. அவைகளுள் ஹரப்பா, மொகஞ்சோதாரோ முத்திரைகள் உள. மேலும் அசோகரது ஆணைகள், மௌரியர், சோழர்கள், குப்தர்கள், பல்லவர்கள், பாண்டியர்கள் ஆகியோரின் எழுத்துச் சான்றுகளும் உள்ளன. இந்திய வரலாற்றில்’ பல துனுக்குச் செய்திகளைத் தரவல்ல மிகப் பழங்கால எழுத்துச் சான்றுகள்

பாரசீக மொழியில் உள்ளன. கி.மு. 486ல் பாரசீக மன்னன் டாரியஸ் பெர்சிபோலிஸ், நக்ஷாய் ருஸ்டம் என்ற இடங்களில் இரு கல்வெட்டுக்களை விட்டுச் சென்றுள்ளார். அவை அவர் காலத்தில் பாரசீகத்திற்கும் இந்தியாவிற்குமிடையில் உள்ள அரசியல் தொடர்புகளைக் குறிப்பாக உணர்த்துகிறது. அசோகரின் ஆணைகள் பதினெட்டாம் நூற்றாண்டினிறுதியில் கவனத்திற்கு வந்தன. ரும்மின்டேய் கல்வெட்டுக்கள் அசோகர் லும்பினிக்கு வருகை புரிந்ததைகட் குறிப்பிடுகின்றன. அதன் மூலம் புத்தருடையபிறப்பிடத்தைச் சரியாக குறிப்பிட முடிந்தது. பிரின்செப் என்பவரால் பொருள் விளக்கமளிக்கப்பட்ட அசோகரின் கல்வெட்டுக்கள் இந்திய கல்வெட்டுக்கள் ஆய்விற்கு உறுதியான அடிப்படையிட்டன. சமுத்திரகுப்தரின் அலகாபாத் கற்றூண் கல்வெட்டுக்கள் அவ்விளவரசரின் சாதனைகளை விவரிக்கின்றன. உத்திரமேரூர் பட்டயங்கள் பண்டைத் தமிழகத்தில் தல சுய ஆட்சி செயல்பட்ட விதத்ததை விளங்குகின்றன. முதலாம் ராஜராஜனின் லெய்டன் பட்டயமும் முதலாம் ராஜேந்திரனின் திருவேலங்காட்டுப் பட்டயமும் சோழர்களைப் பற்றி ஓரளவு செய்திகளைத் தருகின்றன. மன்னர்களின் எழுத்துச் சான்றுகளோடு தனி நபர்கள் விட்டுச்சென்ற எழுத்துச் சான்றுகளுடன் உள. பிற விஷயங்கள் பற்றிய தகவல்களோடு அவை மன்னர்களின் நடவடிக்கைகளையும் நாட்டின் அரசியல் நிலைகளையும் குறிப்பிடுகின்றன.

எழுத்துச் சான்றுகளுக்கு அடுத்தப்படியாக நாணயங்கள் பண்டைய இந்திய வரலாற்று ஆதாரங்களாக விளங்குகின்றன. பல்வேறு இடங்களில் நாணயங் குவியல்கள் தனியாராலும் பொது நிறுவனங்களாலும் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. எனினும் ஒழுங்கான தொல்பொருள் அகழ்வாராய்ச்சியின் போது கண்டபிடிக்கப்பட்ட நாணயங்கள் பற்றித்தான் முறையான ஆய்வு செய்ய முடியும். பழங்கால நாணயங்கள் முத்திரைப் பொறியிடப்பட்டவை. குதிரை, எருது, புலி, மரங்கள், சூரியன், போன்ற உருவங்கள் அவற்றின்மதிப்பிற்கு உறுதிப்பாடு அளிக்கும் பொருட்டு அதில் பதிக்கபட்டுள்ளன. சமயம், கலை பற்றி ஓரளவிற்குத்தான் ததகவல்கள் தருகின்றன. மற்றப்படி அவை மிகுதியான அளவு வரலாற்றுச் செய்திகளைத் தருவதில்லை. அலெக்சாண்டர், மற்றும் பாக்டிரிய கிரேக்க அரசர்களின் நாணயங்கள் மனித உருவப்படங்களைக் கொண்டவையாகும்.அவை இந்திய நாணயக்கலை மீதும் தம் செல்வாக்கினைப் பதித்துள்ளன. அரிக்காமேட்டில் கண்டெடுக்கப்பட்ட ரோமானிய நாணயங்கள் ரோமப் பேரரசு தென்னிந்தியாவோடு கொண்ட வர்த்தகத் தொடர்புகளைத் தெளிவுப்படுத்துகின்றன. குப்தர்கள் கலையழகு மிளிரும் பலவகைப்பட்ட நாணயங்களை வெளியிட்டுள்ளனர்.அவை இளவரசர்களின் சாதனைகளைச் சித்திரிக்கும் உருவப்படங்களையும் சொற்றொடர்களையும் கொண்டிருக்கின்றன. தென்னிந்தியாவில் சோழர்களும், சாளுக்கியர்களும் பல்லவர்களும் அரசுச் சின்னங்களும் சொற்றொடர்களுடைய நாணயங்களை அச்சிட்டு வெளியியட்டுள்ளனர். இந்து ஆதிக்கம் வீழ்ந்தப்பின் நாணயச் சான்றுகள் முக்கிய வரலாற்று ஆதாரங்களாக கருதப்படுவது நின்று போய்விட்டது. எது எவ்வாறெனினும், ஆட்சியாளர்கள், குறுநில மன்னர்கள், வர்த்தகர்கள், நகராண்மைக் கழகங்கள்,வணிகக் குழுக்கள் ஆகியவற்றால் வெளியிடப்பட்டுள்ள வகை வகையான நாணயங்கள், பேரரசுகள், மற்றும்

சிற்றரசுகள் பற்றிய மதிப்புமிக்க வரலாற்றுச் செய்திகளைத் தருவதோடு காலவரன் முறையைநிர்ணயிப்பதற்கு தகுந்ததோர் ஆதாரமாகவும் பயன்படுகிறது.

பண்டைய இந்தியா சிறப்பான வரலாற்றறிஞர்களையும் வரலாற்று நூற்களையும் உருவாக்காவிட்டாலும் வரலாநற்றுப் பொருள் தலைப்பினை கொண்ட நூற்களையும் நூலாசிரியர்களையும் அதிக அளவில் கொண்டிரக்கிறது. பாரம்பரியங்கள், ஆண்டு நிகழ்ச்சிக் குறிப்புகள் அயல் நாட்டவர் விபரங்கள் ஆகியவை ஏராளமான வரலாற்றுத் தகவல்களைத் தந்துள்ளன. தமிழ், பாலி, சமஸ்கிருத மொழிகளில் பாரம்பரிய நூற்கள் இருக்கின்றன. தமிழில் குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, ஆகிய நூற்களைக் குறிப்பிடலாம். பாலி மொழியில் ஜாதங்கள், பீடகங்கள், மகாவம்சம், தீபவம்சம் ஆகியவற்றைச் சொல்லலாம். சுமஸ்கிருதத்தில் வேதங்கள், பிரமணங்கள், ஆரண்யகங்கள், உபநிஷங்கள், சூத்திரங்கள், ராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்கள், புராணங்கள், சாஸ்திரங்கள் ஆகியவைகளைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இதிகாசங்களும் புராணங்களும் பிற பாரம்பரிய நூற்களைப் போல் நீண்டகாலம் தொகுக்கப்பட்டன. அதன் வளர்ச்சி காலங்களில் பல்வேறு ஆதாரங்களிலிருந்து பல விஷயங்களை எடுத்துக் கொண்டனர். வரலாற்றுப் பொருட் கருத்தக்கள் சொந்த நலன் நாடும் விஷயங்களோடு கலந்தன. எனினும் இந்த பாரம்பரிய நூற்களின் உதவியோடு தான் பண்டைய அரச மரபுகளின் வரலாறு தொகுக்கப்படுகிறது.

ஆண்டு நிகழ்ச்சித் தொகுப்புகளில் மரபுவழி அட்டவணைகள் வாழ்க்கைச் சரிதங்கள் ஆகியவை அடங்கும். “வம்சாவழிகள்” எனப்பட்ட அரசர்களின் மரபு வழி முறைமைகள், இதிகாசங்கள் மற்றும் புராணங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. கல்ஹணரின் **ராஜதரங்கிணி** காஷ்மீர் மன்னர் மரபுகளின் ஆண்டு நிகழ்ச்சித் தொகுப்பு ஆகும். இந்நூலின் பெரும்பகுதி அவ்வளவு வரலாற்றுப் பயனுடையதாக இல்லை. பாணரின் ஹ ஷர்ஷரின் வாழ்கை நிகழ்ச்சித் தொகுப்பு ஆகும்: அது வரலாற்றை விட இலகியத்தையே அதிகம் சார்ந்துள்ளது: எனினும் அரசியல் நிலை பற்றித்தகவல்கள் அடங்கியுள்ளன. வாக்பதியும் பில்ஹணரும் முறையே பிற்கால சாளுக்கிய அரசர்களான யசோவர்மன், விக்கிரமாதித்தன் ஆகியோரின் வாழ்க்கை பற்றிய இரு இதிகாசங்களை எழுதினார். வங்களாத்து ராமபாலர், டில்லி பிருதிவிராஜ் ஆகிய வரலாற்று வீரர்களைப் புகழ்ந்து நிகழ்ச்சித் தொகுப்புகள் உள்ளன. முஸ்லீம் எழுத்தாளர்கள் தல நிகழ்ச்சித் தொகுப்புகளின் அடிபடையில்குஜராத் சிந.து அரசுகள் மீது வரலாற்று விவரங்கள் எழுதியுள்ளனர்.

அயல் நாட்டு எழுத்தாளர்கள் பலர் இந்தியாவைப் பற்றிய குறிப்புகள் விட்டச் சென்றுள்ளனர். ஹெரோடொட்டஸ் கி.மு.ஐந்தாம் நூற்றாண்டிலேயே வடமேற்கு இந்தியாவின் மீது நடைபெற்ற பாரசீகப் படையெடுப்புகளைக் குறிப்பிட்டுள்ளார். கிண்டோஸ் டெசியாஸ் என்பாரின் துண்டுப் பகதிகளில் கிழக்கு உலகின் வித்தைகளைப் பற்றிய பயணிகளின் கதைகள்ட அடங்கியுள்ளன. அலெக்சாண்டர் படையெடுப்பிற்குப் பின் மேற்கிந்தியப் பயணிகள் இந்தியாவிற்கு வருகை புரிந்தனர். சந்திரகுப்த மௌரியர் அரசவையில் வெலுகஸ் நிகேடாரின் தூதராக அமர்ந்த மெகஸ்தெனிஸ் இண்டிகா என்ற நூலை எழுதியுள்ளார். அந்த நூல் கிடைக்கவில்லை. ஆனால் அதிலிருந்து எடுத்தாளப்பட்ட மேற்கோள் பகுதிகள் பிற

அறிஞர்களின் நூற்களில் காணப்படுகின்றன. இம்மேற்கோள் பகுதிகள் கிரேக்கக் கண்ணோட்டத்துடன் எழுதப்பட்டபோதிலும் மௌரியப் பெரரசின் அரசியல், சமூக நிறுவனங்கள் பற்றி தெளிவான விளக்கங்கள் தருகின்றன. அடையாளம் தெரியாத பயணியால் எழுதப்பட்ட செங்கடற் செலவு என்ற நூல் கி.பி.80 ஆண்டு வாக்கில் இந்திய கரைப் பகுதிகளில் நடைபெற்ற கடற்பயணங்களை விவரிக்கிறது. அது புவியியல் துறைமுகங்கள் வர்த்தகப் பொருட்கள் பற்றி விளக்குகின்றது. பிளினி டாலமி ஆகியோரின் விபரங்கள், மரங்கள், பிராணிகள், புவியியல் பற்றிய தகவல்கள் தருகின்றன.சீனா, திபெத்திய அறிஞர்கள் கூட இந்தியாவைப் பற்றிய ஏராளமான தகவலல்கள் விட்டுச் சென்றுள்ளனர். ∴பாஹியான் என்ற சீன யாத்ரிகர் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சந்திரகுப்த விக்கரமாதித்தன் ஆட்சிக் காலத்தில் இந்தியாவிற்கு வருகை புரிந்தார். அவர் சமஸ்கிழருத மொழியைக் கற்று, நாட்டின் நிலைகளை ஆராய்ச்சி செய்து புத்த சமய வளர்ச்சி பற்றி விவரித்துள்ளார். அவர் பிற விஷயங்களைவ விட தமது சமயத்தின் மீது தான் ஆர்வம் காட்டினார். இந்தியாவிற்டகு வருகை புரிந்த சீனப் பயணிகளும் மிகச் சிறந்தவர் யுவான்-சுவாங் ஆவார்ட. ஹர்ஷர் ஆட்சிக் காலத்தில் கி.பி. ஏழாம் நூற்டறாண்டின் மத்தியில் இந்தியாவின் பல பகுதிகளிலும் சுற்றுப் பயணம் செய்து இந்திய சமூக சமய நிலை பற்றியும் ஹர்ஷரையும் அவர் கால இதர அரசர்களைப் பற்றியும் ஏராளமான தகவல்களைவ விட்டுச் சென்றுள்ளார். மற்றொரு சீனப் பயணி இட்சிங் ஆவார். இந்த சீன அறிஞர்களின் நூற்கள் இந்தியாவில் அவர்களின் பலவகைப்பட்டஅனுபவங்கள் சம்பந்தப்பட்டவை: அவை மூல வடிவில் கிடைத்திருக்கின்றன. அவற்றிற்கு ஆங்கில மொழி பெயர்ப்புகளும் இருக்கின்றன. அவர்களுடைய புலமைத் திறமிக்க நூற்கள் மட்டும் இல்லாதிருந்திருந்தால் குப்தர், ஹர்ஷர் பேரரசுகளின் காலத்துசமூக. அரசியல் நிலை பற்றி அதிகம் தெரிந்திருக்க முடியாது.

## இடைக்கால இந்திய வரலாற்று ஆதாரங்கள்

இந்திய இடைகாலம் டில்லி சுல்தானியம், மொகலாயப் பேரரசு, ராஜர்த்திரர்கள், மராத்தியர், பர்மினி அரசு, விஜயநகரப் பேரரசு ஆகிய அரசுகளின் காலமாகும். இந்தக் காலத்திற்கான ஆதாரங்கள் பண்டைக் காலத்திற்கு உள்ளதைவிட அதிகமானதாகவும் நேரடி பொருத்தமுள்ளதாகவும் இருக்கின்றன. நினைவுச் சின்னங்கள், கல்வெட்டுகள், நாணயங்கள், இலக்கியங்கள் தவிர பல ஆண்டு நிகழ்ச்சித் தொகுப்புகளையும் தெளிவான வரலாற்று விவரங்களையும், துல்லியமான காலவரன் முறைகளயைும் அளிக்கின்றன.

முஸ்லிம் ஆட்சியாளர்கள் எண்ணற்ற மசூதிகள், கோட்டைகள், மாளிகைகள், கலைப்பொருட்கள், பூங்காக்கள் ஆகியவற்றைக் கட்டியுள்ளனர். அடிமை மரபுச் சுல்தான்கள் டில்லி கருகில் குதுப்மினாரைக் கட்டினர். இது குத்பூதீன் ஐபெக்கால் தொடங்கப் ெப்று இல்டுட்மிஷ் சுல்தானால் முடிக்கப்பட்டது. இதை முஸ்லீம்களை வழிகாட்டிற்கு அழிப்பதற்கு வசதியானதொரு கோபுரமாகக் கட்ட உத்தேசிக்கப்பட்டது. பின்னர் அது வெற்றிக் கோபுரமாகக் கருதப்பட்டது. அலாவுதீன் கிர்ஜியால் கட்டப்பட்ட சிரி என்ற நகரத்தின் அழிவுகள் அக்காலத்திய படைசார்ந்த கட்டிடக் கலை நுட்பங்களைத் தெரிவிக்கின்றது. கியாஸ்உதீன் துக்ளக்கினால் கட்டப்பட்ட துக்ளக்காபாத், பிரோஸ்ஷா துக்ளக்கினால்

கட்டப்பட்ட பிரோஸ்ஷாபாத் அக்கால கட்டிடக் கலைப் பணி பாணியை பிரதிபலிக்கின்றன. அக்காலத்திய இந்'து நினைவுச் சின்னங்களுள் கும்பா என்பவரால் நிறுவப்பட்ட சித்தூரில் உள்ள வெற்றித் தூண், விஜயநகரத்து கிருஷ்ணதேவராயர் கட்டிய வித்தாலா கோவில் ஆகியவை குறிப்பிடத் தகுந்தவை. மொகாலாயர்கள் எடுப்பான கட்டிடங்கள் கட்டுவதில் இணையற்று விளங்கினர். பேரரசர் அக்பர் கட்டிய பதேபூர் சிகரி, ஜஹாங்கீரால் விரிவாக்கபட்ட மொகலாயர் பூங்கா, ஷாஜஹான் கட்டிய தாஸ்மஹால் ஆகியவை மொகலாயர்களின் கலை, கட்டிடக் கலை வளர்ச்சியை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. அக்காலத்திய ஓவியங்கள் பல வரலாற்றுப்பயன் உள்ளவை.

பானிபட் போருக்குப் பின் பாபர் அணிவகுத்துச் சென்றதை குறித்துக்காட்டும் ஓவியம் ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மற்றொரு ஓவியம் ஜஹாங்கீர் ஆஜ்மீரில் உள்ள ஓரி இந்து யோகியைச் சென்று பார்ப்பதைக் காட்டகிறது. சிறு அளவிலான ஓவியம்ஒன்று ஷீஜா, ஔரங்கசீப், முராத் ஆகியோர் குதிரைச் சவாரி செய்வது போன்றுள்ளது. இந்த ஓவியங்கள், இதுவரை தெளிவாகாதிருந்த சமூகப் பழக்கவழக்கங்கள், போர்க்கலை நுட்பங்கள் ஆகியவைகளை புரிந்துகொள்ள உதவுகிறது. கல்வெட்டுக்களும் பட்டயங்களும் தொடர்ந்து செதுக்கப்பட்டன. அவை விஜயநகர பேரரசு போன்ற இந்து அரசுகளில் மிக அதிகமாக இருந்தன. இக்காலத்திய நாணயங்கள் குறிப்பாக ஷெர்ஷாவும் அக்பரும் வெளியிட்டவை:டு நாணயச் சான்றுகளாகப் பயன்படுகின்றன.

இலக்கியச் சான்றுகளும் முதன்னையானவை அரசு ஆவணங்கள், செய்திக் கடிதங்கள், ஆண்டு நிகழ்ச்சித் தொகுப்புகள், அயலவர் குறிப்புகள் ஆகும். மொகலாயர்கள் ஆவணத்துறை ஒன்று ஏற்படுத்தி அரசுக் கடிதங்களை வெவ்வெறு மையங்களில் பாதுகாத்து வைத்திருந்தனர். அக்பரது நூலகம் அவரது ஆட்சிக் காலத்து மிகச் சிறப்பானவர்களால் எழுதப்பட்ட 25,000 பிரதிகளையுடையது. மோகலாயப் பேரரசு வீழ்ச்சியுடன் இந்த நூலகங்கள் கவனிப்பாரற்று கொள்ளைப் படையினரால் சூறையாடப்பட்டன என்றாலும் பிந்திய மொகலாயர் ஆட்சிக் காலத்து, குறிப்பாக ஔரங்கசீப் காலத்து சில கையெழுத்துப் பிரதிகளும் கடிதங்களும் பேஷ்வாக்களின் ஆவணங்களும் தப்பிப் பிழைத்திருக்கின்றன.

டில்லி சுல்தானிய மற்றும் மொகலாய பேரரசின் ஆட்சியாளர்களைப் பற்றி பல ஆண்டு நிகழ்ச்சித் தொகுப்புகள் எழுதப்பட்டுள்ளன. பொதுவில் அறிஞர்கள் மற்றும் நிர்வாகிகளான அவர்கள் தங்கள் அந்தஸ்து காரணமாக அக்காலத்திய நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றதுடன் அரேபிய, பாரசீகப் பேரரசு வரலாற்றில் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தனர். அவர்களுள் பலர் கூலிக்கு எழுதுபவர்களாகவும், அரசு அவை எழுத்தாளர்களாகவும் இருந்ததால் தங்கள் புரவலர்களின் சாதனைகளையும் வீரச் செயல்களையும் போற்றி ஏற்றிக் கூறுவதில் பெருமகிழ்ச்சி கண்டனர். மின்ஹாஜ் உத்தீன் முஸ்லீம் உலகில் பொது வரலாறான தபாகாதி நாசரி என்ற நூலை எழுதியுள்ளார். இந்நூலில் கி.பி. 1267 வரையிலான டில்லி அடிமை மரபு அரசர்களின் வரலாற்றை விவரித்துள்ளார். இத்ஆததியிலிருந்து ஜியா உத்தீன் பரானி சுல்தானிய வரலாற்றை டாரிக்கி பிரோஸ்ஷாகி(tarikh-i-Firuz shahi) என்றநூலில் பிரோஷா துக்ளக்கின் ஆறாம் ஆண்டு வரை தொடர்ந்து எழுதியுள்ளார். அமிர் குஷ்ரு ஒரு கவிஞர்.

எனினும் அவரதுகாசெய்னுல்.'.புட்டா என்ற நூல் சுல்தான் அலாவுதினின் ஆட்சிக்கால வரலாற்றிற்கு முக்கிய ஆதாரமாக விளங்குகிறது. சுல்தான் பிரோஸ்ஷா துக்ளக்கின் புட்டாடி பிரோஸ்ஷாகி (Futhat-i-Firuz shahi)என்ற நூல் அவரது ஆட்சி முறையைப் பற்றிய விவரங்களைத் தரகிறது. அஹமட் யாட்கர், நிமதுல்லா அப்துல்லா ஆகியோரால் பதினேழாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மூன்று லோடிகளின் வரலாற்றைப் பற்றியவையாகும். புாபர் தமது சுயசரிதையில(Memoirs) இந்துஸ்தானத்தைப் பற்றியதமது கருத்தக்களை வெளிப்படுத்தியுள்ளார். அந்நூலில் அவரே நேரிலி கண்டு புரிந்து இந்துஸ்தானத்து நாடு மக்கள், அரசியல் நிலை ஆகியவை பற்றிய விரிவான விளக்கங்கள் கொடுத்துள்ளார். நாடு அவருக்கு மன நிறைவு அளித்த போதிலும் நாட்டு மக்களும் அவர்களின் சாதனைகளும் அவ்வாறு அளிக்கவில்லை. பாபரின் மகளான குல்டபடான் பேகம் ஹுமாயூன் நாமா என்ற நூலில் மொகலாய அந்தப்புற வாழ்க்கை பற்றிய விளக்கமளித்துள்ளார். அபுல்.'.பஸல் அக்பரின் ஆட்சி முறைப்பற்றி ஆயினி அக்பரி அக்பர் நாமா என்ற இரு நூற்கள் எழுதியுள்ளார். டீபரரசருக்குச் செய்யும் பணி இறைவனுக்குச் செய்யும் கபணி என்ற கொள்கை அவருக்கு வழிகாட்டியாக அமைந்தது: எனவே தம் புரவலர் செய்வதையெல்லாம் போற்றி புகழ வேண்டும் என்பதைக் தம் தலையாய கடமையெனக் கொண்டார் என்றாலும் அவரது நூல் ஆட்சி முறைப்பற்றிய ஏராளமான விவரங்'களையும் ஏற்றுக் கொள்ளக்கூடிய காலவரன் முறையையும் தந்துள்ளது. பதோனி என்பவரால் எழுதப்பட்ட முந்தாகபுத் தவாரிக் என்ற சமகாலத்து நூல் சபுக்டஜின் காலத்திலிருந்து அக்பர் காலம் வரையிலான இந்துஸ்தான் வரலாற்றைக் கொண்டுள்ளது. சமய வெறி மிகுந்த அவர் அக்பரின் சமயக் கொள்கையைக் குறை கூறியுள்ளார். குவாஜா நாஜிமுத்தீன் என்பாரின் தபாகத்தி அக்பாரி என்ற நூல் முகமது கஜினி காலத்திலிருந்து அக்பர் காலம் வரை தல மரபுகள் உட்பட இந்திய முஸ்லீம் அரசுகளின் வரலாற்றைத் தருகிறது. நம்பக்கூயெது. ஏற்றுக்கொள்ளக் கூடியது என்று கருதப்படும் இந்நூல் பிற வரலாற்றறிஞர்களுக்கு ஆதார நூலாக பயன்படுகிறது. ஜஹாங்கீரின் சுயசரிதைமொகலாய வரலாற்றின் முக்கியமான மூல நூலாகப் பயன்படுகிறது. ஜஹாங்கீரின் சுயசரிதை மொகலாய வரலாற்றின் முக்கியமான மூலப் நூலாகப் பயன்படுகிறது. அது ஜஹாங்கிரீன் ஆட்சி முறை, பண்பு நலன் பற்றிய முதன்மையான ஆதாரமாகும். பாதுஷா நாமா, ஆலம்கிரி நாமா என்ற இரு நூற்களும் ஷாஹான், ஔரங்கசீப் ஆட்சிக் காலத்தை உள்ளடக்கிய அதிகாரப்பூர்வமான ஆண்டு நிகழ்ச்சித் தொகுப்புக்கள் ஆகும். ஔரங்கசீப்பைப் ற்றி பல நூற்கள் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானது கா.'.பிகான் என்பாருடைய முந்தாகாபூல் லூபாப் என்பதாகும். மூன்று தொகுதிகளில் அடங்கிய இப்பெறும் நூல் முஸ்லீம் வெற்றிகளிலிருந்து பிற்கால மொகலாய அரசரான முகமதுஷா காலம் வரையிலான இந்திய வரலாற்றை விவரிக்கிறது.அவைக்கள வரலாற்றறிஞர்களால் மறைக்கப்பட்ட சில உண்மைகள், தல அரசுகளின் வரலாறு, சமூக விபரங்கள் ஆகியவை இடம் பெற்றிருப்பது இந்நூலின் மதிப்பினை உயர்த்துகிறது.

இடைக்காலத்தில் இந்தியாவிற்கு வருகை புரிந்த அயல்நாட்டுப் பயணிகள் சுவையான விபரங்களைவ ிட்டுச் சென்றுள்ளனர். அரேபிய நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள் கி.பி. எட்டாம்

நூற்றாண்டின் ஆரம்பத்தில் சிநது பகுதியைக் கைப்பற்றுவதில் முடிந்த அரேபியரின் மேற்கு இந்தியப் படைடியடுப்பின் மீது அதிகக் கவனம் செலுத்தினர் இந்துஸ்தானத்தைத் துருக்கியர் கைப்பற்றிய பின் இஸ்லாமிய வரலாற்றறிஞர்கள் இந்தியாவில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு முதன்மையிடம் அளித்தனர். அரேபிய மொழியறிஞரான ஆல்பரூனி சமஸ்கிருத மொழி கற்று, இற்திய பண்பாட்டைப் படித்து ஆய்ந்து இந்தியாவைப் பற்றிக் கருத்துச் செறிவுள்ள நூல் ஒன்று எழுதியுள்ளார். ஆனால் அவர் பகுத்தறிந்து திறனாய்வு செய்யவில்லை அரசியல் நிகழ்ச்சிகளைப் புறக்கணித்து விட்டார். இபன்பாதுதா: இந்தியாவில் பல ஆண்டுகள் தங்கியிந்தவர். பயணக்குறிப்பொன்று எழுதியுள்ளார். நிக்கோலா கோன்டி, அப்துா ரசாக் அனஸ்தாசியஸ் நிகிடின் ஆகியோர் தென்னிந்தியா உட்பட நாட்டைச் சுற்றிப் பார்த்து மக்களின் அரசியல் சமூக வாழ்க்கை பற்றி பயனுள்ள குறிப்புகள் கொடுத்துள்ளனர். அக்பர் ஈட்சிக் காலத்தில் ஏகசபை சமயப்' பரப்பாளர்கள் மொகலாயப் பேரரசிற்கு வருகை புரிந்தனர். வழக்கமாக அவர்கள் கோலா அல்லது ஹீக்ளியில் இறங்கி அதன் பின் வட இந்திய நகரங்களான டில்லி, ஆக்ரா நகர்களுக்குச் சென்றனர். கேப்டன் ஹாக்கின்ஸ், சர், தாமஸ் ரோ ஆகியோர்ஜஹாங்கீர் ஆட்சிக்காலத்தில் இந்தியாவிற்கு வருகை புரிந்தனர்.ஷாஜஹானின் குமாரர்கள் வாரிசுரிமைப் போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது பிரெஞ்சுப் பயணிகளான பெர்னியர், டிராவர்னியர் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்தனர். நாட்டிற்கு அன்னியர்களாக இருந்தாலும் கல்வியறிவு மிக்கவர்களாயிருந்ததால் நாட்டு நிலைகளை விருப்பு வெறுப்பற்ற முறையில் கண்ணுற்ற பகுத்தாய்ந்து நிகழ்ச்சிகளைத் திறனாய்வு செய்ய முடிந்தது. எனினும் சில சமயங்களில் அவர்கள் வாந்திகளை நம்பினர். மேற்கிந்திய மனோபாவம் அவர்களின் மதிப்பீடுகளைக் களங்கப்படுத்தியது. இருந்தபோதிலும் அவர்களின் நாட்குறிப்புகளும் பயணக்குறிப்புகளும் அட்சியாளர்களின் குணநலன்களையும் ஆட்சிமுறை தன்மைகளையும் மக்களின் அரசியல், சமூக பொருளாதார வாழ்க்கை முறைகளையும் பற்றிக் குறிப்பிட்ட கூடிய அளவிற்கு தகவல்கள் அளிக்கின்றன.

**தற்கால இந்திய வரலாறு ஆதாரங்கள்**

இந்திய வரலாற்றில் தற்காலம் எப்பொழுது ஆரம்மாகிறது எனக் குறிப்பிடுவது எளிதன்று. மேற்கு நாடகளில் மறுமலர்ச்சி, புவியியல் கண்டுபிடிப்புகள் சமயச் சீரிதிருத்தம் ஆகியவை நிலமானிய முறையை ஒரு முடிவிற்கு கொண்டு வந்து தேசிய நாடுகளின் தோற்றத்தையும் அறிவியல் முன்னேற்றத்தையும் தொடங்கியது. ஆனால் இந்தியாவில் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிவரை நிலமானிய அசைக்க முடியாத அம்சமாக நிலைபெற்றிருந்தது. ஏறத்தாழ 1800 ம் ஆண்டில் அம்முறை ஒழிக்கப்பட்டு பிரிட்ஷ் ஆதிக்கத்தின் கீழ் ஒன்றுபடுத்தப்பட்டது. அறிவியலும் தொழிலியலும் கூடவே வந்து நாடு பொருளியல் முன்னேற்றம் பெறக் தொடங்கியது. இத்தகைய கருத்துக் கண்ணோட்டத்தில் நோக்கினால் தற்காலம் பதினெட்டாப் நூற்றாண்டில் தொடங்கியது என ஏற்றுக் கொள்ளப் படலாம். தற்கால இந்திய வரலாற்று ஆதாரங்களைப் பொருத்த மட்டில், அதன் வகைகளிலும் மாறுதல் ஏற்பட்டது. தொல்பொருள் ஆய்வில் முக்கியத்துவம் மங்கி, இலக்கியச் சான்றுகள் முதன்மை பெற்றன. நினைவுச் சின்னங்களும் நாணயங்களும் பூமியின் மேற்பரப்பிலேயே காணப்படுவதால்

அகழ்வாராய்வு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. கட்டிடங்கள் தொடர்ந்து கட்டப்பட்டன: எழுத்துக்கள் பொறிக்கப்படுவது மேலும் குறைந்தது.

தொடக்கத்திலிருந்தே ஆங்கிலேயர்களுதஷம் ஐரோப்பிய அரசுகளும் இந்தியாவில் அரசு ஆவணங்களிலே தங்கள் நிர்வாகக் கடிதப் போக்குவரத்துக்களை நடத்தினர். பிரிட்டிஷ் ஆதிக்கம் நிறுவப்பட்டதிலிருந்து ஆவணங்களைப் பாதுகாப்பதில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி அலுவலர்கள் எழுதப்பட்ட பதிவேடுகளின் விபரங்கள் அனைத்தையும் லண்டனில்உள்ள மேலாளர்கள் பார்வையிடுவதற்கு வசதியாக பாதுகாப்பாக வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். 1719ல் இயக்குநர்கள் அவை, கவுன்சில் உறுப்பினர்கள் தீர்மானங்களுக்கு எதிரான கருத்தக்களை கூறினால் அவற்றைக் குறித்து வைக்கும் உரிமையையும் அளித்தது. பல்வேறு இடங்களிலிருந்து அரசு அலுவலர்களின் குறிப்புகள், கடிதங்கள், விணட்ணப்பங்கள் அகியவற்றை கலெக்டொர்களுக்கு அனுப்புவர். கலெக்டர்கள் தங்கள் கடிதப் போக்குவரத்துக்களை வருவாய் கழகத்திற்கும் அவர்கள் தங்கள் பதிவேடுகளை ஆளுநருக்கும் ஆளுநர் அவற்றை தலைமை ஆளுநருக்கும் இயக்குநர் குழுவிற்கும் அனுப்புகின்றனர். அத்துடன், மாறுபட்ட கருத்துடைய குறிப்புக்களும் தேசிய கடிதப் போக்குவரத்துக்களும், இன்ன பிற பிரிவினைச் சேர்ந்தவைகளும் உள்ளன. அதன் விளைவாக ஆவணத் தொகுதிகள் பெருமளவில் அதிகரித்து வரலாற்றாய்விற்கு ஏராளமான சான்றுகள் வழங்கப்பட்டன. ஆவணங்களைப் பாதுகாத்து வைப்பதற்கு பிரிட்டிஷ் அரசு மாநிலத் தலைநகர்களில் ஆவண அலுவலகங்கள் ஏற்படுத்தியதோடு டில்லியில் பேரரசு ஆவண அலுவலகமும் லண்டனில் இந்திய அலுவலகமும் நிறுவப்பட்டன. விடுதலைக்குப் பின் ஆவண அலுவலகங்கள் அரசு ஆவணங்களாக ஆக்கப்பட்டன. அவைகளுள் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களில் உள்ளவை மிக அதிகமான ஆவணச் சேகரிப்புகளைக் கொண்டுள்ளன. பேரரசு ஆவண அலுவலகம் தேசீய ஆவணக் காப்பகமாக சீரமைக்கப்பட்டது. வரலாற்று முக்கியத்துவமுள்ள ஏராளமான ஆவணங்கள் தனியார் பாதுகாப்பில் இருந்து கொண்டிருக்கின்றன. வரலாற்றுப் பதிவேடுகளின் ஆணைக் குழுவும் மற்றும் வரலாற்று ஆவணங்களைச் சேகரிக்கும் மாநிலக் குழுக்களும் இந்தப் பத்திரங்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. இவ்வாறு சேகரிக்கப்பட்டவை ஆவணக் காப்பகங்களில் பாதுகாக்கப்படுகின்றன.

போர்த்துக்கீசியர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், டேனியர் ஆகியோர் தங்களின் முதன்மை நிறுவனங்களாக முறையே கோவா, நாகப்பட்டினம், பாண்டிச்சேரி, தரங்கம்பாடி ஆகிய இடங்களைக் கொண்டிருந்தனர். லிஸ்பன் மற்றும் நோவ கோவா இடங்களில் உள்ள ஆவணக் காப்பங்களில் போர்த்துக்கல் இந்தியாவோடும் ஐரோப்பிய அரசுகளோடும் கொண்ட தொடர்பு மற்றிய பத்திரங்கள் பாதுகாக்கப்படுகின்றன. டச்சு ஆவணக் காப்பகங்களும் இந்தியா சம்பந்தப்பட்ட பல்வேறு துறை சார்ந்த மதிப்புள்ள பத்திரங்களைக் கொண்டுள்ளது. இப்பத்திரங்களுள் சோழ மண்டலக் கரையிலிருந்து படேவியாவிற்கு அனுப்பட்ட கடிதங்களின் உடனிணைப்புகள் என்ற பத்திரம் சென்னை அரசு ஆவணக் காப்பகத்தில் உள்ளது. பாண்டிச்சேரியில் உள்ள பிரெஞ்சுப் பத்திரங்கள் பிரெஞ்சு வர்த்தக நிறுவனங்கள் பற்றி

மட்டுமல்லாது ஐரோப்பிய இந்திய அரசுகளோடு கொண்ட தொடர்பு பற்றியவைகளும் இருக்கின்றன. சில டேனியப் பத்திரங்கள் சென்னை அரசு ஆவணக்காப்பகத்தில் காணக்கிடக்கின்றன. இந்தியாவில் உள்ள ஐரோப்பிய அரசுகளின் பல்வேறு வகைப்பட்ட ஆவணங்கள் பெருமளவில் வரலாற்றுத் தகவல்களைக் கொண்டுள்ளது. ஆனால் அவை எத்தகைய கண்ணோட்டத்துடன் இந்த நாட்டு நிகழ்ச்சிகளையும் போக்குகளயைும் நோக்குகின்றன. என்பதை கவனித்து கணக்கில் கொள்ள வேண்டும்.

ஐரோப்பிய பதிவேடுகளைத் தவிர்த்து இந்திய மொழிகளிலும் பல ஆதாரங்கள் உள்ளன. பதினெட்டாம் நூற்றாண்டு இந்திய வரலாறு பற்றிய மராத்தி ஆவணங்கள் சர்கேசி என்பரால் தொகுக்கப்பட்ட பேஷ்வா டா.ஃப்டரிடமிருந்து தேர்ந்தெடுத்தவை என்ற தொடர்ச்சியான வெளியீடுகளில் காணக் கிடக்கின்றன. ஆற்காட்டு வாலாஜா நவாப்புகள் போன்ற மாநில அரச மரபுகள் பற்றிய பாரசீக ஆவணங்கள் ஆவணக் காப்பகங்களில் இருக்கின்றன. ஹைதராபாத், மைசூர், குடகு போன்ற சிற்றரசுகளின் பத்திரங்கள் மிக அதிகமாய் உள்ளன. ஆனால் அவை அட்டவணையிடப்பட்டு பாதுகாக்கப்படவில்லை.

தனி நபர்களால் எழுதப்பட்ட நிகழ்ச்சித் தொகுப்புகள், நாட்குறிப்புகள், பயணக் குறிப்புகள், வரலாற்று விவரங்கள் ஆகியவை, பொது கடிதப் போக்குவரத்துக்கள் அரசு ஆவணங்களன் ஆகியவற்றின் மூலம் கிடைத்த தகவல்களில் விடப்பட்ட பகுதிகளை நிரப்புவதற்கும் பெறப்பட்ட தகவல்களை மேலும் விளக்குவதற்கும் பயன்படுகின்றன. பாரசீக நூலான சியுருள் முதாக்கரின் பதினெட்டாம் நூற்றாண்டின் இந்திய நிலையை எடுத்துக்காட்ட முயன்றுள்ளது. டுப்ளேயின் மொழி பெயர்ப்பாளரான ஆனந்தரங்க பிள்ளையின் நாட்குறிப்புதமிழில் எழுதப்பட்டுள்ளது. பல தொகுதிகளைக் கொண்ட அந்நூல் ஆங்கில பிரெஞ்சு உறவுகளைத் தெளிவாக்குவதோடு அவருடைய குண நலன்களையும் சமூக பழக்கவழக்கங்களையும் விளக்குகிறது. துபோ என்ற பிரெஞ்சு சமயப் பரப்பாளர் தமது இந்திய அனுபவங்களின் அடிப்படையில் இந்து பழக்கவழக்கங்களும் சடங்களும(Hindu Manners Customs and Ceremonies)என்ற நம்பத் தகுந்த நூல் ஒன்றை எழுதியுள்ளார். புஷாணண் என்பார் சென்னையிலிருந்து மைசூருக்கும் மலபாருக்கும் தாம் செய்த பயணங்கள் பற்றிய விவரங்களை எழுதியுள்ளார். இத்துடன் பல சமகால வரலாற்று நூற்களும் இருக்கின்றன. அவைகளுள் ஜேம்ஸ் மில்எழுதிய பிரிட்டிஷ் இந்திய வரலாறு கிராண்ட் டஃப் எழுதிய மகாராட்டிரர்களின் வரலாறு(History of the Marattas) மார்க் வில்க்ஸ் எழுதிய மைசூர் வரலாறு கன்னிங்ஹாமின் சீக்கியர் வரலாறு(History of the Sikhs) ஆகியவை குறிப்பிடத்தகுந்தவை. அன்றாட நடவடிக்கை குறிப்புகள் வெளியீடுகள், செய்தித்தாட்கள் ஆகியவை மிகப் ரெருமளவில் பொருள் தொகுதிகளாக வரலாற்று மூலங்களைக் கொண்டிருக்கின்றன.உண்மையில் பண்டைக் காலத்தைப் போலல்லாது தற்காலத்திற்கு ஆதாரங்களுக்குப் பஞ்சமேயில்லை. இதில் முக்கியமானது என்னவென்றால் இந்த ஆதார மூலங்கள், வரலாற்று நூல் வடிவம்பெறும் முன்பு நிகழ்ச்சிகள் சரியான முறையில் விளக்கம் அளிக்கப்பட வேண்டும் என்பதேயாகும்.

**தென்னிந்திய வரலாற்று ஆதாரங்கள்**

தென்னிந்தியா திராவிட நாகரிகத்த்ன் தொடடில் ஆகும். ஆரியர்கள் இந்துஸ்தான் சமவெளிகளில் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டியபின் திராவிடர்கள் தெற்கு மற்றும் கிழக்கிலுள்ள அடர்ந்த காட்டப் பகுதிகளுக்கு குடியேர்ந்தனர். அஇவர்கள் யாலி, ராவணன் தலைமையில் சிறப்புற்றிருந்தனர் என்றும் ராமரால் நடத்தப்பட்ட ஆரியப் படையெடுப்பிற்கும் பின்னும் தங்கள் தனித்தன்மையையும் பண்பாட்டையும் பாதுகாத்தனர் என்றும் நம்பப்படுகிறது. பாண்டியர்களும் , சோழர்களும், சாதவாகனர்களும் பல்லசர்களும் தெற்கின் மேன்மையை இதுவரை இல்லாத அளவிற்கு உயர்த்தி தூரத்து இடங்களில் குடியேற்றங்களையும் நிறுவினர். ஆனால் அதைத் தொடர்ந்தகாலங்களில் வடக்கிலும்பி மேற்கிலுமிருந்து வந்த அன்னியப் படையெடுப்பிற்கு பிறகு இலக்காகி இரையானது.

இந்தியாவின் தெற்குப் பகுதி தொல்பொருட் சின்னங்களோடு இலக்கியச் சான்றுகளோடு நிரம்பியது. பல்வேறு இடங்களில் தொல்பொருள் ஆய்வுகளை மேற்கொண்டதன் பயனாக முக்கிய பழஞ் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. பழைய கோலாப்பூர் நகரின் அழிவுச்சின்னங்களில் ரோமானியப் பேரரசோடு வணிகத் தொடர்பைக் குறிக்கும் சான்றுகள் காணக்கிடக்கின்றன. சாதவாகனப் பேரரசைப் பற்றிய தகவல்களையும் வழங்கியுள்ளன. பண்டை நகர்களான பீடாரில் உள்ள பைத்தான் கொண்டாபூர் ஆகிய இடங்களில் அகழ்வாராய்ச்சி செய்தபோது களிமண் உருவங்கள், நாணயங்கள், உலோகங்கள், மண்பாண்டங்கள் ஆகிய பல வகையான பழங்காலப் பொருட்கள் கிடைத்துள்ளன. சந்திரவல்லி, பிரம்மகிரி ஆகிய இடங்களில் மசூர் அரசினால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் பயனாக இங்கு சிறு கற்கருவிகாலத்து குடியேற்றமிருந்திருப்பதைச் சுட்டிக் காட்டும் சான்றுகள் கிடைத்துள்ளன. தமிழ் நாட்டிலும் ஆந்திராவிலும் உள்ள கோவில்கள் கோட்டைகள் அரண்மனைகள் ஆகியவை நினைவுச் சின்னங்களின் கருவூலமாகும் சோழ, பாண்டிய, சேர விஜய நகர அரசர்கள் மாண்புமிகு ஆலயங்கள் பல கட்டியுள்ளனர். திருநெல்வேலி மாவட்டத்தில் ஆதிச்சநல்லூரில் அண்மையில் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியின் விளைவாக பல வரலாற்றுக் காலத்திற்கு முந்திய சின்னங்கள் கிடைத்துள்ளன. அமராவதி, நாகர்ஜீன் கொண்டா பாண்டிசேரி ஆகிய இடங்களில் பழங்கால நினைவுச் சின்னங்கள் கண்டபிடிக்கப்பட்டுள்ளன. அகழ்வாராய்ச்சிகளில் ஏற்பட்ட முன்னேற்றம் மறைந்துபோன பல வரலாற்று உண்மைகளை உறுதிப்படுத்திக் கொள்ள இயலுகிறது.

எழுத்துச் சான்றுகள் பல வகைப்பட்டதாயும் பயனுள்ளதாயுமிருக்கின்றன. அவைகள் மிகப் பழங்காலத்தவை. பிராமி எழுத்துக்களில் உள்ளன. அவை ராமேஸ்வரம், பிரம்மகிரி, மஸ்கி ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த சான்றுகளின் பொருளடக்கம் தெற்கைவிட வடக்கேயே அதிகம் சார்ந்துள்ளது. மேற்கு தக்காணத்தில் உள்ள கான்ஹேரி தாசிக் மற்றும் பல இடங்களில் உள்ள குகைக் கோவில் சுவர்களில் சாதவாகனர்களின் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவை பிராகிருக மொழியில் பிராஹீம் எழுத்துக்களில் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவர்கள், கங்கர்கள், கடம்பர்கள் ஏராளமான எழுத்துச் சான்றுகளை சமஸகிருத மொழியில் வெளியட்டுள்ளனர். தொடக்ககால தமிழ் கல்வெட்டக்கள்

'வடடெழுத்தில்' இருந்தன. அந்த வளைவு நெழிவுகளைக் கொண்ட எழுத்தக்கள் கி.பி.பத்தாம் நூற்றாண்டுவரை தமிழ் நாட்டில் நடைமுறையிலிருந்தன. ஏழாம் நூற்றாண்டிலிருந்து கற்களுக்குப் பதில் செப்புப் பட்டயங்கள், எழுத்துக்களை பொறிக்கப்பயன்படத்தப்பட்டன. பாண்டியா் சாளுக்கியா் மற்றும் பிஜற அரசமரபினா் செப்புப் பட்டயங்கள் பல வெளியிட்டனா். விஸய நகர எழுத்துச் சான்றுகள், மரபுவழி அரசியல் நிகழ்ச்சிகள்ஈ மன்னா்களின் சாதனைகள் ஆகியவற்றை புலப்படுத்தகின்றன. அவைகளுள் முதலாம் ஹரிஹரனின் பெங்கனப்பள்ளி செப்புப் பட்டயங்கள் கிருஷ்ண தேவராயரின் அமராவதி கல்வெட்டுக்கள், இரண்டாம் தேவராயரின் ஸ்ரீரங்கம் பட்டயங்கள் ஆகியவை குறிப்பிடதகுந்தன. விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் நாயக்காகளும் பாளையக்காரா்களும்எழுத்துச் சான்றுகள் பதிவு செய்தள்ளனா். அவை அப்பகுதிகளின் தற்கால வரலாற்றிற்கு பயன்படுகின்றன.

தென்னிந்தியாவின் பண்டைய நாணயங்கள் மிகவும் அரிதாகக் கிடைக்கின்றன. அவற்றால் அமதிகப் பயனும் இல்லை. ஒன்றிரண்டு நாணயங்களில் மன்னா் பெயா் குறிப்பிடப்பட்டள்ளது. ஆனால்அவற்றின் அமைப்பு கரடு முரடானவை. அடையாளங்கள் பொருளற்றவை, தேதிகள் இல்லாதவை. தொடக்க கால நாணயங்கள் முத்தரைப் பொறியிடப்பட்ட செப்பு நாணயங்கள் கி.பி. மூன்றாம் நூற்றாண்றெகுப் பின் தங்க நாணயங்கள் புழக்கத்திற்கு வந்தன. இந்த தங்க நாணயங்கள் 'பணம்' அல்லது ' வராகன்'எனப்பட்ன. கலையழகு உருவம் கொண்ட நாணயங்கள் சோழ, சேர பாண்டிய ஆதிக்க வளா்ச்சிக் காலத்தில் வெளியிடப்பட்டன.

சோழ நாணயங்களில் மேற்கவிகையின் மேல் புலி உருவமும் சேர நாணயங்களில் அடிப்பாகத்தில் வில்லும் பாண்டியா்களுடையதில் மீன் உருவமம் பொறிக்கப்பட்டிருந்தன. மதுரை சுல்தான்களின் நாணயங்கள் டில்லி சு ல்தான்களுடைய பாணியைப் பின்பற்றியிருந்தன. பாமினி சுல்தான்களுடைய தங்க வெள்ளி நாணயங்களும் அவற்றைப் பொலவேயிரந்தன. தென்னிந்தியாவில் ஐரோப்பியா் வருகைக்குப்பின் பலவகை நாணயங்கள் புழக்கத்திற்கு வந்தன. அவைகளுள் செப்பு 'சக்கரமும்' வெள்ளி 'ரூபாயும்' தங்க 'பகோடாவும் முக்கியமானவை. இந்த நாணயச் சான்றுகள் வரலாற்றறிஞருக்கு நாட்டுப் பொருளாதார நிலை மொழி வளா்ச்சியின் முன்னேற்றம் சமூக நிலை ஆகியவற்றைத் தீா்மானிக்க உதவுகிறது.

மோழி, இலக்கிய நூற்கள் பண்டைய நாகரீகங்களோடு பிந்திய திராவிடா் வரலாற்றி-ல் ஓரளவிற்கு ஒளிபடரச் செய்கின்றன. பலூச்சிஸ்தானில் உள்ள பிராஹுீய் உன்ற கிளை மொழியிலும் சிந்து சமவெளி எழுத்தக்களிலும் திராவிட மொழி சாயல் காணப்படுவது திராலிடப் பண்பாட்டின் பழமையைத் தெரிவிக்கிறது. அகத்தியம், தொல்காப்பியம் என்ற இலக்கண நூற்கள் திராவிடா்கள் இலக்கியம் மற்றும் அறிவியல் துறைகளில் அடைந்த முன்னேற்றத்தைத் தெளிவாகக் காட்டுகின்றன. பல்வகை நூற்களின் திரட்டான சங்கஇலக்கியம், அக்காலத்து சமூக வாழ்கட்கை, பொருளாதார நிலை, அரசியல் தத்துவம் ஆகியவை பற்றி பெருமளவிலான தகவல்களைத் தருகின்றது. பாரம்பரிய செய்திப்படி மதுரையில் மூன்று கல்விக் கழகங்கள் அல்லது சங்கங்கள் செழித்தோங்கியதாகத் தெரிகிறது. முதலிருசங்கத்தைப் பற்றிய விவரங்கள் நம்பமுடியாத புராணச் செய்திகள் போலிருக்கின்றன. எனினும் மூன்றாவது சங்க நூல்கள் வரலாற்று முக்கியத்துவம் உள்ளவை:

அவை கிறிஸ்துவ சகாப்தத்தின் முதல் மூன்று நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை என நம்பப்படுகிறது. அவைகளுள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க் கணக்கு ஆகியவை அக்கால சமூக நிலையை ஆராயப் பெரிதும் பயன்படுகின்றன. தமிழிலக்கியத்தின் தலை சிறந்த படைப்பு மாபெரும் புலவரும் புனிதருமான திருவள்ளுவரின் திருக்குறள் ஆகும். அது மனித சிந்தனைகளின் மிக உயரிய மிகத் தூண்மையான கருத்துக்களைக் கொண்டது. ஐம்பெருங் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியவை வரலாற்றுத் தகவல்களையும, பண்டைத் தமிழர்களின் சமூக, சமய நிலை பற்றிய கருத்துக்களையும்தமிழ் மன்னர்களின் உயரிய பண்பாட்டையும் விளக்குகிறது. புறநானூறு குறுநில மன்னர்கள், முடியுடைய மன்னர்களின் ஆற்றல்களை வியந்து போற்றும் சேய்யுட் தொகுப்பாகும். பதிற்றுப்பத்து சேர மன்னர்கள் அமைதி, கலை, போர் ஆகியவற்றில் ஆற்றிய அருந்திறப் பணிகளை அழகாகக் கூறுகிறது. சங்க நூற்கள் இத்தகைய வரலாற்றுப் பயன்களை அளித்தாலும் மரபு வழியான மன்னர் வரிசைகளை காலவரன் முறைப்படி கூறவில்லை. எனவே அக்காலத்து அரசுகளின் தொடர்ச்சியான வரலாற்றை வரைவது அவ்வளவு எளிதாகத் தெரியவில்லை.

இடைக்காலத் தமிழ், சமஸ்கிருத, தெலுங்கு, கன்னட நூற்கள் அரசுகளின் எழுச்சி பற்றிய வரலாற்றுத் தகவல்களைத் தரகின்றன. ஜெயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணி முதலாம் குலோத்துங்களின் கலிங்கப் படையெடுப்பை விவரிக்கின்றன. ஒட்டக்கூத்தரின் உலாக்கள் சோழர் வரலாற்றைக் கூறுகிறது. இரு கன்னட நூற்களான பம்பா என்பவரின் பம்பா பாரதமும், ரண்ணா என்பாரின் பீம விஜயமும் அக்கால வரலாற்று மரபுச் செய்திகளைக் கூறுவதோடு ராஷ்டிரகூடர், சாளுக்கியர் ஆகியோர் பற்றிய வரலாற்றுத் தகவல்களையும் தருகின்றன. கன்னட தேச **மகான் தரங்கினி** என்ற மற்றொரு கன்னட நூலிலிருந்து விஜய நகர்ப் பேரரசின் சமூக வாழ்க்கையைப் பற்றி தெளிவான விவரங்களைப் பெறுகிறோம்.கங்காதேவியின் மதுரா விஜயம் கங்காதரரின் தாசப் பிரதாப விலாசம் என்ற இரு சமஸ்கிரு நூற்களும் விஜய நகர் பேரரசின் தொடக்க காலம் சம்பந்தப்பட்டவை. மதுரா விஜயத்தின் பாடப் பொருள் விஜயநகர் படைத் தளபதியான குமாரகம்பண்ணரின் வெற்றிகரமான மதுரை சுல்தானிய அரசின் மீதான படையெடுப்பாகும். நந்திமல்ரைலயாவின் வராக புராணமும் திருமாலாவின் வாசு சரித்திரமும் விஜயநகரப் பேரரசு பற்றிய வரலாற்றுச் செய்திகளைக் கொண்ட நூற்களாகும். கோயிலொழுகு என்பது ஸ்ரீரங்கம் கோவில் ஆண்டு நிகழ்ச்சி தொகுப்பு ஆகும். அப்பகுதியின் சிறந்த வரலாற்று ஆதாரமாகப் பயன்படுகிறது. இவைகளைத் தவிர தற்கால வரலாறு சம்பந்தமான நாடோடி பாடல்கள் பல இருக்கின்றன.அவற்றுள் குறிப்பிடத் தகுந்தவை மதுரைத் தல வரலாறு, கொங்கு தேச ராஜாக்கள் சரித்திரம், ராமப்பையன் அம்மானை, கேரளோபதி, பாஞ்சாலங்குறிச்சி அழிவு சரித்திரக் கும்மி, சிவகங்கை சரித்திரம் ஆகியவையாகும்.

தென்னிந்தியாவைப் பற்றி அயலவர் குறிப்புகளும் உள்ளன. வரலாற்று விபரங்களைத் தந்த அயல்நாட்டுப் பயனிகளுள் சீனர், ரஷ்யர், அரேபியர், ஐரோப்பியர் அடங்குவர். சீன அயல் வர்த்தகத் தணிக்கையாளரான செள ஜீகெள எழுதிய செள.ஃபஞ்சி என்ற நூலில்

இடைக்காலத் தென்னிந்தியாவைப் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. வாங் டா யுவான் ∴பெய்ஷியன் மாஹுளன் ஆகிய பிற சீனப் பயணிகள் இப்பகுதிகளின் நிலைப்பற்றி குறிப்புகள் தந்துள்ளனர். சமூக நிலை பற்றிய விவரங்களைத் தந்துள்ள முதல் ஐரோப்பிய பயணிகளுள் பெஞ்சமினும், மார்க்கோ போலோவும் குறிப்பிடத் தகுந்தவர்கள், மொரோக்கோப் பயணியான இபன்பாதுதா மதுரையில் தங்கி அதன் சுல்தானிய இளவரசியைத் திருமணம் செய்துள்ளார் தமது ரெஹ்லாவில் (பயணம்) மக்களின் பழக்கம் வழக்கம் நடையுடை பாவனைகள் பற்றி சுவையான தகவல்கள் தந்துள்ளார். ஒடோரிக் என்ற சமயத் துறவி ( Friar Odoric) புனித தாமஸ் கொல்லப்பட்ட இடமான புனித தாமஸ் குன்றிற்கு (பரங்கிமலை) வருகை புரிந்து தம் பயண அனுபவங்களை விவரித்துள்ளார். அப்துல் ரசாக், அதனேசியஸ் நிகிடின், ரால்∴ப் ∴பிட்ச்,வான் லின்ஸ், கோடின் ஆகியோர் சர்த்தக அரசியல் காரணங்களுக்காக தென்னிந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட அயல் நாட்டவராவர். அவர்களின் நூற்கள் வரலாற்று தொடர்ச்சிகளில் விட்டுப்போன விபரங்களைத் தருகின்றன.

தற்காலத் தென்னிந்திய வரலாறு ஆதாரங்களாக எழுத்துசட் சான்றுகளும் இலக்கியங்களும் இருக்கின்றன. கோவில் சுவர்களின் கருங்கற் பாறைகளிலும் செப்புத் தகடுகளிலும் அவை தீட்டப்பட்டுள்ளது. தமிழ், தெலுங்கு, கன்னடம், சமஸ்கிருத மொழிகளில் எழுதப்பட்டுள்ளன. காலின் மெக்கன்சி என்பாரின் திரட்டு, ராபர்ட் சீவலின் பழங்காலப் பட்டியல் (List of Antiquities) வி. ரெங்காச்சாரியாவின் சென்னை மாநில எழுத்துச் சான்றுகள் (Inscriptions of the Madras Presidency) ஆகியவற்றில்இச்சான்றுகளின் தகவல்களைக் காணலாம். பொதுவில் அவை குறு நிலத்தலைவர்களால் சமய, அறப்பணிககளுக்கு அளிக்கப்பட்ட மானியங்கள், மற்றும் வரி விதிப்பு தல நிறுவனங்கள் சம்பந்தப்பட்டதாயிருக்கின்றன. இவை மிக அதிகமாயிருந்த போதிலும் பதினெட்டாம் நூற்றாண்டின் முதற்காற் பகுதிக்குப்பின் மிகவும் அருகிவிட்டன.

இலக்கியச் சான்றுகளில் சமயசம்பந்தமான கடிதப்போக்கு வரத்துக்கள், நாட்குறிப்புகள், அரசுப் பதிவேடுகள், அறிக்கைகள், வெளியீடுகள் ஆகியவை அடங்கும். ஏசு சபையைச் சேர்ந்த சமயப் பரப்பாளர்கள் ரோமில் உள்ள தங்கள் தலைமையினருக்கு அனுப்பிய கடிதங்கள் சமயச் சார்புடைய சான்றுகளாகக் கருதப்படுகின்றன. இரத்தீன், அத்தாலியன் அல்லது போர்த்துக்கீசிய மொழியில் உள்ள மூலங்கள் ஜே. பெட்ராண்ட் என்ற சமயக் குருவால் பிரஞ்சில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டன. ஜான் லாக்மேன் என்பராது ஏசு சபைக் குருக்களின் பயணங்கள் (Travels of the Jesuits) ஜான் நியூஹாவ் ( John Nieuhoff) என்பாரின் பிரேசில் கிழக்கிந்தியாவினுள் கப்பற் செல்வம் பயணமும் ( Voyages and Travels into Brazil and East Indies) என்ற நூற்களும் குறிப்பிடத்தகுந்த செய்திகளைத் தரகின்றன. ஏசு சபைக் குருக்கள் பொதவில் சமயக் கண்ணோட்டத்துடன் நிகழ்ச்சிகளை நோக்கினாலும் அவர்களின் விவரங்கள் சமூக அரசியல் பிரச்சனைகளையும் வெளிப்படுத்துகின்றன. ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்புகள் முதலில் மதிழில் எழுதப்பட்டு ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு பன்னிரண்டு தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. சில இடங்களில்

மிகைப்படுத்தப்பட்ட பொருத்தமற்ற விவரங்கள் இருந்தாலும், தென்னிந்தியாவில் ஆங்கிலோ-பிரெஞ்சு உறவுகளைப் புரிந்து கொள்வதற்கு அது இன்றியமையாதவொன்று ஆகும். அரசு ஆவணங்கள் விரிவாகவும், மிக அதிகமாகவும் உள்ளன. அவை தென்னிந்தியாவில் ஆங்கில, பிரெஞ்சு, போர்த்துக்கீசிய, டேனிய, டச்சு ஆகியோரின் ஆட்சி முறை பற்றியதாகும். ஆத்துடன் ஹைதராபாத், மைசூர், திருவாங்கூர், கொச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, ஆற்கபடு ஆகிய அரசுகளை ஆவணங்களும் இருக்கின்றன. மதிழ் நாட்டு ஆந்திர தேச ஆவணங்கள் தொகுத்தமைக்கப்பட்டு சென்னையிலும் ஹைதராபாத்திலும் உள்ள அரசு ஆவணக்காப்பகங்களில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஆனால் கேரள மைசூர் அரசுகள் இவ்வகையில் இனி மேல்தான் முன்னேற்றம் காணவேண்டியுள்ளது.

அறிஞர்களால் தொகுக்கப்பட்ட ஆண்டு நிகழ்ச்சி தொகுப்புகள் தற்கால தென்னிந்திய வரலாறு எழுதுவதற்கு ஓரளவிற்குதான் பயன்படுகின்றன. மிர் இஸ்மாயில்கான் அடஜாடி என்பாரின் அன்வார் நாமா பர்ஹான் இபன் ஹாசன் என்பாரின் துசக்கி,வாலாஜா என்ற நூற்கள் அழகு மிளிரும் நடையில் மிகையாகவும் பகட்டாகவும் கர்நாடக வாலாஜா மரபு ஆட்சியாளர்களின் வரலாற்றைத் தருகின்றன. எது எவ்வாறெனினும், ஐரோப்பிய பயணிகள், அலுவலகர்கள் ஆகியோரின் விவரங்களில் அவர்சொந்த முற்சார்பு கருத்துக்களையும் தப்பெண்ணங்களையும் நீக்கிவிட்டுப் பார்த்தால் அவைகள் மிகவும் பயனுள்ளவைகளாகத் தெரிகினறன. ராபர்ட் ஓர்ம் தமது இந்துஸ்தான் வரலாறு என்ற நூலில் பிற விஷயங்களுடன் தென்னிந்தியாவில் ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியின் வரலாற்றையும் விவரித்துள்ளார். மார்க் வில்க்ஸ் மைசூர் வரலாறு என்ற நூலில் தற்கால தென்னிந்திய வரலாற்று நிகழ்ச்சிகளில் மைசூருக்கு சற்று முக்கியத்துவம் கொடுத்து எழுதியுள்ளார். ஜேம்ஸ் வெல்ஷ் என்பார் இராணுவ நினைவுகள் (Military Reminiscences) என்ற நூலில் மதிழ்நாடு, திருவாங்கூரின் புரட்சியாளர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் பற்றிய விரிவான விபரங்களைக் கூறியுள்ளார். புஷானன் என்பாரின் சென்னையிலிருந்து மைசூர், கன்னடம், மரபார் நாடுகளினுடே செய்த பயணம் என்ற நூலில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அவர் நேரில் கண்ட புவியியற் கூறுகளையும் சமூக நிலைகளையும் விவரிக்கிறார். பிரெஞ்சு சமயப் பரப்பாளரான டுபோ இந்து வழக்க வழக்கங்களும் சடங்களும் என்ற நூலை எழுதியுள்ளார். ∴புலர்டன்(Fullartion)அறிக்கை லுஷிங்டன் நாட்குறிப்பு, மன்றோ அறிக்கை ஆகியவை நாட்டின் வரலாறு நிர்வாகக் கூறுகள் பற்றி ஏராளமான தகவல்களைத் தருகின்றன. செயதித்தாட்கள் வளர்ச்சிக்குப் பின் அவைகளும் முக்கிய ஆதாரங்களாகக் கருதப்படுகின்றன. இத்தகைய பல்வகைப்பட்ட ஆதாரங் மூலங்களை பகுத்தாய்ந்து திறனாய்வு செய்து கருத்துச் செறிவுள்ள தென்னிந்திய வரலாறு ஒன்று எழுத முடியும்.

## வரலாறும் அதன் தொடர்புடைய பாடங்களும்

மனிதனது வாழ்க்கையையும் அவனது செயல்பாடுகளையும் ரோயும் அறிவுத் துறைகளில் தலைசிறந்தது வரலாறு ஆகும். அது பல கலைகளையும் அறிவுத்துறையயையும் தன்னகத்தே

உள்ளடக்கியது ஆகும். ஏனைய பிற சமூக இயல்புகளை இணைக்கும் ஒரு சிறப்புத் தன்மையைத் தன்னகத்தே கொண்டுள்ளதாக விளங்குவது வரலாறு என்று ராபர்ட் டேனியல்ஸ் என்பவர் கூறுகிறார். அதாவது மனிதனின் ஒவ்வொரு செயல்பாடுகளையும் தனித்தனியே ஆய்வதற்கு பிறக்கலைகள் உள்ளன. அவை புவிஇயல் கலை, அரசியல் கலை, பொருளாதாரம் சமூகவியல் இலக்கியம் ஒழுக்கவியல் உளவியல் போன்றவைகள் ஆகும். அவை அனைத்துடனும் ஏதாவது ஒரு வகையில் வரலாறு தொடர்பு கொண்டுள்ளது. வரலாறு இந்த கலைப் பாடங்களை தன்னுள் அடக்கியுள்ளது. தற்காலத்தில் நுண்ணியல் ஆய்வின் காரணமாக வரலாற்றிற்கும் அதன் தொடர்புடைய பாடங்களுக்கும் உள்ள தொடர்பு நெருக்கமாகி உள்ளது.

## 1.வரலாறும் புவிஇயலும்

### புவிஇயலின் முக்கியத்துவம்

புவிஇயல் என்பது நிலப்பரப்பு இயற்கை அமைப்புகள் கல், மண், தாதுவளம், பூகம்பங்கள், எரிமலைகள் மக்கள்தொகை ஆகியவற்றை பற்றிப் படிப்பது ஆகும். மனித வாழ்க்கைக்கும் இந்த புவிஇயல்தான் கூறுகளுக்கும் அடிப்படையான தொடர்புகள் உள்ளது. இந்த புவிஇயல்தான் மனிதனின் நாகரிகத்தையும் கலாசாரத்தையும் பாதிக்கிறது. மலைகளும், ஆறுகளும் தட்ப வெப்பநிலைகளுமே பண்டைக் காலத்தில் நாகரிகங்கள் தோன்றுவதற்கு காரணமாயின. இவைகள்தான் மக்களின் பழக்கவழக்கங்களை நிர்ணயிப்பதிலும் பெரும்பங்கு வகிக்கின்றன. இவ்வாறு ஒவ்வொரு நாட்டின் வரலாற்றிலும் புவிஇயல் அமைப்பு குறிப்பிடத்தக்க செல்வாக்கு செலுத்துகிறது.

நாடுகளின் மனித இனம், மொழி, தேசியம் வீரம், பண்பாடு ஆகியவற்றை ஆராய முற்படும் போது அவைகள் புவியியல் அமைப்பினால் பாதிக்’கப்பட்டிருப்பதை அறியலாம். எனவே ஒரு நாட்டின் வரலாற்றைக் கற்கும் முன்பு அதன் புவியியல் அமைப்பைப் பற்றி அறிந்து கொள்வது அவசியமாகி புவியியலும் வரலாறும் ஒன்றையொன்று பிரிக்க முடியாதபடி இணைந்தே காணப்படுகின்றன. ‘புவியியலும் காலவரன்முறையும் வரலாற்றின் இருகண்கள்” என்று கூறப்படுகிறது.

புவியியல் தனி அறிவுத் துறையாக திகழ்வதற்குக் காரணமாக இருந்தவர் ஹம்போல்ட் ஏ்னற அறிஞர் ஆவார். அதற்கு முன்பே மனித வாழ்வில் புவிஇயல் தாக்கத்தைப் பற்றிஅ ரிஸ்டாட்டில் மாண்டஸ்கியூ, பக்கில், ஹண்டிங்டன் போன்றோர் எழுதியுள்ளார். டாலமி என்ற கிரேக்க புவிஇயலார் பண்டைக்கால புவிஇயல் நூல் ஒன்றை இயற்றினார். ஹண்டிங்டன் என்பவர் தட்பவெப்ப நிலைகளின் தூண்டுதலாலேயே மனித நாகரிகம் உச்ச நிலையை அடைகிறது என்கிறார். பெபியூர் என்பவர் வரலாற்றிற்கோர் புவியியல் முகவுரை என்ற தனது நூலில் வரலாற்றிற்கும் புவியயியலுக்குமுள்ள உறவை விளக்கியுள்ளார். ‘புவிஇயல் என்ற மேடையில்தான் வரலாறு என்ற நாடகம் நடத்தப்படுகிறது’ என்று கூறுகிறார் ஷேக் அலி.

**வரலாற்றில் புவிஇயலின் பங்கு**

வரலாற்றில் புவிஇயலின் பற்கு வெளிப்படையாகவே தெரிகிறது. பண்டைக்கால நாகரிங்கள் தோன்றியதிலும் வளர்ச்சியடைந்ததிலும் புவியியல் பெரும்பங்கு வகித்துள்ளதை நாம் அறிவோம். முங்கோலியப் பாலைவனங்கள் சீனாவினி பபாதுகாப்பு அரணங்களாக விளங்கின. லஷ்யாவின் கடுங்குளிர் அதன் மீத பிறநாடுகளின் தாக்குதல்களை தடுத்து வந்துள்ளது. கிரீஸ், ரோம் இங்கிலாந்து ஆகிய நாடுகளின் கடற்கரை நிலப்பகுதிகளே அந்த நாடுகளின் வரலாற்றை பாதித்துள்ளன. பதினாறாம் நூற்றாண்டில் நடைபெற்ற நிலவியல் கண்டுபிடிப்'புகளே உலக வரலாற்றின் போக்கையே மாற்றின. ஒவ்வொரு நாட்டிற்கும் தனியாதக பழக்கவழக்கங்களையும் பண்பாட்டையும் உருவாக்கியதில் புவியியல் அமைப்பே முக்கியப் பங்கு வகித்துள்ளது.

பிற நாடுகளைப் போலவே இந்திய வரலாற்றின் போக்கிலும் புவியியலின் தாக்கம் காண்படுகிறது. இந்தியாவின் பெரும் நிலப்பரப்பே இந்திய ஒற்றுமையைப் பாதித்து. வடமேற்குப் பகுதியிலுள்ள கைபர், போலன் கணவாய்கள் வழியாகவே துருக்கியர், மங்கோலியர், முகலாயர் இந்தியாவின் மீது படையெடுத்தனர். செழிப்பான சிந்து நதி முகத்துவாரத்தில் தான் புகழ்பெற்ற சிந்துவெளி நாகரிகம் தோன்றியது. இவ்வாறு புவியியல் அமைப்பானது இந்திய வரலாற்றில் பெரும் மாற்றங்களையும் பாதிப்பையும் ஏற்படுத்தியது.

ஆனால் தற்காலத்தில் மனிதன் அறிவியல் தொழில்யுட்பத்தில் அடைந்த முன்னேற்றத்தின் விளைவாக இயற்கையை ஓரலவு கட்டுப்படுத்த முனைந்துள்ளான். ஆனால் இயற்கையை வென்று விட்டதாகச் சொல்ல முடியாது. புவியியல் கூறுகன் தொடர்ந்து வரலாற்றில் முக்கியப் பங்கு வகித்து வருகின்றன என்பது உண்மையாகும். இரண்டுக்கும் உள்ள தொடர்பு நெருக்கமாகவும் உள்ளது.

**2) வரலாற்றும் அரசியலும்**

வரலாற்றிற்கும் அரசியலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தங்கள் வலர்ச்சிக்கும் இவை ஒன்றையொன்று சார்ந்தே உள்ளது. அரசியல் கலை என்பது அரசியல் கோட்பாடுகள், நிறுவனங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும். எனவே அரசியல் நிறுவனங்கள் கோட்பாடுகள் ஆகியவற்றின் முறையான வளர்ச்சியை நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் வரலாற்றைப் பற்றிய அறிவு இன்றியமையாதது ஆகும். வரலாற்றில் அரசியல் நடவடிக்கைகளே பெருமளவில் பரவி உள்ளது. அரசியல் நடவடிக்கைகளை தவிர்த்து வரலாறு வரையப்பட முடியாது.

பிளேட்டோவும், அரிஸ்டாட்டிலும் தங்கள் புகழ்பெற்ற அரசியல் கோட்பாடுகளை உலகின் பல அரசியல் நிறுவனங்களின் வரலாற்றைப் படித்தே உருவாக்கினர். பண்டைக்கால அரசியல் நடவடிக்கைகளை வரலாற்று நூல்களிலிருந்தே நாம் தெரிந்து கொள்ளலாம். மாக்கியவல்லியின் இளவரசன் என்ற நூலில் தான் பல புதிய அரசியல் கருத்துகட்கள் விவரிக்கப்பட்டுள்ளது. மாண்டஸ்கியூ தனது அதிகாரப் பிரிவினைத் தத்துவத்தை இற்கிலாந்து அரசியல் நிறுவனங்களின் வரலாற்றைப் படித்தே உருவாக்கினார். இவ்வாறு அரசியலும் வரலாறும் நெருங்கிய தொடர்புடையன.

**வரலாற்றுக்கும் அரசியலுக்கும் உள்ள தொடர்பு பற்றிய விளக்கங்கள் :**

1. வரலாறு என்பது கடந்த கால அரசியல் அரசியல் என்பது நிகழ்கால வரலாறு' (History is the past Politics, Politics is the present history) என்று சர்ஜாண்சிலி என்ற ஆங்கில வரலாற்றிரசிரியர் கூறுகிறார். இக்கூற்று ஓரளவுக்கு உண்மையானதே. நிகழ்காலத்தில் நடைபெறும் நடவடிக்கைகளை நாம் அரசியல் நடவடிக்கைகள் என்கிறோம். அதே நடவடிக்கைகளை நாம் அரசியல் நடவடிக்கைகள் என்கிறோம். அதே நடவடிக்கைகள் கடந்த காலத்தில் நடைபெற்றிருந்தால் அதனை வரலாறு என்கிறோம். ஆனாலும் எல்லா அரசியல் நிகழ்ச்சிகளும் வரலாறாகக் கருதப்படுவதில்லை.
2. மேலும் ஜாண்சீலி கூறுகையில் 'அரசியல் இல்லாத வரலாற்றுக்கு வேர் இல்லை: வரலாறு இல்லாத அரசியலுக்கு கனி இல்லை'(History without politics has no root, Politics without history has no fruit) என்று கூறியுள்ளார். இதுவும் உண்மையாகும். ஆரசியல் என்ற வேரிலிருந்துதான் வரலாறு பிறக்கிறது. அரசியலின் பின் விளைவுகள் தான் வரலாறாக பரிணமிக்கிறது.
3. வரலாறு பழக்க வழக்கங்களையும், மரபுகளையும் நிறுவனங்களையும் நிகழ்ச்சிகளையும் குறிக்கிறது. மனித நாகரிக வளர்ச்சியின் படிகளைக் காட்டுகிறது. அரசியலறிஞர்களுக்கு ஒரு சோதனைச் சாலையாக அமைகிறது. அரசியல் கோட்பாடுகளின் வெற்றி தோல்விகளைக் காட்டுகின்ற களமாக வரலாறு அமைகிறது. எனவேதான் ஆக்டன் பிரபு என்பவர் 'வரலாறு என்ற ஆற்றின் கீழ் மணற்பகுதியில் படிந்துள்ள பொன் தாதுக்களாக படிந்துள்ளதே ரெசியலாகும்' என்கிறார்.

வரலாற்றின் அடிப்படையில் அமையாத அரசியல் வெறுக்கத் தக்கதாகும் எனவும் சீலி குறிப்பிடுகிறார். வுரலாற்றுச் சான்று இல்லா அரசியல் வெற்டறுக் கோட்பாடு ஆகும். எனவே அரசியல் மீது வரலாறு செல்வாக்கு கொள்கிறது.

இதே போல வரலாற்றின் மீதும் அரசியல் செல்வாக்கு கொள்கிறது. அரசியல் நிகழ்ச்சிகள் இல்லாமல் வரலாறு தழைக்க முடியாது. இந்திய தேசிய காங்கிரசின் நடவடிக்கைகள், 1935ம் வருட இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமெரிக்க அரசியலமைப்பை அமைத்த பிலடெல்பியா மாறாட்டுச் செயல்முறைகள் ஆகிய அரசியல் நிகழ்ச்சிகள் இல்லாவிட்டால் வரலாறு வறண்டதாக வெறும் இலக்கியமாகிவிடும்.

**வரலாறுக்கும் அரசியலுக்கும் உள்ள சில வேறுபாடுகள்:**

வரலாறும் அரசியலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. சார்புடையன. ஆனாலும் இவைகள் இரண்டும் தனித்தனி பிரிவுகள் ஆகும். கீழ்க்கண்டபடி இவைகள் வேறுபாடு உடையன.

1.வரலாறு இறந்த காலத்தைக் கூறிக் கொண்டே செல்கிறது. அரசியல் இக்குறிப்பிலிருந்து தனது கொள்கையை வகுத்துக் கொள்கிறது.

2.அரசியலில் நீதிக் கருத்துக்களுக்கு இடம் உண்டு. நீதிக் கருமூத்துக்களை அரசியல் தனது வழிக்காட்டியாகக் கொள்கிறது. வரலாறு நிதி, அநீதி நோக்கமாக உள்ளதை உள்ளபடியே செல்கிறது.

3.அரசியலில் தத்துவம் கையாளப்படுகிறது. நுண்பொருட்களுக்கு இடம் உண்டு. ஆனால் வரலாற்றில் பருப்பொருள்களும் எடுத்துக்காட்டுகளுமே உள்ளன.

4.வரலாறு விரிந்த தன்மையுடையது. சுமூக வாழ்க்கை அனைத்தையுமே கூறுகிறது. ஆனால் அரசியல் குறுகிய தன்மையுடையது. சுமூகத்தின் அரசியல் வாழ்வை மட்டும் குறிப்பிடுகிறது.

## வரலாறும் பொருளியலும்

## (History and Economics)

**பொருளியலின் முக்கியத்துவம் :**

சமூக அறிவியல்களி7ல் பொருளாதாரம் இன்று மக்களால் அதிகமாக விரும்பப்படுகிறது. 1776ல் ஆடம்ஸ்மித் தனது புத்தகமான 'நாடுகளின் செல்வம்' என்பதை வெளியிட்ட பிறகு பொருளாதாரப் பாடம் முக்கியத்துவம் பெற்றது.

பொருதாரம் ஒரு சமூகவியல் என்ற தகுதியை அதற்கு தேடிக் கொடுத்தவர் ஆல்பிரட் மார்ஷல் ஆவார். 'பொருளாதாம் என்ற இயல் சாதாரண மனிதன் அன்றாட வாழ்க்கையில் எவ்வாறு ஈடுபடுகிறான்' என்பதை ஆராய்கிறது. நல்வாழ்வுக்குத் தேவையான பொருட்களை எப்படிப் பெறுவது, எப்படி பயன்படுத்துவது என்றவற்றுடன் தொடர்புடைய தனிநபர் மற்றும் நடவடிக்கைகளைப் பற்றி ஆய்வு செய்கிறது என்று கூறுகிறார் ஆல்பிரட் மாாட்ஷல்.

**வரலாறுக்கும் பொருளியலுக்கும் உள்ள தொடர்பு**

இவற்றை நோக்கும் போது வரலாறும் பொருளாதாரமும் நெருங்கிய தொடர்புடையது என்பது புலனாகிறது. மனிதனின் பொருளாதார நடவடிக்கைகள் வரலாற்று நிகழ்ச்சிகளை நேரடியாக தாக்குகின்றன. ஏனெனில் பொருளாதார உந்துதல்கள் தனி மனிதனின் வாழ்க்கைக்கு அடிப்படையாக உள்ள பொருளாதார அமைப்புகளும் நடவடிக்கைகளும் கோட்பாடுகளும் சமூக வாழ்க்கையைப் பாதிக்கின்றன. காம்டே, பியூரி, கார்ல்மார்க்ஸ் போன்றவர்கள் வரலாற்றில் பொருளியலின் பற்கை வலியுறுத்திக் கூறினர்.

கார்ல்மார்க்ஸ் வரலாற்றிற்கு பொருளாதார விளக்கம் அளித்ததில் இருந்து வரலாற்றில் பொருளியலின் முக்கியத்துவம் உணரப்பட்டது. கார்ல்மார்க்சின் கருத்தின்படி 'வரலாற்றில் உள்ள சமய, அரசியல், நீதித்துறை நிகழ்ச்சிகள் அனைத்துமே பொருளாதார நடவடிக்கைகளின் விளைவே ஆகும்' சாலிக்மேன் என்பவர் 'பொருளியல் கூறுகள் சமூக அமைப்பின் இறுதிநிலை மாறுதல்களைத் தோற்றுவிக்கின்றன.' என்று கூறுகிறார். இவ்வாறு வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு பொருளாதார நடவடிக்கைகளே காரணம் என்று கூறப்'பட்டது.

ஒரு வரலாற்றாளர் பொருளாதாரத்தை அறிந்து வைத்திருக்க வேண்டும். அதைப்போலவே பொருளாதார அறிஞர் ஒவ்வொருவரும் வரலாற்றினை அறிந்திருக்க வேண்டும். குறிப்பாக தனது அறிவுத் துறையின் வரலாற்றையாவது தெரிந்து வைத்திருக்க வேண்டும். பண்டைக்கால பொருளாதார நடவடிக்கைகள், பொருளாதாரச் சீர்திருத்தங்கள், விலைவாசி, கூலி நிர்ணயம்,

வட்டி முறை, பஞ்சங்கள், தொழிற்புரட்சி போன்றவை இன்றைய பொருளாதார வல்லுநர்களுக்கு மிகவும் பயன்படுவதாக உள்ளது.

ஆனாலும் பொருளியலுக்கும், வரலாற்றுக்குமிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. வரலாறு பொருளியல் பற்றியது அல்ல. பொருளியில் வாழ்க்கை வரலாற்றின் ஒரு பகுதியே ஆகும். வரலாற்று நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் பொருளியல் விளக்கம் கொடுக்க முடியாது. வரலாற்று இயக்கத்திற்கு பொருளியல் சாராக் காரணிகளும் தூண்டுகோலாக உள்ளன. இறுதியாக வரலாற்றுக்கும் பொருளியலுக்கும் உள்ள தெளிவான வேறுபாடு என்னவென்றால் வரலாறு நிகழ்ச்சிகளைப் பற்றியது. பொருளாதாரமோ பொருட்களைப் பற்றியது என்பதாகும்.

## வரலாறும் சமூகவியலும் (History and Sociology)

**ச**மூகவியல் என்பது அண்மைக் காலத்தில் தோன்றி வளர்ந்து வரும் ஒரு அறிவியல் துறையாகும். குடந்த இருநூறு ஆண்டுகளாகத் தான் இந்த துறையில் நூல்கள் எழுதப்பட்டு வந்துள்ளன. அமெரிக்காவில் சமூவியல் துறை நல்ல செல்வாக்கு பெற்றுள்ளது. சமூகவியலில் மானிடவியல், பண்டைக்கால சட்டவியல், பண்டைக்கால மக்களின் வாழ்க்கை முறை மற்றும் சமூக நிறுவனங்கள் ஆகியவை ஆராயப்படுகின்றன. சமூகவியல் என்ற ஆங்கிலச் சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவா் ஹொ்பா்ட் ஸ்பென்சா் என்பராவாா். வுரலாற்றாளா்கள் சான்றுகளை உள்ளவாறு கூறுகின்றனா். ஆனால் சமூகவியலாளா்கள் சான்றுகளுக்கிடையே உள்ள காரண காரியம் பற்றி விளக்கம் அளிக்கின்றனா். மாக்ஸ், வெபா் போன்றோா் வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டு சமூக வளா்ச்சிக்கான விதிகளை வகுத்தனா்.

மனிதன் ஒரு சமுதாயப் பிராணி எனப்படுகிறான். சமூகவியல் என்பது மனிதன் தன்னைச் சுற்றியுள்ளவா்’களுடன் புவியியல் போன்ற சுற்றுப்புறங்களுடனும் எவ்வாறு உறவு கொள்கிறான் என்பதைப் பற்றிக் கூறுகிறது. சமுதாயத்தின் தோற்றம், வளா்ச்சி, அமைப்பு ஆகியவை பற்றியும் ஆய்கிறது. இப்படி ஆய்கின்ற போது பகுத்தாய்வு செய்தவற்கும் ஒப்புமை செய்வதற்கும் வரலாறு தேவைப்படுகிறது. அதேசமயம் மனிதனின் சமுதாய வளா்ச்சி பற்றி அறிந்து கொள்ள நினைக்கும் வரலாற்றாளருக்கு சமூகவியல் தேவைப்படுகிறது.

இப்படி வரலாறும் சமூகவியலும் ஒன்றுக்கொன்று நிறைவு செய்து கொள்ளக்கூடிய துறைகளாகும். இரண்’டு துறைகளுமே மனிதரின் குழு வாழ்க்கையைப் பற்றி விவரிக்கின்றன. ஆனால் சமூகவியல் கடந்த கால நிகழ்கால7, எதிா்கால மனித வரலாற்றில் மீண்டும் மீண்டும் நிகழும் அம்சங்களை விவரிக்கப்படுகின்றன. சமூகவியல் நிகழ்கால பொதுவிதிகளுடன் சம்பந்தப்பட்டது. வரலாறு கடந்த கால தனிச் சிறப்புச் சுறுகளுடன் சம்பந்தப்பட்டது. வரலாற்றுக்கு சமூகவியல் தேவைப்படுவதைவிட, சமூக வியலுக்கு வரலாறு அதிகம் தேவைப்படுகிறது.

## வரலாறும் இலக்கியமும் (History and Literature)

பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன்பு வரலாறு இலக்கியமாகவே கருதப்பட்டது. வரலாற்றிற்கும் இலக்கியத்திற்கும் என்றைக்குமே நெருங்கிய தொடர்பு உண்டு என்பது வரலாற்றையும் இலக்கியத்தையும் சிறிது கபற்றவர்கள் கூட அறிவர். வரலாறும் இலக்கியமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவை. இலக்கியம் இல்லாமல் வரலாறு இல்லை. வரலாறு இல்லாமல் இலக்கியம் இல்லை.

**வுரலாற்றுடன் இலக்கியத்தின் தொடர்பு**

வரலாறு என்பது இலக்கியத்தின் ஒரு பகுதியே என்று ஜே.பி.பியூரி கூறுகிறார். ஹெரடோட்டகம், செனபனும், சீசரும் அவரவர் மொழியில் எழுதியவரலாறு அம்மொழியை மொழியாகக் கற்கும் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படுகிறது. மேலும் மாக்கியவல்லி, ரூசோ முதலியோர் தங்கள் இலக்கியங்களால் வரலாற்றையே உருவாக்கியுள்ளனர். வரலாறு இலக்கியமாக கிப்பன் எழுதிய ரோமானிய பேரரசின் ‘மாழ்ச்சியும் வீழ்ச்சியும்’ என்ற நூலும், மெக்காலேயின் ‘இங்கிலாந்து வரலாறும்’ மிக்லே என்பவர் எழுதிய ‘பிரான்சின் வரலாறும்’ பிரஸ்காட் என்பவர் எழுதிய ‘அமெரிக்க வரலாறும்’ சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

**இலக்கியத்தின் வரலாற்றின் தொடர்பு:**

இலக்கியம் எழுதப்படவதற்கு வரலாறு நிகழ்ச்சிகள் பொருளாக ஏற்று கொள்ளப்படுகிறது. இந்த வரலாற்றுக் கருத்துக்கள் இலக்கியத்திற்கு அழகு ஊட்டுகிறது. ஷேக்ஸ்பியர் தனது நாடகங்களில் சிலவற்றை எழுதுவதற்கு வரலாற்று நிகழ்ச்சிகளேயே மையக் கருதாக எடுத்துக் கொண்டார். வரலாற்று நிகழ்ச்சிகளை நவீனங்களில் கதைக்காக எடுத்தாலும் முயற்சியில் முதன் முதலாக சிறந்த முறையில் மேர்கொண்டவர் சர் வால்டர் ஸ்காட் என்பவராவார். அவர் எழுதிய ஜவன்கோ, குவன்டின், டர்வர்ட், டாலிஸ்மேன் போன்ற நவீனங்கள் சிறப்புடையவை. வுரலாற்று நிகழ்ச்சிகளையும் கதாபாத்தரிரங்களையும் உருமாறாமல் எடுத்தாண்ட சிறப்பு அவருக்கு உண்டு. மேலும் பொது மக்களுக்கு வரலாற்றை அறிமுகப்படுத்துவதற்கு இத்தகைய வரலாற்று நவீனங்கள் பெரிதும் பயன்பட்டன.

பிரெஞ்சு நாவலாசிரியரான டியுமா, விக்டர் ஹியுகோ ஆகியோரும் ரஷ்ய ஆசிரியரான லியோ டால்ஸ்டாய் ஆகியோரும்வரலாற்று நிகழ்ச்சிகளை எழுத்து இலக்கியம் எழுதுவதிலி வெற்றி கண்டவர்கள் ஆவர். டியுமாவின் ‘மூன்று துப்பாக்கி வீரர்கள்’ ‘ஹியுகோவின் ‘தொண்ணுற்றி மூன்று’ டால்ஸ்டாயின் ‘போரும் காதலும்’ போன்ற வரலாற்று நவீனங்கள் உலக இலக்கியத்தில் இடம் பெற்றவையாகும். இவ்வாறு வரலாறும் இலக்கியமும் நெருங்கிய தொடர்புடையவை என்பதில் ஐயமில்லை.

வரலாற்று நவீன ஏனறவ கை இலக்கியம் பெரும்பாலும் இலக்கியமாக்க கருதப்பட வேண்டுமேயல்லாமல் வரலாறாகக் கருதப்படாது. ஏனெனில் இவ்வகை இலக்கியத்தில் வரலாற்றை ஒரு கருவியாக பயன்படு:த்திக் கொண்டு இலக்கியம் உருவாக்கப்படுகிறது. முற்றிலும் கற்பனையான இடங்கள், பாத்திரங்கள் போன்றவற்றை விட்டுவிட்டுப் பயன்படுத்தி இலக்கிய நவீனங்கள் படைத்தல் சற்று கடினமான இலக்கிய முயற்சி ஆகும். வரலாற்று

நவீனம் என்பது வரலாறு அன்று. ஆனால் அது வரலாற்றிலிருந்து பிறப்பது ஆகும். என்று டிரவலியன் என்பவர் கூறியுள்ளார்.

ராங்கே போன்ற வரலாற்றிசிரியர்கள் வரலாற்றுக்கு இலக்கியச் சாயம் பூசப்படுவதை வன்மையாகக் கண்டித்தனர். இப்போக்கு வரலாற்றின் தனித் தன்மையை குலைத்துவிடும் என்று எச்சரித்தார் ராங்கே. வரலாறு அறிவியல் கட்டுரைகளைப் போல தருக்க ரீதியான விவாதங்கள், முடிவுகள் சான்றுகள் , மேற்கோள்கள் ஆகியவற்றோடு நின்றுவிட வேண்டுமேயன்றி இலக்கிய நடையழகோடு விளங்கக் கூடாது என்றும் கூறப்படுகிறது.

ஆனாலும் பல வரலாற்றறிஞர்கள் தங்களை சிறந்த இலக்கியக் கலைஞர்களாக தங்கள் எழுத்துக்களில் காட்டியுள்ளார். இதற்கு தூசிடைடிஸ் சிறந்த உதாரணமாவார். சைமோண்ட்ஸ், பிரஸ்காட், மாம்சன் போன்றோர் ஒரு வரலாற்றறிஞூட பகுத்தாய்வு உள்நோக்கு கருத்துக்களை வெளிப்படுத்துவது அழகுற அமைப்பது ஆகிய அனைத்திலும் சிறந்து விளங்க முடியும் என்று எடுத்துக்டகாட்டியுள்ளனர். இவ்வாறு வரலாற்றின்றி இலக்கியமில்லை. இலக்கியமின்றி வரலாறு அல்லை என்ற அளவுக்கு இந்த இரு துறைகளும் பின்னிப் பிணைந்துள்ளன.

## வரலாற்றின் பிரிவுகள்

## (Kinds of History)

வரலாறு என்பது மனித அறிவாக்கத்தின் பிரிவுகளுள் முக்கியமானது ஆகும். வரலாறு மனித இனத்தின் கடந்த காலத்தைப் பற்றியது ஆகும். எனவே அதன் பரப்பெல்லை விரிவானது. வரலாறு இல்லாத மனிதனோ இடமோ பொருளோ எதுவும் இல்லை என்றே கூறலாம். இதனால் வரலாறு அதிக முக்கியத்துவம் பெற்று வருகிறது. வளர்ச்சியடைந்து வருகிறது. இதனால் பல பாடத் துறைகள் அதன் எல்லைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. ‘வரலாறு என்பது பல அறிவுத் துறைகள் கூடி வாழும் இல்லம் என்று டிரவல்யன் என்பவர் கூறுகிறார். வரலாறு இலக்கிய வரலாறு, பண்டபாட்டு வரலாறு, போன்ற பல வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது வசதி காரணமாகத்தான் அல்லாமல் மனித வரலாறு அவ்வாறு பிரிந்து இயங்குகிறது என்று யாரும் கருதிவிடக் கூடாது.

## 1.அரசியல் வரலாறு

## (Political History)

### அரசியல் வரலாற்றின் முக்கியத்துவம்

நாடு என்பது அரசியலமைப்புடைய ஒரு சமுதாயம் ஆகும். நிலப்பரப்பு, மக்கள் தொகை, அரசாங்கம் இறைமை ஆகியவை நாட்டின் இன்றியமையாத கூறுபாடுகளாகும். இந்ா நான்கு உறுப்புகளில் அரசாங்கம் இன்றியமையாத உறுப்பாகும். நாட்டை இயக்குவதே அரசாங்கமாகும். அரசாங்கத்தின் நவடிக்கைகள் எல்லாமே அரசியல் நடவடிக்னைககளாகும். ஆரசியல் என்பது மனிதர்களைச் சார்ந்துள்ளது. எனவே தான் அரசியல் வரலாறு என்பது அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளது.

பெரும்பாலும் வரலாறு என்றாலே அரசியல் வரலாறு என்று கருதுவது மரபாக வந்துள்ளது. பண்டைக் காலத்திலிருந்தே அரசியல் நிகழ்ச்சிகளுக்கே முக்கியத்துவம்

அளிக்கப்பட்டு வந்துள்ளது. அரசாங்கத்தின் நிர்வாகம் உள்நாட்டு நிர்வாகம், வெளிநாட்டுறவு ஆகியவை பற்றியதே வரலாறு எனிறு கருதப்பட்டு வந்தது. ஹெரடோட்டஸ், கிப்பன் போன்ற புகழ் பெற்ற வரலாற்றாசிரியர்கள் அரசியல் நிகழ்ச்சிகளுக்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். சர் ஜான் சீலி என்பவர் ‘ வரலாறு என்பது வரலாற்றில் சிறப்புமிக்க கிளையாக விளங்குகிறது பர்தொன்பதாம் நூற்றாண்டில் தேசிய நாடுகளின் எழுச்சிக்குப் பிறகு அரசியல் வரலாறே ஆதிக்கம் கொண்டுள்ளது. ஒவ்வொரு நாடுகளின் வரலாறு பற்றியும் புகழ் பெற்ற ஆசிரியர்கள் நூல்கள் எழுதியுள்ளனர்.

**அரசியல் வரலாற்றின் நன்மைகள் :**

1)ஒரு வரலாற்றை எழுதுவதற்கு தேவைப்படும் மூலச் சான்றுகள் பெரும்பாலானவை அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டவையே ஆகும். அவற்றை வைத்தே வரலாறு உழுதப்பட வேண்டியதுள்ளதால் அந்த வரலாறுகள் பெரும்பாலும் அரசியல் வரலாறுகளாகவே உள்ளன. உதாரணமாக பாணர் எழுதிய ஹர்ஷசரிதம் என்ற தனது நூலில் ஹர்ஷர் பற்றியே அதிகமாக கூறியுள்ளார். அதேபோல் அபுல்பாசல் தான் எழுதிய நூலில் அக்பர் பற்றியே அதிகமாக கூறுகிறார். எனவே அரசியல் வரலாறுகளின் மூலம் ஆட்சி புரிந்த ஆட்சியாளர்களைப் பற்றி அதிகமாக அறிந்து கொள்'ள முடிகிறது. மேலும் அலெக்டாசாந்தர் சீசர், நெப்போலியன் ஹிட்லர் போன்றோர்கள் அரசியல் வானில் தோன்றி உலக வரலாற்றின் போக்கையே மாற்றியுள்ளனர். எனவே அரசியல் வரலாறு இப்படிப்பட்ட மாமனிதர்களின் வரலாறாகவே காட்சியளிக்கிறது.

2)மக்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாலும் அரசியலமைப்பைப் பற்றி புரிந்து வைத்திருப்பதாலும் அரசியல் வரலாறு எல்லோருக்கும் பழக்கமானதாக உள்ளது. மேலும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் உள்ளது.

3)அரசியல் வரலாறு எழுதுவதற்கு மிகவும் எளிதானது ஆகும். காரணம் இதை எழுதுவதற்கு ஆவணச் சான்றுகளே அதிகம் தேவைப்படும். இந்த ஆவணங்கள் எல்லாமே அரசாங்கத்தால் ஆவணக் காப்பகங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இவைகளை சேகரித்து அரசியல் வரலாறு எழுதுவது எளிதாகும்

4)அரசியல் வரலாறு ஒவ்வொரு பகுதிகளில் உள்ள மக்களின் அன, மொழி, சமய கலாச்சாரப் பற்றுணர்வை வளர்ப்பதற்குப் பயன்படுகிறது. எனவே அரசியல் வரலாறு மக்களிடையே செல்வாக்கு பெற்றுள்ளது.

5)அரசியல் வரலாற்றின் நோக்கு எல்லை பரந்து, விரிந்து காணப்படுகிறது. எனவே இதிலிருந்து பல கிளைப் பாடங்கள் தோன்ற ஆரம்பித்தன. அரசியலமைப்பு வரலாறு படைத்துறை வரலாறு, நிர்வாக வரலாறு, ராஜதந்திர வரலாறு போன்ற பிரிவுகள் எல்லாமே அரசியல் வரலாற்றிலிருந்து பிறந்தவைகளேயாகும். இவைகள் மக்களால் பெரிதும் படிக்கபடுகிறது.

6)அரசியல் வரலாற்றின் அணுகுமுறை எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அது நிகழ்காலத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளை கடந்த காலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க மிகவும் உதவியாக உள்ளது.

**அரசியல் வரலாற்றின் தீமைகள்**

1.அரசியல் வரலாற்றினால் பல தீமைகளும் ஏற்படுகின்றன. முதலாவதாக அரசியல் , வரலாறு சார்புடையதாக உள்ளது. காரணம் ஆட்சியல் இருக்கும் அரசியல்வாதிகள் தங்கள் அதிகாரம் அந்தஸ்தைப் பயன்படுத்தி அரசியல் வரலாற்றை சார்புடைய வரலாறாக மாற்றி அமைத்துவிடுவர்.

2.அடுத்து அரசியல் வரலாற்றை மட்டுமே அளவுகோலாகக் கொண்டு கடந்த காலத்தைக் கணிப்பது தவறானது ஆகும். இப்படி அரசியல் வரலாற்றுக்கு மட்டும் முக்கியத்துவம் அளிப்பது மனித வாழ்வின் பிற சாதனைகளை புறக்கணிப்பதாகும்.

## 2. பொருளாதார வரலாறு (Economic History)

ஒரு சமுதாயம் இயக்குவதற்கு ஆதாரமாக உள்ளது. அந்த சமுதாயத்தில் அமைந்து கிடக்கும் பொருளாதார ஏற்பாடே ஆகும். எனவே பல்வேறு காலங்களில் நிலவிய மக்களின் பொருளாதார வளர்ச்சி பற்றிக் கூறுவது பொருளாதார வரலாறு ஆகும். பொருளாதார வரலாறு வரலாற்று அறிஞர் அறிஞர்களுக்கும், பொருளாதார மேதைகளுக்கும் மிகவும் பயனளிக்கும் பாடப்பிரிவு ஆகும். டச்சு வரலாற்றாசிரியர் வான்டில்கள் என்பவர் சமூகமும் பொருளாதாரமும் இணைபிரியாதவை என்ற அடிப்படையில் சமூக பொருளியல் வரலாறு என்றழைத்தார். பின்னர் சமூக வரலாறு தனித்துறையாகப் பிரிந்து பின்னர் பொருளாதார வரலாறு தனியே முக்கியத்துவம் பெற்றது.

**பொருளாதார வரலாறு முகக்கியத்துவம் பெறுதல்**

ஆரம்ப காலத்தில் வரலாற்று நூல்களில் பொருளாதார அம்சங்கள் புறக்கணிக்கப்பட்டன. ஆனால் இங்கிலாந்தில் தோன்றி தொழிற் புரட்சிக்குப் பிறகு பொருளாதார முக்கியத்துவம் அதிகரித்தது. ஆடம்ஸ்மித் தான் ஏழுதிய ‘நாடுகளின் செல்வம்’ என்ற நூல் மூலம் பொருளாதாரத்திற்கு புதிய விளக்கங்கள் கொடுத்தார். இதன் மூலமும் பொருளாதார முக்கியத்துவம் அதிகரித்தது. பின்னர் எங்கல்ஸ், மார்க்ஸ் ஆகியோர் வரலாற்றிழற்குப் பொருளியல் அடிப்படையில் விளக்கம் கொடுத்தனர். அதன் பிறகு பொருளாதார வரலாறு மிகவும் முக்கியத்துவம் பெற்றது.

**பொருளாதார வரலாறு – ஒரு விளக்கம் :**

உலகிலுள்ள எந்த சமுதாயமும் தனது வாழ்க்கை நிலையையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக் கொள்ள விரும்புவது இயற்கையே அதன் விளைவாகவே அதன் பொருளாதார செயல்பாடுகள் அமையும் விவசாயம், கைத்தொழில், மக்கள் தொகை, கூலி நிர்ணயம், பஞ்ச நிவாரணம், வரி விதிப்பு, பணவீக்கம் போன்றவைகளெல்லாம் பொருளாதார செயல்பாடுகள் ஆகும். அவற்றையெல்லாம் ஒரு நாடு எப்படி மேற்கொள்கிறது என்பதும் இவை எப்படி ஒரு சமுதாயத்தை பாதிக்கின்றன. என்று காண்பதும் பொருளாதார வரலாற்றின் பகுதிகளாகும்.

பொருளியல் வரலாறு என்றால் மனித வாழ்வின் பொருளாதார நடவடிக்கைகளைப் பற்றியது என்று கூறுகிறார் வில்லியம் ஆஷ்லி என்பவர். உண்மையில் பொருளாதார நிலையை பொறுத்துதான் ஒரு சமுதாயத்தின் நாகரீக நிலை அமைய வேண்டியதிருப்பதால் அப்பொருளாதார நிலையைச் சீர்படுத்திக் கொள்வதை இன்று உலகின் பல நாடுகளின் முக்கிய நடவடிக்கைகளாக உள்ளது. பொருளாதார வரலாற்றில்தான் செல்வந்த நாடுகள் ஏழை, நாடுகள் என்றும் அவைகளின் வேறுபாடுகள் பற்றியும் இந்த வேறுபாடுகளைக் களைவது சம்பந்தப்பட்ட நடவடிக்கை போன்றவை பொருளாதார வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகிறது.

## 3.சமூக வரலாறு (Social History)

சமூக வரலாறு என்பது மனித சமுதாயத்தின் செயல்பாடுகள் பற்றிய வரலாறு ஆகும். இதில் சமூக வாழ்கை, பழக்க வழக்கங்கள், சேவைகள், கல்வி சமயம் மற்றும் பொருளாதார ஏற்பாடுகள் ஆகியவை பற்றி விளக்குவதே சமூக வரலாறு ஆகும். எனவே நன்கு அமைக்கப்பட்ட சமூக வாழ்க்கை பற்றியது சமூக வரலாறு ஆனால் சமூக வரலாற்றில் ராணுவம் சட்டம் அரசியல் பற்றி விளக்கப்படுவது இல்லை.

**சமூக வரலாறு – விளக்கம்**

பல வரலாற்று ஆசிரியர்க் சமூக வரலாற்'றிற்கு விளக்கம் அளித்துள்ளனர். அகஸ்டே காம்டே என்பவர் வரலாற்றை சமூக இயற்பியல் என்று கூறினார். எமிலி துர்ஹீம், மாக்ஸ் வெபர் போன்றவர்களும் சமூக வளர்ச்சிக்கான பல விதிகளை வகுத்துள்ளனர். 'இங்கிலாந்தின் சமூக வரலாறு' என்ற நூலை எழுதியுள்ள டிரவல்யன் என்பவர் ' சமூக வரலாறு என்பது அரசியலை நீக்கி விட்டால் எஞ்சுகின்ற சமுதாயச் செயளல்பாடுகளின் வரலாறு' என்று கூறியுள்ளார். சமூக வரலாற்றுக்கான இந்த இலக்கணத்தை பெரும்பான்மையான வரலாற்றாளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். சிலர் இதனை முற்றிலும் சரி என்று ஏற்றுக் கொள்வதில்லை.

சமுதாய வரலாறு என்பது பொதுவாக அரசியல் வரலாற்றை குறைத்து மக்கள் சம்பந்தப்பட்ட செய்திகளை அதிகமாகக் கூறுவதாகவே இருக்கும். சமுதாய நிறுவனங்களின் தோற்றம், வளர்ச்சி, தேய்வு ஆகியவற்றை ஆராய்ந்து விளக்குவதாகவே சமுதாய வரலாறு உள்ளது. சிட்ஸ்விக் என்பவர் எழுதிய 'ஐரோப்பிய வாழ்சியலின் பரிணாமம்' என்ற நூலும் கே.பி.ஜவாப் என்பவர் எழுதிய 'இந்து வாழ்வியல்' என்ற நூலும் சமூக வரலாற்றிற்கு உதாரணமாகும்.

டிரவல்யன் என்பவர் சமூக வரலாற்றிற்கு இன்னொரு இலக்கணமும் கூறியுள்ளார். 'சமூக வரலாறு என்பது கடந்த காலத்தில் வாழ்ந்த மக்களின் தினசரி வாழ்க்கையின் வரலாறு ஆகும். சமுதாயத்தில் உள்ள பல தரப்பட்ட வகுப்பாரிடையே நிகழ்ந்த உறவுகள், குடும்ப வாழ்க்கை முறை, தொழிலாளர்களின் நிலைமைகள் மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள

தொடர்பு கலாச்சார மாறுதல்கள் ஆகியவையெல்லாம் அடக்குவதே சமூக வரலாறு என்று இலக்கணம் வகுத்துள்ளார்.

சமூக வரலாறு வரலாற்றாளர்களுக்குப் பெரிதும் பயன்படுகிறது என்பதில் சந்தேகமில்லை. 'சமூகவியல் கோட்பாடுகள் பற்றிய அறிவு வரலாற்றைளரின் நுண்ணறிவை வளப்படுத்துகிறது. ' என்று பர்னஸ் என்பவர் கூறுகிறார். வரலாறும் சமூகவியலும் ஒன்றுக்கொன்று நிறைவு செய்து கொள்ளக் கூடிய துறைகளாகவும் உள்ளது. ஆனாலும் சமூகவியலுக்கு வரலாறு அதிகமாகத் தேவைப்படுகிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

## 4.அரசியலமைப்பு வரலாறு (Consitutional History)

அரசியலமைபிபு என்பது சட்டங்களின் தொகுப்பாகும். அரசாங்கத்தின் அதிகாரங்களையும், ஆளப்படுவோரின் உரிமைகளையும் இரண்டின் தொடர்புகளையும் ஒழுங்குப்படுத்துகிற கொள்கையின் தொகுப்பே அரசியலமைப்பு எனப்படும். அரசியலமைப்பு இல்லாத அரசு ஒரு அரசாகாது. அரசாங்கங்கள் சட்ட திட்டங்களுக்கும், விதிமுறைகளுக்கும் உட்பட்டே நடைபெற வேண்டும் என்பதாலும் ஒரு தனி மனிதன் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப அரசாங்கம் நடைபெறக் கூடாது என்பதாலும் அரசியலமைப்பு மிகவும் அசவியமாகிறது. இந்த அரசியல் அமைப்பு எவ்வாறு வளர்ச்சியடைந்து வந்துள்ளது. என்பரத ஒரு வரலாற்றாளர் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். அரசியலமைப்பு வரலாறு தனித்தன்மையுடையது. அரசியல் வரலாற்றின் ஒரு முக்கியமான கிளையே அரசியலமைப்பு வரலாறாகும்.

அரசியலமைப்பு வரலாறு பற்றி ஏ.எஸ்.ரெளஸ் என்பவர் கூறுவதாவது அரசியலமைப்பு வரலாறு மனிதர்களைப் பற்றி ஆராய்வதில்லை. நிறுவனங்களை பற்றி ஆராய்வதாகும். ஆரசியலமைப்பு வளர்ச்சிக்கு உதவிய முக்கியமாக மனிதர்களின் வாழ்க்கை வரலாறும் ஆய்வு செய்யப்படுகிறது' என்று கூறியுள்ளார். ரெனியர் என்பவர் அரசியலமைப்பு வரலாறு சமூகத்தின் வரலாறு என்பது அரசாங்கத்தை பற்றியது ஆகும். அரசாங்கத்தின் நிறுவனங்களான சட்டத்தை நிர்வாகத்துறை நீதித் துறை ஆகியவைகளின் தோற்றம், வளர்ச்சி இயல்பு, குடிமக்களின் உரிமைகள் கடமைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதே அரசியலமைப்பு வரலாறு ஆகும். டைசி என்ற ஈங்கிலேய சட்ட வல்லுநர் இயற்றிய 'அரசியல் சட்ட விதி' என்ற நூல் அரசியலமைப்பு வரலாற்றிற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அரசியலமைப்பின் பிறப்பிடம் இங்கிலாந்து என்று கருதலாம். இங்கிலாந்து அரசர் முதலாம் ஜேம்ஸ் மன்னர் காலத்திலிருந்து அரசியலமைப்பு வரலாறு பற்றி பல ஆசிரியர்கள் எழுதியுள்ளார். அதன்மூலம் அங்கு எப்படி அரசியலமைப்புக்கு உட்பட்டு முடியாட்சி அரசாங்கம் செயலாற்றி வருகிறது என்று அறியலாம். இங்கிலாந்து அரசிலயமைப்பு வரலாறு உலகின் பிற நாடுகளுக்கு முன் மாதிரியாக உள்ளது. இங்கிலாந்தின் பாராளுமன்றம் உலக பாராளுமன்றங்களின் தாய்' என்று கூறப்படுவடு குறிப்பிடத்தக்கது ஆகும். இந்திய அரசியலமைப்பு எவ்வாறு 1773ம் வருடத்திலிருந்து வளர்ச்சியடைந்து வந்துள்ளது என்பது

வரலாறாக எழுதப்பட்டுள்ளது. சுதந்திரமடைந்த பிறகு புதிய அரசியலமைப்பு எவ்வாறு உருவாக்கப்பட்டது என்றும் விரிவாக எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு அரசியலமைப்பு வரலாறும் வரலாற்றாளர்களுக்கு மிகவும் பயன்தரும் ஒரு அறிவுத் துறையாகும்.

## பண்பாட்டு வரலாறு (Cultural History)

வரலாறு பெரும்பாலும் மனிதனுடைய சமுதாய செயற்பாடுகளையே ஆராய்கிறது. மனிதரின் நம்பிக்கைகள் ஏமாற்றங்கள் ஆகியவற்றை ஆராய்தலும் வரலாற்றின் நோக்கமாகும். மனிதனுடைய செயல்பாடுகளை ஆராயும் போது அவனது சமூக அரசியல் செயல்பாடுகளை மட்டுமின்றி கருத்துக்கள் மற்றும் தொழில் நுட்பம் முதலியவற்றில் எல்லாம் அவன் அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பற்றியும் ஆராய்தல் அம்சங்களாகும். இப்படிப்பட்ட பண்பாட்டு அம்சங்களை வெளிப்படுத்துவது பண்பாட்டு வரலாறு எனப்படுகிறது.

பொதுவாக பண்பாட்டு வரலாறு என்பது மக்களின் மனம் மற்றும் ஒழுக்கநெறிகள் பற்றியது ஆகும். ‘பண்பாட்டு வரலாறு என்பது குறிப்பிட்ட காலகட்டத்தில் சமூகத்தை ஆட்கொண்ட பிரதான கருத்துக்களையும் மக்கள் நம்பிக்கைகளையும் நடத்தையையும் தெளிவுபடுத்தும் அமைப்புகளைப் பற்றியது’ என்று கம்மாகர் கூறுகிறார்.

**பண்பாட்டு அம்சங்கள்**

பண்பாட்டு வரலாற்றாளர்கள் கடந்த கால தலைமுறையினரின் கருத்துக்களையும் நடத்தைகளையும் விளக்குகிறார்கள். கல்வி, கலை, இசை, ஓவியம், நடனம், கட்டிடக்கலை போன்ற பண்பாட்டு வரலாறுகளை எழுதுவதற்கு அறிவும், திறமையும் அசவியம் தேவை. பண்பாட்டு வரலாறை எழுதுவதற்குத் தேவைப்படும் மூல ஆதாரங்களை சேகரித்துக் கொண்டு அதன்பின் அவைகளை தீர ஆராய்ந்து அவைகளை நடுநிலையுடன் நின்று ஒப்பீடு செய்ய வேண்டும் எனவேதான் பண்பாட்டு வரலாறை எழுதும் வரலாற்றாளர்கள் ஆழ்ந்து சிந்திக்கும் திறன் பெற்றிருத்தல் மிகவும் அவசியம்.

மனிதர்களுடைய நடவடிக்கைகளில் பண்பாட்டு அம்சங்களே அதிகமாகக் காணப்படுகிறது. முக்கியமாக கற்கால மனிதர்களின் காலத்திலிருந்து மொழியும், கல்வியும் எவ்வாறு வளர்ச்சியடைந்து வந்தது என்று ஆராய்வது பண்பாட்டு வரலாறேயாகும். ஒவ்வொரு காலகட்டத்திலும் மொழியும், கல்வியும் எவ்வாறு வளர்ச்சியடைந்து வந்தது என்று ஆராய்ந்து பண்பாட்டு வரலாறேயாகும். ஒவ்வொரு காலகட்டத்திலும் மொழியும் கல்வியும் பல்வேறுநிலையை அடைந்து வளர்ந்து வந்துள்ளன. அதே போல இசை, ஓவியம், நடனம், சிறபம், கட்டிடக்கலை போன்ற கரை அம்சங்களின் வளர்ச்சியைப் பற்றி படிப்பது பண்பாட்டு வரலாறு ஆகும். நாட்டில் நிலவும் அரசியல் சூழ்நிலையும்,பொருளாதார மாற்றங்களும், பண்பாட்டு வளர்ச்சியின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஆட்சியாளர்களின் விருப்பங்களின் அடிப்படையிலும் பண்பாடு வளர்ச்சியடைகிறது. ஊதாரணமாக ஷாஜஹான் ஆட்சிக் காலத்தில் இசை, கலை, கட்டிடக்கலை போன்றவை உன்னதமான வளர்ச்சியடைந்தன. ஆனால் ஔரங்சீப் காலத்தில் அவைகள் வளர்ச்சியடைந்தன. ஆனால் ஔரங்கசீப் காலத்தில் அவைகள் வளர்ச்சியடையவில்லை. பண்பாட்டு அம்சங்கள்

வளர்ச்சியடைய மனிதன் சுதந்திரமாக சிந்திக்கும் சூழ்நிலை ஏற்பட வேண்டும். மனிதன் எந்த அளவிற்கு பண்பாட்டு அம்சங்களின் வளர்ச்சியடைந்துள்ளானோ அந்த அளவில்தான் அவனது வாழ்க்கையின் தரம் கணிக்கப்படுகிறது.

**பண்பாட்டு, வரலாறு நூல்கள் :**

பண்பாட்டு வரலாறு பல புகழ் பெற்ற ஆசிரியர்களால் எழுதப் பட்டுள்ளது. சைமண்ட் என்பவர் இத்தாலிய மறுமலர்ச்சி பற்றி எழுதியுள்ளார். வீல் டுரண்ட் என்பவர் சீர்திருத்தம், மறுமலர்ச்சி, பழங்காலப் பாரம்பரியங்கள், பற்றி பல நூல்களை எழுதியுள்ளார். ஆல்பிரட் சிம்மர்னின் 'கிரேக்க காமன்வெல்த்' என்ற நூலையும், வெர்னர் ஜாகரின் என்பவர் 'கிரேக்க கராச்சார ஆய்வு' என்ற நூலையும், ஒயிட் ஹெட்டின் என்பவர் எண்ணங்களின் தீரச் செயல்கள் என்ற நூலையும் எழுதிஜயுள்ளனர். இந்த நூல்கள் பண்பாட்டு வரலாற்று நூல்களுக்குச் சிறந்த உதாரணங்களாகும்.

தற்போது பண்பாட்டு வரலாற்றின் ஆய்வு எல்லை விரிவடைந்துள்ளது அமெரிக்காவில் 'மனித இனப் பண்பாட்டு ஆய்வியல்' முக்கயத்துவம் பெற்று வருகிறது. அங்கு இந்தத் துறையின் புதிய ஆய்வு முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. நன்கு வளர்ந்த சமுதாயங்களின் பண்பாட்டு அம்சங்கள் தனித்தனியாக ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாறு ஒவ்வொரு நாட்டிலுமே தற்போது பண்பாட்டு வரலாறு முக்கியதுவம் பெற்று வருகிறது. ஏனெனில் அரசியல் மற்றும் பொருளதார வரலாற்றைத் தவிர்தது எழுதப்படும். வரலாறுகள் எல்லாமே பண்பாட்டு வரலாறாகக் கருதப்படுகிறது. எனவே வரலாற்றின் ஒரு முக்கிய பிரிவாக பண்பாட்டு வரலாறு உள்ளது.

## அலகு - III

## காரணத் தொடர்பும் மாறுதல்களும்

நிகழ்ச்சிகளின் பதிவு என்ற முறையில் வரலாறு காரணம். மாறுதல் விளைவு என்ற அம்சங்களைக் கொண்டிருக்கிறது. இல்யாகவே மாறுதல்கள் மூன்று வகைப்படும். அவை, பல காரணங்களால் விளையும் மாறுதல்கள் படிப்படியான வழிமுறைகளால் ஏற்படும் மாறுதல்கள், தொடர்ச்சியாகவே நிகழும் மாறுதல்கள் எனப்படும். காரணத் தொடர்புகளில் வரலாற்றாளர் ஒரு நிகழ்ச்சியின் அனைத்துக் காரணங்களையும் சம்பந்தப்படுத்தத் தேவையில்லை. பொருளுள்ளதும் தேவையானதுமானதுமானவற்றை பயன்படுத்தினால் போதுமானது. உண்மையான உண்மையற்ற காரணங்களை வேறுப்படுத்த வேண்டும். அர்த்தமுள்ள பொதுவிதி காணவும் முயற்சிக்க வேண்டும். காரணங்களும் மாறுதல்களும் மிக நெருங்கிய தொடர்புடையவை.

### இயல்பு

சங்கிலித்தொடர் போன்ற காரணங்களால் ஒரு காரணம் மற்றொரு காரணத்திற்கு இட்டுச்செல்லுவும் படியாகவோ அல்லது மற்றொன்றைத் தூண்டி விடுகதாகவோ அமைகின்ற முறையால் பெரும் சம்பவங்கள் நிகழ்கின்றன. தென்னிந்தியாவில் திராவிடர் குடியேற்றம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். வுடஇந்தியாவை ஆரியர் ஆக்கிரமித்துக்கொண்டதும், திராவிடர் களால் தங்கள் தாயகத்தின் எல்லைகளைப் பாதுகாத்துக் கொள்ள முடியாததும் அதற்குக் காரணங்களாக சுட்டிக்காட்டப்படுகின்றன. இதற்கு சற்று சேய்மைக் காரணங்களாக ஆரியர்களைத் தங்கள் தாயகத்திலிருந்து வெளியேற்றிய மத்திய ஆசிய கடுமையான சூழ்நிலைகளும் எதிரியின் முன் சமாளிக்க முடியாதபடி திராவிடர்களைத் தெற்கே துரத்திய சில பாதகமான நிலைகளும் குறிப்பிட்டுக் கூறப்படுகின்றன. இவ்வாறு காரணங்களைத் தேடி மிகப் பழங்காலம் வரை சென்றால் முடிவில்லாத தொடர் நிலைகள் இருப்பது வெளிப்படையாகத் தெரியும். சேய்னே தமது வரலாற்றின் சட்டங்கள் என்ற நூலில் உண்மையான ஆரம்பத் தோற்றம் பிடிபடாமலே தப்பித்து விடுகிறது. ஏல்லாமே முந்தியவற்றின் விளைவாகவே இருக்கிறது என்று சரியாகக் கருத்துத் தெரிவிக்கின்றார். உண்மையில் காரணங்களின் போக்குகள் பல்வேறு கட்டங்களில் பளிச்சிடுகின்றன. முடிவில்லாத காரணத்தொடர்புகளுடன் அதற்கு இணையான முடிவில் லாத விளைவுத் தொடர்கள் செல்கின்றன.

இரண்டாவதாக, முன்னறிவிப்பின்றி எந்த மாறுதல்களும் வரலாற்றில் நிகழ்வதில்லை. அவை வலிவும் வேகமும் பெறுமுன் நீண்டகால முன் தயாரிப்பு அல்லது கருவுரு வளர்ச்சி நிலையில் நீடித்திருக்கின்றன. 1800இல் தென்னிந்தியப் புரட்சி வெடித்ததும் அதன் திடீர் இடி முழக்கத்தை ஆங்கிலேயர் கேட்டு அதிர்ச்சியுற்றனர். ஏனெனில் அதை அவர்கள் சிறிதுகூட எதிர்பார்க்கவில்லை. அது வலுப்பெற்றதும் தங்கள் ஆதிக்கம் ஆபத்தான நிலையிலிருக்கிறதென்று சந்தேகமறத் தெரிந்து கொண்டனர். அந்தப் புரட்சிக்கு பின்னணியில்

நீண்டக்கால அரசியல் அடக்குமுறைகளும் பொருளாதார சுரண்டல்களும் புரட்சிமுன்னேற்பாடுகளும் நடைபெற்றிருக்கின்றன. எனவே இதுபோன்று ஒரு மாறுதல் ஒரு மன்னனாலோ, சட்டத்தாலோ திடீரென நிகழ்கிறது என்று கருதுவது சரியன்று. ஒரு சட்டம் மாறுதலைக் குறித்துக் காட்டுகிறது என்றால் சட்டமாக்கப்படும் நிகழ்ச்சி, சங்கிலித்தொடரான பல வளர்ச்சிக் கட்டத்தின் உச்சக் கட்டத்தைக்ட குறிக்கிறது. ஒரு மன்னர் தம் குடிகளுக்கு வாக்குரிமை அளிக்கும் போது, அதற்கான முன் தயாரிப்புக் கட்டங்களின் சுவடுகளை அரசியலுரிமைகளுக்கான கோரிக்கை, கிளர்ச்சி, வாக்குரிமை அளித்தலில் பல நிலைகள் ஆகியவற்றில் காணலாம்.

மூன்றாவதாக மாறுதல்களின் போக்கு தொடர்ச்சியான போக்குகளால் குறித்துக் கட்டப்படுகிறது. வரலாற்று நிகழ்ச்சிகள் தொடாச்சியானது. மாறுவது எனவே அவை வளர்ச்சி முன்னேற்றம் என்ற செயற்களாலே குறிக்கப்படுகிறது. பல்வேறு காலங்களில் இந்தியாவில் கல்வி முறைகள் மீண்டும் மீண்டும் உருவாக்கப்பட்டு வருகின்றன. ஆசிரியர்கள் வருகிறார்கள். போகிறார்கள், கல்வி நுட்பங்கள் மாறுகின்றன. பாடப் பொருட்கள் வேறுபடுகின்றன. எனினும் அது பழங்கால குருகுல முறையிலிருந்து இன்று வரை பெருமளவில் தொடர்ச்சியை வெளிப்படுத்துகிறது. எதிர்பாராத மாறுதல் திடீரென்று நிகழ்ந்து தொடர்பு போக்குகள் தடைப்படுவது போல் தோன்றலாம். சான்றாக முதல் உலகப் போருக்குப் பின் பிரிட்டிஷ் பேரரசு வன்மையுடன் உறுதியுடன் நின்றது. ஆனால் இரண்டாம் உலகப் போருக்குப் பின் உடைந்துவிட்டது. இந்த நிலைக்கு இட்டுசென்ற நிகழ்ச்சிகளைக் கூர்ந்து ஆராய்ந்தால் ஆண்டுக்கணக்கில் நிகழ்ந்து கொண்டிருந்த ரெசியலமைப்பு மாறுதல்களின் தொடர்ச்சியைப் பிரதிபலிப்பதாகக் காணலாம்.

## தெய்வீக சக்தியின் செயற்பாடு

வரலாற்றை இயக்குவது எது, நிகழ்ச்சிகள் என குறிப்பிட்ட வடிவம் பெறுகின்றன. குறிப்பிட்ட திசையில் அவை எவ்வாறு இயங்குகின்றன. என்ற வினாக்கட்கு எளிதில் விளக்கம் தர இயலாது. எனினும் வரலாற்று வளர்ச்சியின் காரணங்களை விளக்கும் பல்வேறு கொள்கைகள் தோன்றியுள்ளன. அவை கடவுளின் செயற்பாடு மனிதக் கூறுகளின் செயற்பாடு என்று இரு வகை கருத்துக்களில் இடங்கும். இதில் மனிதக்கூறு என்பதில் மாபெரும் மனிதர்களின் சாதனை, கருத்துக்கள், பகுத்தறிவு, மனிதப் பண்பு, இயல்புணர்வு போன்றவை இடங்கும். அவற்றிள் கடவுளரின் செயற்பாடு தனிமனிதனின் செயற்பாடு கோட்பாடு களின் செயற்பாடு முக்கியமானவையாகும்.

பழங்காலத்தில் மனிதஇனத்திற்கு அப்பாற்பட்ட சக்தி வரலாற்று வழிமுறைகளை நிர்ணயிக்கிறது. என்ற கருத்து வலுப்பெற்றிருந்தது. பண்டைய இந்தியாவில் விதி அல்லது ஊழ் தனிமனிதன், ஆகியவை சமுதாயத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கிறது என நம்பப்பட்டது. பண்டைய அமெரிக்காவில் இந்திய இனத்தவர்நிகழ்ச்சி களின் போக்கை அறிவிற்கெட்டா சக்திகள் இயக்குவதாக நம்பினர். இடைக்கால ஐரோப்பியத் திருச்சபை

கடவுளருள்தான் வரலாற்றுப் போக்கினை நிர்ணயிக்கிறது. என்ற கருத்தினை ஆதரித்தது. இக்கோட்பாடு கடவுளருக்கு வரலாற்றில் ஆதிக்கம் செலுத்தும் உரிமையை அளித்ததில் வியப்பில்லை. ஆனால் இது ஒரு தவறான கொள்கை ஏனென்றால் வரலாற்றினை முதன்மையான இயக்கு சக்திகள் தெய்வீகம் மற்றும் இயற்கை சக்திகள் என அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்துவிட்டால் வரலாற்றில் மனிதக் கூறுகளைப் புறக்கனித்துவிடுவோம். ஆனால் மறுமலர்ச்சி காலத்திற்குப்பின் சமயந் நார்பற்ற கொள்கை பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டு கடவுள்கிளன் பங்கு புறக்கணிக்கப்பட்டது. மனித இயல்பிற்கு அப்பாற்பட்ட சக்திகளுக்குப் பதில் மனித இயல்கள் தீவிர கவனம் பெற்றன.

## **தனி நபர்களின் பங்கு** (Role of Individuals)

வரலாற்றில் காணப்படும் எல்லா நிகழ்ச்சிகளிலுமே மனிதக் கூறுகள் சம்பந்தப்பட்டுள்ளன. மனிதன் சம்பந்தப்படாத எந்த நிகழ்ச்சிகளையும் குறிப்பிட முடியாது. எனவே வரலாற்றில் மாறுதல்களைக் கொண்டு வந்து அதை இயக்கும் சக்தியாக தனி மனிதர்கள் விளக்குகிறார்கள். ஆனால் இந்தத் தனி மனிதர்கள் எவ்வாறு இயங்குகிறார்கள் என்பதில் இருவகையான கருத்துக்களைக் காண முடிகிறது. முதலாவது மனிதர்கள் இறைவனின் ஏவலாளராக இயங்குகின்றனர். இரண்டாவது, மனிதர்கள் தங்கள் சொந்த ஆற்றல் மூலம் வரலாற்றில் மாறுதல்களை ஏற்படுத்துகிறார்கள் என்பதாகும்.

**1)மனிதரின் நடவடிக்கைகளில் இயற்கையின் சக்தி**

முதலாவது கடவுள் அல்லது இயற்கை சக்திதான் விரும்பிய குறிக்கோளை அடைய தனி மனிதர்களைத்' தேர்வு செய்து கொள்கிறது. இந்த தனிமனிதர்கள் இந்த பொறுப்பை ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை. இல்லையென்றாலும், தனது நடவடிக்கைகளில் தோல்வியடைநதாலும் அந்த சக்தி மற்றொரு மனிதனைத் தேர்வு செய்த கொள்கிறது. எனவே தான் மனிதன் கடவுளின் ஏவலாளராகச் செயல்பட்டு வரலாறு இயக்கும் ஆற்றல் உடையவனாகத் திகழ்கிறான். பிரெஞ்சுப் புரட்சிக்கும் பிறகு நெப்போலியன் தோனறவில்லையென்றால் மற்றொரு தலைவன் உருவாக்கப் பட்டிருப்பான்.

**2)மாமனிதர்கள் வரலாற்று நிகழ்ச்சிகளக்கக் காரணமாகின்றனர்:**

அசாதாரண ஆற்றல் பெற்ற மனிதர்கள் வரலாற்றைப் படைக்கிறார்கள் என்ற கருத்து பழங்காலத்திலிருந்தே இருந்து வருகிறது. மாபெரும் மேதைகள், சிந்தனையாளர்கள், சீர்திருந்த வாதிகள், நிர்வாகிகள், தளபதிகள் அகியோர் வரலாற்றின் இயக்கத்திற்கு காரணமாகி உள்ளார்கள். இந்த மனிதர்கள் தங்கள் சாதனைகளால் வரலாற்றை இயக்கும் ஆற்றல் பெற்றிருந்தனர். மாறுதல்களைப் படைத்துள்ளனர். புத்தரும், ஏக கிறிஸ்துவும் இந்த வரிசையில் இடம் பெருகின்றனர். இவர்களது வாழ்க்கையும், கொள்கைகளுக்கு வரலாற்றில் பெரும் முன்னேற்றம் ஏற்பட வழிவகுதத்து. வெற்றி வீரர்களாக ஜூலியல் சீசரும், நெப்போலியனும் விளங்குகிறார்கள். மார்டின் லூதர் மிகப் பெரிய சீர்திருத்தவாதியாக

காட்சியளிக்கிறார். மாமனிதர்களின் வரிசையில் மகாத்மா காந்தியின் செயலாற்றல் குறிப்பிடத்தக்கது ஆகும்.

இப்படி வரலாற்றைப் படைக்கும் மாமனிதர்களை சிட்னிஹுக் என்பவர் இரண்டு வகையாகப் பிரிக்கிறார். முதலாவது நிகழ்ச்சிகளுக்கு காரணமானவர்கள். இவர்கள் தங்கள் மரபுரிமை, சூழ்நிலை மற்றும் அந்தஸ்தின் காரணமாக நடைபெற்ற நிகழ்ச்சிப் போக்குடன் சம்பந்தப்பட்டவர்கள். இவர்கள் நிகழ்ச்சிகளை நெறிப்படுத்துகிறார்கள். இதற்கு உதாரணமாக இங்கிலாந்து அரசர் எட்டாம் ஹென்றியையும் பிரஷ்யாவின் அரசர் மகாபிரடரிக்கையும் குறிப்பிடலாம். இங்கிலாந்தில் தோன்றிய சமயத் சீர்திருத்தத்தோடு சம்பந்தப்பட்டு, திருச்சபை சீர்திருத்தத்திற்குக் காரணமானார் எட்டாம் ஹென்றி. பிரஸ்யாவின் மகாபிரடரிக் அந்த நாடு முன்னேற்றமும், வலிமையும் அடைய முற்படும் சூழ்நிலையில் மன்னராக இருந்தார். அப்போது அந்த குறிக்கோளை அவரால் அடைய முடிந்தது.

இரண்டாவது, நிகழ்ச்சிகளை உருவாக்குபவர்கள், இந்த வரிசையில் அசாதாரணத் திறமை படைத்தவர்களே இடம் பெறுகின்றனர். இவர்கள் தெளிவான குறிக்கோளையும், தொலைநோக்கும் கொண்ட லட்சயவாதிகள் ஆவர். சூழ்நிலையை கட்டுப்படுத்தும் திறமை பெற்றவர்கள். நிகழ்ச்சிகளைத் தீர்மானிக்கும் அதிகாரம் படைத்தவர்கள். ஆபிரகாம்லிங்கன், மார்டின் லூதர், லெனின், மாசேதுங், காந்தி ஆபான்றவர்கள் வரலாற்று நிகழ்ச்சிகளை உருவாக்கியவர்கள். தாங்கள் விரும்பிய நோக்கில் நாட்டைக் கொண்டு செல்லும் வல்லமை படைத்தவர்கள். சூழ்நிலையை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொண்டவர்கள்.

இவ்வாறு தனி மனிதர்கள் தங்களது திறமை அறிவாற்றல், மயற்சி ஆகியவற்றால் நிகழ்ச்சிகளை உருவாக்கி வரலாற்று இயக்கங்களுக்குக் காரணமாக அமைகிறார்கள். எனவே வரலாற்றை இயக்குவதில் மாமனிதர்களின் பங்கினை குறைத்து மதிப்பிட்டு விடமுடியாது.

## 2.கருத்துக்களின் பங்கு (Role of ideas)

மனிதனுடைய சிந்தனையே எண்ணங்களாகவும் கருத்துக்களாகவும் வெளிப்படுகின்றன. கருத்துக்கள் வரலாற்றில் குறிப்பிடத்தக்க மாறுதல்களை தந்துள்ளன. அவை மனித நடவடிக்கைகளுக்கு வழிகாட்டியாக உள்ளன. இந்தக் கருத்துக்களின் தூண்டுதலினாலேயே பல வரலாற்று நூல்கள் எழுதப்படுகின்றன. அரசியல் பற்றிய கருத்துக்கள், தத்துவக் கருத்துக்கள், பொருளியல் கருத்துக்கள் போன்றவை வரலாற்று வரைவியலில் பெரும் தூண்டுதல்களாக விளங்கியுள்ளன. இவ்வாறு கருத்துக்கள் மனித செயல்களுக்கு வரலாற்று வரைவிற்கும் வழிகாட்டியாக உள்ளன.

கருத்துக்கள் இரண்டு வகைப்படும். ஒன்று தத்துவக் கருத்துக்கள் மற்றொன்று நடைமுறைக் கருத்துக்கள்.

### 1)தத்துவக் கருத்துக்கள்

இவை ஆழ்ந்த சிந்தனையால் உருவானவை ஆகும். இவை உள்ளுணர்வுகளின் வெளிப்பாடு ஆகும். சோதித்துப் பார்ப்பது கடினம். ஆனால் நடைமுறையில் இக்கருத்துக்கள் ஏற்புடையனவையா இல்லையா என்று சமுதாயம் கண்டுகொள்கிறது. இக்கருத்துக்கள் வரலாற்றின் போக்கையும் நோக்கையும் கணிக்க முற்படுகிறது. மனித முன்னேற்றத்திற்குப்’

பொதுவான விதிகளை வகுக்க முனைகிறது. விதி, கா்மவினை இறைத்திட்டம், மறுமை, விசாரணை நாள் போன்றவை முக்கியமான தத்துவக் கருத்துக்கள் ஆகும்.

**2)நடைமுறைக் கருத்துக்கள்**

முனிதன் தனது அனுபவத்தின் மூலம் தான் கண்டதையும், கேட்பதையும் கருத்துக்களாக மாற்றுகிறான். இதுவே நடைமுறைக் கருத்துக்கள் ஆகும். இந்த நடைமுறைகளை வாழ்க்கை மேம்பாட்டுக்காக பயன்படுத்துகிறான். இப்படிப்பட்ட நடைமுறைக் கருத்துக்களை சோதனை மூலம் சரிசெய்து பார்த்துக் கொள்ளலாம். உதாரணமாக மறுமலா்ச்சி, சமயச் சீா்திருத்தம், முதலாளித்துவம், மக்களாட்சி சமூக நீதி, சமாதான சகவாழ்வு போன்றவை நடைமுறை கருத்துக்களாகும். இக்கருத்துக்கள் வரலாற்றில் சிறப்பான மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளன.

**வரலாற்றில் கருத்துக்கள் செயல்படும் விதம்**

கருத்துக்கள் வரலாற்றின் இயக்கு ஆற்றல்களாக இருந்துள்ளன. மனித நடவடிக்கை நிகழ்ச்சிகளுக்கு வழிகாட்டியாகப் பயன்பட்டுள்ளன. கருத்துக்களின் வளா்ச்சியே வரலாறு ஆகும். ‘கருத்துக்களின் விளைவே வரலாறு’ என்று காலிங்வுட் கூறுகிறாா்.

கருத்துக்கள் சமுதாயத் தேவைகளுக்கேற்ப பயன்பட்டு வரலாற்றில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக அமெரிக்கப் புரட்சி பிரெஞ்சுப் ர்ரட்சி, ரஷ்ய புரட்சி போன்றவை கருத்துக்களின் விளைவேயாகும். எதேச்சாதிகாரத்தை வெறுத்து சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் மக்கள் விரும்பியதால் தான் பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்டது. இங்கிலாந்தின் சுரண்டல் கொள்கை யிலிருந்து விடுபட நினைத்த விடுதலைக் கொள்கைதான் அமெரிக்கப் புரட்சி ஏற்படக் காரணமானது. இவ்வாறு ஜனநாயகம், சுதந்திரம் சமத்துவம் போன்ற கருத்துக்கள் வரலாற்றில் சிறப்பான மாறுதல்கள் ஏற்பட வழிவகுத்துள்ளன.

மேலும் பல வரலாற்றாளா்கள் வெளிப்படுத்தியுள்ள கருத்துக்கள் வரலாற்று அறிவை வளப்படுத்துகின்றன. ஹெரடோட்டஸ், டாா்வின், டாயின்பி ஆகியோரின் கருத்துக்கள் வளமான கருத்தக்கள் ஆகும். அவை வரலாற்று அறிவை விரிவுபடுத்தியுள்ளன. வரலாற்றின் போக்கிற்குக் காரணமாக உள்ளன. மேலும் கருத்துகள் வரலாற்று விதிகளை வகுக்க உதவுகின்றன.

இவ்வாறு கருத்தக்கள் வரலாற்று நிகழ்வைப் பாதிப்பவையாக உள்ளன. வலிமை மிக்கவைகளாக உள்ளன. வரலாற்று நிகழ்வுகளை விளக்க உதவுவதுடன் வரலாற்று அறிவையும் விவேகத்தையும் வளப்படுத்துகின்றன. எதிா்காலத்தை நோக்கி பீடுநடை போடுகின்றன. எனவே வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு அல்லது மாற்றத்திற்கு தனிநபா் போல் கருத்துக்களும் சிறப்பிடத்தைப் பெற்றுள்ளன.

## 3.நிறுவனங்களின் பங்கு (Role of Institutions)

**வ**ரலாற்றில் ஏற்படும் மாறுதல்களுக்கு நிறுவனங்களும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஒரு கருத்தைமப் பின்பற்றுபவா்கள் தங்கள் தேவைகளைப் பூா்த்தி செய்து கொள்வதற்காக ஒரு புதிய நிறுவனத்தை உருவாக்குகிறாா்கள். இந்த நிறுவனற்கள் அதை நிறுவியவா்களின் கருத்தைப் பிரதிபலிக்கின்றன. சமூகத்திற்கு ஒரு அமைப்பைக் கொடுத்து ஸ்திரத்தன்மையைக்

கொடுக்கின்றன. மனிதர்களின் சாதனைகளுக்கு இந்த நிறுவனங்கள் வழிவகுக்கின்றன. மேலும் இந்த நிறுவனங்கள் இவற்றை இயக்கும் மனிதர்களின் இயல்புக்கேற்பவும், சூழ்நிலைக்கேற்பவும் கருத்துக்களை வளர்ச்சியடையச் செய்கின்றன. எனவே நிறுவனங்களை ஆய்வு செய்வதன் மூலம் வரலாற்றின் பல பரிணாமங்களை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. வரலாற்றில் பெரும் மாற்றங்களில் முக்கிய பங்கு வகித்த நிறுவனங்கள் பின்வருமாறு:

1)**திருச்சபை**

இது ஐரோப்பாவில் இடைக்காலத்தில் தோன்றிய மிகப் பெரிய சமய நிறுவனமாகும். ஆப்போது ஐரோப்பிய மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் நிறுவனமாக விளங்கியது. இந்த நிறுவனத்தின் மூலம் தான் திருச்சபையின் கொள்கைகள், கோட்பாடுகள் பரப்பப்பட்டன. மக்களின் சிந்தனைகள் மீது ஆதிக்கம் கொண்டது. புதிய கோட்பாடுகள் உருவாக்கப்பட்டன. எனவே இடைக்கால வரலாற்றில் பல மாறுதல்கள் ஏற்படக் காரணமானது. ஆனால் தனது கொள்கைகளை செயல்படுத்தும் போது தேசிய அரசுகளுடன் மோத வேண்டியதிருந்தது. இந்த மோதலின் விளைவாக திருச்சபை வலுவிழக்க ஆரம்பித்தது.

**2)முடியாட்சி**

இது உலகளாவிய நிலையில் செயல்பட்ட ஒரு அரசியல் நிறுவனம் ஆகும். புண்டைக் காலத்திலிருந்தே இந்த நிறுவனம் செயல்பட்டு வந்தது. ‘அரசர்களின் தெய்வீக உரிமைக் கொள்கை’ என்பது முடியாட்சியின் முக்கியமான கோட்பாடு ஆகும். இந்தக் கோட்பாட்டைப் பின்பற்றியே வல்லாட்சி நடத்தி வந்தனர். மக்கள் உரிமை பறிக்கப்பட்டது. பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டில் முடியாட்சி முறை உச்ச கட்டத்தில் இருந்தது. ஆனால் புரட்சிக் கருத்துக்களும் ஜனநாயகக் கருத்துக்களும் பரவ முற்பட்ட போது முடியாட்சி வலுவிழந்தது. முடியாட்சி நிறுவனங்கள் வரலாற்றில் பெரும் மாறுதல்களுக்கு காரணமாக விளங்கின.

3)**நாடு**

இதுவும் ஒரு ஆற்றல் மிக்க நிறுவனமே ஆகும். பண்டைக் காலத்தில் நகர நாடுகளும் பிரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற தேசிய நாடுகளின் எழுச்சியும் வரலாற்றின் போக்கை பெரிதும் பாதித்துள்ளன. இந்த நாடுகள் தேசியம், நாட்டுப்பற்று போன்ற கொள்கைகளைப் பின்பற்றின. இக்கொள்கைகளைத் தீவிரமாகப் பின்பற்றிய போது அது நாடுகளுக்கிடையே போர்களை ஏற்படுத்தியது. ஆனால் பின்னர் இந்த நாடுகளின் கருத்துக்களில் மாறுபாடுகள் ஏற்பட்டு உலக அமைதி, உலக ஒற்றுமை போன்ற கருத்துக்களை ஏற்றுக் கொண்டுள்ளன. இவ்வாறு நாடுகள் என்ற நிறுவனங்கள் தங்க்ள கருத்துக்களின் மூலம் வரலாற்றில் பெரும் மாறுதல்கள் ஏற்படக் காரணமாயின.

இவ்வாறு தனிமனிதர்கள் , கருத்துக்கள், நிறுவனங்கள் ஆகியவை வரலாற்றை இயக்கும் கருவிகளாக உள்ளன. வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு காரணமாக உள்ளன. வரலாற்றில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளன. இவைகள் எல்லாம் வரலாற்றின் இயக்கு ஆற்றல்கள் ( Moving Power of History) ஆகும்.

## வரலாற்று முன்னேற்றக் கோட்பாடு

'முன்னேற்றம' என்ற சொல்லுக்கு 'முன்னோக்கி செல்லுதல்' என்று பொருள்படும். சமுதாயத்தில் அல்லது அரசியலில் ஏற்படும் மாற்றங்கள் முன்னேற்றம் ஆகாது. மாற்றங்கள் பயனுள்ள திசையை நோக்கிச் செல்ல வேண்டும். அதாவது மாற்றம் விரும்பத்தக்கதாகவும், பயனுள்ளதாகவும், இலக்கை நோக்கியதாகவும், உயர் மதிப்பை அளிக்கக் கூடியதாகவும் இருந்தால் முன்னேற்றம் ஏற்படுகிறது.

**வரலாற்று முன்னேற்றம் ஒரு விளக்கம்**

எல்லாத் துறைகளிலும் எப்போதும் ஒரே வேகத்தில் மக்கள் முன்னோக்கிச் செல்லுகின்றனர் என்று வரலாறு கூறவில்லை. வரலாற்றில் முன்னேற்றம் ஏற்படுவதில் ஏற்ற இறக்கங்கள் காண்படுகின்றன. பொதுவாக மனிதன் கற்காலத்திலிருந்து தன் முயற்சியால் தற்கால நிலைக்கு வந்துள்ளான். அறிவியல் தொழில் நுட்பத்தில் முன்னேறியுள்ள மனிதன், ஆன்மீகத் துறையிலும் கலைத்துறையிலும் அவ்வளவு முன்னேற்றம் அடையவில்லை.

தற்காலத்தில் மனிதன் அடைந்துள்ள வெற்றிகளைக் காணும் போது மனிதனுடைய அறிவு ஆற்றலுக்கு எல்லை இல்லை என்று கூறலாம். மனித நாகரிகம் எல்லாத் துறைகளிலும் முன்னேறி வருகிறது. காரணம் மனிதன் நம்பிக்கை உடையவன் தான் விரும்புவதை அடைய விரும்புகிறான். இதற்காக தனக்கு ஏற்படும் சவால்களை எதிர்கொள்கிறான். மேலும் தனக்கு ஏற்படும் அனுபவத்தின் உதவியாலும் தவறுகளை திருத்திக் கொண்டு முன்னேறிச் செல்கிறான்.

'முன்னேற்றம் என்பது பழமையின் அனுபவத் தொகுப்பும் எதிர்காலத்தைப் பற்றிய முன்னறிவும் சேர்ந்த ஒரு சேர்க்கை' என்று கூறினார் பியூரி என்ற ஆங்கில வரலாற்றாளர். முன்னேற்றம் என்ற கருத்தானது எதிர்கால வரலாற்று நிகழ்ச்சிகளுடன் பொருந்துவதாகும்' என்று கார் கூறியுள்ளார். வரலாற்றில் தோன்றும் புதிய கருத்துக்களும், புதிய நிறுவனங்களும், பண்பாட்டியல்புகளும் ஏற்கனவே இருந்தவைகளைவிட சிறப்பானதாக இருந்தாலே அது முன்னேற்றம் என்று கருதப்படுகிறது.

**முன்னேற்றம் பற்றிய பலவகைக் கருத்துக்கள் :**

சென்ற இருநூறு ஆண்டு காலமாக மக்களது எல்லாக் கருத்துக்களையும் ஊடுருவி நிற்கும் அடிப்படைக் கொள்கையாக முன்னேற்றக் கோட்பாடு விளங்குகிறது என்று பியர்ட் என்ற வரலாற்றாசிரியர் கூறுகிறார். முன்னேற்றம் என்பதற்கு வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அவைகளை வரிசைப்டுத்திக் படிக்கலாம்.

1)பண்டைக்கால கிரேக்கர்களும், ரோமானியர்களும் கடந்த காலத்தைப் பற்றியும் எதிர்காலத்தைப் பற்றியும் அக்கறைப்படவில்லை. மாறாக நிகழ்காலத்திற்கே முக்கியத்துவம் கொடுத்தனர். பகுத்தறிவு வளர்ச்சியே முன்னேற்றம் என்று கருதினர். ஆனால் முன்னேற்றம் ஏற்படுவதில் பகுத்தறிவு முக்கியப் பற்காற்றுகிறது என்பது உண்மை தான் அது மட்டுமே அல்ல.

2)ஹீப்ரு மக்களும், கிறிஸ்தவர்களும் முன்னேற்றத்தை இறைவனுடன் ஒப்பிடுகின்றனர். வரலாற்று நிகழ்ச்சிகள் எல்லாமே இறைவனின் திட்டப்படியே நடைபெறுகின்றன. மனிதனின் ஒவ்வொரு முன்னேற்றமும் இறைவன் அருளால் தான் ஏற்படுகிறது என்று நம்பினர். அகஸ்டின் என்பவர் 'கடவுளின் நகரத்திற்கு செல்வதே முன்னேற்றம்' என்று கருதினார். ஆனால் முன்னேற்றம் என்பது ஏற்புடையது அல்ல.

3)இடைக்காலத்தின் இறுதியில் மனிதசிந்தனையின் மீதிருந்த இறையியல்வாதிகளின் கட்டுப்பாடு தளர்ந்தது. அப்போது முன்னெற்றம் பற்றி பல கருத்துக்கள் கூறப்பட்டன. உதாரணமாக, அரசியலில் ஆதிக்கம் வெலுத்துவதே முன்னேற்றம் என்று கருதப்பட்டது. முன்னேற்றம் ஒழுக்க நிலைகளிலும் அறிவியல் நிலைகளிலும் ஏற்படுவதாக டர்காட் என்பவர் கருதினார். மனித முன்னேற்றம் மாற்ற முடியாதது. ஏல்ழைலயில்லாதது. முகிழ்ச்சியும் விருப்பமம் மனித இனத்தை முன்னோக்கி இயக்குகின்றன என்று கூறினார் பிரெஞ்சு கணிதத் தத்துவரான கண்டார்செ என்பவர். மேலும் வர்த்தகப் போராட்டங்களும் நெருக்கடிகளும் முன்னேற்றத்தை ஏற்படுத்துகின்றன. என்றும் கூறப்பட்டது. இவ்வாறு முன்னேற்றம் பற்றி பல ஆக்கப்பூர்வமான கருத்துக்கள் தெரிக்கப்பட்டுள்ளன.

4)பதினெட்டாம் றூற்றாண்டில் பல நாடுகளில் எதேச்சாதிகார ஆட்சி நிலவியது. அப்போது பல சிந்தனையாளர்கள் தோன்றி 'முன்னேற்றம்' என்பதற்கு உரிமைகளைப்' பெறுவது என்று விளக்கம் அளித்தனர். இதனால்தான் பல ஜனநாயக நமதர்ம இயக்கங்களும் முற்போக்கு இயக்கங்களாகக் கருதப்பட்டது. இந்த இயக்கங்களின் விளைவாக வல்லாட்சிகளட் தூக்கி எறியப்பட்டு மக்களாட்சி ஏற்படுத்தப்பட்டதை நாம் அறிவோம். இதுவும் முன்னேற்றமாகக் கருதப்பட்டது.

5)பத்தொன்தாம் நூற்றாண்டில் டார்வினின் 'உயிானப் பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு' முன்னேற்றத்தின் உட்பொருளில் பெரிய மாற்றத்தையே ஏற்படுத்திவிட்டது. எல்லாஅறிவுத் துறைகளிலும் அவரது கோட்பாடு பாதிப்பை ஏற்படுத்தியது. டார்வினின் கூற்றுப்படி, "முன்னேற்றம் என்பது இயற்கையின் பணியாகும். இயற்கையானது 'இயற்கைத் தேர்வு' விதிப்படி செயல்பட்டு எல்லோராரும் ஏற்றுக் கொள்ள கூடிய முன்னேற்றம் அடையும் வாய்ப்பினை ஏற்படுத்துகிறது' ஆனால் டார்வின் இக்கூற்று ஏற்புடையதாக இல்லை. இயற்கை மட்டுமே துமுன்னேற்றத்தை ஏற்படுத்த முடியாது. இயற்கை வழியே விட்டுவிட்டால் தேக்க நிலையே ஏற்படும். எனவே முன்னேற்றம் என்பது மனிதனின் செயல்பாட்டையும், கருத்துக்களையும் சார்ந்த மனித இயல் கொள்கையாகும்.

6)முன்னேற்றத்திற்கு வேறு பலரால் சொல்லப்பட்ட கருத்துக்களை இனி காணலாம். மெயின் என்பவர் சாதாரண நிலையிலிருந்து மாறி சட்டத்திற்கு உட்பட்டிருக்கும் நிலைக்கு வருவதை முன்னேற்றம்' என்கிறார். ஸ்பென்சர் என்பவர் மனித சமுதாயம் தொழில்மய சமுதாயத்தை நோக்கி முன்னேறுகிறது என்றார். பியூரி என்பவர் தான் எழுதிய 'The Idea of Progress' என்ற நூலில் வரலாறு என்பது விரும்தக்க தசையை நோக்கிய முன்னேற்றம் என்று கூறியுள்ளார். கார்ல்மார்க்ஸ் என்பவர் 'வர்க்க பேதமற்ற சமுதாயத்தை நோக்கி முன்னேறுவதையே

முன்னேற்றம்' என்று கருதிறார். டூயின்பி என்பவர் 'சவால்கள் எந்த அளவு ஆக்க ரீதியலான அளவில் எதிர் கொள்ளபடுகிறதோ அதுவே முன்னேற்றம்' என்கிறார். ராபர்ட் நிஸ்பட் என்பவர் தான் எழுதிய "History of the Idea of Progress"என்ற நூலில் ' மனித இனம் கற்காலத்திலிருந்து முன்னேறி வந்துள்ளது. நிகழ்காலத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. எதிர் காலத்திலும் முன்னேறும்' என்று கூறியுள்ளார்.

7)விக்கோ என்பவர் முன்னேற்றத்தின் பல்வேறு கட்டங்களை விரிவாகக் கூறுகிறார். முதலாவது மனிதன் உணவுப் பொருளைத் தேடி அலையும் நாடோடி வாழ்க்கையிலிருந்து முன்னேறி வரும் வாழ்க்கையை அமைத்தான். பின்னர் அதிலிருந்து ஒரு சமுதாயமாக வளர்ந்து கிராமங்களில் வாழ்தல் என்ற நிலையடைந்தான். பின்னர் அதிலிருந்து நகர வாழ்கையை உயரிய பண்பாட்டு வாழ்கை நிலையினை அடைந்தனர். எனவே அவரது கூற்றுப்படி மனிதன் நாகரிக மேம்பாடு அடைவதே முன்னேற்றம் ஆகும்.

இவ்வாறு முன்னேற்றம் பற்றி பல அறிஞர்கள் பல்வேறு வகைப்பட்ட விளக்கங்களையும் கருத்தக்களையும் கொடுத்துள்ளனர்.

**முன்னேற்றத்தின் இலக்கு**

மேற்களண்ட பொருள் விளக்கங்களின்படி மனிதகுலம் ஆக்கப்பூர்வமான பல வழிகளில் முன்னேறுகிறது என்று கருதினால் எநத இலக்கை நோக்கி முன்னேறுகிறது என்பதை ஆராயவேண்டும். இலக்கைக் குறித்து இதுவரை எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொதுக் கரத்து ஏற்படவில்லை.ஆனால் மனிதர்களிடம் மறைந்து கிடக்கும் ஆக்கப்பூர்வமான திறமைகளை வெளிக் கொண்டு வருவது தான் முன்னேற்றத்தின் இலக்கு என்று கூறினால் அது மிகையாகாது. ஆத்துடன் புதிய அறிவை அறிதல் மனத்தை வளப்படுத்துதல் வர்க்க பேதமற்ற சமுதாயத்தை உருவாக்குதல் ஒரு சர்வதேச சமதாயத்தை உருவாக்குதல் போன்றவைகளும்' முன்னேற்றத்தின் இலக்குகளாக இருக்கலாம்.

**முன்னேற்றத்தை அடைய கையாளப்படும் வழிமுறைகள்**

முன்னேற்றதை அடைவதற்கு மனிதன் பல்வேறு வழிகளைப் பின்பற்றி வந்துள்ளான். பண்டைக் காலத்தில் காடுகள், மலைகள் போன்ற இயற்கை சாதனைகளை பயனுள்ளவைகளாக மலாற்றி முன்னேற்றம் அடைந்துள்ளான். பின்னர் வல்லாட்சி முறை, மக்களாட்சிமுறை போன்ற அரசியல் நிறுவனங்களில் மூலமாக முன்னேற்றறமடைந்தான். அதன் பின்னர் அறிவியல் தொழில் நுட்பத்திறன் அணுவிசை பொன்றவற்றைப் பயன்படுத்தியும் முன்னேற்றம் கண்டு வருகிறான்.

**முன்னேற்றம் நிகழக்கூடும் வகைகள்**

முன்னேற்றம் கீழ்க்கண்ட மூன்று நிலைகளில் நிகழலாம்.

1)முதலாவது முன்ரேற்றம் இறந்த காலத்திலிருந்து எதிர்காலம் வரை நேர்கோடாக இயங்ககிறது.

2)இரண்டாவதாக முன்னேற்றம் வளைந்து வளைந்து ஏறி இறங்கிச் செல்கிறது. ஆனால் மொத்தத்தில் அது முன்னேற்றம் கொண்டேயிருக்கும்.ஏற்ற இறக்கத்தில் வேகம் தடைபடுமேயன்றி முன்னேற்றம் தடைபடாது.

3)மூன்றாவதாக முன்னேற்றமும், பின்னேற்றமும் சேர்ந்து செல்கின்றன. அதாவது முன்னேற்றம் அடைந்:து கொண்டு செல்லும் போதே பின்னேற்றமும் ஏற்படும் ஆனாலும் இறுதியில் முன்னேற்றமே அடைகிறது.

முன்னேற்றக் கோட்பாடு என்பது வரலாற்று விளக்கமாகவும் வாழ்க்கை தத்துவமாகவும் அமைந்துள்ளது. அது ஒருபெரும் கருத்தின் மலர்ச்சியே என்றாலும் மாறிக் கொண்டேயிருக்கம் ஒரு தொடர் முயற்சியே என்றாலும் அது ஒரு இயக்கமாகவே அமைந்துள்ளது. இந்த முன்னேற்றக் கோட்பாடு மனிதனுடைய மனோபாவத்திற்கு தெம்பளித்து ஊக்குவிக்கிறது. மனித வரலாற்றில்மேலும், மேலும் கடின முயற்சிகளை நம்பிக்கையோடு மேற்கொள்ள உதவுகிறது. முனிதனிடம் உந்துதல் முயற்சி இருக்கும் வரை அனித இன முன்னேற்ற முயற்சியும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும். இது வரலாற்று உண்மையாகும்.

## மீண்டும் நிகழ்தல் கோட்பாடு

வரலாற்றுப் போக்குகளின் முறை வரலாறு மீண்டும் நிகழ்கிறது. என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது. பழங்காலத்தில் மக்கள் வரலாற்றை ஆண்டுதோறும் பருவ காலங்கள் மாறி மாறி வருவது போல் மீண்டும் மீண்டும் நிகழும் ஒரு நிகழ்ச்சியாகக் கருதினா். அரசியலிலும் கூட, கொடுங்கோலாட்சி பிரபுக் குழுவினா் ஆட்சி மக்களாட்சி ஒன்றன்பின் ஒன்றாக மாறி வருகின்றன என்ற எண்ணம் நிலவுகிறது. கிரேக்க, ரோமானிய இந்திய பாரம்பரியங்கள் வரலாற்று வட்டச்சுற்றுக் கோட்பாட்டைத் தெரிவிக்கின்றன. ஏனெனில் மனித இனத்தின் முன்னேற்றம் நேர்க்கோட்டு வழியன்று: வட்டச்சுற்று வழியாகும். ஆதில் இன்ப துன்பங்கள் ஒன்றன்பின் ஒன்றாக மாறி மாறி வரும்.

முதன் முதல் பழங்காலத்தில் வரலாற்று வட்டச்சுற்று முறை பற்றி குறிப்புத் தெரிவித்தவா் தூசிடைடஸ். வரலாறு வட்டச்சுற்று முறையில் இயங்குகிறது. நிகழ்ச்சிகள் மீண்டும் நிகழ்கின்றன. அதே விளைவுகள் தொடா்கின்றன என்று அவா் கருதினாா். கிறிஸ்துவ சமயச்ட செல்வாக்கினால் இடைக்காலத்தில் இக்கோட்பாடு புறக்கணிக்கப்பட்டது. புனித அகஸ்டின் வரலாற்றில் மீண்டும் நிகழும் வட்டச்சுற்று முறையை மறுத்து கடவுள் ஏசுகிறிஸ்து ஆக மனித உருக்கொண்டது. முதலும் கடைசியுமான நிகழ்ச்சி, கடவுள் வெவ்வேறு நாட்களில் உலகைப் படைத்தது போல் வெவ்வேறு நிகழ்ச்சிகள் வெவ்வேறு காலங்களில் நிகழ்கின்றன. என்றும் கூறியுள்ளாா். மறுமலா்ச்சிக் காலங்களில் பின் இக்கோட்பாட்டை புதுப்பிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஒப்புமை தேடுவோா், பண்டைய கிரேக்க ரோமானிய பேரரசிற்கும் தற்கால ஐரோப்பிய பேரரசுகளுக்குமிடையே உள்ள ஒரே மாதிரியான அம்சங்களையும் நிகழ்ச்சிகளையும் தேடிக் கண்டுபிடிக்க முயன்றனா். வரலாற்றாவிரியா்கள் அசிரியா, பாபிலோன், பாரசீகம், ரோம், ஸ்பெயின், பிரிட்டன் ஆகிய பேரரசுகளின் எழுச்சிகளையும்

வீழ்ச்சிகளையும் ஒப்பிட்டு அதில் வட்டச்சுற்றுக் கோட்பாடு காணப்படுவதாக நம்பினர். நீட்டோ என்பார் வரலாற்று நிகழ்ச்சிகளின் மீண்டும் மீண்டும் நிகமும் முறையைக் குறிப்பிட்டுள்ளார். ஸ்பெங்லர், டாயின்பி ஆகியோர் இனம் சமயம், மொழி, நாடு ஆகிய முறைகளில்லாமல் கராசார முறையில் வரலாற்றை அணுகி மீண்டும் நிகழ்தல் என்ற அம்சத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். உண்மையில் பல்வேறு கலாச்சாரங்களில் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றி மறையும் அம்சங்களில் ஒலே மாதிரியான தன்மை மிகத் தெளிவாகத் தெரிகிறது. நாகரீகம் பெற்ற எல்லா சமுதாயங்களும் பல நிலப்பகுதிகளைக் கொண்டுள்ளது. அவைகள் ஒரு வகையான அரசு முறையையும் அரசியல் நடவடிக்கைகளையும் கொண்டுள்ளன. சிலர் செல்வச் சிறப்பும் செல்வாக்கும் கொண்டு விளங்கினர். மிகப் பெரும்பான்மையோர் அடித்தளத்தில் போதிய செல்வமும் செல்வாக்குமின்றி அவதியுற்றனர். அது பழங்காலமாயினும் சரி இடைக்காலம் அல்லது தற்காலமாயினும் சரி அது நிலமானியச் சமுதாயமாயினும் சரி மக்களாட்சி அல்லது கம்யூனிசச் சமுதாயமாயினும் சரி இத்தகைய போக்குகள் மீண்டும் மீண்டும் தோன்றுகின்றன.

ஒவ்வொரு கலாசாரமும் உடலுறுப்பைப் போல் பிறப்பு, வளர்ச்சி, தளர்ச்சி, இறப்பு என்ற விதிக்கு உட்பட்டு தோன்றி வளர்ந்து தேய்ந்து வீழ்ந்துபடுகின்றன. என ஸ்பெங்லர் சுட்டிக் காட்டுகின்றார். ஒவ்வொரு கலாசாரத்தின் நான்கு நிலைகளான கலாசாரத்திற்கு முந்திய நிலை, கலாசாரத்தின் தொடக்க நிலை கலாசாரத்தின் பிந்திய நிலை, நாகரீகம் ஆகியவை நான்கு பருவ காலங்களான வசந்தம், கோடை, இலையுதிர், குளிர் என்பன ஏறக்குறைய ஒத்துருக்கிறது. ஒரு கலாச்சாரம் மறைந்ததும்ட அந்த இடத்தில் மற்றொன்று தோன்றுகிறது. ஒவ்வொரு கலாச்சாரமும் திடீர் விபத்தினால் அழித்தாலன்றி அல்லது செயலற்ற நிலையில் நீடித்தாலின்றி ஆயிரம் ஆண்டுகள் வாஜம் ஒவ்வொரு கலாச்சாரமும் தனித்தன்மை கொண்டிருந்தாலும் அமைப்பு வளர்ச்சி கட்டங்கள் ஆகியவை ஒரே மாதிரியாகவே இருக்கும்.

டாயின்பி உலக வரலாற்றை பழங்காலத்திலிருந்து தற்காலம் வரை ஆய்வு செய்து இருபத்தியொன்று வளர்ச்சியுற்ற நாகரிங்களும், மூன்று முளையிலே கருகிய நாகரீகங்'களும் ஐந்து தேக்க நிலை நாகரீகங்களும் இருந்ததாகக் கூறுகிறார். அவற்றின் படிப்படியான பரிணாம வளர்ச்சியிலும் வீழ்ச்சியிலும் தெளிவான ஒரே மாதிரியான மாறுதல் நிலைகளும் காணக்கிடக்கின்றன. அவை, இயற்கை அல்லது மனித நக்திகளின் தூண்டலுக்கேற்ப துலங்கலின் விளைவாக நாகரீகம் தோன்றுகிறது. அதன் வரலாறு வளர்ச்சி பயன் பெறுதல் தன்னிலே முழுமை பெறுதல் என்ற நிலைகளில் குறிக்கப்படுகிறது. ஒரு நாகரீகம் எதிர்படும் சிக்கலுக்கு ஏற்றதொரு விடை அளித்து விட்டால் அது உயிர்வாழ்கிறது. இல்லையேல் வீழ்கிறது. தூண்டலும் துலங்கலும் சமுதாய வரலாற்'றில் ஏற்ற இறக்கங்களைக் காட்டுகிறது. அவற்றை வரலாற்றில் ஏற்படும் ஒழுங்கமைவு என்று கூறுகிறார். கலாச்சார முறைகளின் இத்தகைய பொதுவான போக்குகளுக்கு மேலுமட், அவற்றின் வேறுபட்ட அம்சங்களான அரசியல், பொருளாதாரம், தத்துவம் சமயம், அறிவியல் கலை ஆகியவைகள் அவற்றி-ன் பொருளடக்கம், நடை வளர்ச்சிவ ீழ்ச்சிக் காலங்களின் இயக்கம் ஆகியவற்றில் ஒரே மாதிரியான தன்மைகள் இருப்பதை எடுத்துக்காட்டுகின்றன. இவற்றின் மூலம் வரலாறு மீண்டும்

எடுத்துக்காட்டுகின்றன. இவற்றின் மூலம் வரலாறு மீண்டும் திரும்புகிறது என்ற முடிவிற்கு வருகிறோம்.

எனினும் இது உண்மையான கருத்து அல்ல. வரலாறு மீண்டும் நிகழ்தல் என் நிலையை அடைகிறது. ஏன்னும் கோட்பாடு வரலாற்றின் தொடர்பற்ற தனிபட்ட கருத்து. வரலாற்றுத் தோற்றங்களின் காரணங்கள், சந்தர்ப்பங்கள், விளைவுகளை புறக்கணித்து மாற்றங்களின் விபரங்களை ஒதுக்கித்தள்ளி பொருளும் இடமும் தான் மாறுபடுகின்றன. மற்றப்படி அதே வழிமுறைகளும் விளைவுகளும் ஏற்படுகின்றன. என்ற எண்ணத்தில் வரலாறு மறு நிகழ்வு பெறுகிறது என்ற தவறான முடிவு எடுக்கப்படுகிறது. அடிப்படையிலும் அவற்றின் விவரங்களிலும் எந்த இரு சூழ்நிலைகளும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. எட்மண்டபர்க் சரியாகக் குறிப்பிட்டது போல் ஒவ்வொரு வரலாற்று நிகழ்ச்சிகளும் அதற்கே உரிதான தனிச் சூழ்நிலைகளயைும் குண இயல்புகளையும் கொண்டிருக்கின்றன. எனவே ஒரு சூழ்நிலை மீண்டும் அதே போல் திரும்பவும் நிகழாது. பிரஞ்சு ரஷியப் புரட்சிகளைப் பரிசீலணைக்கு எடுத்துக் கொண்டால் தனிப்பட்ட இயல்புகள் மிகப் பரந்'த கண்ணோட்டத்தில் மீண்டும் திகழ்வதுபோல் தோன்றலாம். ஆனால் எல்லா விவரங்களிலும் அல்ல. மக்களின் துயரங்களும், மன்னர்களின் வல்லாட்சியும் பரந்த கண்ணோட்டத்தில் இரு பொதுக் காரணங்களாகத் தோன்றலாம். ஆனால் துயரங்களின் தன்மையும் வல்லாட்சியின் இயல்பும் வேறானவைகள். பிரான்சில் மக்களாட்சிக் கோட்பாடுகள் விழிப்புணர்ச்சியை உண்டுபண்ணின. ரஷியாவில் சமத்துவமுறைக் கருத்துக்கள் மிதமான விளைவுகளை ஏற்படுத்தின. புரட்சிக் காலங்களில் பிரான்ஸ் எல்லை கடந்து அன்னியப் பகுதிகளை அபகரிக்க முயற்சித்தது. ரஷியா அயல்நாட்டு ஆக்கிரமிப்பு காரணமாக தன் சொந்த இடங்களை இழந்து நின்றது.

வரலாறு மீண்டும் நிகழ்கிறது என்ற கொள்கையும் அது வட்டச்சுற்று முறையில் இயங்குகிறது என்ற கருத்தும் உண்மைக்கு மாறானவை. ஏல்லா நிகழ்ச்சிகளுமே மீண்டும் மீண்டும் நிகழ்ந்து கொண்டிருந்தால் மனித சமுதாயம் முன்னேற்றம் பெற்றிருக்காது:தேக்க நிலை ஏற்பட்டிருக்கும். உண்மையில் காலங்களின் இயக்கம் வட்டச் சுற்று அல்ல. முன்னேற்றமானது. மனிதன் நாகரீகமற்ற நிலையிலிருந்து மேலும் மேலும் நாகரீக முதிர்ச்சி பெற்ற நிலையையே வரலாறு குறித்து வைத்துள்ளது. இரண்டாவதாக அனைத்து வரலாற்று நிகழ்ச்சிகளும் தனித்தன்மை பெற்றவை. மற்றொன்றிவிருந்து மாறுப்பட்டவை. ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் வெவ்வேறு மனிதர்கள், வேறுபட்ட கருத்துக்கள், மாறுபட்டசூழ்நிலைகள் சம்பந்தப்படுகின்றன. வரலாற்று விதிகள் நிறுவப்பட முடியாது. முன்னறிவிக்கப்படவும் முடியாது என்று கூறுதற்கு இதுவே தான் காரணம். அதிகப்பட்சமாக ,இரு கலாச்சாரங்கள், இலு புரட்சி, இரு போர்கள் போன்ற வரலாற்று நிகழ்ச்சிகளில் பிகப்பரந்த அளவிலான இணையான அம்சங்களில் பண்டைய அனுபவங்களிலிருந்து நுட்பமான ஒப்புமை காணலாம். இரு உலகப் போர்களும் ஐரோப்பாவில் தோன்றிதால் மூன்றாம் உலகப் போரும் அங்கே தான் தோன்றி அதே நாடுகள் தான் மீண்டும் ஈடுபடும் என்று முன்னறிவிக்க முடியாது. மூன்றாவதாக இக்கோட்பாட்டிள் விளக்கவுரையாளர்கள், ஏற்கெனவே தாங்கள் வகுத்த திட்டத்திற்கேற்ப வரலாற்று நிகழ்ச்சிகளை பொருத்தமாக பொறுக்கி எடுத்து அமைக்க முயலுகிறார்கள் என்பது

தெளிவு. ஆவர்கள் நாகரீகத்தையோ, கலாசாரத்தையோ தங்கள் வரலாற்று ஆய்விற்கு மூல அளவாகக் கொண்டு, அந்த மாதிரியான பகுப்பிற்குப் பொருத்தமான ஆதாரங்களைப் பொறுக்கி, தங்கள் கருத்துக்களை நிலை நிறுத்தப் பயன்படுத்துகின்றனர். மனித இனத்தின் செயல்களின் எல்லா விவரங்களும் அவற்றிற்கு இட்டுச் சென்ற காரணங்களும் அவற்றை தொடர்ந்த விளைவுகளும் ஆகிய அனைத்தும் ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட அமைப்புகளுக்குள் அடக்குமாறு செய்யமுடியாது ஒரு கலாச்சாரம் வீழ்ச்சியுற்று மற்றொன்று எழுச்சியுறுதற்கு இடையில் ஏற்படும் நீண்டகால இடைவெளி அவர்கள் கவனத்தைக் கவர்ந்ததாக தெரியவில்லை. அதன் விளைவாக செயற்கையாக அமைக்கப்பட்ட ஒப்புமைகள் பொருத்தமற்ற ஒற்றுமை அம்சங்களாக ஒன்றுமில்லாமல் போய்விடுகின்றன. மேலும் கலாச்சார நிகழ்ச்சிகள் அடிப்படையில் மனித இயல்புகொண்டது. எனவே அறிவயல் உயிரியில் நிகழ்ச்சிகள் போல் ஒன்று போல் இருக்கும் தன்மையோ ஒருமைப்பாடோ கொண்ட தல்ல. ஒரு பந்தை சுவரில் எறிந்தால் அது நிச்சயம் அதே வேகத்தில் திரும்பி வரும். அதேபோல் ஒரு மனிதனை உதைத்தால் அது நிச்சயமாகத் திருப்பித்தரப்படும் என்று கூறமுடியாது. குரோஸ் சரியாக கணித்தது போல் வரலாறு திரும்பாதது மட்டுமல்ல. அதன் படைப்புகள் ஒரு கையிலிருந்து மற்றொரு கைக்கு கடத்தப்படும் பொருட்கள் அல்லது கருவிகள் போன்று சரியாக அனுப்பப்பட முடியாததும் கூட. வரலாற்றில் தெளிவாகத் தெரிவது என்னவென்றால் எல்லாப் பொருட்களும் மாற்றங்களும் உள்ளாகும் காலம் வரை நீடித்திருக்கின்றன. வரலாற்று அமைப்புகளும் சூழ்நிலைகளும் ஒரு காலத்திலிருந்து மற்றோர் காலத்திற்கு மாற்றம் பெறும் தன்மைக்கு உட்பட்டதல்ல. ஆகவே வரலாறு மீண்டும் நிகழும் தன்மை கொண்டதல்ல. அடுக்கடுக்காகத் திரண்டு தொடர்ந்து வளரும் தன்மையுடைய வரலாறு வட்டச் சுற்று முறையில் இயங்காது. வுரலாற்றாளர்கள் திரும்ப எழுதலாம் ஆனால் வரலாறு திரும்பாது.

## அலகு – IV

### வரலாற்று தத்துவம்

தத்துவஞானிகள் வரலாற்றியலில் ஆர்வம் காட்டியபோது வரலாற்றுத் தத்துவக் கருத்துக்கள் முதன்மை பெறலாயின. அவர்களுக்கு பாரம்பரிய நிகழ்ச்சிகள் போதுமானதாகத் தோன்றவிலிலை. ஏனென்றால் வரலாற்றறிஞர்கள் வெறுமனே நிகழ்ச்சிகளை விவரிக்கின்றனரேயன்றி அவற்றின் உட்பொருளை விளக்காது விட்டு விடுகின்றனர்: ஏன் அவை அவ்வாறு நிகழ்ந்தன என விளக்கிக்காட்டாது. வரலாற்றைத் தொடர்பற்ற சம்பவங்களின் இணைப்பாகவே சித்தரித்துக் காட்டுகின்றனர். மனித வாழ்க்கைக்கும் நோக்கமென ஒன்றிருந்தால் வரலாற்றிற்கும் அவ்வாறு ஒன்று இருந்தே ஆகவேண்டும். என உறுதியாக எண்ணினார். மனிதன் நல்லதொரு வாழ்க்கைப் பாதையை அமைத்துக்கொள்ள சிரமங்களை எதிர்த்துப் போராடினான். வுரலாற்றறிஞர்கள் விவரிக்கும் மக்கள் மேற்கொண்ட கடுமையான சோதனைகள் எந்தவித நோக்கமோ குறிக்கோ இல்லாமல் இலுக்க முடியாது. ஏனென்றால் இயற்கை வழிமுறைகளால்ட இறைவன் திருவருளால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை நோக்கி மனிதன் நடத்தும் பயணத்தின் பல அனுபவங்கள் இருக்க வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட அந்த அலக்கை நோக்கி வரலாற்று நிலை மாற்றங்கள் மூலம் மனிழத இனத்திற்கு வழிகாட்டும் காரணக் கூறுகள் நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் உட்பொருளை விளக்குதலே வரலாற்றிறிஞனின் கடமை வரலாற்று வழிமுறைகள், நோக்கம் அதன் திட்ட அமைப்பு ஆகியவந்றை வெளிக்கொணர்ந்து அவற்றுள் உள்ளடங்கியிருக்கும் உண்மை அர்த்தத்தை விளக்குதல் ஆகிய பணிகளுக்கு தன்னை அரிப்பணித்துக்கொள்ள வேண்டும்.

அறிவாக்கத்தின் ஒரு பிரிவு என்ற முறையில் வரலாற்றுத் தத்துவம் நிகழ்ச்சிப் போக்குகளின் மீது தன் வெல்வாக்கினைச் செலுத்தி வரலாற்றின் தத்துவ ரீதியான முக்கியத்துவத்தை ஆராய்கிறது. வரலாறு ஒரு முறையமைப்பின், திட்டத்தின்படி ஒரு நிச்சயமான இலக்கை நோக்கி இயங்குகிறது. என்ற கண்ணோட்டத்துடன் அது வரலாற்றை நோக்குகிறது. இறைவன் விருப்பம், காரணாகாரியக் கூறு இயற்பொருட்கூறு அல்லது ஏதோ ஒரு இயக்கு விசையால் முன்னரே நிர்ணயிக்கப்பட்ட இலக்கை நோக்கி வழி காட்டிச் செல்கிறது. அது தனது இயக்கு கருவியாகச் செயல்பட தலைவர்கள், நிறுவனங்கள், சமூகம், கோட்பாடுகள் ஆகியவற்றிலொன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறது. வெவ்வேறு சிநதனையாளர்கள் வெவ்வேறு பொருட்களை குறிக்கோளாகக் கொள்ளலாம். புனித அகஸ்டினுக்கு ‘அது கடவுளின் நகரமாக’ இருக்கலாம். ஹெக்கலுக்கு முழுமை பெற்ற அரசாக மார்க்சிற்கு வர்க்க பேதமற்ற சமுதாயமாக இருக்கலாம். வரலாற்றுத் தத்துவம் இத்தகைய வரலாற்று வழிமுறைகளோடு தொடர்பு கொண்ட திட்டம், நோக்கம் ஆகியவற்றை விளக்குகிறது.

### இறையியற் பொருள் விளக்கம்

கிரேக்கப் பாரம்பரிம் வரலாற்றுத் தத்துவம் என்ற பெயரை அளித்தபோது ஹீப்ரு மரபு அதற்குப் பொருள் அளித்தது. இடைக்காலத்தில் அது .றையியவ் கோட்பாடாக உருபெற்று தற்காலத்தில் உலகியற் கருத்தின்பாற்பட்டதாகக் கருதப்படுகிறது.

பண்டைய கிரீன் தத்துவப் பாரம்பிரியயத்தில் ஊறித்திளைத்தது. டயோனிசியஸ் வரலாற்றை எடுத்துக்காட்டுகளாலான தத்துவம் எனக் குறிப்பிட்டார். அதன் மூலம் வரலாற்றை அரசியல், அறநெறித் கோட்பாடுகளை விளக்கி காட்டும் தெளிவான எடுத்துக்காட்டுகளின் களஞ்சியம் எனப் பொருள் கொண்டார். பிற்காலத்தில் பல எழுத்தாளர்கள், கிரேக்க மரபு வழியாகப் பெற்ற இச்சொல்லின் உட்பொருளை விவரித்தனர். வால்டர் ராலே அனைத்து வரலாற்றின் குறி எல்லையும் குறிக்கோளும் நமது சிந்தனைக்கும் செயலுக்கும் வழிகாட்டக்கூடிய அறிவினை கடந்த கால எடுத்துக்காட்டுகளுடன் கற்றுக் கொடுப்பதேயாகும். எனக் கருத்துத்தெரிவித்துள்ளார். போலிங்புரோக் பிரபு, வரலாற்றை எடுத்துக் காட்டுகளுடன் கற்பிக்கும் தத்துவம் என வருணித்துள்ளார். ஏனெனிறால் அது ஒரு குறிப்பிட்ட உதாரணத்தின் ஆய்வின் மூலம் பொதுக் கருத்துக்களைப் பற்றிய அறிவாக்கத்தினையும் வாழ்க்கை விதிகளையும் உருவாக்குவதாகக் கருதினார். ஒரு குறிப்பிட்ட உதாரணத்தைச் சுட்டிக்காட்டி பொதுக் கருத்துக்களை விளக்குவதே வரலாற்றாசிரியனின் பணி. எது எவ்வாறெனினும், வரலாற்றுத் தத்துவம் என்ற சரியான சொல்லை பயன்படுத்தியவர் பிரெஞ்சுத் தத்துவ ஞானியான வால்டேர் ஆவார். திறனாய்வு பகுத்தாய்வினை அடிப்படையாகக் கொண்ட அறிவியல் சார்ந்த வரலாறு என்றே அதன் மூலம் பொருள் கொண்டார்.

ஹீப்ரு பாரம்பரியம் வரலாற்றுத் தத்துவத்திற்கு புதிய கருத்தினையும் முக்கியத்தையும் அளித்தது. அயலவர் படையெடுப்புகளாலும் வெற்றிகளாலும் யூதர்கள் சோதனைக்கும் கொடுந் துன்பத்திற்கும் உள்ளாக்கப்பட்டிருந்தனர். தொல்லைகள் மிகுந்த அக்காலத்தைமாறுதலுக்கு இட்டுச் செல்லும் இடைக்காலமாக எண்ணினர். தெய்வீக மீட்பர் ஒருவரின் வருகையால் தொல்லைகளிலிருந்து விடுதலை பெறும் இறுதிக் கட்டத்தை நோக்கி இட்டுச் செல்லப்படுகிறோம் என நம்பினர்.சுதந்திரமும் முன்னோற்றமுடையநிரையை நோக்கி மனித இனத்தை நடத்திச் செல்லும் வரலாற்றின் திட்ட அமைப்பு என ஹீப்ரு பாரம்பரியம் விளங்கின்றது. கிறிஸ்துவ திருச்சபை இந்த தெய்வீக போட்பாட்டை வரலாற்று வழிமுறைகளின் குறிக்கோளாகக் கொண்டது.பைபிளிள் டேனியல் ஆகமத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:"அவரது அரசு அழிந்து போகாது என்றும் நிலைத்திருக்கும்அரசு: அரவது அரசு அழிக்கபட முடியாதது" திருச்சபை வரலாற்றறிஞர்கள் குறிப்பாக புசேபியசும் புனித அகஸ்டினும் இக்கோட்பாட்டை மேலும் விவரித்து வரலாற்றின் இறுதியான திட்ட அமைப்பு கடவுளின் அரசை ஏற்படுத்துவதுதான் என்று உறுதியாக கூறுகின்றனர். கிறிஸ்துவ இறையியல் மனித வரலாற்றில் மூன்று நிலைகளிருப்பதை தெளிவாகக் சுட்டிக் காட்டியுள்ளது. அவை, ஆதிமனிதனின் வீழ்ச்சிக்கு முந்திய பேரின்பா மிகுந்த காலம், சீர்கேடு நிறைந்த காலம், மோட்ச அரசின் காலம். டீவறு வகையாகக் கூறப் போனால் பாவத்தில் வீழ்வதற்கு முந்திய காலம்,அதைத் தொடர்ந்த காலம், மீட்பின் காலம் ஆகியவையாகும். மனிதன் தனியாக விடப்பட்டால் தன் ஜென்ம பாவத்தின்று, விடுபட்டு மீட்பு பெறமுடியாது. ஆனால் சர்வவல்லமை மிகுந்தஇறைவன் தன் அளவற்ற கருணையினால் மோட்ச அரசாகிய முடிவற்ற வாழ்விற்கு அழைத்து செல்கிறார். புனித அகஸ்டின் வரலாற்றை, கடவுளின் நகரத்திற்கும், சாத்தானின் நகரத்திற்குமிடையில் நடைபெறும் போராட்டமாகவே கொள்கிறார். அதன் விளைவு

சந்தேகத்திற்கிடமின்றி கடவுளின் நகரத்தின் வெற்றியில்முடிவுறும். இடைக் காலத்தில் வரலாற்றுத் தத்துவம் கடவுளோடு கூடிய மனித உறவினை மையமாகக் கொண்டிருந்தபோது, அதுவரலாறு வரையலின் மீது மிகுந்த செல்வாக்கு கொண்டிருந்தது. வரலாற்றறிஞர்களும், வரலாற்றில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் கடவுளின் மறைவான தீட்டங்களை நிகழ்ச்சிகள் மூலம் விளக்கிக் காட்டிக் கொண்டிருந்தனர்.

## சமயஞ்சாரா பொருள் விளக்கம்

எனினும் பதினெட்டாம் நூற்றாண்டில் அறிவியலுணர்வு வளர்ச்சியடைந்ததன் விளைவாக வரலாற்றாய்வில் திறனாய்வுக் கண்ணோட்டம் வளர்ச்சியுறலாயிற்று. கடவுள் அரசசே இறுதி கதி என்ற கிறிஸ்துவக் கோட்பாட்டிற்கு எதிராக, வரலாற்று வழிமுறைகளின் நோக்கம் முழு நலன்பெற்ற சமுதாயம் என்ற சமயம் சாரா கோட்பாடு தோன்றியது. கான்டிலிருந்து டாயின்பி வரை பல்வேறு தத்துவ ஞானிகள் இக்கருத்தினை விரிவுப்படுத்தினர். ஆனால் வேறுபட்ட விளக்கக் கருத்தினை கொடுத்தனர்.

கான்ட்.ஹெக்கல் கொடுத்த விளக்கங்கள், வரலாற்றுத் தத்துவம் இறையியல் கோட்பாட்டிலிருந்து சமயஞ்சாரா கருத்திற்கு மாறிய காலத்தைப் பிரதிபலிக்கிறது. அவர்கள் கடவுளின் விருப்பம் என்பதற்கு பதிலாக பகுத்தறிவுச் செயல்முறையை வரலாற்றின் உலகளாவிய ஒழுங்குமுறையைக் குறிக்கோளாகக் கொண்டியங்கும் பகுத்தறிவு வழிமுறையிலான தனிப்பட்டோர் நலன்கள் பாதிக்கப்படலாம். ஆனால் சமுதாய நலன் பாதிக்கப்படாது. ஹேக்கல் தமது **வரலாற்றுத் தத்துவச் சொற்பொழிவுகள்** (Lectures im the Philosophy of History) என்ற நுலில் தமது கோட்பாடு விளக்கத்தை விவரிக்கிறார். வரலாற்றின் பிரதம இயக்குநராக,கடவுளின் விருப்பம் என்பதை அகற்றி, உலகளாவிய பகுத்தறிவினை அரியணையிலேற்றுகிறார். வரலாற்றின் குறிக்கோளாக கடவுளின் அரசு என்பதை அகற்றி முழு நலம் வாய்ந்த அரசினை அமர்த்துகிறார். இந்த குருப்பயிற்சி பெற்ற தத்துவ ஞானிக்கு தெய்வீகக் கோட்பாடு சமயம் சாராத கோட்பாடுகளுக்கிடையில் முரண்பாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால் பகுத்தறிவும் கடவுளின் கொடைதான் என்று உறுதியாகக் கருதுகிறார். ஒரு உலகளாவிய பகுத்தறிவு, இயற்கை உலகத்தையும் வரலாற்று உலகத்தையும் ஆட்சி புரிகிறது. இந்தப் பகுத்தறிவு, இயற்கையில் ஒழுங்காக இயங்கி வரும் பருவ காலங்களிலும் விண்கோள்களிலும் காணக் கிடக்கிறது. வரலாற்றில் அது, உரிமை அடைவதற்கு ஒழுங்கான முன்னியக்கத்தில்பிரபஞ்ச உள்ளுணர்வில் காணக்கிடக்கிறது. இவ்விதமாக, வரலாற்று உலகம் இரண்டாவது இயற்கையாக, இரண்டாவது உலகமாக, அடிப்படையில் பகுத்தறிவால் நிரிணயிக்கப்படும் ஒரே பிபஞ்சத்தின் சூழ்நிலைப் பொருத்தமாக அமைகிறது. அது கிறிஸ்துவ கோட்பாட்டின்படி கண்ணுக்கு புலனாகாதவாறு இருக்கும் கடவுள் ஆகும். அதன் விளைவாக, பகுத்தறிவு வரலாற்று வழிமுறைகளை இயக்கும்போது இறைவன் விருப்பம், அல்லது அயற்கை அருள் தயரிக்கப்பட்ட திட்டப்படி நடக்கச் செய்கிறது. வரலாற்றுத் தத்துவத்தின் செயல் இயற்கை அருளின் திட்டத்தைக்

கண்டுப்பிடிப்பதே,"கடவுளள் உலகை ஆட்சி புரிகிறார். அவரது அரசின் உள்அடக்கம், அவரது திட்டத்ததைப் புரிந்து கொள்வதே மனித இனத்தின் வரலாறு"எனஹெக்கல் குறிப்பிடுகிறார். இறைவள்', மனிதனுக்கு நல்லது எது கெட்டது எது என்று பகுத்துணரும் சக்தியான பகுத்தறிவைக் கொடுத்துள்ளார். அது அவனை முழுமை நலம் பெறும் சாலைக்கு வழிகாட்டுகிறது. இருள்மயமான கடந்த காலத்தில் கொடுங்கோன்மையும் மூடநம்பிக்கையும் மிகுந்து பகுத்தறிவு செயல்படுவதைக் கட்டுப்படுத்தியது. கடைசியாகப் பகுத்தறிவு. அத்தளைகளை அறுத்தெடுறிந்து. மனிதன் முழுமைநலம் பெறுவதை நோக்கி முன்னேறுதற்கு வழிவகுத்தது. பகுத்தறிவாற்றலின் விளைவாக மனிதன் அனுபவ வாயிலாக மேலும் மேலும் கற்றுக் கொள்கிறான். ஓவ்வொரு தலைமுறையினரும் தனது முந்திய தலைமுறையினரிடமிருந்து அறிவுக் கருவூலத்தை மரபுவழியாகப் பெற்று, தாங்களும் அத்துடன் சிலவற்றைச் சேர்க்கின்றனா். இதுவே உலகளாவிய பகத்தறிவு, அது மனிதனை கடலுளால் முன் விதிக்கப்பட்ட முழுமை நலம் வாய்ந்த அரசை நோக்கி இட்டுச் செல்கிறது. இத்தகைய முழுமை நலம் வாய்ந்த அரசில் தனியொருவரின் நலன் எல்லா தனிப்பட்ட நபர்களின் நலன்களோடு பிணைக்கப்பட்டிருக்கிறது. இது பகுத்தறிவின் மாபெரும் உருவகத்தின் முழுநிறைவு, அதை வரலாறு வெளிப்படுத்துகிறது.

சில சிந்தனையாளர்கள் வரலாற்று வழிமுறைகளுக்கு உலகளாவிய பகத்தறிவு மற்றும் தெய்வீக விருப்பத்தினைக் காரணமாகக் கூறாமல் இயற்கை சந்திகளைக் கூறுகின்றனர். ஹெர்டர், ஒரு தனிப்பட்ட ஒருங்கமைக்கும் சக்தி முழ பிரபஞ்சத்தையே இயக்குவதாகவும் வரலாற்று நிகழ்ச்சிகள் குறிப்பிட்ட சில விதி முறைப்படி செல்வதாகவும் விளக்குறார். அவர் வரலாற்றில் இயற்கை விதிகள் செயல்படுவதாகக் காண்கிறார். நாகரீகத்தின் மலர்ச்சி மலர்மலர்வதைப் போன்ற இயற்கை நிகழ்ச்சி எனக்' குறிப்பிடுகிறார். முன்னேற்றம் தவிர்க்கப்பட முடியாது ஏனெனில் அது இயற்கையானது என காம்டே கருதுகிறார். பிறப்பு, வளர்ப்பு, நலிவு, சாவு என்ற இயற்கை விதிப்படி நாகரீகம் தோன்றி, வளர்ந்து, தளர்ந்துமறைந்து போகிறது என ஸ்பெங்லர் நிரூபிக்கின்றார்.

மார்க்சும் ஏஞ்சல்சும் கம்யூனிசத்திற்கும் சார்பாக புதிய பொருள் விளக்கம் தரும் பொழுது வரலாற்றுத் தத்துவத்தின் பொருள் மேலும் மாறுதலுக்குள்ளானது. ஆவர்களுக்கு இயற்பொருள் வாதம் வரலாற்றின் முதன்மை இயக்குநராகக் காணப்படுகிறது.தீமையின் அரசிற்கும் கடவுளின் அரசிற்குமிடையில் நடைடிபற்ற போராட்டம் முதலாளி, தொழிலாளி வர்க்கத்தினரிடையே நடைபெறும் போராட்டமாக மாறியது. மார்க்கசிற்கு வரலாற்று வழிமுறைகளின் குறிக்கோள் முழுநலம் வாய்ந்த அரசு அல்ல. அனைவரும் சமமாக வாழும் வர்க்கபேதமற்ற சமுதாயம்ஆகும். இதுவே வரலாற்றின் இறுதி இலக்காக இருப்பதால் அது இனி வரவிருக்கிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் மெய்ப்பொருள் வாதக் கோட்பாட்டினா் இக்கருத்தினை வரலாற்றுப் போக்கினைக் கட்டுப்படுத்தும் பொதுவிதிகள் கண்டுபிடிக்கப் பயன்படுத்துகின்றனர். இதற்காக அவர்கள் வரலாற்று நிகழ்ச்சிகளையும் பகுத்தாய்வு செய்கின்றனர். எனினும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்குள் இது செல்வாக்கு

இழந்துவிட்டது. பொதுவிதியும் ஓர் திட்ட அமைப்பும் கண்டுபிடிப்பதற்குப் பதிலாக நிகழ்ச்சிப் போக்குகளின் விநோதத் தன்மையையும் தனித் தன்மையையும் ஆய்வதற்கு முக்கியத்தவம் கொடுக்கின்றனர்.

## படி நிலைகள், இயக்கிகள், விதிகள்

அநேக வரலாற்றுத் தத்துவ ஞானிகள், இறுதி இலக்கினை நோக்கிய வரலாற்று வழிமுறைகளின் முன்னேற்றத்தின் படிநிலைகளை விவரித்துள்ளனர். ஏற்கெனவே குறிப்பிட்டப்படி இறையியல் கோட்பாட்டினர் மூன்று படி நிலைகளை அடையாளம் கணடுள்ளனர். அவை பேரின்பத்தின் காலம், சீர்கேடுற்ற காலம், மோட்ச ரெசின் காலம், சயமஞ்சார தத்துவ ஞானிகளும் வரலாற்று வழிமுறை தன் இறுதி இலக்கை அடையுமுன் வரலாற்று வளர்ச்சியில் பல படிநிலைகளும் நடுநிலையங்களும் இருப்பதாகக் கூறியுள்ளனர்.இவ்வாறு பிரபஞ்சத் தத்துவஞானியான காம்டே, நிகழ்ச்சிகளுக்கு தெய்வீக சக்தியைக் காரணமாகக் காட்டும் இறையியல் படிநிலை, இயற்கை கூறுகளைக் காரணமாகக் காட்டும் நுண்பொருள் ஆய்வுநிலை, குறிப்பிட்ட காரணங்களைச் சுட்டிக்காட்டும் அறிவியல்படி நிலை என்று மூன்று படிநிலை வகை வகுத்துள்ளார். ஐரோப்பிய வரலாற்றில் மறுமலர்ச்சிக் காலம், சமயச் சீர்திருத்தக் காலம், அறிவியல் காலம் என்ற நிலைகள் காணப்படுகின்றன. ஹெக்கல் இதற்கு மாறாக, முன்னேற்றத்தின் பல்வேறு நிலைகளி பகத்தறிவு வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களை ஒத்திருக்கின்றன எனக் கூறுகிறார். இந்த படிநிலைகள் எவை என்று தத்துவ ஞானிகள் குறிப்பிட்டிருந்த போதிலும், இறுதி நிலை வந்துவிட்டதா இல்லையா என்பதை நிச்சயப்படுத்த முடியவில்லை. ஹெக்கலுக்கு இறுதிப்படிநிலை வந்துவிட்டது. காம்டேக்கு வந்து கொண்டிருக்கிறது: மார்க்சிற்கு அது எதிர்ப்பார்க்கப்படுகிறது.

வரலாற்று தத்துவம், ஓர் தெய்வீக சக்தி அல்லது இயற்கை சக்தி ஒரு நிச்சயமாக இலக்கை நோக்கி வரலாற்றை இயக்குகிறது எனக் கருதுகிறது. இக்கருத்து, இப்போக்கினைப் பின்பற்றுமாறு மனிதர்கள் எத்தகைய முறைகளால் தூண்டப்படுகிறார்கள் என்ற வினாவை எழுப்புகிறது. இயற்கை அருள் சில தலைவர்களை விசேடக் கருவிகளாகப் பொறுக்கி எடுமுத்து அதன் திட்டத்தை நிறைவேற்றுகிறது என்பது ஒரு கருத்து இத்தலைவர்கள் ரஷ்யாவின் மகா பீட்டரைப் போன்ற மரபுவழி அரசராகவோ, நெப்போலியன் போனப்பார்ட்டைப் போன்ற சாதாரண மானவர்களாகவோ இருக்கலாம். இம்முறையில் அத்தலைவருக்கு மனித இயல்பிற்கு அப்பாற்பட்ட சக்திகள் அளிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட பாதை வழியாக ஒன்றுமறியா மக்களை அழைத்து செல்லும் கட்டளைப் பணியும் கொடுக்கப்பட்டுள்ளது. அவன் தனது கட்டளைப் பணியை நிறைவேற்றும் போது சரியானவைகளையே நிறைவேற்றுகிறான். ஆவனை எதிர்ப்பவன் தவறானவைகளையே செய்கிறான்.லெனின் இக்கருத்தினையே கொண்டுள்ளார். சில சமயங்களில் இயற்கையருள் ஒருசமூகத்தை, நாட்டை அல்லது நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறது. ஒவ்வொரு நாட்டிற்கும் அதற்குரிய நேரம் உண்டு. அந்த நேரம் வந்ததும் பிற நாடுகள் அதற்கு வழிவிடுகின்றன.பொருளாதார, அரசியல்

பண்பாட்டுடன் கூறுகள் தேசிய உணர்வின் மூலமாக கலந்து செயல்படுகின்றன. ஹெக்கல், ஃபிச்டே, காம்டே, மார்க்ஸ் ஆகியோர் இக்கரத்தினை கொண்டுள்ளனர். இவ்விதமாக, இயற்கை அருள், யூதர்கள் அல்லது ஆங்கிலோ சாக்சன்களையோ, ஜெர்மனி அல்லது பிரான்ஸ் நாட்டையோ, முடியாட்சிஅல்லது குடியாட்சியையோ தன் கட்டளைப் பணியை நிறைவேற்றுவதற்கு கருவியாகத் தேர்ந்தெடுத்துக் கொள்வதாக நம்பப்படுகிறது.

இயற்கை அருள் ஓர் தந்திர வழி முறையை நாடுவதாக மற்றொரு கருத்து உண்டு. ஹெக்கல் அதை பகுத்தறிவிஜன் தந்திரம் எனக் சுறுகிறார். அது சமூகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனையும் சில கருத்துக்கள், இயல் பூக்கங்கள் கொண்டு தூண்டி எழுப்புகிறது. ஆதன் செயற்பாடு. ஆதன் திட்டத்தை அடைதற்கு வழி நடத்தும் தனி நபர்கள் தங்கள் சொந்த நலன்களையே நாடுவது போல் தோன்றும்: ஆனால் அவர்களையறியாமலேயே, இறையருயோ஻ இயற்கையோ வகுத்துள்ள திட்ட அமைப்பை அடைதற்கு உதவி செய்கின்றனர். இவ்விதமாக பல்வேறு சமயங்களில் இஸ்லாம் அல்லதுகம்யூனிசம் இந்த சக்தியை வழங்கியது. சமதாயம் ஒரு மாறுதலுக்கு தயாராக இருக்கும்நேரம் அல்லது ஒரு காரியத்தை நிறைவேற்றும் சமயம் வரலாம். ரேனியர் கூறுவது போன்ற நிர்ணயிக்கப்பட்ட நேரம் வரும் அச்சமயங்களில் எவ்வித சிரமமுமின்றி ஒரு காரியம் நிறைவேற்றப்படுகிறது. ஒரு நோக்கத்தை நிறைவேற்ற மனிதர்கள் தங்களையறியாமலேயே ஒரு இயக்கத்தினை உருவாக்குகின்றனர். தேவையான பழக்க வழக்கங்களை உண்டுபண்ணிக்கொள்கின்றனர். பின் இறையருள் அல்லதுஇயற்கை நிர்ணயித்த இலக்கை நோக்கி முன்னேறுகின்றனர்.

வரலாற்றுத் தத்துவ ஞானிகள் வரலாற்று நிகழ்ச்சிகள் ஏதோ ஒரு வகையான ஒழுங்கு முறையில் நடைபெறுகின்றன. என நம்புகின்றனர். இத்தகைய ஒழுங்கு முறையான சம்பவங்கள் வரலாற்று விதிகள் என அழைக்கப்படுகின்றன. பிரேஞ்சு எழுத்தாளரான ஓடிசி பாரோ மூன்று விதிகளை நிறுவ முயற்சிக்கிறார். தேசிய இனம் என்பது ஆற்றுப் பள்ளதாக்கின் படைப்பு. இயற்கை எல்லை என்பது மலை, உலகமானது எளிமையான மற்றும் சிக்கல் மிகுந்த சமுதாயங்களுக்கிடையில் ஊசலாடுகிறது. இப்பகுத்தாய்வு நாடுகளின் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. விக்கோ கடவுளர்கள் காலம், வீரர்கள் காலம், மனிதர்கள் காலம் என்ற மூன்று படிநிலைகளைக் குறிப்பிட்டுக் காட்டகிறார். இது காட்டேயின் பகுத்தாய்வான இறையியல் காலம், நுண்பொருள் ஆய்வுக் காலம், நேர்க்கட்சி அறிவியல்காலம் என்ற நிலைகளோடு தொடர்புள்ளதாயிருக்கிறது. இவற்றின் காலங்களில் நிகழும் வரலாற்று மாறுதல்களுக்கு முறையே கடவுள், வீரர்கள் மனிதர்கள் ஆகியோரைப் பொறுப்பாளியாக்குகின்றனர். இத்தேர்வாராய்ச்சி பல கால கட்டங்களில் உண்டான அறிவுவளர்ச்சியினட் ஆய்வை அடிப்படையாகக் கொண்டது. இந்த எழுத்தாளர்களின் கருத்துப்படி ஒவ்வொரு நாடும் கலாசாரமும் வரலாற்றின் வழிமுறையின் இறுதி இலக்கை இடைவதற்கு முன் ஒரே மாதிரியான தொடர்ச்சியான படிநிலையைக் கடந்து செல்கின்றன.

## தவறான வாதங்கள்

பதினெட்டாம் நூற்றாண்டு வரை வரலாற்று நிகழ்ச்சிகள், ஒரு குறிப்பிட்ட வரலாற்றுத் தத்துவக் கண்ணோட்டத்துடனேயே விளக்கப்பட்டன. பல தத்துவ விற்பன்னர்கள் வரலாற்று வழி முறைகளும் வழிகாட்டும் மறைந்திருப்பது செயல்படும் இறைவனருள், இயற்கையின் திட்ட அமைப்பு ஆகியவற்றைக் காணமுயன்றனர். ஆனால் பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து இக்கருத்து அதிகமான தாக்குதலுக்கு உள்ளானது பல வரலாற்றறிஞர்கள் அதை உள்ளி நகையாடினர். துத்துவஞானிகள் கூட அதை அலட்சியப்படத்தினர். வரலாற்று அறிவியல் தன் ஆதிக்க எல்லைகளை எல்லாப் பக்கங்களிலும் விரிவுப்படுத்திக் கொண்டிரக்கும் போதுவரலாற்று தத்துவம் பின்தங்க நேரிட்டது. என ஜி.பி.கூச் சரியாகக் கணித்துள்ளார். வரலாற்றுத் தத்துவத்தை சமூகனத் தத்துவ இயல் எதிர்த்து நினறது. அது மனித நடவடிக்கைகளை இறையருளாலோ, இயற்கை சக்தியாலோ நிரிணயிக்கப்படுகிறது. என்ற கண்ணோட்டத்தில் அல்லது மனிதக் குறிக்கோளின் படியான முடிவுகள் என்ற கரத்தில் காண்கிறது. மான்டாவில் ஆடம் ஸ்மித் ஆகியோர் மனித விருப்புகளும் பேராசைகளுமே நிகழ்ச்சிப் போக்கினை உருவாக்குகிறது. என உறுதிப்படுத்துகின்றனர். பெர்னால்டு மான்டாவில் தமது தேனிக்களின் கதை என்ற நூலில், இறையியல் கோட்பாட்டினால் பாவம் எனக் கருதப்பட்ட மனித ஆசைகள் தான், வாழ்க்கை நலம், வளம், நாகரிகம் ஆகியவற்றை கைகூடச் செய்யும் உண்மையான தூண்டுகோல்களன் என அறிவித்துள்ளார். நாடுகளின் செல்வம் என்ற நூலின் ஆசிரியரான ஆடம் ஸ்மித்தும் மனிதன் கதியை நிர்ணயிப்பதில் இறையருளின் பங்கினை மறுத்துள்ளார். செல்வந்தர்கள் தங்களின் தணியா ஆசையைப் பூர்த்தி செய்ய முயலும் போது அவர்களையறியாமலே சமூக முன்டீனற்றத்திற்கு கொடை பல வழங்கி சமூக நலத்திற்கான வாய்ப்புகளை உண்டாக்குகின்றனர். இவ்விதமாக, இந்த எழுத்தாளர்கள் நிர்ணயிக்கப்பட்டஇறுதி இலக்கை அடைய வழிகாட்டியாக ஒரு கண்ணுக்குத் தெரியாத சக்தி இருக்கிறது என்ற கருத்திற்குப்பதிலாக சாதாரண மனிதனையும் உழைப்பாளியையும், டிதாழில் வல்லுநரையும், வர்த்தகர்களையும், தாம் விரும்பியபடியான வாழ்க்கை நிகழ்ச்சிப் போக்குகளைச் செம்மைப்படுத்தும் காரணக் கூறுகள் எனக் கொள்கின்றனர்.

வரலாற்றதைத் தத்துவக் கோட்பாடுகளுக்கு எதிராக எழுப்பபடும் ஆட்சேபனைகள் பல முதலில் அது உண்டமை வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு எதிராக இருக்கிறது. ஹம்போல்ட் சரியாகக் கணித்தப்படி என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துவதே வரலாற்றின் முறையான பணி, ராங்கே கூட நடந்தவற்றை நடந்தவாறே விளக்குவதைத் தவிர வேறு நோக்கம் வரலாற்றிற்குக் கிடையாது என்று அழுத்தமாகக் கூறியுள்ளார். ஆனால் வரலாற்றுத் தத்துவமோ, இறையருளோ இயற்கை சக்தியோ நிர்ணயித்த முறையமைப்பை, திட்டத்தை கண்டுபிடிக்கும் நோக்குடன் வரலாற்றுப் போக்கின் எல்லா ஆதார மூலங்'களையும் சூழ்ச்சித்திறத்துடன் கையாளுகிறது. அது எல்லா முக்கிய நிகழ்ச்சிகளையும் தொடர்ச்சியான பல நூற்றாண்டுகளில் நடந்த பொதுவான பெரிய போக்குகளாக கருதுகிறது. புல்வேறு

நாடுகளும், ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட வழியி-லி பணிவுடன் வந்து சேர்கின்றன. என்றுவிளக்குகிறது. இது செயற்கையானது இரண்டாவதாக, இக்கோட்பாடு கற்பனையை அடிப்படையாக கொள்கிறது. உண்மை வரலாறு உண்மையாக நடந்தவைகளை உற்று நோக்குவதன் மூலம் பெறப்படுமபோது வரலாற்றுத் தத்துவம், எல்லா எதிர்கால நிகழ்ச்சிகளும் கண்ணுக்குத் தெரியாத சக்'தியஒன்றினால் ஏற்கெனவே எழுதப்பட்டுவிட்டன என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்ட கொண்டதாயிருக்கிறது. லுட்விக் மிசஸ் வஞ்சகப் புகழ்ச்சியாகக் கூறுவது போல், ஓர் சிறப்பான இறைமாட்சியால் வரலாற்றுத் தத்துவஞானி எதிர்கால நிகழ்ச்சிகள் அனைத்தும் எழுதி வைக்கப்பட்டு. அதன் திட்ட அமைப்பினையும் பொருளடக்கம் அனைத்ததையும் வெளிப்படுத்துவதல்ல என்னும் மாபெரும் எட்டின் பக்கங்களைப் புரட்டிப் படிக்கிறார். மூன்றாவதாக, தேர்ந்தெடுக்கப்பட்ட இயற்கைத் தோற்றங்களின் தனித்தொதுக்கப்பட்ட ஆய்வினை இக்கருத்து நாடுகிறது. சுமூகத்தின் பல்வேறு பிரிவுகளின் நடவடிக்கைகள் காரணமாக இடைவிடாது நடைபெறும் பெரிதும் சிறிதுமான மாறுதல்களின் படைப்பே வரலாற்று வழிமுறைகள் ஆகும். இத்தகைய சிக்கல்கள் மிகுந்த நிகழ்ச்சிகளே வரலாற்றில் வெளியிடப்படுகிறது. வரலாற்றுத் தத்துவ ஞானிகள் இதற்கு மாறாக தங்கள் கற்பனையிலுதித்த திட்டத்திற்கு ஏற்ற நிகழ்ச்சிகளையும் மனிதர்களையுமே தேர்ந்தெடுத்து, அதற்கு பொருந்தாவற்றைப் புறகணித்து விடுகின்றனர். அதன் விளைவாக அது முழு வரலாற்றையும் கொண்டதாக இல்லாமல் போய்விடுகிறது. எனவே சர். சுார்லஸ் ஒமன் வரலாற்றுத் தத்துவ ஞானிகளை வரலாற்றின் விரோதிகள் எனக் கருதியதில் வியப்பில்லை. ஜி. எம். டிரவல்யன் கூட, வரலாற்றிற்கு வரலாற்றுத் தத்துவம் என்பது தேவையில்லை எனக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இத்தகைய குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டாலும் வரலாற்றுத் தத்துவம் வரலாறு மீதும் நிகழ்ச்சிகள் மீதும் தன் செல்வாக்கினை அழுத்தமாகப் பதித்துள்ளது என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். வரலாற்றறிஞர்களட் தத்துவார்த்தக் கூறுகளில் ஆர்வம் காட்டும்போது, தத்துவஞானிகள் வரலாற்று நிகழ்ச்சிகளில் அக்கறை காட்டுகின்றனர். இத்தகைய வரலாறு தத்துவ பரஸ்பர செல்வாக்கு அவற்றை வளமுள்ளதாகவும் பல்வகைப்பட்டதாகவும் ஆக்கிற்று. இரண்டாவதாக, வரலாற்றில் உள்ளடங்கியிருக்கும் திட்ட அமைப்பு பல அறவாளிகளைக் கவர்ந்துள்ளது. வரலாற்றறிஞர்கள் அத்தகைய திட்டத்ததை ஏற்றுக் கொள்ளா விட்டாலும் அதனோடு தொடர்புறுத்தி நிகழ்ச்சிகளை விளக்க முயல்வதோடு நிகழ்ச்சித் தொடர்புந் கூறுகளைக் கண்டு பிடிக்கவும் முயலகின்றனர். அதன் விளைவாக ஒரு பரந்த கண்ணோட்டமும் ஒருங்கிணைக்கப்பட்ட ஆய்வும் வரலாறு எழுதுவதில் அதிக கவனம் பெறுகின்றன. மூன்றாவதாக, வரலாற்றின் திட்டஅமைப்புக் கோட்பாடு பல நாடுகளின் மீது தன் செல்வாக்கினைப் பரப்பி நாடுகளின் கண்ணோட்டங்களைச் செம்மைப்படுத்த எதவிற்று. கடவுள் நம்மை அவரது வரலாற்றுத் திட்ட அமைப்பை செயல்படுத்தும் கருவியாகத் தேர்நதெடுத்துள்ளார் என மக்கள் நம்பலாயினர். யூதர்கள் தங்களைக் கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்ட மக்கள் என்று உரிமை கொண்டாடினர். அமெரிக்கர்கள் தங்களை உலகின் தலைவிதியை நிர்ணயிப்பவர்கள் என உணர்ந்தனர். ஜெர்மானியர் தங்களை

வரலாற்றில்மிக உயா்ந்த பங்கினை வகிக்கவல்ல உயா் இனத்தவா் எனஎண்ணினா். நான்காவதாக, வரலாற்றின் குறிக்கோள் கோட்பாடு பல நாடுகளில் விழிப்புணா்ச்சியை உண்டுபண்ணியது. முழுமை நலம் வாய்ந்த அரசே வரலாற்றின் குறிக்கோள் என்ற ஹெக்கலின் கருத்து பிரஷியாவிற்கு வன்மையான தூண்டலாக இருந்தது. வா்க்க பேதமற்ற சமூகமே வரலாற்றின் குறிக்கோள் என்ற மாா்க்சின் விளக்கம் கம்யூனிச உலகில் நிகழ்ச்சிப் போக்குகளைச் செம்மைப்படுத்தியது.

## காா்ல் மாா்க்ஸ்

பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் ஆரம்பித்த தொழிற்புரட்சி ஐரோப்பாவில் ஒரு பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்தியது. புதிய இயந்திரங்களின் மூலமாகச் செய்யப்பட்ட பொருள் உற்பத்தி முறைகள் சமூக அமைப்பில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தின. பொருளாதார வளம் பெருகியது. ஆனால் தொழிலாளா்கள் முதலாளிகளால் சுரண்டப்பட்டனா். இந்தப் பொருளாதாரச் சுரண்டலை எதிா்த்து காா்ல் மாா்க்ஸ் என்ற ஜொ்மானியா் வரலாற்று ரீதியிலான அறிவியல் சோஷிலிசத்தின் தந்தை என்று அழைக்கப்படுகிறாா். காா்ஸ் மாா்க்ஸ் ஹெகலின் இயக்கவியலின் அடிப்படையில் வரலாற்றுக்குப் பொருளாதார விளக்கம் அளித்தாா். அதாவது பொருளாதாரக் காரணிகளே வரலாற்றின் போக்கைத் தீா்மானிக்கின்றன என்று கூறினாா் காா்ல் மாா்க்ஸ்.

**வாழ்க்கைக் குறிப்பு**

காா்ல்மாா்க்ஸ் ஒரு ஜொ்மானிய யூதா் ஆவாா். இளவயதில் போ்லினிலும், பிறகு லண்டனிலும் கல்வி பயின்றாா். வரலாறு தத்துவம் ஆகிய துறைகளில் நாட்டம் செலுத்தினாா். ஜீனா பல்கலைக் கழகத்தில் டாக்டா் பட்டம் பெற்றாா். ஹெகலின் தத்துவங்களால்ட பெரிதும் கவரப்படடாா் காா்ல் மாா்க்ஸ். 1845ம் வருடத்திலிருந்தே தொழிலாளா் இயக்கங்களை அமைத்து நடத்தத் தொடங்கினாா். எனவே அப்போது பிரான்சிலிருந்து வெளியேற்றப்பட்டாா். பின்னா் ஜொ்மனி வந்து தொழிலாளா்களின் யூனியனை நிறுவினாா்.

காா்ல் மாா்க்ஸ் தனது வாழ்வின் பெரும் பகுதியை லண்டனில் செலவிட்டாா். அப்போது ஒரு செல்வந்தரின் மகனான பிரடரிக் எங்கல்ஸ் என்பவரின் நட்பு கிடைத்து. 1848 இருவரும் சோ்ந்து பொதுவுடைமை அறிக்கையை வெளியிட்டனா். காா்ல்மாா்க்கஸ் பொருளாதாரம், சமூகவியல், வரலாற்றுத் தத்துவம் போன்ற பல துறைகளைக் கற்றாய்ந்து பல நூல்கள் இயற்றினாா். இவரது தத்துவத்தின் வறுமை மற்றும் மூலதனம் ஆகிய நூல்கள் இவருக்குப் பெரும் புகழைத் தேடித் தந்தது.

**காா்ல் மாா்க்ஷின் கோட்பாடுகள்**

காா்ல் மாா்க்ஸ் ஒரு நிா்ணயவாதி. வுரலாற்று நிகழ்முறையானது பொருளாதார உறவுகளால் நிா்ணயிக்கப்படுகிறது என்று கூறினாா். வரலாறு என்பது ஆதிகால அடிமை நிலை படைமானிய முதலாள்த்துவ நிலை சோஷலிச நிலை என்பவை வாயிலாக அரசியல், பொருளாதார,

சமுதாய வீடுபேற்றினை அடையும் நிகழ்முறை என்று கூறினார். அதாவது வரலாற்றின் போக்கு பொருளாதாரப் பின்னணியைப் பாதிக்கிறது என்று தெளிவாகக் கூறினார் கார்ல்மார்க்ஸ்.

மேலும் வார்ல் மார்க்ஸ் ‘எல்லா சமுதாயத்தின் வரலாறும் எல்லா வகுப்புப் போராட்டங்களைப் பற்றியதே’ என்று கூறினார். வர்க்கப் போராட்டங்களுக்குத் தெளிவான தொடர்ச்சியான பகுத்தறிவுப் பூர்வமான வரலாற்று விளக்கமளித்தார். ஹெகலின் இயக்கவியல் அடிப்படையில் வரலாற்றுக்குப் பொருளாதார விளக்கமளித்தார். அதற்கு ‘அறிவியல் சோஷலிசம்’ என்று பெயாட்டார். கார்ல் மார்க்ஸ் முக்கியமான கோட்பாடுகள் பின்வருமாறு:

**1)இயக்கவியல் பொருள் முதல் வாதம் (Dialectical Materialism)**

**வரலாற்**று நிகழ்ச்சிகள் பற்றியும், காலப்போக்கில் அவைகளின் மாற்றங்கள் பற்றியும், வரலாற்று மாற்றங்களுக்கான உந்துசக்திப ற்றியும், தனது இயக்கவியல் பொருள் முதல்வாத்தின் மூலம் விளக்கம் கொடுத்துள்ளார் கார்ல்மார்க்ஸ். விண்ணுலகத்தைப் பற்றி கார்ல்மார்க்ஸ் கவலைப்படவில்லை. மாறாக இந்த மண்ணுலகைப் பற்றியே கவலைப்பட்டார். பனிதனுக்கும், பொருளுக்கும் உள்ள தொடர்பை ஆராய்ந்தார். இறுதியில் முரண்பாடுகளே வரலாற்று மாற்றங்களுக்கான காரணம் என்ற முடிவுக்கு வந்தார். உதாரணமாக நிலமானிய முறை, முதலாளித்துவ முறை என்ற இரண்டு முரண்பாடுகளுடைய முறைகளுக்கிடையே ஏற்படும் மோதலின் விளைவாகவே சோஷலிசம் என்ற புதியமுறை பிறக்கிறது என்று கூறினார் கார்ல்மார்க்ஸ்.

2)**வரலாற்றுப் பொருளி முதல் வாத விளக்கம்:(Materialistic Interpretation of History)**

வரலாற்று நிகழ் முறைகள் பொருளாதார உறவுகளால் நிர்ணயிக்கப்படுகிறது என்று கூறினார் மார்க்ஸ். அவருக்கு முன்புள்ளவர்கள் கூறிய கருத்து முதல் விளக்கங்களை கார்ல் மார்க்ஸ் நிராகரித்தார். வரலாற்றுக்குப் பொருள்வாத அணுகுமுறையைக் கொடுத்தார். இதன்படி பொருளாதாரமே வாழ்க்கையின் ஆதாரம் ஆகும். அரசியல் அதிகார, தத்துவம், சமயம், கலை ஆகிய அனைத்தும் வெயல்படுவதில் பொருளியல் நலன்கள் முக்கியப் பங்கு வகிப்பதாகக் கருதினார் கார்ல் மார்க்ஸ்.

குரார்ல் மார்க்ஸ் கூற்றுப்படி முதலாளித்துவத்தில் உழைப்பாளிகள் வஞ்சிக்கப்படுகிறார்கள். சுரண்டப்படுகிறார்கள். உழைப்பாளியின் உபரி உழைப்பின் மதிப்பை அபகரித்துக் கொண்கிறது. இந்தப் பொருளாதாரச் சுரண்டலின்விளைவாகவே தொழிலாளர் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. வேலையில்லத் திண்டாட்டம் ஏற்படுகிறது. இந்த நெருக்கடிளகளின் விளைவாக முதலாளித்துவம் தோல்வியடைந்து சோஷலிசம் ஏற்படும். இறுதியில் வர்க்க பேதமற்ற கம்யூனிச அரசுஅமையும் என்றார். கம்யூனிச சமுதாயம் ஏ ஏற்பட்டவுடன் இயக்கவியல் சுழற்சி நின்று விடும் என்று கூறுகிறார். இதுவே கார்லமார்க்சின் வரலாற்றுப் பொருள் முதல்வாத விளக்கமாகும்.

**3)வரலாற்றில் வர்க்கப் போராட்டம் (Class Struggle in History)**

எல்லா சமுதாயத்தின் வரலாறும் வர்க்கப் போராட்டங்களைப் பற்றிஙயதே ஆகும்’ எஎன்பது கார்ல் மார்க்ஸின் அடுத்த முக்கியமான கோட்பாடாகும். முரண்டும் பொருளாதார நலநலன்கள்

தான் இந்த மோதல்களுக்கு காரணம் எனவும் சமுதாயத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் பல்வேறு சக்திகளின் போராட்டம்தான்வரலாற்றை முன்னியக்குகிறது என்றார் கார்ல்மார்க்ஸ். சுரண்டலற்ற வர்க்கபேதமற்ற சமூகத்தையே இறுதி நோக்கமாகக் கருதினார். இந்த வர்க்கப் போராட்டமானதுவரலாற்றில் ஆறு நிலைகளைக் கொண்'டது. ஆதிக்காலப் பொதுவுடமை,அடிமை முறை சமுதாயம், நிலமானிய முறை, முதலாளித்துவம், சோஷலிசம், கம்யூனிசம்ஆகியவையே ஆகும். ஆரம்ப காலத்திலிருந்தே சமுதாயத்தில் வர்க்கப் போராட்டம்காணப்பட்டது. முதலாளித்துவ காலத்தில் முதலாளிகள், தொழிலாளிகள் என்ற சமுதாயம் உருமாற்றம் அடைந்தது. இந்த இரண்டு சமுதாயத்திற்குமிழடயே ஏற்படும் வர்க்கப் போராட்டத்தின் வடிவங்கள் மாறி இறுதியில் வர்க்கபேதம் நீங்கிய கம்யூனிச பொதுவுடைமை சமுதாயம் ஏற்படும் என்றார் கார்ல்மார்க்ஸ். இந்த வர்க்க பேதமற்றசமுதாயத்தில் தேசியம் இருக்காது.சமயம் இருக்காது. இனப்பாகுபாடும் இருக்காது. ஏன் அரசே இருக்காது என்று உறுதிமொழி அளித்தார் கார்ல் மார்க்ஸ்.

**4)வரலாற்று வளர்ச்சியின் இயக்கு ஆற்றல்கள்**

## (Moving Porces of Historical Development)

வரலாறு என்பது மக்கள் ஆற்றலின் வெளிப்பாடாகும் என்நு கூறிகிறார் கார்ல்மார்க்ஸ். அதாவது மக்கள் சக்தியே வரலாற்று வளர்ச்சியின் இயங்கு சக்தியாகும் என்று கூறுகிறார் கார்ல்மார்க்ஸ். இந்த மக்கள் சக்தி தான் பொருள் உற்பத்தி சக்தியாகும். வரலாறு வீரர்களாலோ அல்லது மாமனிதர்களாளோ உருவாக்கப்படுவதில்லை. மாறாக நடவடிக்கைகளுக்கு அடிப்படையாக அமைவதுபொருளியல் நலன்கள் ஆகும். மக்களின் பொருளியில் நடவடிக்கைகளின் சமூக உறவுகளும் வரலாற்று மாற்றங்களும் சாத்தியமில்லை. மக்களின் ஓயாத போராட்டங்களால் தான் அடிமை முறையும், பண்ணை முறையும் ஒழிந்தன. மக்களின் போராட்டங்களே காலனி ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தன. மக்களின் ஓயாத போராட்டத்தின் விளைவாகவே முதலாளித்துவ முறைக்கு மாற்றாக சோஷலிச முறைஉருவானது. இவ்வாறு மக்களின் ஆற்றலே வரலாற்றில் இயக்கத்தின் உந்து ஆற்றலாக உள்ளது என்று விளக்கினார் கார்ல் மர்க்ஸ்.

**கார்ல் மார்க்ஸின் குறைபாடுகள்**

கார்ல் மர்க்ஸின் கோட்பாடுகள் மற்றும் அவரது கருத்துக்கள் வரலாற்றின் போக்கையே புரட்சிகரமான முறையில் மாற்றிவிடும் சக்தி வாய்ந்தவையாக இருந்தன. ஆனால் அவரது வரலாற்று தத்துவமும் திறனாய்வுக்கு உட்பட்டது ஆகும்.

1)கார்ல் மார்க்ஸ் உற்பத்தி முறையையே முக்கியக் காரணங்களாகக் கையாண்டுள்ளார். ஆனால் ஒவ்வொரு காலத்திலும் தோன்றும் மாற்றங்களை விவரிக்காமல் விட்டுவிடுகின்றனர். உண்மை என்னவென்றால் உற்பத்தி முறை அறிவாக்கத்தினாலும், அறிவியல் கண்டுபிடிப்புகளாலும் புதிய முறைகளாக மாறுகிறது.

2)மேலும் வரலாறு பொருளாதாரக் காரணங்களால் மட்டுமே ஒருவாக்கப்படுவதில்லை. அறிவாற்றல், கலையுணர்வு, சமய நம்பிக்கை, கருத்தாற்றல், தேசிய உழுச்சி போன்ற சமூகக் காரணிகளும் வரலாற்றைப் பாதிக்கும் சக்திகளாக உள்ளன.

3)காால்மார்க்ஸ் ஐரோப்பிய வரலாற்றின் அடிப்படையிலேயே தனது பொருள் முதல் விளக்க வாதத்தை உருவாக்கினார். ஆனால் அக்கோட்பாடு உலகநாடுகள் அனைத்திற்கும் ஏற்புடையதாக இல்லை.

4)கம்யூனிச சமுதாயம் அமைக்கப்பட்டவுடனேயே இயக்கவியல் சுழற்சி நின்று விடும் என்று கூறுகிறார் கார்ல்மார்க்ஸ். இதுவும் ஏற்புடையதல்ல, காரணம்சமுதாயம் இயக்கமில்லாமல் போய் விட்டால் ஒருவித தேக்கநிலை ஏற்பட்டுவிடும். இதன் விளைவாக பல புதிய பிரச்சனைகள் ஏற்படும். எனவே கார்ல்மார்க்ஸின் கம்யூனிச உலகமானது ஒரு கற்பனையானதேயாகும்.

5)பொருள் உற்பத்தி சாதனங்களைக் கட்டுப்படுத்துவதால் தான் முரண்பாடுகள் தோன்றி வர்க்கப் போராட்டம் ஏற்படுவதாக்க கூறுகிறார் கார்ல்மார்க்ஸ். ஆனால் மறுமலர்ச்சி, அறிவொளி மற்றும் 1688ல் இங்கிலாந்தில் தோன்றிய புகழ் பெற்ற புரட்சி ஆகியவை வர்க்கப் போராட்டங்களின் விளைவு இல்ல.

6)கார்ல் மார்க்ஸ் வகுத்துள்ள பொது விதிகள் ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல. மேலும் வர்க்க போராட்டத்தில் பாட்டாளி சமுதாயம் தான் வெற்றி பெறும் என்று அவர் கூறுவது வரலாற்று விரோதப் போக்காகும். ஆப்படி அவர் கூறுவது வரலாற்று முன்விதிக் கோட்பாடாகும். மேலும் பாட்டாளிகளின் சர்வாதிகாரம் ஒரு பொதுவுடைமைச் சமுதாயத்தை ஏற்படுத்தும் என்று அவர் கூறியதும் தவறு என்று நிருபிக்கப்படட்டுவிட்டது. காரணம் கம்யூனிசம் உருவான ரஷ்யாவிலேயே அக்கருத்துக்கள் தோல்வியடைந்துள்ளன.

## அலகு - V

## வரலாற்று ஆய்வு

**ஆய்வு என்பது ஏதேனும்** ஒரு பொருள் கருத்து அல்லது நிகழ்ச்சி ஆகியவற்றின் உண்மை நிலையை கவனத்துடனும் விடா முயற்சியுடனும் ஆய்ந்தறிதல் ஆகும். ஆய்வு என்ற தமிழ் சொல்லுக்கு நிகரான ஆங்கிலச் சொல் 'Research' என்பதாகும். இந்த ஆங்கிலச் சொல் 'Recerche' என்ற பிரெஞ்சு வார்த்தையிலிருந்து பெறப்பட்டது ஆகும். இந்தப் பிரெஞ்சு வார்த்தைக்கு "தேடுதல்' என்பது பொருளாகும். தேடுதல் என்றால் ஒரு பொருளை அணுகி நுணுக்கமாக ஆராய்ந்தறிவதேயாகும். ஊண்மையைக் கண்டறிய மேற்கொள்ளப்படும் முயற்சியே ஆய்வாக மலர்கிறது.

**ஆய்வின் முக்கியத்துவம்**

இன்றைய ஆய்வாளர்கள் எந்தப் பொருளையும், கருத்தையும், நிகழ்ச்சியையும் எடுத்தவுடனேயே உண்மையானவை என்று ஏற்றுக்கொள்வதில்லை. அவைகளை ரோயும்போது தான் நயம் பெறுகின்றது. அவைகளில் காணப்படும் குறைகள் பகுத்தாராயப் படுகின்றன. உண்மை நிலை கண்டு கொள்ளப்படுகிறது. இதுவே ஆராய்ச்சியாகும்.

பொதுவாக ஆராய்ச்சி செய்வதற்கு நல்ல மனப்பக்குவமும் பொறுமையும் வேண்டும். ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்ற ஆவல் வேண்டும். ஆய்வு செய்ய நல்ல நோக்கும், செய்யும் திறனும் வேண்டும். அடிப்படை ஆதாரங்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் கடமை உணர்வு வேண்டும். இப்படி முறைப்படி ஆராய்வதால் பல புது உண்மைகள் வெளியாகலாம். புதிய உண்மைகள் மூலம் பல புதிய கோட்பாடுகள் உருவாகலாம். புதிய கோட்பாடுகள் மூலம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட கருத்துக்கள், வேறுபட்ட விளக்கங்கள் எவையேனும் இருந்தால் அவையும் உண்மை நிலையடைகின்றன. வேறுப்பட்ட விளக்கங்கள் எவையேனும் இருந்தால் அவையும் உண்மை நிலையை அடைகின்றன. எனவே ஆராய்ச்சித் திறன் வளர்கிறது. பல புதிய படைப்புகள் பெருகின்றன.

**வரலாற்று ஆய்வு**

வரலாற்று ஆய்வு என்பது கடந்த காலப் பொருள் கருத்த அல்லது நிகழ்ச்சிகள் சம்பந்தமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மைகளை மறு பரீசிலனை செய்வதும், புதிய உண்மைகளை கண்டுபிடிப்பதும் கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகளுக்கு புதிய விளக்கங்கள் அளிப்பதும் ஆகும். மேலும் வரலாற்றாய்வு ஆதாரங்களின் அடிப்படையில் கடந்த கால நிகழ்வுகளை நிகழ்ந்தவாறு புதுப்பிக்க முனைகிறது.

வரலாற்று ஆய்வு இருவகைப்படுகிறது. முதலாவது உடன்பாட்டு ஆய்வு இரண்டாவது எதிர்மறை ஆய்வு ஆகும். அறிவியல் ஆய்வு முறையின் மூலம் புதிய உண்மைகளையும், கருத்துக்களையும், விளக்கங்களையும் கொடுப்பது உடன்பாட்டு ஆய்வு ஆகும். அடுத்து ஏற்கெனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மைகள், ஊகங்கள், விளக்கங்கள், விதிகள் ஆகியவற்றை ஆதாரப்பூர்வமாக தவறென நிருபிப்பது எதிர்மறை ஆய்வு ஆகும்.

“பழங்காலம் விட்டுச் சென்ற பொருட்கள் கருத்துக்கள் நிகழ்ச்சிகள் ஆகியவற்றை பற்றிய மூல ஆதாரங்களை ஆராய்வதும் அந்த ஆதாரங்களின் முன்னின்று அக்காலத்தை ஆராய்வதே வரலாற்றாய்வு” என்று எல்டன் என்பலர் கூறுகிறார்.

“தனித் தன்மையுடைய கடந்த கால நிகழ்வுகளைக் கண்டறிந்து அவற்றிற்குப் பொருள் விளக்கம் கூறி அவற்றிற்கிடையேயான தொடர்புகளையும் தெளிவுபடுத்துவதே வரலாற்று ஆய்வு ஆகும்” என்று கூறுகிறார் முர்டிக்’ என்பவர்.

எல்லோரும் வரலாற்றாவில் ஈடுபடுகின்றனர். எனவே நாமும் வரலாற்றாய்வு செய்வோம் என்று நினைப்பது தவறாகும். வுரலாற்றாய்வு செய்வதற்கு மனபக்குவம், உள்ளுணர்வு, கறைபடா ஆர்வம் வேண்டும். வரலாற்றாய்வு செய்வதற்கு ஏதேனும் ஒரு தலைப்பையோ, நபரையோ, பொருளையோ எடுத்துக்கொண்டால் போதும். அனைத்து காலத்தையும் எடுத்து ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை.

தற்போது வரலாற்றாய்வில் எவருக்கும் எந்தத் துறையிலும் எத்தகைய ஏகபோக உரிமையுமில்லை. ஒரு துறையில் ஒரு தலைப்பில், ஒரு நபரில், ஒரு பொருளில் ஆராய்ச்சி மேற்கொண்டவர் அனைத்தும் ஆராய்ந்தவர் என்று கருத வேண்டிய அவசியமி இல்லை. மேலும் அந்தப் பொருளில் அவர் ஒருவர் தான் அதிகாரப்பூர்வ ஆய்வாளராக இருக்க முடியும் என்பதுமில்லை.

**வரலாற்று ஆய்வுப் பட்டங்கள்**

வரலாற்றாய்வு செய்வதற்கு பட்டங்களோ நற்சான்றிதழ்களோ அவசியமில்லை. ஆராய்ச்சி செய்வதற்கேற்ற உள்ளார்வம் மட்டும் இருந்தாலே போதும். ஆனால் தற்காலத்தில் பல்கலைக் கழகங்களில் வரலாற்று ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. எம்.ஃ.பில் என்ற ஆராய்ச்சி பட்டம் பெறுவதற்கு ஒரு மாணவர் இளங்கலை வரலாறு முடித்து முதுகலை வரலாற்றுப் பாடத்தில் ஐம்பத்தைந்து சதவீதம் மார்க் எடுத்து தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். எம்.ஃ.பில் என்பது ஒரு ஆண்டு காலப் படிப்பாகும். படிப்பின் இறுதியில் குறைந்தது எண்பது பக்கம் கொண்ட ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பிக்க வேண்டும்.

பிஎச்டி என்ற ஆராய்ச்சிப் பட்டம் பெறுவதற்கு மேற்கண்ட தகுதி படைத்த வரலாற்று மாணவர்கள் மூன்றாண்டுகள் ஏதேனும் ஒரு கல்லூரியிலோ, பல்கலைகழகத்திலோ சேர்ந்து படிக்க வேண்டும். முடிவில் குறைந்தது இருநூற்றி ஐம்பது பக்கம் கொண்ட ஆய்வேடு சமர்ப்பிக்க வேண்டும்.

ஆராய்ச்சியில் டாக்டர் பட்டம் பெற்றவர்கள் மேலும் ஆராய்ச்சி செய்து Post-Doctoral பட்டம் பெறுவதற்கு பல்கலைக்கழக மானியக் குழு நிதி உதவி செய்கிறது. மேலும் கல்லூரிகளில் பணிபுரியும் வரலாற்றாசிரியர்கள் ஆய்வு செய்வதற்கு நிதி உதவி செய்கிறது. சிறிய ஆராய்ச்சித் திட்டத்திற்கு ஐம்பதாயிரம் ரூபாய் வரையிலும் பெரிய ஆராய்ச்சித் திட்டத்திற்கு மூன்று லட்சம் ரூபாய் வரையிலும் நிதி உதவி அளிக்கிறது.

இவ்வாறு தற்காலத்தில் வரலாற்றாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. வரலாற்றாய்வுகள் நமது முன்னோர்கள் செய்துள்ள சாதனைகளின் எல்லையை விரிவுபடுத்தி அந்தத் துறையில் மேலும் மேலும் புதிய கருத்துக்களைப் புகுத்துகின்றன என்பதில் சந்தேகமில்லை.

## ஆய்வாளரின் முன்தேவைகள்

வரலாற்று ஆராய்ச்சியை மேற்கொள்ளும் ஒருவர் ஆராய்ச்சி செய்வதற்கான பல தகுதிகளை பெற்றிருக்க வேண்டும். ஆய்வு செய்வதற்கான குண இயல்புகள் அவரிடம் காணப்பட வேண்டும். ஆய்வின் நோகக்கம் பரப்பெல்லை போன்றவற்றைத் நிறைவேற்ற முடியும். தனது வரலாற்றாராய்ச்சியின் இறுதியில் அவர் பழுதபடாத, கறையற்ற இதுவரை யாரும் வெளியிடாத ஒரு புதிய உண்மையை வெளியிட வேண்டும். ஒரு ஆய்வால் கீழ்க்கண்ட முன்தேவைகள் அல்லது தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

**1.வரலாற்றாய்வில் ஆர்வம் வேண்டும்:**

முதலாவதாக வரலாற்றாய்வில் ஈடுபடும் வரலாற்றாளருக்கு ஆர்வம் வேண்டும். ஆய்வை உண்மையாகவே நேசிக்க வேண்டும். விருப்பத்துடன் ஆய்வில் ஆடுபட வேண்டும். அப்போது தான் ஆதாரங்களை சேகரித்துத் தனது ஆய்வு முடிவுகளை குறிபிட்ட காலத்தில் வெளியட முடியும். ஆர்வமில்லாத யாரும் வரலாற்றாய்வு செய்வதில் ஆடுபட்டால் இயுதியில் தோல்வியையடைய நேரிடும்.

**2)பகுத்தாய்வு திறனாய்வுத்திறன் பெற்றிருக்க வேண்டும்.**

**வரலாற்று ஆராய்ச்சியாளர்** தனது ஆய்வுக்காக சேகரிக்கப்பட்ட சான்றுகளை அறிவியல் முறையில் பகுத்தாய்வு செய்யும் திறன் பெற்றிருக்க வேண்டும். சான்றுகளின் காணப்படும் உண்மையை நோக்கி ஆராய வேண்டும். நான்றுகளை ஒப்பிட்டு பார்த்து திறனாய்வு செய்ய வேண்டும். அவர் பயன்படுத்தும் சான்றுகள் எல்லாமே நம்பிக்கை குரிதாகவும் அனைத்து விபரங்களைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

**3)வரலாற்று அறிவு வேண்டும்**

வுரலாற்றில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் வரலாற்றுப் போக்குகள், வரலாற்று மனிதர்கயைளப் பற்றிய அறிவு ஒரு ஆராய்ச்சியாளருக்கு அவசியம் தேவை. தான் எடுத்துக் கொண்ட ஆராய்ச்சி தொடர்பான வரலாற்று நிகழ்ச்சிகளைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். மேலும் அராய்ச்சிக் காலத்தில் நிலவிய சூழ்நிலைகளையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். எனவே வரலாற்று ஆராய்ச்சியாளருக்கு வரலாற்று அறிவு கட்டாயம் தேவை.

**4)நேர்மையும், நிதானமும் வேண்டும் :**

வுரலாற்றாராய்ச்சியாளர் நேர்மையும் நிதானமும் உடையவராக இருக்க வேண்டும். கடந்த கால உண்மைகளை வெளிக் கொண்டு வரும் கடமை ஆராய்ச்சியாளருக்கு உண்டு. எனவே விரைவாக ஆராய்ச்சியை முடிக்க வேண்டும் என்று எண்'ணினால் அது தேவையான உண்மைகளை வெளிப்படுத்த முடியாமல் போய்விடும். எனவே உண்மைகள் கிடைக்கும் வரை காத்திருந்து நிதானமாக ஆய்வில் ஆடுபடவேண்டும். வரலாற்றாளர் ஆய்வை எவ்வளவு காலம்

மேற்கொண்டார் என்பது முக்கியமல்ல. தனது ஆய்வில் எவ்வாறு துல்லியமாக முடிவுகளை எடுத்துரைத்தார் என்பதே முக்கியமாகும்.

**5)நடுநிலை நோக்கு வேண்டும்:**

இது ஒரு ஆய்வாளருக்கு வேண்டிய முக்கியத் தேவையாகும், ஆய்வை மேற்கொள்ளும் போது சுயநோக்குக் கருத்துக்களுக்கு இடம் அளித்து விடுதல் கூடாது. வரலாற்று ஆய்வில் விருப்பு வெறுப்பு இடம் இல்லை. அதேபோல கூட்டிக் குறைத்து எழுதுவதற்கும் இடமில்லை. வரலாற்று நிகழ்ச்சிகளையும் மனிதர்களயைும் சான்றுகளின் அடிப்படையில் நடுநிலையுடன் மதிப்பீடு செய்து உண்மையில் நடந்தவற்றையே உழுத வேண்டும். எப்பக்கமும் சாராதவராக இருக்க வேண்டும்.

**6)சான்றுகளின் தன்மையைக் கண்டறியுமி திறன் வேண்டும்:**

வரலாற்றாய்வாளர் தான் சேகரித்த சான்றுகளின் இயல்பான தன்மையைக் கண்டறிய வேண்டும். தனது கருத்துக்களுக்கும் முடிவுகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்க கூடாது. மூல ஆதாரங்களின் அடிப்படையிலேயே கருத்துக்களையும் வழிமுறைகளயைும் முடிவுகளையும் தரவேண்டும். எந்தக் கருத்தையும் தான் எடுத்ததாக வெளியிடக் கூடாது. ஒரு நிகழ்ச்சிக்குப் பிறர் தரும் கருத்துக்களையும் ஆய்ந்தறிய வேண்டும். மற்றவர்களின் கருத்துக்களை மறுக்கவோ, வெறுக்கவோ கூடாது. குறைசொல்ல வேண்டிய இடத்திலும் பேற்ற வேண்டிய இடத்திலும் தைரியமாக கூற வேண்டும்.

**7)வலுவான உளவியல் தன்மை வேண்டும் :**

வரலாற்றாய்வை மேற்கொள்ளும் ஒரு வரலாற்றாய்வாளருக்கு சில அடிப்படையான உளவியல் தன்மைகள் வேண்டும். முதலாவது ஆதாரங்களைச் சேகரிக்கும் போது சோர்வடையக் கூடாது. ஆய்வில் ஏற்படும் வெறுப்புக்களையும் நெருக்கடிகளையும் தாங்கிக் கொண்டு முன்செல்ல வேண்டும். இப்படிப்பட்ட உளவியல் மனப்பான்மை ஒரு ஆய்வாளருக்கு அவசியம் தேவை.

**8)நெகிழ்ந்து கொடுக்கும் தன்மை வேண்டும் :**

வரலாற்றாய்வில் தனது புதிய கண்டுபிடிப்புகளுக்கு ஏற்றவாறு தனது கண்ணோட்டத்தையும் மாற்றிக் கொள்ளும் நெகிழ்வுத் தன்மை ஒரு வரலாற்றாய்வாளருக்கு அவசியம் தேவை. நெகிழ்ந்து கொடுக்காத த்னமையைக் கொண்டிருந்தால் ஆய்வில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படாது.

**9)கற்பனை வளம், மொழி நயம் பெற்றிருக்க வேண்டும் :**

வுரலாற்றாய்வாளர் நல்ல கற்பனை வளத்தையும் மொழிநயமும் பெற்றிருக்க வேண்டும். அப்போது தான் தனது ஆய்வுக் கருத்துக்களை வரலாற்று உணர்வுடனும் சிறப்பான மொழி நடையிலும் படைக்க முடியும். ஆய்வுக் கருத்துக்களைப் படிப்பவர்கள் சலிப்படையாமல் இருக்கும் விதமாக கற்பனை வளமும் மொழி நயத்துடனும் கலந்து வழங்க வேண்டும். ஆனால் அதேநேரம் இந்தக் கற்பனை வளத்திலும் மொழி நடையிலும் உண்மையை பலியிட்டுவிடக் கூடாது. கவனமாக இருக்க வேண்டும்.

**10)ஆய்வுமுறை பற்றிய நடைமுறைத் திறமை வேண்டும் :**

பொதுவாக ஆராய்ச்சியைப் பற்றிய அனைத்து உண்மைகளையும் நடைமுறைகளயைும் வரலாற்றாய்வாளர் தெரிந்து வைத்திருக்க வேண்டும். சரியான தலைப்பைத் தேர்ந்தெடுத்தல் தேவையான, போதுமான அளவு சான்றுகளைச் சேகரித்தல் தற்காலிகக் கோட்பாட்டை உருவாக்குதல், திட்டமிடுதல் அடிக்குறிப்பு எழுதுதல் ஆய்வுக் கட்டுரை வடிவாக்கம் போன்ற அனைத்து நடைமுறைகள் பற்றிய உண்மைகளைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

மேற்கண்ட முன் தேவைகளை எல்லாம் பெற்றிருக்கும் ஒரு ஆராய்ச்சியாளர் மிகவும், எளிதில் குறிப்பிட்ட காலத்தில் தனது ஆராய்ச்சியை நிறைவு செய்து கொள்ள முடியும் என்பதில் சந்தேகம் இல்லை.

## ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுத்தல்

வரலாற்றாய்வைச் செய்வதற்கு உரிய தகுதிகளையுடைய ஆய்வாளர் தனது ஆய்வுக்குத் தேவையான தலைப்பைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுப்பது என்பது அவ்வளவு எளிதான காரியமில்லை. எந்தத் தலைப்பை எந்த அடிப்படையில் தேர்வு செய்வது என்று தடுமாற்றம் ஏற்படும். பழங்காலமா, இடைக்காலமா, நவீனகாலமா என்று ஆய்வுத் தலைப்பின் காலம் பற்றி முடிவு எடுக்க முடியாது. எனவே நல்ல ஒரு தலைப்பைத் தேர்ந்தெடுப்பதில்தான் ஆய்வின் வெற்றியே அமைந்துள்ளது. எனவே ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுக்கும் போது கீழ்க்கண்ட முக்கியமானவைகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**1)ஆய்வு வழிகாட்டியின் ஆலோசனையைப் பெற வேண்டும்:**

வரலாற்று ஆராய்ச்சியாளர் தனது அராய்ச்சியைத் தொடங்கும் முன்பு எப்பொருள் பற்றி ஆய்வு செய்வது என்று நிர்ணயித்துக் கொள்ள வேண்டும் இதுவே ஆயுவுத் தலைப்பைத் தேர்ந்தெடுப்பதாகும். ஆராய்ச்சி செய்யும் மாணவர் தனது ஆய்வு வழிகாட்டியுடன் கலந்து ஆலோசித்து தலைப்பைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது நல்லது. குாரணம் வழிகாட்டிகள் அறிவும் ஆற்றலும் மிக்கவர்களாக இருப்பார்கள். அவரது அறிவுரை மிகவும் பயனுள்ளதான இருக்கும் மாணவருக்கு முறையிரவக் கற்பித்து எடத்துக் கொண்ட பொருளின் எல்லையை நிர்ணயித்து அவ்வப்போது அவ்வாராய்ச்சியால் உழும் விரச்சனைகளைப் பற்றி விவாதித்து ஆராய்ச்சியாளருக்கு உதவுவது தான் வழிகாட்டியின் அலுவலாகும். ஏனைய ரோய்ச்சி அலுவல்களை மாணவரே செய்ய வேண்டும்.

**2)தலைப்பு தெளிவானதாக இருக்க வேண்டும் :**

வரலாறு ஆய்வாளரால் தேர்ந்தெடுக்கப்படும் தலைப்பு தெளிவானதாக இருக்கவேண்:டும். காலவரன் முறையில்லாத, கருத்து தெளிவில்லாத தலைப்பைத் தேர்ந்தெடுத்தால் ஆய்வும் தெளிவில்லாமல் போய்விடும். எனவே ஆய்வுத் தலைப்பு எல்லா அம்சங்களிலும் தெளிவடையதாக இருக்க வேண்டும்.

**3)சிறுதலைப்பாக இருக்க வேண்டும்.**

ஆய்வோரின் திறமைக்கு தகுந்த சிறு தலைப்பாக தேர்வு செய்தாலே போதுமானது ஆகம். அதில் தனது முழுக் கவனத்தையும் வெலுத்தி அநிதத் தலைப்புக்கு நீதி அளித்தாலே போதுமானது. ஆரம்பத்தில் எளிதான தலைப்புகளை மேற்கொண்டு மேலே செல்ல செல்ல பெரும் பிரச்சனைகளை ஆய்வு செய்தால் நல்ல பலன் கிடைக்கும். ஆய்வு நுணுக்கங்களை நன்கு அறிந்து செயல்பட வேண்டுமானால் சிறிய தலைப்பைத் தேர்ந்தெடுப்பதே சிறந்தது ஆகும்.

**4)தலைப்பின் பரப்பெல்லை வரையறுக்கப்பட வேண்டும் :**

பொருள் தேர்வான பிறகு தான் எடுத்துக் கொண்ட தலைப்புக்கு எல்லை வகுக்க வேண்டும். அப்போது தானி ஆய்வாளர் தடம் மாறாமலும் திசை மாறாமலுட' ஆய்வு செய்ய முடியும், காலம், இடம், இயலிபு ஆகியவற்றை தலைப்புடன் நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும். அப்போது தான் ஆராய்ச்சி குறித்த காலத்தில் முடிவு பெறும்.

**5)கிடைக்கும் சான்றுகள் அடிப்படையில் ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுக்க வேண்டும் :**

தான் எடுக்கப் போகும் ஆய்வுத் தலைப்புக்குப் போதுமான சான்றுகள் உள்ளனவா என்பதை உறுதி செய்து கொண்ட பின்னரே தலைப்பைத் தேர்ந்தெடுக்க வேண்டும். சான்றுகள் குறைவாகக் கிடைத்தால் நீண்ட காலக் கட்டத்தையுடை தலைப்பை எடுக்கலாம். சான்றுகள் அதிகமாக்க கிடைத்தால் ஒரு சிறு காலகட்டத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். சான்றுகள் போதுமானவைகளாக மட்டும் இருந்து விட்டால் போதாது. புல்வகைப்பட்டதாகவும் இருக்க வேண்டும். அகழ்வாய்வு, கல்வெட்டு நாணய, இலக்கிய சான்றுகள் அனைத்தும் தடையின்றிக் கிடைக்க கூடியதாக தலைப்பு அமைய வேண்டும்.

**6)ஆய்வாளரின் மனநிலையைப் பொறுத்து தலைப்பு இருக்க வேண்டும் :**

பொதுவாக ஆய்வில் ஈடுபடும் ஆய்வாளரின் மனநிலையைப் பொறுத்தே தலைப்பு அமைய வேண்டும். அவர் விருப்பு வெறுப்புப்படி எந்த தலைப்பையும் எடுத்து ஆராய்ச்சி மேற்கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும். தலைப்பை ஆய்வோர் மீது திணிக்கக் கூடாது அப்படித் திணித்தால் ஆராய்ச்சியின் மீது ஆய்வாளருக்கு விருப்பம் இல்லாமல் போய்விடும்.

**7)தலைப்பு நெகிழ்வுத் தன்மையுடையதாக இருக்க வேண்டும் :**

தேர்ந்தெடுக்கப்படும் தலைப்பு நெகிழாத்தன்மை கொண்டதாக இருக்கக் கூடாது. காரணம் நாம் எதிர்பார்த்த அளவில் போதுமான சான்றுகள் கிடைக்காமல் போய்விடலாம். எனவே கிடைத்த சான்றுகளுக்கு தகுந்த அளவில் தலைப்பைத் திருத்தவோ, மாற்றம் செய்யவோ வேண்டும். எனவே அப்படி மாற்றம் செய்யக் கூடிய வகையில் ஆய்வுத் தலைப்பு தேர்ந்தெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். துலைப்பு நெகிழ்வு தன்மை கொண்டிருந்தால் இப்படிப்பட்ட மாற்றங்களைத் தலைப்பில் செய்து கொள்ள முடியும்.

**8)வரலாற்றுக்கு பயனுள்ள தலைப்பாக இருக்க வேண்டும் :**

துலைப்பு குறுகிய எல்லை உடையதாயினும் அதன் உட்கருத்தினட் சிறப்பினை வெளியிட்டாலே போதுமானது. வரலாற்றுக்குப் பயனுள்ளதாக இருந்தாலே போதும். வருங்காலத்துக்கு எதையும் இட்டுச் செல்லாத எந்த ஆராய்ச்சியும் உலகில் இல்லை.

வரலாற்றியவின் முடிவில் மற்றவர்களுக்குப் பயன்படும் விதத்தில் ஏதேனும் ஒரு பொதுக் கோட்பாட்டினை விளக்கி வெளிப்படுத்துவதாக தலைப்பு அமைவது நல்லது.

**9)நடைமுறைக்கு சாத்தியப்பட்ட தலைப்பாக இருக்க வேண்டம் :**

தேர்ந்தெடுக்கப்படும் ஆய்வுத் தலைப்பு குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க கூடியதாக அமைய வேண்டும். அத்துடன் ஆய்வாளரின் நிதி ஆதாரத்தின் அடிப்படையில் அமைய வேண்டும். அதிக பொருட் செலவை ஏற்படுத்தும் அதிக கால அவகாசம் பிடிக்கும் தலைப்புக்களை தேர்ந்தெடுக்கவே கூடாது.

**10)சிறப்புத் தன்மையுடைய தலைப்பைத் தேர்நதெடுக்க வேண்டும்:**

பொதுவாக ஆராய்ச்சிக்காக தேர்ந்தெடுக்கப்படும் தலைப்பு சமுதாய தேவைகளை மையமாகவைத்து தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.அத்துடன் பொருளாதார தொலைநோக்கு சமுதாயக் கடமைகளை நிலைநாட்டுதல் ஆகியவற்றுக்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டும். இவ்வாறு பொது நலத்தின் அடிப்படையில் ஆய்வுத் தலைப்புகள் தோந்தெடுக்கப்பட வேண்டும்

ஆய்வுத் தலைப்பை தேர்வு செய்தல் என்பது ஆய்வாளருக்கு விடுக்கப்பட்ட ஒரு சோதனையே ஆகும். இந்தச் சோதனையை திறமையுடன் செய்தார் என்றால் வெற்றி நிச்சயம் கிடைக்கும். எப்படிப் பட்ட தலைப்புகளைத் தேர்நதெடுக்க வேண்டும். என்பதை நினைவில் கொள்ளும் ஆய்வாளர் எப்படிப்பட்டத் தலைப்புகளைத் தேர்ந்தெடுக்கக் கூடாது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். சர்ச்சைக்குரிய சிக்கல், நிறைந்த ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்ட தலைப்பு, சான்றுகள் இல்லாத தலைப்பு பண்பாடு சமயம் போன்ற பரப்பு எல்லை அதிகமான தலைப்புகள் நிதிவவசதி மற்றும் காலக் கெடுவை மீறும் ஆய்வுத் தலைப்புக்களைத் தேர்வு செய்வதை தவிர்க்க வேண்டும். தமக்கு வேண்டிய பொருத்தமான தலைப்பினை தேர்நதெடுத்தல் ஒரு சிறப்புக் கலையாகும். இதன் முதற்படியாகிய தேர்வுக் கலையில் ஆய்வு செய்பவர் வல்லவராக இருந்தால் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் பிற ஆய்வு நடவடிக்கைகளிலும் வல்லவராகி விடுவார். எனவே ஆய்வாளரின் வெற்றிக்கு ஆய்வுத் தலைப்பைத் தேர்வு செய்வதே முதற்படியாகும்.

## சான்றுகள் சேகரித்தல்

ஆய்வுக்கான தலைப்பைத் தீர்மானம் செய்து கொண்ட பின் அந்த ஆராய்ச்சிக்குத் தேவையான சான்றுகளைச் சேகரிக்க வேண்டும். இது வரலாற்று ஆய்வின் இரண்டாவது முக்கிய கட்டமாகும். எடுத்துக் கொண்ட பொருளுக்குத் தேவையான மூலச்சான்றுகளை ஒரு துப்பறிஜவாளரைப் போன்று அலைந்து சேகரிக்க வேண்டும். மூலச் சான்றுகளைச் சேகரிக்கும் முறை தனித்தன்மை வாய்ந்தஅறிவியல் ஆகும். அதாவது ஒரு அய்வாளர் தனது ஆய்வுக் கட்டுரையை எழுதுவதற்கு தேவையான சான்றுகள் எவையென்று தீர்மானித்தல், கண்டுபிடித்தல் திரட்டுதல் வகைப்படுத்துதல் ஆகிய பணிகளை செய்ய வேண்டும். வரலாற்றுச் சான்றுகளே ஆய்வுக் கட்டுரை எழுதுதற்கான மூலப்பொருள் ஆகும்.

**தற்காலிக கற்பனைக் கோட்பாடு : Hypothesis**

தற்காலிக கற்பனைப் கோட்பாடு சான்றுகளை சேகரிக்க வழிக்காட்டியாக அமைகிறது. தற்காலிகக் கற்பனை கோட்பாடு என்பது வரலாற்று ஆராய்ச்சிக்கு ஆதாரமாகத் தற்காலிகமாக மேற்கொள்ளப்படும் ஊகக் கருத்து ஆகும். இந்த ஊகக் கோட்பாட்டின் அடிப்படையில் தான் வரலாற்று ஆய்வுப் பொருள் வரையறுக்கப்பட வேண்டும். மேலும் இது ஆய்வு எந்த திசையை நோக்கி செல்ல வேண்டும் என்பதையும் வரையறுக்கிறது. ஆய்வாளரின் கால விரயத்தை இது தடுக்கிறது.

மேலும் இந்தக் தற்காலிக கற்பனைக் கோட்பாடு எத்தகைய சான்றுகளை எந்த அளவுக்கு தேடித் திரட்டுவது என்பதை தீர்மானிக்கப் பெரிதும் உதவுகிறது. ஆனால் ஆய்வுக்கான சான்றுகளைச் சேகரிக்க இது ஒரு தற்காலிகமான அணுகுமுறையே ஆகும்.

**சான்றுகளின் தன்மை**

வரலாற்றாய்வுக்கான மூலப் பொருளான சான்றுகள் பல தன்மைகளைக் கொண்டவைகளாக உள்ளன. பொதுவாக இந்தச் சான்றுகள் வரலாறு வார்ந்ததாகவோ அல்லது வரலாறு சாராததாகவோ அமைகின்றன. சான்றுகளின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு அவைகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1.கடந்த கால மனிதர்கள் விட்டுச் சென்ற ஆயுதங்கள், கருவிகள், பாண்டங்கள், நாணயங்கள், வீட்டுச் சாமான்கள், சிற்பங்கள், ஓவியங்கள், நினைவுச் சின்னங்கள் போன்றவை பொருள் சான்றுகள் என்று சொல்லப்படுகிறது. இவை பொதுவாக வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைப் பற்றி அறிய உதவுகின்றன.

2.கடந்தகால நிகழ்ச்சிகளுடன் தொடர்புடைய பழக்கவழக்கங்கள், ஒழுக்க நெறிகள் சமூகக் கட்டுப்பாடுகள் சமய நெறிகள், நம்பிக்கைகள், ர்ராணக் கதைகள் போன்றவைகள் பொருளல்லாத சான்றுகள் எனப்படும். இவைகளை நாம் தொட்டறிய முடியாது.

3.மூன்றாவது எழுத்துச் சான்றுகள் ஆகும். இந்த எழுத்துச் சான்றுகளே ஆய்வாளருக்குப் பெரிதும் உதவுகிறது. இந்த எழுத்துச் சான்றுகள் பல மொழிகளில் இருக்கலாம். இவைகள் தான் நம்பத் தன்மை கொண்டவை. இவைகள் தான் ஆவணங்கள் என்று அழைக்கப்படுகிறது. வரலாற்று குறிப்புகள், காலவரன்முறைக் குறிப்புகள், பதிவேடுகள் பொன்றவை எழுத்துச் சான்றுகளுக்கு உதாரணங்களாகும்.

**சான்றுகளின் பாகுபாடுகள்**

வரலாற்று சான்றுகளற் பொதுவாக இரு வகைப்படும். அவை மூலச் சான்றுகள் அல்லது முதல்நிலைச் சான்றுகள் இரண்டாம் நிலைச் சான்றுகள் ஆகும். சிலவகைச் சான்றுகள் மூன்றாம் நிலைச் சான்றுகள் எனவும் பாகுப்படுத்தப்படுகிறது.

1) **மூலச் சான்றுகள் (Primary Sources)**

மூலச் சான்றுகளே வரலாற்று நிகழ்ச்சிகளின் நேரடிச் சாட்சியங்களாகக் கருதப்படுகிறது. இவை வரலாற்று நிகழ்ச்சிகளுடன் நேரடித் தொடர்புடையோர் எழுதிய குறிப்புகளாக இருக்க வேண்டும. பழங்காலச் சுவடிகள, தொர்பொருட்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள் பட்டயங்கள்,

நாணயங்கள், அரசாங்க ஆவணங்கள், பயணக் குறிப்புகள் போன்றவை மூலச் சான்றுகளாகக் கருதப்படுகிறது. வரலாற்றாய்வாளர் மூலச் சான்றுகள் .இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். மூலச்சான்றுகள் வைத்திருப்போரை அணுகும் முறைகளை அறிந்து கொள்ள வேண்டும். மூலச் சான்றுகள் எந்த வகையில் அமைந்துள்ளன என்பதையும் உணர்தல் அவசியம். வேணட்டிய மூலச் சான்றுகளை நிதானமாகச் சேகரித்து முறைப்படுத்தி விளக்கம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**2)இரண்டாம் நிலைச் சான்றுகள் (Secondary sources)**

இரண்டாம் நிலைச் சான்றுகள் மூலச் சான்றுகளைப் பயன்படுத்தி பிற்காலத்தவரால் அல்லது பிறரால் இயற்றப்படுவது ஆகும். இவை வரலாற்று நிகழ்ச்சிகளுடன் நேரடித் தொடர்புடையவை அல்ல. இவை மறைமுக அத்தாட்சிகளாகக் கருதப்படுகிறது. வாழ்க்கை வரலாறுகள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவை  இரண்டாம் நிலை சான்றுகள் ஆகும்.

இரண்டாம் நிலைச் சான்றுகள் வைத்து எழுதப்படும் நூல்கள் மூன்றாம் நிலைச் சான்றுகள் ஆகும். இவை முக்கியத்துவம் இல்லாத சான்றுகள்' ஆகும்  இந்த மூன்று வகைப்பாகுபாடுகள் தவிர வெளிநாட்டுச் சான்றுகள், ஒள்நாட்டுச் சான்றுகள் என்றும் பாகுபடத்தப்படுகின்றன.

**சான்றுகளின் வகைகள்**

சான்றுகள் பொதுவாக மனித நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டவை என்றும், மனித நடவடிக்கை சம்பந்தப்படாதவை என்றும் வகைப்படுத்தப்படுகிறது. ஆனால் சான்றுகள் பெரும்பாலும் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்படுகின்றன. அவை வருமாறு:

1) தோல்பொருள் 2) மானுடவியல் சான்றுகள் 3)நாணயச் சான்றுகள் 4) தொல்லெழுத்துக் கலைச் சான்றுகள் 5) இலக்கியச் சான்றுகள் 6) கல்வெட்டுக்கள், செப்பேடுகள் 7) வெளியார் விட்டுச் செலுலும் குறிப்புகள், 8) அரசு கடிதப் போக்குவரத்துகள் 9) சுவடியகத்தே தொகுக்கப்பட்டிருக்கும் அறிக்கைகள் 10) சுயசரிதைகள்.

வுரலாற்றில் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு வகைச் சான்றுகள் அதிகமாக இருக்கும். தொல்பொருள் சான்றுகளே பண்டைக் காலத்து வரலாற்றினை அறிய மிகவும் பயனுடையதாக உள்ளன. தொல்பொருள் வசான்றுகளில் பழங்காலக் கருவிகள், நினைவுச் சின்னங்கள் போன்றவை அடங்கும். கல்வெட்டுகளும், சாசனங்களும் இடைக்கால வரலாற்றை அறிய மிகவும் உதவுகின்றன. நவீன கால வரலாற்றை அறிவதற்கு நாட்குறிப்புகள், தனியார் கடிகதங்கள், அரசு கடிதங்கள், சுவடிக் குறிப்புகள், வரலாற்று நூல்கள் போன்றவை பயன்படும். இந்தச் சான்றுகளைப் பயன்படுத்தும் முறையும் அவைகளின் தன்மைக்கேற்ப வேறுபடும்.

**சான்றுகளின் சேகரித்தலும், பதிவு செய்தலும்**

ஆய்வுப் பணியின் தொடக்கத்திலிருந்து முடிவு வரையில் சான்றுகளைச் சேகரிப்பது தொடர்ச்சியாக நடைபெறும் பணியாகும். இந்த பணியின் பெரும் பகுதி ஆய்வுக் கட்டுரை எழுதத் தொடங்கும் முன்னரே முடிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனாலும் ஆய்வுக் கட்டுரை எழுதும் பணி தொடங்கிய பின்பு இடைவெளிகளை நிரப்பவும் வேறுபல அம்சங்களுக்கு

விளக்கம் பெறவும் சான்றுகள் சேகரிக்கும் பணி தொடர்ந்து நடைபெற வேண்டும். மூலச்சான்றுகளையே முதலில் சேகரித்துக் கொள்ள வேண்டும். பின்னர் அது தொடர்பாக வெளியிடப்பட்ட நூல்களிலிருந்து ஆதாரங்களைச் சேகரிக்க வேண்டும்.

சான்றுகள் சேகரிக்கும் போது ஆவணங்களும் நூல்களும் ஊராளமாகச் சேகரிக்கப்படுகின்றன. இவைகளில் பொருத்தமான சான்றுகள் எங்கிருக்கின்றன என்று சான்று கண்டுபிடிப்பது அவ்வளவு எளிதான காரியமில்லை. எனவே எழுத்துச் சான்றுகளின் அகர வரிசைத் தொகுப்பு அட்டவணை வழிகாட்டி வெளியீடுகளின் கால அட்டவணை, கையேடுகள் போன்றவற்றைப் பார்ப்பது அவசியமாகும்.

**அட்டை முறை : Card System**

தற்காலத்தில் வரலாற்றாய்வு திட்டமிட்டு முறைப்படி ஆராயப் படுவதால் ஆய்வியல் முறைகளும் வழிகளும் விரிவடைந்துள்ளன. நூல்களையும், பத்திரங்களையும் பட்டயங்களையும், ஆவணக் குறிப்புகளையும் படித்து பதிவு செய்ய அட்டை முறை பின்பற்றப்படுகிறது. இந்த முறை மூலம் காலம் வீணாவது தடுக்கப்படுகிறது. அவ்வப்போது சேகரித்த குறிப்புகளை அட்டையில் எழுதி வேண்டிய இடத்தில் ஒழுங்காக வைத்தால் மிகுந்த பயன் கிடைக்கும். மேலும் குறிப்புகளின் தன்மையை, காலத்தை, வேறுபாட்டைப் பொறுத்து வேறுபட்ட வண்ணங்களில் அட்டைகளைப் பயன்படுத்தலாம். துலைப்புக்கு தொடர்பான இதர குறிப்புகளையும் திரட்டிக் கொள்ளலாம். இவ்வித அட்டை முறை குறிப்பிட்ட காலத்தில் ஆராய்ச்சியை முடிக்க உதவியாக உள்ளது.

அட்டைகள் 3” X 3” அல்லது 3” X 5” அளவுள்ள அட்டைகளை வெட்டி வைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு அட்டையிலும் புத்தகத்தின் எண், ஆசிரியர் பெயர், நூலின் பெயர் , பதிப்புகளின் எண்ணிக்கை, நூல் வெளியிடப்பட்ட இடம், ஆண்டு ஆகிய குறிப்புகளை எழுதி வைத்துக் கொள்ள வேண்டம். மேலும் இந்த அட்டையில் பொருள் சுருக்கம் பற்றிய கருத்துக்களைக் குறித்து வைத்துக் கொள்ளலாம். இப்படி அட்டைமுறை மூலம் சேகரித்த சான்றுகளைப் பதிவு செய்வதால் தேவையற்ற தகவல்களை நீக்க முடிகிறது. மேலும் அடிக்கடி பயன்படுத்தலாம். ஆய்வு முடிவில் நூல் பட்டியல் தயார் செய்வதற்கு இந்த அட்டை முறை மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

மேற்கண்ட முறைப்படி சான்றுகள் சேகரித்தும், பதிவு செய்தும் முறையாக லழிமுறைகளைப் பின்பற்றி ஆய்வை மேற்கொண்டால் ஆராய்ச்சியாளரின் முயற்சி வீண் போகவில்லை. குறிப்பிட்ட காலத்தில் ஆராய்ச்சியை முடித்து விடலாம்.

## வரலாற்று நடுநிலை நோக்கு

ஒரு வரலாற்றாளர் வரலாற்றை வரையும் போது உண்மையை, நடந்ததை உள்ளவாறே வரைய வேண்டும். பாரபட்சமில்லாமல் நடுநிலையுடன் வரைய வேண்டும். உள்ளத்தில் தன்னியல்பாகத் தோன்றும் கருத்துக்கள், பாவனைகள், எழுச்சிகள், விருப்பு, வெறுப்பு

ஆகியவை அவரது கூற்றுகளைப் பாதிக்ககூடாது. இதுவே நடுநிலை நோக்கு அல்லது பொருள் நோக்கு எனப்படும். வரலாற்று ஆய்வு செம்மையாகவும், சீரிய முறையில் நடைபெறவும் இந்தப் பொருள் நோக்கு மிகவும் அவசியமாகும். வுரலாற்று அறிவியலின் தந்தை என்று அழைக்கப்படும் ஜெர்மானிய வரலாற்று அறிஞர் ராங்கே கநல்ல உதாரணமாகத்அ திகழ்ந்தார். அவரது கருத்துப்படி ஒவ்வொரு வரலாற்று உண்மையும் தனித்தனியே திறனாய்வு மூலம் உறுதி செய்யப்பட வேண்டும். மேலும் ஒவ்வொரு வரலாற்று உண்மையும் அதை எழுதுபவரின் சுயநோக்கு இல்லாமல் இருக்க வேண்டும் என்றார்.

**பொருள் நோக்கு முறையின் முக்கியத்துவம் :**

வரலாற்று வரைவியலில் பொருள் நோக்கு முறை கீழ்க்கண்ட பல வகைகளில் தேவை உடையதாகிறது.

1)முதலாவதாக பொருள் நோக்கு முறையில் எழுதப்பட்டால் தான் உண்மையான வரலாற்றை புரிந்து கொள்ள முடியும். ஒரு வரலாற்றிஞர் பிற மனிதர்களின் வரலாற்றை எழுதுகின்ற போது அறநெறி முறைகளைப் பின்பற்ற வேண்டும். நேர்மையான அறிவுப் போக்கிளை கடைபிடிக்க வேண்டும். இந்த அடிப்படையில் எழுதுகின்ற போது உண்மையான வரலாற்றை அறிந்து கொள்ள முடியும். எனவே பொருள் நோக்கு மிகவும் தேவையாகும்.

2)வரலாறு ஒரு அறிவியல் பாடமாக மாற்றம் அடைந்துள்ளது. இந்த நிலையில் உண்மையை உள்ளபடியே எழுத வேண்டும். இதற்கு பொருள் நோக்கு அடிப்படைத் தேவையாகும். வுரலாற்றில் பொருள் நோக்கு என்பது நடுநிலையைப் பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும். ஏனெனில் நடுநிலை நோக்கு வரலாற்று வரைவியலின் உயிர் மூச்சாகும்.

3)வரலாறு நம்பகத்தன்மையை உடையது என்று நிருபிக்கும் வகையில் இருக்க வேண்டும். இதற்கு பொருள் நோக்கு மிகவும் தேவையாகும். வுரலாற்றாய்வில் ஒருவர் ஈடுபடும் போது ஏராளமான ஆதாரங்களை ஆராய வேண்டியுள்ளது. எல்லாச் சான்றுகளையும் ஆராய்வது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. எனவே தேவையானவற்றைத் தேர்ந்தெடுத்து பொருள் நோக்குடன் வரலாறு எழுதப்பட வேண்டும். சான்றுகளைப் பகுத்தாயும் போது எப்பக்கமும் சாராமல் முறைப்படுத்த பொருள் நோக்கு உதவுகிறது.

4)பொருள் நோக்குதான் வரலாற்று உணட்மையைக் கண்டுபிடிப்பதற்கான ஒரே நேர் வழியாகும். மேலும் இது வரலாற்றாளரின் தார்மீக கடமையை வலியுறுத்துகிறது. அழுத்தமாகக் கூறினால் பொருள் நோக்கு வரலாற்று வரைலவியலில் நியாயத்தையும், நேர்மையையும் ஒழுக்கத்தையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

**பொருள் நோக்குடன் எழுதுவதற்கு இருக்கும் தடைகள்**

வரலாற்று வரைவியலில் பொருள் நோக்கு முறை மிகவும் முக்கியமானது ஆகும். இவற்றை பின்பற்றி எழுதுவது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. பொதுவாக ஒரு வரலாற்றை எழுதும் போது அதை எழுதும் வரலாற்றாளரின் விருப்பு, வெறுப்பு, பழக்கவழக்கங்கள், கருத்துக்கள், ஏற்றுக் கொண்ட கடமைகள் ஆகியவற்றின் பிரதிபலிப்புகள் அதில் காணப்படுகிறது. இவைகள் பொருள் நோக்குடன் எழுதுவதற்குத் தடைகளாக

உள்ளன. இவ்வாறு வரலாற்றாளரின் சுயநோக்கு பெரும் தடையதக உள்ளது. இந்தத் தடைகளை கடந்தே வரலாற்றாளர் எழுத வேண்டும்.

1)முதலாவது, ஆய்வு பொருளைத் தேர்ந்தெடுப்பதில் சுயநோக்கு தலையிடுகிறது. ஆய்வதற்காக வரலாற்று நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுக்கும் போது வரலாற்றாளர் தனக்குப் பிடித்த, தனது நலன்களுக்கு உகந்த தலைப்பையே தேர்ந்தெடுக்கிறார். இதுவே நடுநிலை நோக்கிற்கு தடையாக உள்ளது.

2)ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுத்த பின்பு தேவையான சான்றுகளைச் சேகரிக்க வேண்டும். மொத்தத்தில் சான்றுகளைச் சேகரித்து வைத்துக் கொண்டு அதைத் தன் விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் பரிசீலனை செய்து, அதன் அடிப்படையில் தேவைப்படும் சான்றுகளை எடுத்துக் கொள்கிறார். எனவே சான்றுகளை தெரிந்தெடுத்துக் கொள்வதில் சுயநோக்கு காணப்படுகிறது.

3)அடுத்து வரலாற்று நிகழ்ச்சிகளின் தன்மையைபட் பரிந்து கொள்ளாமல் வரலாற்றாசிரியர் குழப்பத்திற்குள்ளாகலாம். இது வரலாற்றாளரின் அறியாமையால் ஏற்படுகிறது. மேலும் தான் அறிந்ததை வேண்டுமென்றே கூட திரித்துக் கூறுவதால் பிழைகள் நேரலாம். இது வரலாற்றாளரின் ஒழுக்கக்கேட்டினால் ஏற்படுவது ஆகும்.

4)வரலாற்றை தவறாக எழுதுதல் மூலச் சான்றுகளை கற்காமையால் ஏற்படும். அல்லது மூலச் சான்றுகளை தாமே படிக்காமையாலும் பிறர் எழுதியவற்றை சரிபார்க்காமையாலும் ஏற்படலாம். ஆனால் வரலாற்றை எழுதுபவர் சில ஆதாரக் கோட்பாடுகளை மனதில் வைத்துக் கொண்டு அதன் அடிப்படையில் விவரங்களைத் திருத்திக் கூறலாம். எனவே வரலாற்றாளரின் கொள்கைகள் பொருள் நோக்குடன் எழுதுவதற்குத் தடையதக உள்ளது.

5)சான்றுகளைப் பொருள் விளக்கம் செய்வதற்கு வரலாற்றறிஞர் ஆய்வுப் பொருளை ஏதேனும் ஒரு கண்ணோட்டத்துடன் தான் அணுக வேண்டும். சமூக பொருளாதார, அரசியல் போன்ற பொதுவான முறையில் அணுகவேண்டும். ஆனால் வரலாற்றாளரின் சொந்த விருப்பு வெறுப்பு இதிலும் தலையிடுகிறது.

6)வரலாற்று விளக்கங்கள் எல்லாமே ஊக அடிப்படையில் தான் கொடுக்கப்படுகிறது. அவைகளை ஊகங்களின் விரிவாக்கம் என்றும் கூறலாம். ஆனால் ஊகங்கள் வரலாற்றின் எதிரிகளாகும். ஊகங்கள் பொருள் நோக்குடன் எழுதுவதற்கு இருக்கும் பெரிய தடைக் கற்கனாகும்.

7)வரலாறு கலை நயத்துடன் எழுதப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது. எனவே கற்பனை கலந்து இலக்கியக் கவர்ச்சியுடன் எழுதப்படுகிறது. எனவே அந்தக் கலை உணர்வும் நடுநிலை நோக்குடன் எழுதுவதற்குத் தடையாக உள்ளது.

8)வரலாற்றாளரின் நாட்டுப் பற்று, கொள்கைப் பிடிப்பு, அரசியல் கொள்கைகள், சாதி, சமய, இனப்பற்று மனப்பான்மை ஆகியவைகளால் அவரது பொருள் நோக்கு பாதிக்கப்படலாம்.

பொருள் நோக்குடன் எழுதுவதற்கு இவ்வளவு தடைகள் உள்ளன. இவற்றையெல்லாம் நீக்கிவிட்டே வரலாற்றாளர் எழுத முற்பட வேண்டும். இதற்கு ஒரு வரலாற்றாளருக்கு சில முன் தேவைகள் இருக்க வேண்டும். முதலாவது வரலாற்றாளருக்கு சில முன் தேவைகள்

இருக்கவேண்டும். முதலாவது வரலாற்றாளர் தனது ஆய்வுக்கான அனைத்துச் சான்றுகளையும் திரட்டி திறனாய்வு செய்ய வேண்டும். அவருக்கு ஆரொக்கியமான அறிவியல் மனப்பான்மையும் நேர்மையான சுய கட்டுபாடும் இருக்க வேண்டும். தினாய்வு செய்யும் திறமையும் இருக்க வேண்டும். உண்மையை மட்முமே எழுத வேண்டும் என்ற வரலாற்று உணர்வு இருக்க வேண்டும்.

**சுய நோக்கு (Subjectivity)**

சுயநோக்குஎன்பது ஒருவரின் உள்ளுணர்வு சார்ந்த அகநிலையாகும். ஒரு மனிதனின் உள்ளத்தில் தன்னியல்பாக தோன்றும் கருத்துக்கள் விருப்பு, வெறுப்பு மனப்பான்மை, பற்று, பாசம், அறியாமை ஆகிய உணர்ச்சிகள் காரணமாக சுயநோக்கு உருவாகி வெளிப்படுகிறது. சுயநோக்கு வரலாற்றில் அதை எழுதிய வரலாற்றாளரின் சுயநலமும், சொந்த மதிப்பீகளுமே தலைதூக்கி நிற்கும். இவ்வித சுயநோக்கானது ஒழிக்கப்பட வேண்டம். ஒரு வரலாற்றாளர் சுயநோக்கிற்கு அப்பாற்பட்டு எழுதப்படும் வரலாறே உண்மையான வரலாறாக அமையும்.

சுய நோக்கு என்பது முற்றிலும் ஒழிக்கப்பட்டு விடமுடியுமா என்பதுதான் முக்கியப் பிரச்சனையாகும். சுயநோக்கினை ஒரு வரலாற்றாளர் முற்றிலுமாக களைந்துவிட முடியாது. காணரம் சுயநோக்கு என்பது மனப்பான்மை சம்பந்தப்பட்டது. எனவே மனப்பாற்கினை ஒழித்தால் தான் சுயநோக்கினை தவிர்க்க முடியும். எந்த மனிதனும், எந்த வரலாற்றாளனும் தன் உள்ளம், தன் மனப்பான்மை போன்றவற்றை அவ்வளவு எளிதில் களைந்து விட முடியாது. ஒரு மனிதனின் எண்ணங்கள், கருத்து தொகுதி, விருப்பு வெறுப்புகள் என்பவையெல்லாம் அவன் பிறப்பிலிருந்தே சில சமயங்களில் பாரம்பரியமாகவே கூட ஏற்பட்டு விடக் கூடும். மேலும் சூழ்நிலை கல்வியும் கூட மனப்பான்மையை பாதிப்பனவாக அமையும். எனவே சுயநோக்கினை முற்றிலும் ஒழிப்பது இயலாத காரியமாகும்.

வரலாற்றில் சுயநோக்கு ஒழிக்கப்படத்தான் வேண்டுமா என்ற கேள்வியும் எழுகிறது. ஏனெனில் வரலாற்றாளர் தனது சொந்தக் கருத்துக்கள், சொந்தக் கோணத்திலிருந்து வரலாற்றை எழுதாவிட்டால் அந்த வரலாற்றிற்குத் தனித்தன்மை இருக்காது என்று சொல்லப்படுகிறது. வேறுப்பட்ட காரணங்கள் சொல்லப்படாவிட்டால் வரலாறு வளராது என்றும் அதில் சுவை இருக்காது என்றும், இறுதி உண்மை புலப்படாது என்றும் சொல்லப்படுகிறது. சுயநோக்கினைக் கட்டுப்படுத்த உண்மையான நியாயமான கருத்து வேறுபாட்டுடன் நிறுத்திக் கொண்டால் அதனால் தவறு ஏற்படாது. இவ்வாறு சுயநோக்கினை ஒருவராலும் களைந்து விட முடியாது. அது ஒழுங்காகப் பயன்படுத்தப்பட்டால் வரலாற்றுப் பொருள் நோக்கை பாதிக்காது என்று கூறலாம்.

ஒரு வரலாற்றாளர் உள்ளதை உள்ளபடி சொல்ல வேண்டும் என்பதை நாம் ஏற்றுக் கொள்வதால் அவருக்கு வரலாற்று நிகழ்ச்சி, செய்கை, ஆகியவை பற்றி என்ன கருத்து தோன்றுகிறதோ அதையும் வெளிப்படையாகக் கூற வேண்டும் என்று மைக்கேல் ஓக்ஷாட் என்ற அறிஞர் கூறுகிறார். எனவே சுயநோக்கு தவிர்க்கப்பட முடியாதது ஆகும்.

வரலாறு பொருள் நோக்குடன் எழுதப்பட வேண்டம் என்பதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. வெற்றிகரமான வரலாற்றாளராக உயர்வதற்கு பொருள் நோக்கு, பகுத்தாராய்தல்,

திறனாய்வு ஆகிய பண்புகளை வளர்த்தல் இன்றியமையாதது ஆகும். பொருள் நோக்குடன் வரலாறு வரையப்பட வேண்டும். என்பதில் வரலாற்றுத் தத்துவ ஞானிகள் அதிக அக்கறை கொண்டுள்ளனர். பொருள் நோக்கு முற்றிலும் கடைபிடிக்க முடியாது என்ற கருத்தும் உள்ளது. ஆனால் எவ்வளவு அயலுமோ அவ்வளவு கடைபிடிக்கப்பட வேண்டும். அதேபோல சுயநோக்கு முஜவதும் ஒழிக்கப்பட முடியாத ஒன்று. சில எல்லைக்குள் அடங்கி நடக்குமாறு அதைக் கட்டுப்படுத்த முடியும்.

## சான்றுகளைத் திறனாய்வு செய்தல்

வரலாற்றாய்வாளரால் பலவகைப்பட்ட சான்றுனள் சேகரிக்கப்படுகின்றன. இவை எல்லாமே உண்மையான சான்றுகளாகத் தான் இருக்க வேண்டும். எனபதில்லை. சில சான்றுகளில் குறைகள் இருக்கலாம். எனவே சான்றுகளைத் திறனாய்வு செய்யாமல் அப்படியே ஏற்றுக்கொள்ளுதல் தவறு. வுரலாற்று ஆய்வில்சான்றுகளின் மீது சந்தேகம் கொள்வது தான் அறிவு வளர்ச்சியின் ஆரம்பம் ஆனும். சுான்றுகளை திறனாய்வு செய்து சரிபார்த்து மதிப்பீடு செய்ய வேண்டும். ஒவ்வொரு தகவலையும் கூர்ந்து கவனித்து அதன் உண்மைத் தன்மையையும் நம்பத்தன்மையையும் உறுதி செய்து கொண்டே பின்னரே அந்தச் சான்றுகளை ஏற்றுக் கொள்ளவோ நிராகரிக்கவோ செய்ய வேண்டும். இப்படிச் சான்றுகளின் உண்மைத் தன்மையை நம்பத்தன்மையை உட்கருத்தை அறிய ஆய்வாளர்கள் பயன்படுத்தும் முறையே ‘திறனாய்வு செய்தல்’ ஆகும். திறனாய்வு செய்வது என்பது அறிவியல் பூர்வமாக மேற்கொள்ள வேண்டிய கலை ஆகும். அதுவும் விதிமுறைகளுக்கு உட்பட்டே திறனாய்வு செய்ய வேண்டும்.

திறனாய்வு செய்வது இரண்’டு வகைப்படும். அவை புறத்திறனாய்வு, அகத்திறனாய்வு என்பதாகும். புறதத்திறனாய்வில் சான்றுகளின் வெளிவிபரங்களும், அகத் திறனாய்வில் சான்றுகளின் உள்விவரங்களும் மதிப்பிடப்படும்.

## புறத்திறனாய்வு (External Criticism or Heuristics)

சுான்றுகளின் நம்பத் தன்மையையும் உண்மை தன்மையையும் கண்டறிவது தான் புறத்திறனாய்வு என்பதாகும். அதாவது எல்லா ஆவணங்களும் நம்பத்தக்கது அல்ல என்ற ஐயப்பாடு ஏற்படுவதால் தான் புறத்திறனாய்வு முக்கியத்துவம் பெறுகிறது. மூலச்சான்றுகளைப் பலர் பயன்படுத்துவதாலும் காலங்கள் பல கழிவதின் காரணமாகவும் அதில் பல குறைபாடுகள் ஏற்பட்டு விடுகிறது. எனவே வரலாற்றாய்வாளர் தவறான சான்றுகளை உண்மையென்று நம்பிவிடாமல் முன்னேச்சரிக்கையாகச் செயல்பட புறத்திறனாய்வு உதவி செய்கிறது.

புறத்திறனாய்வில் கீழ்க்கண்ட மூன்று கருத்துக்கள் மதிப்பிடப்படுகின்றன.

1)முதலாவது ஆவணமானது டூலச் சான்றைப் போல் அப்படியே உள்ளதா என்பதை சரிபார்த்தல் ஆகும். இதை அந்த ஆவணத்தை உருவாக்கியவரின் மொழி, கொள்கை ஆகியவற்றின் அடிப்படையிலும், அதிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகளை வைத்துஒப்பிட்டுப் பார்த்தும் தெரிந்து கொள்ளலாம். இதற்கு 'நூல் திறனாய்வு '(Textual Criticism) என்று பெயர்.

2)இரண்டாவது அந்த ஆவணத்தை ஆக்கியது யார் என்று சரிபார்த்தும் கொளவது ஆகும். இதற்கு அந்த ஆசிரியரின் கையெழுத்து, மொழி, நடை மற்றும் கருத்துக்களை வெளிப்படத்தும் முறை ஆகிறவற்றை வைத்துத் தெரிந்து கொள்ளலாம். அதற்கு 'ஆசிரியர் தன்மையை சரிபார்த்தல்' ( Verification of authorship) என்று பெயர்.

3)மூன்றாவது, ஆவணத்தின் காலம், அது எழுதப்பட்ட இடம், நிகழ்ச்சிகள் நடந்த காலத்திற்கும் ஆவணத்தின் ஆசிரியர் வாழ்ந்த காலத்திற்கும் இடையே உள்ள தொடர்பு ஆகியவற்றை அறிவது ஆகும். பழ்'டைக்கால ஆவணங்களில் காலத்தை சரிபார்ப்பது மிகவும் கடினமான ஒன்றாகும். மொழி வளர்ச்சியின் படிநிலைகளை உறுதி செய்வதின் மூலமும், ஒரே கால நிகழ்ச்சிகளை ஒப்பிட்டுப் பார்ப்பதின் மூலமும் இக்குறைப்பாட்டை ஓரளவு சரி செய்ய முடியும்

**1)ஆவணம் எழுத்ப்பட்ட காலத்தை நிர்ணயம் செய்தல் : (Time)**

குாலம் குறிக்கப்படாத ஆதாரம் வரலாற்று ஆய்வுக்கு உபயோகப் படாத ஒன்றாகும். எனவே ஆதாரற்களின் காலத் நிர்ணயிக்கப்படுவது வரலாற்று ஆய்வில் சிறப்பிடம் பெறுகிறது

1.சில நேரங்களில் கிடைக்கும் ஆவணங்கள்' எந்த சகாப்தத்தைச் சேர்ந்தது என்று தெரிநற்தாலே போதுமானது. (உ.ம்) சமுதாய வரலாறு பற்றிய ஆவணங்கள். ஏனென்றால் சமுதாய மாற்றங்கள் ஒரே நாளில் ஏற்படுவது அல்ல. எனவே பரந்த அளவிலான காலத்தைக் குறிப்பிட்டால் போதுமானது.

2.ஒருசில நிர்வாக நடவடிக்கைகள், நீதித்துறை நடைமுறைகள் மற்றும் எழுத்து முறைகள் ஒரு நூற்றாண்டை அல்லது ஒரு பகுதியை அல்லது ஒரு வம்சத்தைச் சேர்ந்தது என்று கூறலாம். உதாரணமாக சில இலக்கியங்களைக் குறிப்பிடும் போது 'இவை சங்க காலத்தை சேர்ந்தவை' என்று கூறலாம். அதே சமயம் பாபருக்கும் இப்ராஹிம் லோடிக்கும் நடந்த பானிபட் போர் பதினாறாம் நூற்றாண்டில் நடைபெற்றது என்று கூறக் கூடாது. சரியான ஆண்டு மற்றும் தேதியைக் கூறவேண்டும்.

3.மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாற்றை எழுதும் ஒரு ஆசிரியருக்கு காந்தி எழுதிய கடிதங்கள் முக்கிய ஆதாரமாகும். ஆனால் அந்தக் கடிதங்களில் தேதி குறிப்பிடப்படாமல் இருந்து விட்டால் அவை உபயோகமற்றதாகிவிடும். ஆனால் சமகால நிகழ்ச்சிகளின் அடிப்படையில் அந்தக் கடிதங்களுக்கான காலத்தை அந்த ஆசிரியர் கண்டுபிடிக்க முடியும். ஆனால் மத்திய கால, பழங்கால ஆவணங்களில் இவ்விதம் கால நிர்ணயம் செய்ய முடியாது.

4)ஒரு சில ஆவணங்களில் காணப்படும் குறிப்புகளை அடிப்படையாக வைத்து அதன் காலத்தை நிர்ணயிக்க முடியும். உதாரணமாக கிழக்கிந்திய கம்பெனியின் ஆவணங்களில் பாளையக்காரர்களுடன் போரில் ஆடுபட்டுக் கொண்டிருக்கும் போது என்ற குறிப்புகள் காணப்படுகின்றன. ஆனால் இப்படி தேதி குறிப்பிட்ப் படாவிட்டாலும் போர் நடந்த ஆண்டு எல்லோருக்கும் தெரியும் என்பதால் அந்த ஆவணத்தின் காலத்தை சரியாக நிர்ணயித்து விடலாம்.

5)காலம் குறிப்பிடப்படாத ஒருசில ஆவணங்களில் காணப்படும் குறிப்புகளை வைத்து அதன் உத்தேச காலத்தை நிரிணயித்து விடலாம். ஊதாரணமாக சிவகாசிப் பகுதியில் அடிமை விற்பனை பற்றிய ஒரு கைப்பிரதியை 1964ல் ஆராய்ச்சியாளர் ஒருவர் கண்டுபிடித்தார். ஆனால் அதில் வருடம், தேதி எதுவும் காணப்படவில்லை. ஆனால் அந்தக் கைப்பிரதியில் ராணி மங்கம்மாள் கலெக்டர் ஜாக்சன் ஆகியோர்களைப் பற்றிய குறிப்புகள் வருகிறது. எனவே இவர்களது காலமான கி.பி.பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது அந்த ஆவணம் என்று கால நிர்ணயம் செய்து விடலாம்.

**2)ஆவணம் தோன்றிய இடத்தை நிர்ணயம் செய்தல் (Place of Origin)**

ஒரு சில ஆவணங்களிலும், அச்சடிக்கப்பட்ட நூலிலும் துண்’டுப் பிரதிகளிலும் அது எங்கு தோன்றியது என்ற குறிப்பு காணப்படுவதில்லை. அச்சடித்த இடம் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. அந்த ஆவணம் எங்கு உருவாக்கப்பட்டது என்று கண்டுபிடிப்பது கடினமாக உள்ளது. எதாரணமாக இந்திய சுதந்திர போராட்டத்தின் போது பல துண்டுப் பிரதிகள் பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் இருந்த பாண்டிச்சோரியில் அச்சிடப்பட்டது. இந்த வகையில் அந்த ஆவணத்தின் மொழி, நடை, சம்பாஷனைகள் ஆகியவை ஆவணங்கள் உருவாக்கப்பட்ட இடம், எது என்பதற்கான மறைமுகத் தகவல்களை கொடுக்கிறது. அதை வைத்துக் கொண்டு அந்த ஆவணம் தோன்றிய இடத்தை நிர்ணயம் செய்து விடலாம்.

**3)ஆசிரியரை பற்றி நர்ணயம் செய்தல் (Identity of the Author)**

புற மதிப்பீட்டில் மிகவும் முக்கியமாகதாக் கருதப்படுவது ஆவணத்தை எழுதிய ஆசிரியர் யார் என்றும், அவரது தன்மை பற்றியும் நிர்ணயிப்பது ஆகும்’. இது ஆராய்ச்சிக்கு மிகவும் உதவி செய்கிறது. புகழ் பெற்ற ஆசிரியர்கள் எழுதிய நூல்களை எளித்ல் மதிப்பீடு செய்து விடலாம். ஆனால் ஆசிரியர்கள் யார் என்று குறிப்பிடப்படாத நூல்கள், கைப்பிரதிகள், கட்டுரைகள், துண்டுப் பிரசுரங்கள் ஆகியவற்றின் ஆசரியத் தன்மையை நிர்ணயிப்பது ஆகும்.

மேலும் ஆசிரியர் யாார் என்று நிர்ணயம் செய்வதை விட அந்த ஆசிரியரின் தனிக்குண இயல்புகளையும், அவரது சமுதாயப் பின்னணி பற்றியும் அறிந்து கொள்ளுதல் மிகவும் அவசியம் ஆகும். உதாரணமாக அரசியல் மற்றும் ராஜதந்திரம் பிரச்சனைகள் பற்றி ஆயும் ஆவணங்களில் ஆசிரியரின் தேசம் (Nationality) பற்றி அறிந்து கொள்ளுதல் மிகவும் அவசியம். மேலும் ஆசிரியரின் கோட்பாடுகளும் அவரது கொள்கைகளும் ஆலணத்தின் தன்மை பற்றி அறிய உதவுகிறது. ஊதாரணமாக ஒரு இந்து சமய எழுத்தாளர் பசுவதை

பற்றி எஜதும் போது ஒருதலைப்பட்சமாகவே இருக்கும். ஒரு கிறிஸ்தவ மிஷினரி மதமாற்றம் பற்றி எழுதும் போதும் ஒரு தலைப்பட்சமாகவே இருக்கும்.

இவை தவிர ஆசிரியரின் அரசியல் பின்னணியும் ஆவணத்திழல் எதிரொலிக்கும் உதாரணமாக 1977ம் ஆண்டு மத்திய அரசில் ஜனதா அரசாங்கம் வீழ்ச்சியடைந்தற்கான காரணங்கள் பற்றி எழுதும் போது அதை எழுதுபவர்களின் கருத்துக்கள் ஆவணத்தில் பிரதிபலிப்பதைக் காணலாம். :"பொருளாதாரக் கொள்கையில் ஜனதா அரசு அடைந்த தோல்விதான் காரணம்" என்று ஒரு கம்யூனிச எழுத்தாளரும் இந்தியைத் திணித்தது தான் காரணம் என்று ஒரு திமுக எழுத்தாளரும், தேச நலன்களுக்கு எதிராகச் செயல்பட்டது. தான் காரணம் என்று ஒரு காங்கிரஸ் சார்புடைய எழுத்தாளரும் எழுதுவர். ஜனதா அரசு வீழ்ச்சிக்கு இவர்கள் கூறும் காரணங்கள் சரியா தவறா என்பது பிரச்சனை இல்ல. அந்த எழுத்தாளரின் எண்ணங்களும் எழுதும் முறைகளும் தாங்கள் சார்புடைய கட்சியின் கொள்கை சார்புடையதாகவே இருக்கும். ஏனெனில் ஒவ்வொரு எழுத்தாளரும் தங்கள் எழுத்து மூலம் தங்களையே வெளிப்படுத்துகின்றனர்.

கிடைத்த ஆவணம் முதல் நிலை ஆதாரமா இரண்டாம் நிலை ஆதாரமா என்பது நிர்ணயம் செய்யப்பட வேண்டம். இதுவும் புறத் திறனாய்வில் மிகவும் முக்கியமானது ஆகும்.

இவ்வாறு மேற்கண்ட பல வழிகளில் சான்றுகள் புறத்திறனாய்வு செய்யப்படுதல் அவசியம். இந்தப் புறத்திறனாய்வில் ஆவணங்களில் காலம், இடம், ஆசிரியத்தன்மை, ஆவணத்தின் வகை, கையெழுத்துமு, ஆவணத்தின் ஆதாரம் ஆகியவை நிரிணயம் செய்யப்படுகிறது. இது ஆவணம் போலியானதா அல்லது நேர்மையானதா என்று நிர்ணயம் செய்யப்படுகிறது. இப்படி ஆவணங்களைச் சோதனை செய்து பார்ப்பதற்கு காலக் கணிப்பியல், தொல்லெழுத்தியல், பட்டய இயல், புதைப்பொருள் இயல், முத்திரை இயல், நாணய இயல் போன்ற வரலாற்றுசார்பியல்கள் பெரிதும் துணை செய்கின்றன. புறத்திறனாய்வு ஆய்வு வேலையின் ஆரம்ப நிலையே ஆகும். மேற்கண்ட மூன்று வழிகளில் சான்றுனள் புறத்திறனாய்வு செய்யப்படுதல் அவசியம்.

## **அகத் திறனாய்வு** (Internal Criticism or Hermeneutics)

சுான்றுகளின் உட்பொருளின் நம்பத் தன்மையை ஆய்வு செய்வதுமு அகத்திறனாய்வு ஆகும். இது முக்கியமாக நான்றுகளில் உள்ள உள் அர்த்தம் பற்றியும் அவற்றின் உண்மைத் தன்மை பற்றியதாகவும் உள்ளது. அதாவது சான்றுகளில் அடங்கியிருக்கும் கருத்துக்கள் நம்பக் கூடியவையா இல்லையா என்று பரிசீலிப்பது அகத்திறனாய்வு ஆகும். சான்றுகள் சரியாகவோ, தவறாகவோ அல்லது இரண்டும் கலந்தோ இருக்கக் கூடும். சில சான்றுகள் உள்நோக்கத்தோடு எழுதப்பட்டிருக்கலாம். சில சான்றுகள் கவனக் குறைவாலோ, அறியாமையாலோ அல்லது வேண்டுமென்றோ சிதைக்கப்பட்டிருக்கலாம். அப்படிப்பட்ட சான்றுகள் கூறும் கருத்துக்களுக்கு ஆய்வாளர் அடிமையாகி தம் சுயசிந்தனையை இழந்துவிடக் கூடாது. மேலும் சான்றுகளை எழதிய போது உள்ள ஆசிரியரின் மனநிலை

பற்றியும் அகத்திறனாய்வில் ஆராயப்படுகிறது. எனவே ஐயப்பாட்டிற்குரிய சான்றுகளை அகத்திறனாய்வு செய்தல் அவசியமாகும். மொத்தத்தில் சான்றுகளில் உள்ளவைகள் உண்மைதானா, அவைகளை ஏற்றுக் கொள்ளலாமா என்பதை தீர்மானிப்பது தான் அகத்திறனாய்வு ஆகும்.

ஆகத்திறனாய்வு இரண்டு வகைப்படும். ஒன்று உடன்பாட்டு அகத்திறனாய்வு, மற்றொன்று எதிர்மறை அகத்திறனாய்வு ஆகும்.

**1உடன்பாட்டு அகத்திறனாய்வு (Positive Criticism)**

சூன்றுகளில் காணப்படும் கருத்துக்கள் உண்மையா இல்லையா என்று தெரிந்து கொள்வதே உடன்பாட்டு அகத்திறனாய்வு என்பதாகும். பொதுவாக சான்றுகளில் காணப்படும் இரண்டு பொருள் கொண்டதாக இருக்கும் ஒன்று எழுத்தியல்பான பொருள். மற்றது உண்மையான பொருள் ஆகும். வார்த்தைகளின் நேரடியான அர்த்தம் எழுத்தியல்பான பொருள் ஆகும். இந்த உண்மைப் பொருளை கண்டறிவதற்கு மொழியியல் அறிவு இன்றியமையாதது ஆகும். இப்படி உண்மையான பொருளை அறிய நாம் தர்க்க த்துவ, உளவியல் விளக்கங்களைக் கேட்டு அறிந்து கொள்ளலாம். இதன் மூலம் திரித்துக் கூறப்பட்டவை சரி செய்யப்படுகிறது. தவறுகள் கண்டுபிடிக்கப்படுகின்றன.

முக்கியமாக சான்றுகள் எழதப்பட்ட காலத்தில் உள்ள மொழிநடை தீர்மானிக்கப்பட வேண்டும். ஏனெனறொல் மொழி என்பது ஒவ்வொரு காலத்திலும் மாறுபட்டு வருவது ஆகும்.ஆசிரியர் எழுதும் போது கொடுக்கும் பொருளானது. பிற்காலத்தில் மாறுபட்ட பொருளைத் தந்து விடுகிறது. ஊதாரணமாக சங்க கால இலக்கியத்திலி உபயோகிக்கப்பட்ட வார்த்தைகள் தற்போது பல பொருள்களில் விளக்கம் அளிக்கப்படுகிறது. 16ம், 17ம் நூற்றாண்டுகளி0ல் ‘மரவா’என்ற வார்த்தையானது ராமநாதபுரம் நாட்டைக் குறிப்பாகவே, ஜெசூட் மற்றும் சில ஆங்கில ஆவணங்களில் காணப்படுகிறது. ஆனால் தற்போது அந்த வார்த்தை ஒரு அனத்தைக் குறிப்பதாகவே அமைந்துவிட்டது.

**2)எதிர்மறை அகத்திறனாய்வு (Negative Criticism)**

சூன்றுகளில் உள்ள தவறுகளைக் களைவதே எதிர்மறை அகத்திறனாய்வுஆகும். அதாவது சான்றுகளை சந்தேகக் கண் கொண்டே பார்க்க வேண்டும். ஏனெனில் சான்றுகளில் உள்ள வார்த்தைகள் சொற்றொடர்கள் அல்லது சில பக்கங்கள் பொய்யாகவோ, தவறாகவோ திரித்துக் கூறப்பட்டதாகவோ இருக்கலாம். அத்துடன் அந்த ஆவணம் எழுதப்பட்ட சூழ்நிலைகளை நாம் அறிய வாய்ப்பு உண்டு. அதை எழுதியவா் உண்மையை உள்ளவாறு கூறுகிறாரா அல்லது தனது நோக்கத்திற்குச் சாதகமாக மாற்றிக் கொள்கிறாரா என்பதையும் அறிய முடியும்.

ஆனால் இந்த எதிர்மறை அகத்திறனாய்வு மிகவும் கவனமாக மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் ஆவணத்தின் ஒரு பகுதி பொய்யாக இருந்தால் அந்த ஆவணம் முழுவதுமே பொய்யானது என்ற முடிவுக்கு வந்து விடக் கூடாது. அத்துடன் உறுதியாகக் கூறப்படுபவை எல்லாமே உண்மையான கூற்றுகளாகவே இருக்கும் என்று நம்பி விடக்கூடாது. மேலும்

நிகழ்ச்சியை ஆசிரியர் நேரில் பார்த்து எழுதினார் என்பதற்காகவும் அவர் எழுதியதை அப்படியே நம்பி விடக்கூடாது.

**1.உண்மைத் தன்மை மதிப்பிடப்படுதல் (Truthfulness)**

முதலாவது ஆவணத்தின் உண்மைத் தன்மையை நிர்ணயம் செய்ய வேண்டும். எழுதிய ஆசிரியரின் உண்மை சொல்லும் திறன், உண்மையைச் சொல்லும் விருப்பம், செய்திகளை வழங்குவதில் துல்லியத் தன்மை, உண்மையை நிலைநாட்டுவதற்கான பக்க தோரங்கள் ஆகியவற்றை எதிர்மறை திறனாய்வில் முடிவு செய்யப்படுகிறது. இதற்கு நிருபணம் செய்யப்படாத செய்திகள் அனைத்ததையுமே சந்தேகத்திற்குரியவை என்று கருத வேண்டும்.

ஆசிரியர் தனது திறமையின்மையால் உண்மையை அறிந்து கொள்ளலாமல் இருக்கலாம். உண்மையைத் தெரிந்து கொண்ட பின்பும் தனது உண்மைத் தன்மை இல்லாத காரணத்தினால் உண்மையைச் சொல்லாமலும் இருக்கலாம். எனவே தாள் ஆசிரியரின் தனிக் குண இயல்புகள் பற்றியும் தீர்மானிக்கப்பட வேண்டும்.

ஆவணத்தின் ஆசிரியர் அவர் எழுதிய கருத்துக்களுக்கு நேரடி சாட்சி ஆவார். எனவே அந்த நிகழ்ச்சிகளை நேரடியாகப் பார்ப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதா? ஆப்படி இல்லை என்றால் எந்த ஆதாரத்தின் அடிப்படையில் எழுதியுள்ளார். அந்த ஆதாரத்தின் வரலாற்றுத் தன்மை என்ன என்பது போன்ற கேள்விகளுக்கு விடை காண வேண்டும். அப்படியே இவர் நேரடிச் சான்றாக இருந்தாலும் அந்த நிகழ்ச்சியை எந்த அளவிற்கு கிரகித்து மற்றவர்களுக்கு சரியாகச் சொல்லும் திறன் இருந்தது என்பதையும் முடிவு செய்ய வேண்டும். ஏனெனில் நேரடியாகப் பார்ப்பவர்கள் எல்லாம் நன்றாகக் கிரகிப்பவர்கள் என்று சொல்ல முடியாது. எனவே ஒரு ஆவணத்தை ஏற்றுக் கொள்ளும் முன்பு அதன் உண்மைத் தன்மை பற்றி நன்றாக விசாரணை செய்ய வேண்டும்.

**2)நம்பத்தன்மை மதிப்பிடப்படுதல் (Credibility)**

இவ்வாறு ஆதாரங்களின் காலம், இடம், தோற்றம் ஆசிரியத்தன்மை, உண்மைத் தன்மை ஆகியவற்றை பரிசீலித்து முடிவெடுத்த பிறகு ஆதாரங்களின் நம்கத் தன்மையை பரிசீலிக்க வேண்டும். கையில் கிடைத்துள்ள ஆதாரமானது உண்மையைச் சொல்லும் திறனுடையதா? நிகழ்ச்சிகளின் நேரடி சாட்சியங்கள் உண்மையைச் சொல்வதற்கு விருப்பம் உள்ளவரா, மேலும் தான் பார்த்த நிகழ்ச்சிகளை துல்லியமாக விளக்கி விவரித்துள்ளாரா என்றும் முடிவு செய்தல் அவசியம். இவ்வாறு நம்பத் தன்மை என்பது ஒரு மனிதரின் உண்மை பேசும் திறனை ஆவணமானது ஆதாரப்பூர்வமானது. நம்பத்தன்மை கொண்டது என்று முடிவு செய்து கொள்ளலாம்.

**3)சார்புத் தன்மை கண்டறியப்பட்டு நீக்கப்பட வேண்டும்**

ஆவணத்தின் உண்மைத் தன்மையும், நம்பத்தன்மையும் முடிவு செய்த பின்பு, அதை உபயோகப்படுத்துவதற்கு முன்பாக அந்த ஆவணத்தில் ஏதாவது சார்புத்தன்மை இருக்கிறதா என்று கண்டறிய வேண்டம். அதாவது ஆவணத்தில் காணப்படும் கருத்துக்களில் அதை எழுதியவர்களின் சார்புத் தன்மை காணப்படுகிறதா என்று சோதித்தறிய வேண்டும்.

ஊதாரணமாக ஜனறாகத்தின் மீது ஹிட்லருக்கு உள்ள வெறுப்பும், கம்யூனிசத்தின் மீது லெனினுக்கு இருந்த பரிட்சமும் சோசலிசக் கொள்கையின் மீது நேருவுக்கு இருந்த பற்றுதவும் உள்ளங்கை நெல்லிக்கனி போல அனைவரும் அறிவர். இவர்களுக்கு உண்மையைச் சொல்லும் திறனும் உண்டு. ஆனால் இவர்களின் எழுத்துக்களில் இவர்கள் சார்ந்த கருத்தக்களின் தாக்கமம், சார்புத் தன்மையும், காணப்படும். ஒவ்வொரு மனிதனுக்கும் சில எண்ணங்கள் உண்டு. இதில் அவர்களது நலன் தொடர்புள்ளதா என்று ஆராய்நது அவற்றை தவிர்க்க வேண்டும்.

**4)போலி ஆவணங்களைக் கண்டுபிடித்தல் (Forgery of Documents)**

பொதுவாக ஆவணங்களின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்ளாமல் எந்த ஒரு ஆதாரத்தையும் உபயோகித்தல் கூடாது. வெளித் தோற்றத்தில் அது உண்மையான ஆவணமாத் தோற்றம் அளிக்கலாம். ஆனால் ஆழமாக ஆராயும் போது அது பிறரிடமிருந்து எடுக்கப்பட்ட ஆதாரமாக இருக்கும் எடுக்கப்பட்டவருக்கு நன்றியைத் தெரிவிக்காமல் மறைக்கப் பட்டிருக்கும். இது கருத்துத் திருட்டு ஆகும். இத்தனையும் கண்டுபிடித்து இப்படிப்பட்ட ஆதாரங்களை தவிர்க்க வேண்டும்.

அடுத்து போலி ஆவணங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். போலி ஆவணங்களின் வேண்டுமென்றே தயாரிக்கப்படுவது ஆகும். ஏதேனும் ஆதாயம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், பழி வாங்கும் நடவடிக்கையாகவும், பறர் பெருமையைக் கெடுப்பத்றகாகவும் போலி ஆவணங்கள் தயாரிக்கப்படலாம். போலி ஆவணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அரசர்கள் மற்றும் போப்பாண்டவர்களின் போலி கடிதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. எனவே போலி ஆவணங்களை சரியான முறையில் கண்டுபிடிக்கப்பட்டு அவைகளை ஆராயச்சியாளர் உபயோகித்தல் கூடாது.

இவ்வாறு அகத்திறனாய்விலும் புறத்திறனாய்விலும் வரலாற்றறிஞர் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. எனவே மேற்கூறிய முறைகளைக் கையாண்டு சான்றுகளைத் திறனாய்வு செய்தால் அவரது ஆராய்ச்சி நூல் எந்தவிதச் சோதனையையும் தாங்கி நிறகும். ஊண்மையில் சான்றுகளைத் திறனாய்வு செய்வது வரலாற்று ஆய்வியலில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. ஏனெனில் அதனை வைத்துத் தான் வரலாற்று விபரங்கள் எழுதப்பட முடியும்.

## ஆய்வுக் கட்டுரையாக்கத்தின் படிநிலைகள்

சான்றுகள் பகுத்தாய்வு செய்யப்பட்ட பின்பு ஆய்வாளர் தனது ஆய்வுக் கட்டுரையை எழுத ஆரம்பிக்க வேண்டம். இது ஆய்வு முறையின் பிறபகுதியாகும். இந்தப பகுதி ஆய்வாளர் சேகரித்த சான்றுகளை இனவாரியாகப் பிரித்து வகைப்படுத்தி பொருள் விளக்கம் கூறி முழுமையான ஆய்வுக் கட்டுரையை வரைவதாகும். ஆய்வுக் கட்டுரையாக்கத்தில் பல்வேறு படிநிலைகள் உள்ளன. அவை, ஒருங்கமைத்தல், ஆய்வுக் கட்டுரையாக்கம், அடிக்குறிப்புகள்ஈ ஆவண மேற்கோளாட்சி நூறடபட்டியல் போன்றவையாகும். ஆவைகளை ஒவ்வொன்றாகக் காணலாம்.

**1)ஒருங்கமைத்தல் (Synthesis)**

ஒருங்கமைத்தல் என்றால் தனித்தனியாக உள்ள பகுதிகளை ஒன்று வோ்ந்து முழுமையாக்குதல் ஆகும். அதாவது சரிபாபர்க்கப்பட்ட சான்றுகளைக் கொண்டு புரிந்து கொள்ளக்கூடிய சுவையான வரலாற்றை உருவாக்குபுவது ஆகும். ஆய்வாளரால் திரட்டிய சான்றுகள் ஒழுங்கற்று ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன. அவைகளில் வேண்டியவற்றை எடுத்துக் கொண்டு வேண்டாதவற்றைத் தள்ளியபின் வேண்டியவற்றிற்கு ஒழுங்கு தரவேண்டும். ஒழுங்கற்றிருக்கும் கருத்துக்களுக்கு வடிவம் தரவேண்டும். இவ்வாறு சான்றுகளை ஒன்று சேர்ப்பதே ஒருங்கமைத்தல் ஆகும்.

ஒருங்கமைத்திலில் ஈடுபடுவதற்கு முன்பாக சான்றுகளின் பொருளையும் பொருத்தத்தையும் தெளிவாக தெரிந்து வைத்துக் கொளட்ள வேண்டும். சான்றுகளை இனவாரியாகப் பிரித்து பொருத்தமாக இணைக்க வேண்டும். ஆய்வின் முழுப் பொருளையும் வரலாற்றுப் பினட்னணியில் ஒருங்கமைக்கப்படுதல் வேண்டும். அடுத்து ஆய்வாளா் ஆா்வமிகுதியால் அதிகமான சான்றுகளை சேகரித்திருக்கலாம். எல்லாவற்றையும் சேர்த்துவிட வேண்டும் என்று நினைக்கக் கூடாது. பொருத்தமான அத்தியாவசியச் சான்றுகளை மட்டுமே வைத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்ததாக சான்றுகளை வரிசைப்படுத்த வேண்டும். சான்றுகளைக் காலவரன்முறைப்படி வரிசைப்படுத்த வேண்டும். காலவரன்முறை கோர்வையாக இருந்தால் தான் ஆய்வுக் கட்டுரை உறுதியானதாக இருக்கும். அடுத்து தலைப்புவாரியாகவும் சான்றுகளை வரிசைப்படுத்த வேண்டும். ஒருசில வரலாற்றை ஆய்வு குறிப்பிட்ட நிலப்பகுதி அல்லது நிா்வாகப் பகுதியைப் பற்றியதாக இருக்கலாம். அப்போது சான்றுகள் புவியியல் வழி வரிசைப்படுத்துதல் அவசியம் ஆகும். மேலும் நபா் வழியாகவும், நிறுவன வழியாகவும் கருத்து வழியாகவும் சான்றுகள் வரிசைப்படுத்தப்படலாம். இப்படி வரி9சைப்படுத்தி ஒருங்கமைப்பதிலும் பல குறைபாடுகள் உண்டு. எனவே இவைகளையெல்லாம் குறைகள் இல்லாத விதத்தில் இணைத்து ஒருங்கமைக்கலாம்.

இவ்வாறு ஆய்வுப் பணியை ஒருங்கமைத்தல் ஒரு ஆய்வாளரின் பொறுப்பான பணியாகும். ஏனெனில் ஒருங்கமைத்தல் என்பது கஷ்டப்பட்டுச் சேர்த்த சான்றுகளுக்கு வடிவம் கொடுக்கும் வேலையபகும். சான்றுகள் எல்லாம் சரியாக ஒருங்கிணைக்கப்படும் போதுதான் ஆய்வுக் கட்டுரை பொலிவு பெறுகிறது.

**2)ஆய்வுக் கட்டுரையாக்கம் (Exposition of a theis)**

கட்டுரையாக்கம் என்பது எழுதும் பணியாகும். அதாவது ஆய்வுப் பொருளை எழத்து வடிவில் அளித்தல் ஆகும். சான்றுகளுக்கும் வடிவம் கொடுக்கும் நடவடிக்கையே ஆய்வுக் கட்டுரையாக்கம் ஆகும். இதுலரை அறிவியல் நிபுணராக இருந்த ஆய்வாளா் இப்போது ஒரு கலைஞராக மாற வேண்டும். கட்டுரையாக்கத்தில் எழுதும் முறை சிறப்பிடம் பெறுகிறது. அத்துடன் ஆய்வாளருக்கு நினைவாற்றலும் கற்பனைத்திறனும் வேண்டும். சிதறிக் கிடக்கும் குறிப்புகளுக்கு உயிா் ஊட்டி வடிவம் கொடுக்க வேண்டும்.

கட்டுரையாக்கம் போது ஆய்வாளர் தான் பயன்படுத்தும் சொல் நயம், இலக்கிய நடை ஆகியவற்றிலும் முக்கியக் கவனம் செலுத்த வேண்டும். படிப்பவர்களை தன்வயப்படுத்தும் தன்மையுடைய இலக்கிய நடையும் சொல்லழகும் வேண்டும். மேலும் சரியான பொருளைக் கொடுக்கும் சொற்களையே பயன்படுத்த வேண்டும். செய்திகளை நேரடியாக தெரிவிக்கக் கூடிய வாக்கியங்களாக அமைக்க வேண்டும். ஒவ்வொரு பத்தியின் முடிவும் அடுத்த பத்தியின் ஆரம்பமும் தொடர்புடையதாக இருக்க வேண்டும்.

ஆய்வுக் கட்டுரை பலஅ த்தியாயங்களாகப் பிரிக்கப்பட வேண்டும். அப்போது தான் கருத்துக்களுக்கு வடிவம் உண்டாகும். ஆய்வுக் கட்டுரைப் பிரிவைத் தெளிவாகவும், டிதாடர்ச்சியாகவும், எழுதுவதற்கே அத்தியாயங்கள் பிரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு அத்தியாயமும் கூடுமானவரை சமசமாக இருப்பது நல்லது. அதேபோல் அத்தியாயத்தின் பிரிவுகளும் உட்பிரிவுகளும் வாக்கியங்களும் தெளிவாகவும் உயிரோட்டமுடையதாகவும் இருக்க வேண்டும். மேலும் ஒவ்வொரு அத்தியாயத்துடன் உயிர்த் தொடர்பு கொண்டிருக்க வேண்டும். அதுபோல் அத்தியாத்திற்குள் கிளைத் தலைப்பும் கொடுக்க வேண்டும். அதேபோல் அத்தியாயத்திற்குள் கிளை தலைப்பும் கொடுக்க வேண்டும்.

ஆய்வுக் கட்டுரை எழுதும்போது ஆய்வாளர் கவனிக்க வேண்டியதுபொருள் விளக்க விரித்துரையேயாகும். ஒரு பொருளை பற்றி பல கருத்துக்கள் இருக்கலாம். அவற்றுள் பொருத்தமான ஒன்றையோ எல்லாவற்றையுமேப ஏற்றுக் கொள்ளலாம். அப்படி ஏற்றுக் கொள்ளும் கருத்துக்கோ புதிதாகப் படைக்கும் கருத்துக்கோ ஆய்வாளர் தரும் கருத்து விளக்கம் இன்றியமையாதது ஆகும்.

இறுதியாக ஆராய்ச்சி கட்டுரையில் கையாளும் பிறருடைய நூற்பகுதிகளைப் பயன்படுத்தும் முன்பு உரிமையாளர்களிடம் இசைவு பெற வேண்டும். புகைப்படங்களைப் பயன்படுத்தினால் அதன் பொறுப்புடைய அதிகாரியிடமிருந்து இசைவு பெற வேண்டும். பெற்ற இசைவை சுட்டிக்காட்ட வேண்டும். மேற்கோள் நூல்கள் அடிக்குறிப்பிட்டுக் காண்பிக்கப்பட வேண்டும். இவ்வாறு செய்யப்படும் கட்டுரையாக்கம் முழுமையானதாகவும் சிறப்பாகவும் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

## அடிக்குறிப்புகள்

ஆய்வுக் கட்டுரையாக்கத்தில் அடிக்குறிப்பு முக்கிய இடம் பெற்றுள்ளது. ஆய்வுக்குப் பயன்படுத்தப்படும். சான்றுகள் எங்கிருந்து எடுக்கப்பட்டது என்று காட்டுவதற்கே அடிக்குறிப்புகள் பயன்படுத்தப்படுகிறது. ஆய்வாளர் தான் எடுத்து உபயோகித் த சான்றுகளுக்குரியவருக்கு தனது கடப்பாட்டைக் காட்டவே அடிக்குறிப்புகள் தரப்டுகின்றன. பழமொழிகள், பழச்சொற்கள், பொதுக் கருத்துக்கள் ஆகியவற்றிற்கு அடிக்குறிப்புகள் தேவையில்லை. மூலச்சான்றுகள் முதல்நிலைச்சான்றுகள் அனைத்தும் கட்டிக் காண்பிக்கப்பட வேண்டம். இப்படி அடிக்குறிப்புகள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டால் ஆய்வுக் கட்டுரையின் நேர்மை தன்மை அதிகமாகும்.

**அடிக்குறிப்புகளின் முக்கியத்துவம் :**

பொதுவாக அடிக்குறிப்புகள் ஆய்வுக் கட்டுரையில் அந்தந்த பக்கத்தின் அடிப்பகுதியிலேயே குறிக்கப்படும். இவை கட்டுரையின் உடல் பகுதியில் கூறப்படும் தகவல்களுக்கு வலுச் சேர்க்கிறது. அடிக்குறிப்புகள் கூருக்கமாகவும், துல்லியமாகவும் பொருத்தமாகவும் இருக்க வேண்டியது அவசியம் ஆகும்.

அடிக்குறிப்புகள் பல நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. பெறப்பட்ட தகவல்களுக்கு ஏற்பளிக்கவும், கூறப்பட்ட கருத்துக்களுக்கு விளக்கம் சேர்க்கவும், உதாரணங்கள் கொடுக்கவும், தலைப்புகளையோ துணைத் தலைப்புகழைளயோ விளக்கவும் தன்னுடைய பங்களிப்பை பிறருடையவைகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டவும் அடிக்குறிப்புகள் பயன்படுத்தபட வேண்டும்.

அடிக்குறிபிபுகளில் எதை, எப்போது, எவ்வளவு, எப்படி குறிப்பிடவேண்டும் என்பதற்கும் விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. பொதவாக அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மூலச் சான்றுகளையும் வெளியிடப்பட்ட சான்றுகளையும் குறிப்பிடலாம். மேலும் தகவல்களைத் தரும் போதும் அடிக்குறிப்பை பயன்படுத்திக் கொள்ளலாம். கொடுக்கப்படும் அடிக்குறிப்புகள் மிகச் சுருக்கமாகவும், நீளம் குறைவானதாகவும் சர்ச்சைக்குரியதாகவும் இல்லாதவையாகவும் பொருத்தமானவையாகவும் இருக்க வேண்டும். இவ்வாறு அடிக்குறிப்புகள் கொடுக்கப்படுவது ஆய்வுக் கட்டுரையின் தரத்தை உயர்த்திக் காட்டுவதாக அமைகிறது.

**அடிக்குறிப்புகள் பயன்படுத்தப்படுவதன் நோக்கம் : (Purpose)**

**1)பெறப்பட்ட தகவல்களுக்கு ஏற்பளிக்க**

**To Cite the Source of Statements in the Book**

ஆய்வாளர் தான் எடுத்து உபயோகித்த கருத்துக்களுக்கான ஆதாரத்தை அடிக்குறிப்பில் குறிப்பிடலாம். இதன் மூலம் பிற ஆராயச்சிகளின் முடிவுகளை இந்த ஆதாரங்கள் மூலம் பார்த்துக் கொள்ள முடியும். ஒரு கருத்தின் முழுப்பகுதியோ அல்லது ஒரு பகுதியோ எடுக்கப்பட்டாலும் அதற்கான ஆதாரத்தைச் சுட்டிக் காட்ட வேண்டும். முடிவுகள், கருத்துக்கள்,விளக்கங்கள் ஆகியவை தன்னுடையதாக இல்லாத போது குறிப்பீடு கொடுக்கலாம். பொதுவாக எல்லோருக்கும் தெரிந்த உண்மைகளுக்கு ஆதாரம் கொடுக்க வேண்டியதில்லை. (உ.ம்) ‘நேரு இந்தியாவின் முதல் பிரதமர் ‘ ஆவார். இதற்கு ஆதாரம் தேவை இல்லை.

ஒரு பாராவிலுள்ள சில கூற்றுகளுக்கு குறிப்பீடு அந்த பாராவின் இறுதியில் குறிப்பிடலாம். பொதுவாக ஆய்வாளர் தான் எடுத்து உபயோகித்த சான்றுகளுக்கு உயரியவருக்கு தனது நன்றி மற்றும் கட்டுப்பாட்டைக் காண்பிக்கவே அடிக்குறிப்புகள் பயன்படுகின்றன.

ஆய்வாளர் ஒரு இரண்டாம் நிலை ஆதாரத்திலிருந்து எடுக்கப்பட்ட குறிப்புகளையும் நேர்மையாக குறிப்பிட்டு காட்ட வேண்டும். வெளியடப்பட்ட ஒரு நூலிலிருந்து மூல ஆதாரங்களை எடுத்துக் கொண்ட போதும் அந்த ஆதாரத்தை சரிபார்க்க முடியாத போதும் அதனையும் அடிக்குறிப்பில் காட்ட வேண்டும். மூல ஆதாரம் ஒன்றை இரண்டாம் நிலை ஆதாரத்திலிருந்து பெற்றுக் கொண்டதைக் கீழ்க்கண்டவாறு காட்ட வேண்டும்.

**உதாரணம் :A. Telefu document dealing with the origin of the Singampattipalayam – Cited in S.Kathirvel. A. History of Madurai, 1977,p.8.**

மூல ஆவணத்தை நேரில் பார்க்காமலும் மேற்கண்டபடி குறிப்பிடாமலும் ஆவணத்தைப் பற்றிய குறிப்பை மட்டும் கூறி அதைத் தனது ஆதாரம் போல் தெரிவிப்பது கருத்துத் திருட்டு ஆகும்.

மேலும் ஒரு கட்டுரையைச் சுட்டிக்காட்டும் போ அந்தக் கட்டுரையையும், அது வெளியிடப்பட்ட இதழ்களையும்(Mafazins) அடிக்குறிப்பில் குறிப்பிட வேண்டும். கட்டுரை ஆதாரமாகவும் அந்த இதழ் ஆதாரம் கிடைத்த இடமாகவும்(Location) கருதப்படுகிறது.

**2)ஆய்வுக் கட்டுரை சுமூகமாகச் செல்ல** (To ensure Proper flow)

1) ஆய்வுக் கட்டுரையின் ஒரு பக்கத்தில் விவரிக்கப்படும் கருத்துக்களுடன் நேரடித் தொடர்புடைய செய்திகளை அந்ாப்' பக்கத்தின் உடற்பகுதியிலும், மறைமுகத் தொடர்புடைய செய்திகளை அந்தப் பக்கத்தில் அடிக்குறிப்பிலும் குறிப்பிடலாம். உதாரணமாக நிகழ்ச்சிகளை விவரிப்பதை உடற்பகுதியிலும் அந்த நிகழ்ச்சிக்கான காரணங்களை அடிக்குறிப்பிலும் குறிப்பிடலாம்.

**உதாரணம்:** ஒரு ஆய்வாளர் பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் ஆங்கிலேயரின் ஆதிக்க வளர்ச்சி பற்றி ஆராயும் போது படிப்படியாக ஒவ்வொரு பகுதியும் எவ்வாறு இணைக்கப்பட்டது என்பதை விவரிக்க வேண்டும். முதலில் மறவர் நாடு, பின்னர் மதுரை நாடு எவ்வாறு இணைக்கப்பட்டது என்று உழுத வேண்டும். பின்னர் தஞ்சாவூர் இணைப்பு பற்றி எழுதலாம். ஆனால் தஞ்சாவூரில்நிலவிள குழப்பங்கள் பற்றி எழுதாமல் தஞ்சாவூர் இணைப்பை எழுத முடியாது. ஆனால் இந்தக் குழப்பம் பற்றி உடற்பகுதியில் எழுதினால் கட்டுரையின் சுமூகமான போக்கு பாதிக்கப்படும். எனவே இந்தக் குழப்பத்தை அடிக்குறிப்பில் குறிப்பிடலாம்.

மேலும் மையக் கருத்துடன் தொடர்புடைய ஆனால் முக்கியமில்லாத (Adjunct) நுட்பமான குறிப்புகளை(technical details) அடிக்குறிப்பில் குறிப்பிடலாம்.

**உதாரணம்:** கி.பி.1674ல் இராமநாதபுரத்தில் திருமலை சேதுபதி ராஜாவுக்குப் பிறகு. அவவருக்கு மகள் (பெண் வாரிசு) இருந்தாலும் மறவர் வாரிசுமைச் சட்டத்தின்படி, அவரது நெருங்கிய ஆண் வாரிசாக கருதப்பட்ட ராஜா சூரியதேவர் ஆட்சிக்கு வந்தார்.

இதில் ஆராய்ச்சியாளர் மறவர் வாரிசுரிமைச் சட்டத்தின்படி பெண்களுக்கு வாரிசுரிமை இல்லையென்பதை அடிக்குறிப்பில் தான் குறிப்பிட வேண்டும். இதனை உடற்பகுதியில் குறிப்பிட்டால் கட்டுரையின் சுமூகமான போக்கு தடைப்பட்டுவிடும்.

விவரிக்கப்படும் நிகழ்ச்சிகளுடன் நேரடித் தொடாபில்லாத விமர்சனங்களை அடிக்குறிப்பில் குறிப்பிடலாம்.

**உதாரணம் :** ஆய்வாளர் ஒருவர் ஒரு இன மக்களின் சமுதாயப் பழக்க வழக்கங்களை விவரிக்கும் போது அவர்களின் பழக்கவழக்கங்களில் சில பிற மக்களிடமிருந்து எடுக்கப்பட்டதாகக் கருதினால் தனது விமர்சனத்தை அடிக்குறிப்பில் குறிப்பிடலாம்.

**3)கூடுதல் தகவல்களைச் சேர்த்துக் கொள்ள (Additional Information)**

ஆய்வு செய்யப்படும் நிகழ்ச்சிலிருந்து தான் கொடுக்கும் கூடுதல் தகவல்கள் ஆராய்ச்சிக் கருத்திலிருந்து விலகிச் செல்வதாக ஆராயச்சியாளர் கருதினால் அந்தக் கூடுதல் தகவல்களை அடிக்குறிப்பில் குறிப்பிடலாம். மேலும் அந்த நிகழ்ச்சியின் தொடர்பான அதகப்படியான தகவல்கள் தனக்கும் தெரியும் என்று காட்டிக் கொள்வதற்காகவும் அடிக்குறிப்பில் குறிப்பிடலாம்.

**உதாரணம்:** ஆய்வாளர் ஒருவர் அர்ஜீணன் பாண்டவர்களின் வரிசையில் மூன்நாமவர் என்று கூறும் போது கூடுதல் தகவல்களை கொடுப்பதற்காகவும், அவை தனக்குத் தெரியும் என்று காட்டிக் கொள்ளவும். முதலிரண்டு பாண்டவர்கள் தருமர், பீமன், என்றும் நகுலன், சகாதேவன் ஆகியோர் நான்காவது ஐந்தாவது பாண்டவர் என்றும் அடிக்குறிப்பில் குறிப்பிடலாம்.

**4)ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட கருத்தை மீண்டும் தெரிவிக்க (Already Cited)**

ஒரு குறிப்பிட்ட குறிப்பினை ஒருமுறை கொடுத்து விட்ட பிறகு இன்னொரு இடத்தில் அதே குறிப்பை கொடுக்க வேண்டிய நிலை ஆராயச்சியாளருக்கு ஏற்பட்டால் அவர் குறுக்கீட்டு குறிப்பு முறையைப் பின்பற்றலாம். அதற்கு infra or supra என்ற வார்த்தையை உழுதி குறிப்பின் எண்ணையும் அது எந்தப் பக்கம் ஏற்கெனவே வெளியாகி உள்ளது என்பதையும் அடிக்குறிப்பில் குறிப்பிடலாம்.

**5)விளக்கம் அளிக்கும் விதமாக (Explanatory Foot-Note)**

இதுவும் ஒருவகை அடிகிகுறிப்பு ஆகும். கட்டுரையின் உடற்பகுதியில் குறிப்பிடும் ஒரு வார்த்தையை அல்லது பழமொழியைக் குறிப்பிடும் போது (பொதுவாக எல்லோருக்கும் தெரிந்திராத, வேற்று மொழியிலுள்ள உபயோகப்படுத்தாத) அதற்கான விளக்கதடதை அடிக்குறிப்பில் குறிப்பிடலாம்.

**உதாரணம் :** பாளையக்காரர் என்ற வார்த்தையை ஆராயச்சியாளர் உபயோகிக்கும் போது அந்த வார்த்தையின் அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் அடிக்குறிப்பில் குறிப்பிடலாம். இதேபோல கலாசாரப் புரட்சி பாளையக்காரர் போர், மார்க்சியம் போன்ற வார்த்தைகளுக்கான விளக்கங்களை அடிக்குறிப்பில் குறிப்பிடலாம்

**எப்பொழுது அடிக்குறிப்பைப் பயன்படுத்த வேண்டும்?(when to use Foot-Notes)**

நாம் எழுதும் கருத்துக்களுக்கான ஆதாரங்களை ஒரு விழிப்புள்ள மனிதர் தேடுவார் என்று ஒவ்வொரு கருத்துகளுக்கும் ஆதாரங்களை அடிக்குறிப்பில் குறிப்பிட வேண்டும். முக்கியமாக passingpharse,starting assertions, Distinct elements, ஆகியவற்றிற்கு அடிக்குறிப்பு இடுதல் மிகவும் அவசியம்.

நாம் ஆராய்ச்சி செய்யும் தலைப்பு புதியதாக இருந்தால் அதிக அடிக்குறிப்புகள் தேவைப்படும். ஒரு அடிக்குறிப்பு கொடுக்கும் போது புத்தகத்தைப் போடுவதா, வெளியீட்டைப போடுவதா என்று தேர்ந்தெடுக்கும் நிலை ஏற்பட்டால் புத்தகத்தையே அடிக்குறிப்பில் போட வேண்டும்.

**எங்கு அடிக்குறிப்புகள் கொடுக்கப்பட வேண்டும்?** (where to give foot-notes)

1)அடிக்குறிப்புகள் கொடுக்கும்போது கட்டுரையின் உடற்பகுதியில் தொடர் எண் கொடுக்கப்பட வேண்டும். அதே எண் அந்தப் பக்கத்தின் அடியில் கொடுக்கப்பட்டு பின்னர் அது தொடர்புடைய விவரங்களை எழுதவேண்டும். கட்டுரையில் உடற்பகுதியலும், அடிக்குறிப்பு கொடுக்கும் பகுதியிலும் எண்கள் தெளிவாகத் தெரிவதற்காக அந்த வரியிலிருந்து கொஞ்சம் மேலே தள்ளித் தெரிவது போல் போட வேண்டும். அதேபோல் ஒரு பகுதி இடைவெளி விட்டுப் போடவேண்டும்.

2)ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் தொடர்ச்சியாக அடிக்குறிப்பு எண்கள் கொடுக்கப்பட வேண்டும். அடிக்குறிப்புகள் ஒவ்வொரு பக்கத்தின் அடியிலும் அல்லது ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதியிலும் ஆய்வேட்டின் இறுதியிலும் கொடுக்கலாம்.

3)ஆராய்ச்சியாளர் கொடுக்கும் கருத்துக்களின் இறுதியிலேயே குறியீடு எண் கொடுக்க வேண்டும். தலைப்புகளுக்கும் உப தலைப்புகளுக்கும் பாராவின் ஆரம்பத்திலும் அடிக்குறிப்பு எண்கள் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும்.

4)அடிக்குறிப்பில் கொடுக்கப்படும் மேற்கோள்கள் கீழ்க்கண்ட வரிசைப் முறைப்படி இருக்க வேண்டும்.

ஆசிரியரின் பெயர், நூல் தலைப்பு (இரண்டாம் நிலை ஆதாரம் என்றால் நூற்தலைப்பு சாய்வாக எழுதப்பட வேண்டும்) பதிப்பகம், வெளியிடப்பட்ட இடம் வெளியியடப்பட்ட வருடம், பக்க எண் என்ற வரிசைப்படி குறிப்பிட வேண்டும். ஒரு தொகுதிக்கு மேல் இருந்தால் தொகுதி எண்(Vol.I or Vol.II) என்று எழுத வேண்டும்.

(உ.ம்) ஜே.தர்மராஜ் **இந்திய வரலாறு’Vol.II.** டென்சி பப்ளிகேஷன்ஸ், சிவகாசி, 2005,p.p. 250-255

5)அடிக்குறிப்பில் ஆசிரியர் பெயர் எழுதும் போது முழுப்பெயரும் முதலாவது எழுத வேண்டும். ஆனால் நூல் பட்டியல் தயாரிக்கும் போது ஆசிரியரின் குடும்பப் பெயர் முதலில் எழுதப்பட வேண்டும்

**(உ.ம்.)** ஜே.தர்மராஜ் (அடிக்குறிப்பு)

தர்மராஜ்,ஜே (நூற் பட்டியல்)

கைப்பிரதி என்றால் அடிக்குறிப்பில் MS(Manuscript) என்ற குறியீடு கொடுக்க வேண்டும்.

**(உ-ம்)** Ms, diary of swartz, march 18, 1836.

அடிக்குறிப்பில் கொடுக்கப்படும் வார, மாத இதழ்கள், ஆண்டு மலர்கள் ஆகியவைகளில் உள்ள கட்டுரைகள் கீழ்க்கண்ட முறைப்படி கொடக்கப்பட வேண்டும்.

கட்டுரையாளரின் பெயர், கட்டுரையின் தலைப்பு, இதழின் பெயர் (இதழின் பெயர் சாய்வாகப் போட வேண்டும்) இதழின் எண், மாதம், வருடம், பக்கம் என்ற வரிசைப்படி இருக்க வேண்டும்.

(உ.ம்) ஜே.தர்மராஜ், கச்சத் தீவ, சில வரலாற்று உண்மைகள், ராஜீக்கள் கல்லூரி ஆண்டு இதழ், Vol.XIV (Jan.1987) p.p.22-25.

புத்திர்ககை என்றால் அடிக்குறிப்பில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்ட வேண்டும்.

(உ.ம்) மாலை முரசு, மதுரை, ஜீன் 27, 2006.

புட்டப் பெயரில் எழுதப்பட்டு கட்டுரையாளரின் உண்மைப் பெயர் நமக்குத் தெரிந்தால் அதனை அடைப்புக் குறிக்குள் போட வேண்டும்.

(உ.ம்,) கல்கி (கிருஷ்ணமூர்த்தி) ஆனந்த விகடன், ஜீலை 7, 1977.

**அடிக்குறிப்பில் குறிப்பிடப்படும் சுருக்கெழுத்துக்கள் (Abbreviations)**

அடிக்குறிப்பில் பலவகை சுருக்கெழுத்துக்கள் கொடுக்கப்படுகின்றன.இவை இடவசதியை அதிகரித்துக் கொள்வதற்காகவே பயன்படுகின்றன. ஆய்வுக் கட்டுரையின்Ibid.. என்ற வார்த்தை அடிக்கடி உபயோகிக்கப்படுகிறது. Ibidem என்பதின் சுருக்கமே Ibid ,இதற்கு அர்த்தம் 'அதே இடத்தில்" என்பதாகும். உதாரணமாக முதல் குறிப்பு எடுக்கப்பட்ட நூலிலிருந்தே தொடர்ந்து இரண்டாவது குறிப்பும் எடுக்கப்பட்டால் Ibid உபயோகிக்கப்படுகிறது Ibid என்ற வார்த்தைக்கு அடிக்கோடு இடவேண்டும் அல்லது வாய்வாக எழுத வேண்டம்.

(உ.ம்) 1. Ibid., p.75

இப்போது மூன்றாவது குறிப்பு வேறொரு நூலிலிருந்து எடத்து விட்டு நான்காவது குறிப்பு மீண்டும் முதல் குறிப்பாக அமைந்துவிட்டால் அதற்கு ஆசிரியர் பெயர் மட்டும்எழுதி op.cit விட்டு என்று எழுதி பக்கத்தை குறிப்பிட வேண்டும்.Op.cit அடிக்கோடு இடப்பட வேண்டும்.

(உ.ம்) 1. R.Sathianathier, History of India. Vol.I. Madras, 1955,p.10.

2.Ibid., p.75

3. J.Dharmaraj, history of Science and Technology, Tensy Publication. Sivakasi,1998, p.50

4. R. Sathianathier, Op.cit. p.80.

மேலும்;> i.e, (that is) n.d. (no date), c(about) anon (anonymous) போன்ற சுருக்கெழுத்துக்களும் உபயோகிக்கப்படுகின்றன.

இவ்வாறு அடிக்குறிப்புகள் ஆய்வுக் கட்டுரையாக்கத்தில் முக்கிய இடம் வகிக்கின்றன. அடிக்குறிப்புகள் அதிகமாகப் பயன் படுத்தப்பட்டால் ஆய்வுக் கட்டுரையின் நேர்மைத் தன்மையும் மதிப்பும் அதிகமாகும்.

**நூற்பட்டியல்**

ஆய்வுத் தலைப்பை தேர்ந்தெடுத்த பிறகு தற்காலிக நூற்பட்டியல(Tentative Bibliography) தயார் செய்வது மிகவும் அவசியம் ஆகும். இதற்கு ஆய்வாளர் நூலகத்தையே பெரிதும் பயன்படுத்த வேண்டும். நூலகம் என்பது ஆய்வாளரின் ஆய்வுக் கூடம் ஆகும். ஆய்வாளர் தனக்குத் தேவைப்படும் நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், சுயசரிதைகள், ஆவணங்கள் ஆகியவற்றை நூலக அகர வரிசை அட்டவணைக் குறிப்பிலிருந்து(Index) பார்த்து குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். இவைகளை துண்டுத் தாளிலோ அல்லது அட்டையிலோ அறிவியல் பூர்வமாக குறித்து வைத்துக் கொள்ளலாம்.

**நூற்பட்டியல் தயாரிக்கும் முறை :**

ஆராய்ச்சியாளர் தனது ஆராய்ச்சிக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புடைய நூற்பட்டியல் தயார் செய்யலாம்.

**உதாரணம்** ஒருவர் விருதுநகர் பகுதியின் வரலாற்றை ஆய்வு செய்யும் போது அப்பகுதியுடன் சம்பந்தப்பட்டது மட்டுமல்லாமல் அதன் அருகாமையிலுள்ள பகதிகள் பற்றிய நூல்களையும் சேகரித்துக் கொள்ள வேண்டும். மேலும் விருதுநகர் தமிழ் நாட்டில் ஒரு மாவட்டமாகவும் இருப்பதால் அந்த மாவட்டம் தொடர்பான நூல்களையும் ஆராய்தல் அவசியம். விருதுநகர் மாவட்டம் பற்றிய பூகோள அமைப்பு, பொருளாதார நிலை, சமூக அமைப்பு, பண்பாட்டியல் ஆகியவை பற்றி எழுதப்பட்ட நூல்களையும் தற்காலிக நூல் பட்டியலில் சேர்க்க வேண்டும்.

மேலும் வரலாற்று முறையியல் பற்றிய நூல்களையும் சேகரிக்க வேண்டும். சொல்லப் போனால் தனது ஆராய்ச்சி தொடர்புடையதாக இருக்கலாம் என்று சிறிது சந்தேகப்பட்டாலும் கூட அதனையும் நூல் பட்டியலில் சேர்க்க வேண்டும்.

ஆனால் எப்படி நூல் பட்டியல் தயாரிப்பது எப்படி ஆரம்பிப்பது என்பது மிகவும் முக்கியம். ஏந்தத் தவைலப்பில் ஆரம்பித்தாலும் அது தொடர்பான பிரபலமான முன்னோடி நூல்கள் (Pioneer Familiar Works) இருக்கும். தென்னிந்திய வரலாற்றில் ஆராய்ச்சி செய்யும் மாணவர் அந்தத் துறையில் K.A. நீலகண்ட சாஸ்திரி எழுதிய புகழ் பெற்ற நூல்களை பட்டியலிடாமல் இருக்க முடியாது. ஆமேலும் அது தொடர்புடைய வமீபத்தில் வெளியிடப்பட்டுள்ள புத்தக மதிப்புரைகளையும(Book-Review) எடுத்துக் கொள்ளலாம். நூல் பட்டிலில் வெளியடடப்பட்ட அல்லது வெளியிடப்படாத ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

**நூற்பட்டியல் தயாரிக்கும் விதிமுறைகள் :**

தற்காலிக நூற்பட்டியல் தயாரிக்கும் போது கீழ்க்கண்ட விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். ஒவ்வொரு நூலுக்கும் ஒரு தனி அட்டை போட வேண்டும். அதில் நூலைப் பற்றிய குறிப்புகள் கீழ்க்கண்ட வரிசைப்படி எழுத வேண்டும்.

1) ஆசிரியரின் பெயர்
2) நூலின் தலைப்பு
3) நூலின் தொகுதியின் எண்ணிக்கை
4) வெளியிடப்பட்ட பதிக்கத்தின் பெயர்
5) நூல் வெளியிடப்பட்ட இடம்
6) நூல் வெளியிடப்பட்ட ஆண்டு

1)ஒரு நூல் ஒரு முறைக்கு மேல் திரும்பவும் பதிப்பு வெளியிடப் பட்டால் அது எத்தனையாவது பதிப்பு என்று பதிப்பின் வருடத்துடன் தெரிவிக்க வேண்டும். நூல்களில் சமீபத்தில் பதிப்புகளை மட்டுமே எடுத்துக்கொண்டால் நல்லது. ஏனென்றால் அப்படிப்பட்ட நூலில் புதிய கருத்துக்களும் புதிய விளக்கங்களும் இடம் பெற்றிருக்கும். ஒரு சில

நூல்களில் முதல் பதிப்பும், இறுதிப் பதிப்பும் அதிக வேறுபாடுகளுடன் இருந்தால் இரண்டையும் நூற்பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம்.

(உ.ம்.)தர்மராஜ்.ஜே. அந்திய வரலாறு VoL.II.(900-1761) டென்சி பப்ளிகேஷன்ஸ், சிவகாசி, 2002. (இரண்டாவது பதிப்பு)

2)ஒரு நூலானது இரண்டு ஆசிரியர்களால் எழுதப்பட்டிருந்தால், புகழ் பெற்ற ஆசிரியரின் பெயரை முதலாவது எழுத வேண்டும். இரண்டு பேரும் சமநிலை அந்தஸ்தில் இருந்தால் அகர வரிசைப்படி அவர்களின் பெயரை எழுத வேண்டும். இரண்டு ஆசிரியர்களுக்கு மேற்பட்டவர்கள் இருந்தால் அவர்களில் முக்கியமான இரண்டு பேர்களின் மட்டும் எழுதி மற்றும் பலர் என்று குறிப்பிடவேண்டும்.

3)ஒருநூலில் பல ஆசிரியர்கள் கட்டுரை எழுதி அது ஒருவரால் தொகுக்கப்பட்டிருந்தால் அவரது பெயருக்குப் பின்னால் தொகுப்பாளர் என்று சேர்க்க வேண்டும்.

(உ.ம்) Venkatraman.V.(editor), Selected Speeches of P.S.Kumarasamy Raja, Raju's College Silver Jubilee Volume, Rajapalayam, 1999.

இறுதி நூல் பட்டியல் தயரிக்கும் போது கீழ்க்கண்டவைகளை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

1.நூல்கள் மூலச் சான்றுகள் இரண்டாம் நிலைச் சான்றுகள் என்று பிரிக்கப்பட வேண்டும். மூல நூற்கள், அவைகளின் கையெழுத்துப் படிகளாகவோ, அச்சுப் படியாகவோ இருக்கும். இரண்டதம் நிலைச் சான்றுகள் வழக்கமாக வெளியிடப்பட்ட நூ"லாகவோ இருக்கும். இந்த இரு சான்றுகளுமே பொது ஆவணங்கள், தனியார் பத்திரங்கள், வெளியீட்டு இதழ்கள் செய்தித்தாள்கள் என பல உட்பிரிவுகளால் பிரிக்கப்படுகின்றன.

2.பல்வேறு ஆதாரங்களும் அகர வரிசைப்படி அட்டவணை இடப்பட வேண்டும்.

3.ஆவணம் அல்லது நூலின் முழு விபரங்களும் தரப்பட வேண்டும். தலைப்பும் தொகுதி எண்ணும் குறிக்கப்பட வேண்டும்.

4.நீண்ட காலமாக வெளியிடப்பட்ட ஆவணங்கள், வெளியீடட்டிதழ்கள்,செய்தித்தாள்கய் ஆகியவற்றின் பட்டியல் தயாரிக்கும் போது காலங்கள் மட்டும் குறிப்பிட்டால் போதுமானது

5.ஆசிரியர் பெயர் இல்லாத நூல்கள் தனியேபட்டியல் இட்டுக் காட்டப்பட வேண்டும்.

6.நூற்பட்டியலை ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதியிலோ ஆய்வுக் கட்டுரையின் முடிவிலோ கொடுக்கலாம். இவை தவிர ஆய்வுக் கட்டுரையின் முன்னுரையில் நூற்பட்டியல் பற்றிய குறிப்பைக் கொடுப்பது மரபாக உள்ளது. அதில் ஆய்வினி போது பயன்படுத்தப்பட்ட சான்றுகளின் தன்மை, தகுதி, பயன் ஆகியவை பற்றி சுருக்கமாக குறிப்பிட வேண்டும்.

**நூலகத்தில் நூல்களைக் கண்டறியும் வழிகள் :**

நூற்பட்டியல் என்பது நூல்களைப் பற்றிய தகவல்கள் ஆகும். நூற்பட்டியல் தயாரிக்கும் போது நூலகத்தில் நூல்களைக் கண்டு பிடிப்பதில் கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

1)முதலாவது நூலகத்தில் ஆசிரியரின் பெயரை வைத்து நூல் அட்டவணை தயார் செய்து வைக்கப்பட்டிருக்கும். அதில் ஆசிரியரின் பெயர், இரண்டாவது பெயரை முதலாவது எழுதி

அட்டவணைப்படுத்தப்பட்டிருக்கும். எனவே நூல் ஆசிரியரின் பெயரைக் கொண்டு நூல்களைக் கண்டு பிடிக்கலாம்.

2)இரண்டாவது நூலின் தலைப்பை வைத்தும் அட்டவணைப்படுத்தப்பட்டிருக்கும். இதன் மூலம் நூல் தலைப்பின் முதல் வார்த்தையைக் கொண்டு நூல்களைக் கண்டுபிடிக்கலாம்.

3)மேற்கண்ட நூல்கள் தவிர பல புத்தகங்களில் அடிக்குறிப்புகளில் காணப்படும் நூல்களையும் சேர்த்துக் கொள்ளலாம். வார, மாத இதழ்களில் வரும் கட்டுரைகளையும், செய்தித்தாள்களில் வரும் கட்டுரைகளையும் நூற்பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம்.

**நூற் பட்டியலின் வகைகள்**

நூற்பட்டியல் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை பொது நூல் பட்டியல், தெரிவு செய்யப்பட்ட நூல் பட்டியல், ஆராய்வு நூல் பட்டியல் ஆகியவையாகும்.

**1)பொது நூற்பட்டியல் (General Bibliography)**

இதுதான் பொதுவாகக் குறிப்பிடப்படும் நூற்பட்டியல் வகையைச் சேர்ந்தது ஆகும். இதில் ஒரு நூலைப் பற்றிய எல்லா விபரங்களும் கொடுக்கப்பட்டிருக்கும். மேல்நோக்காகப் பார்க்கும் போது இது ஒரு தற்காலிக நூற்பட்டியல் போன்றே தோற்றமளிக்கும். ஆனால் இரண்டிற்குமான வித்தியாசம் உள்ளது. தற்காலிக நூற்பட்டியல் என்பது ஆராய்ச்சிக்கு ஆராய்ச்சியதளரால் உபயோகப் படுத்தப்பட்ட நூல்களைக் கொண்டது. அத்துடன் பயன்படுத்தப்படாமல் அதே பெறும். இது ஆய்வுக் கட்டுரைக்கு இறுதியில் முடிவுரைக்கும் அனுபந்தத்திற்கும் இடையே கொடுக்கப்பட வேண்டும்.

**2)சிறப்பு றூற்பட்டியல் (Select Bibliography)**

சிறப்பு நூற்பட்டில் என்பது விசேஷித்த வகையிலான நூல்களின் பட்டியலாகும். இந்தப் பட்டியல் உள்ள நூல்கள் பொதுவாக ஆய்வுக்கு உபயோகப்படுத்தப்படுவது இல்லை. சிறப்பு பாடப் புத்தகங்களிலும், ஆராய்ச்சி நூல்களிலுமே இடம் பெறும். நூலில் ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதியிலும் இவ்வகை நூற்பட்டியல் கொடுக்கப்படும். இவை அந்தந்த அத்தியாயங்களில் உள்ள தகவல்களுடன் நேரடித் தொடர்பு கொண்டவை. இது ஆராய்ச்சியாள

ர்களுக்கும் Specialist reader- களுக்கும் மிக உதவியாக இருக்கும். ஒரு குறிப்பிட்ட அத்தியாயத்தை மட்டுமே பயன்படுத்தும் ஆராய்ச்சியாளருக்கு இவ்வகை நூற்பட்டியல் மிகவும் உதவும்.

**3)ஆராய்வு நூற்பட்டியல்(Critical Bibliography)**

இது மிகவும் நவீன நுட்பம் வாய்ந்த(Sophisticated Technical Form) நூல் பட்டியல் ஆகும். எந்தப் பட்டத்திற்காகவும் உபயோகப்படுத்தப்படாத ஆராய்ச்சி நூல்கள் இவ்வகைப் பட்டியலில் இடம் பெறுகிறது. இதில் பொதுப் பட்டிலில் காணப்படும் நூல்களின் தகவல்களுக்கு அதிகமாக, அந்த நூல்களில் காணப்படும் கருத்துக்களும் இடம் பெறும். முற்ற இரண்டு வகை நூற்பட்டியலில் நூல்களின் புறக்கருத்துக்கள்(Information about the

book) இடம் பெறும். ஆனால் ஆராய்வு நூற் பட்டியலில் நூல்களின் உட்கருத்துக்கள் இடம் பெறுகிறது.

ஆனால் நூலில் காணப்படும் தகவல்கள் அப்படியே இடம் பெறுவது இல்லை. அந்த நூலைப் பற்றிய கருத்தாய்வு மதிப்பீடு(Interpretation and evaluatin) மற்றும் நூலில் காணப்படும் தகவல்களின் ஆதாரத்தன்மை, நம்பத்தன்மை(Authenticicity and credibility) ஆகியவை விவரிக்கப்பட்டுள்ளன. மேலும் நூல் ஆசிரியரின் தவறுகள், நேர்மைத் தன்மை , மொழி நடை ஆகியவைகளும் விவரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ஒரு ஆய்வுக் கட்டுரைக்கான நூற்பட்டியல் மேற்கண்ட விதிமுறைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டால் அந்த ஆய்வுக் கட்டுரை மிகவும் நேர்த்தியாகவும், மதிப்பு மிக்கதாகவும் அமையும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.